வெளியீடு 25-3-99

Issued 25-3-99

829/99

15 செப் 1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 20, 1998 - தொகுதி 55 - எண் 1

Wednesday the 20th May, 1998—Volume 55 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

D.
V24,31/98
N98-55-1.
219102

[Price Rs. 3.00

20-05-1998

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-44 |
| *2.* **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| (அ) சென்னை, எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் விளையாட்டு முகாமில் கலந்துகொண்ட மாணவர்கள் இரவு உட்கொண்ட உணவு காரணமாக வயிற்றுப்போக்கு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டது | 45-48 |
| (ஆ) சிதம்பரம் கோட்ட மின்வாரிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடுவது | 48-49 |
| (இ) போலி டாக்டர் எனக் கூறி ஏழை மருத்துவர்கள் கைது செய்யப் பெறுவதால் ஏற்பட்டுள்ள நிலைமை | 49-59 |
| *3.* **பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை--** | |
| நெல் கொள்முதல் நடப்பு சம்பா, 1998 பருவத்தில் செய்யப்பட்டது குறித்து மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை | 59-60 |

| | பக்கங்கள் |
|---|---|
| *4. அறிவிப்பு--* | |
| (அ) நிகழ்ச்சி நிரலில் மாற்றம் | 61 |
| (ஆ) கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவை அலுவல் ஒத்திவைப்பு | 61 |
| ***5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி*** | |
| **கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு** | 61-141 |
| *மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் | 61,67,68,70-71,79-80,91-92,95,96,97, 98, 112-138 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 67-70, 71-72 |
| திருமதி வாசுகி முருகேசன் | 72-76 |
| திரு. எஸ்.வி. கிருஷ்ணன் | 77-81 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 81-85 |
| திரு. கே.எம். விஜயகுமார் | 85-88 |
| திரு. ஆர்.ஆர். சேகரன் | 88-93 |
| திரு. ஏ.எம். ராமசாமி | 93-95 |
| திரு. சொ. கருப்பசாமி | 95-99,104 |
| திரு. ப. கோவிந்தன் | 105-108 |
| திரு. வெ. சின்னய்யா | 108-112 |
| *6. அரசினர் தீர்மானம்--* | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 141-142 |
| 7. பேரவையின் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 142 |


219102



D V211,31 N98 N98.55.1

**தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்**

**ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் விழங்கல். |

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
*வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள். தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.*

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
*பொதுப்பணிகள். சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.*

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
*போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.*

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**
*நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.*

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
*தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.*

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு :**
*உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.*

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
*பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.*



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
*தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).*

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
*சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.*

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
*கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.*

16. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :**
*பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.*

17. **வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
*வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.*

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
*வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.*

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.*

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
*கால்நடைப் பராமரிப்பு.*

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—JUSTICE SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education..** **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | | |
|---|---|---|
| 6. | Minister for Agriculture | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. | Minister for Public Works | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. | Minister for Transport | .. **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. | Minister for Highways | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinam:** Highways and Ports. |
| 10. | Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. | Minister for Food, Public Distribution System and Co-operation | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. | Minister for Milk | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. | Minister for Labour | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. | Minister for Law | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. | Minister for Handlooms | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 16. | Minister for Backward Classes | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. | Minister for Forest and Printing | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press. |
| 18. | Minister for Housing | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. | Minister for Rural Industries and Registration | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. | Minister for Information and Publicity | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |

**21. Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:**
Animal Husbandry.

**22. Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:**
Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

**23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:**
Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

**24. Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**
Tourism and Tourism Development Corporation.

**25. Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:**
Khadi Board, Bhoodan and Gramdan.

**26. Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:**
Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்
மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

பேரவைத் துணைத் தலைவர்
மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. ரா. சேதுநாதன்
திரு. கு. மனோகரன்
திரு. வ. வேலுசாமி
திரு. சி. ஞானசேகரன்
திரு. நா. பெரியசாமி
திரு. முகம்மது கோதர் மைதீன்

செயலாளர்
திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயல |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன். பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| 31. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கே. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | இராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகர்ராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. தி.ப. | திருச்செங்கோடு |
| 24. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | அண்ணாநகர் |
| 25. | ஆனந்தன், திரு. பால. | வந்தவாசி (செ.வ.) |
| 26. | இரகுமான்கான், திரு. அ. | இராமநாதபுரம் |
| 27. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர் |
| 28. | இராசமாணிக்கம், திரு. பி. | ஒரத்தநாடு |
| 29. | இராசன், திரு. வி. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 30. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | ஆண்டிமடம் |
| 31. | இராமசாமி, டாக்டர் வை. | பண்ருட்டி |
| 32. | இராமசாமி, திரு. கே.ஆர். | திருவாடனை |
| 33. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | கம்பம் |
| 34. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | தொண்டாமுத்தூர் |
| 35. | இராமச்சந்திரன், திரு. மா. | திருவோணம் |
| 36. | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 38. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | பள்ளிப்பட்டு |
| 39. | இராமஜெயம், திரு. ந.பூ. | மயிலாப்பூர் |
| 40. | இராஜ ரெட்டி, திரு. ச. | தளி |
| 41. | இராஜேந்தர், திரு. டி. | பூங்கா நகர் |
| 42. | இளங்கோ, திரு. கோ. | அவினாசி (செ.வ.) |
| 43. | ஈஸ்வரன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 44. | உதயசூரியன், திரு. தா. | சங்கராபுரம் |
| 45. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | தஞ்சாவூர் |
| 46. | கணேசன், திரு. ஐ. | எடப்பாடி |
| 47. | கணேசன், திரு. கே. சி. | ஜெயங்கொண்டம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | பாபநாசம் |
| 51. | கருப்புசாமி, திரு. டி. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 52. | கன்னையன், திரு. க. | தொட்டியம் |
| 53. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | கிருஷ்ணகிரி |
| 54. | காந்தி, திரு. ஆர். | இராணிப்பேட்டை |
| 55. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | நாங்குநேரி |
| 57. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | வேடசந்தூர் |
| 58. | குண்டன், திரு. டி. | உதகமண்டலம் |
| 59. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | குத்தாலம் |
| 60. | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 61. | குழந்தை தமிழரசன், திரு. | விருத்தாசலம் |
| 62. | கோதண்டம், திரு. ஏ. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 63. | கோபால், திரு. பா. | மேட்டூர் |
| 64. | கோபு, திரு. சி. | அணைக்கட்டு |
| 65. | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 66. | கோவிந்தன், திரு. ப. | தாரமங்கலம் |

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்

73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)

76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி

85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)

93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

97. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. .. திருவள்ளூர்

98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு

99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி

102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்

105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை

108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்

109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர். மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

160. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)

161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு

165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)

167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்

169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்

171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி

173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்

174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்

176. மணி, திரு. டி. .. விளவங்கோடு

177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்

178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்

179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு

181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி

184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்

185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை

186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)

187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி

188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை

189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)

190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்

192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்

193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்

195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்

197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்

198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)

201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 212. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 225. வேணு, திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. கே.வி. வெங்கடபதி | .. | அரசு தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 6, வெகுதான்ய திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 மே 20, புதன்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* **திரு. பரிதி இளம்வழுதி** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற*
*இடுக்கண் இடர்ப்பாடு (உ)டைத்து"*

*தடங்கல் நிறைந்த கரடுமுரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துக்கொண்டு போவதுபோல, விடாமுயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு வெற்றி கிட்டும்.*

### 1. வினாக்கள் - விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள்.

வினா எண் 561, திரு. அ. வெங்கடாசலம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**561—**

**காவல் நிலையம் அமைத்தல்**

***7612—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, ரெகுநாதபுரத்தில் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

[1998 மே 20

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஒன்றியத்திலுள்ள ரெகுநாதபுரத்திலும், திருவரங்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த அனகவேல் ஊராட்சி, புளிச்சங்காடு கைகாட்டியிலும் புதிய காவல் நிலையங்கள் அமைப்பதற்கான கருத்துருக்கள் அரசுக்கு அனுப்பப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன. அந்தப் பகுதியில் அடிக்கடி சட்டம் ஒழுங்கு கெடுதலும், ஜாதிக் கலவரங்கள் ஏற்படுதலும் உள்ளதால், அவற்றை முன்வைத்து நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவரும் காவல் துறை கண்காணிப்பாளரும் இந்தப் பகுதியில் காவல் நிலையம் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, கருத்துருக்கள் அனுப்பி நிலுவையில் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு புதிய காவல் நிலையம் அமைக்கும் திட்டத்தின்கீழ், அந்தப் பகுதி மக்களுடைய நலன் கருதி..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே அந்தப் பகுதியில் புதிய காவல் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரெகுநாதபுரம் தற்போது கறம்பக்குடி காவல் நிலையத்தின் எல்லைக்கு உட்பட்டிருக்கிறது. ரெகுநாதபுரத்திற்குக் கிழக்கே 20 கிலோ மீட்டர் தொலைவிலே ஒரத்தநாடு காவல் நிலையம்; மேற்கே 25 கிலோ மீட்டர் தொலைவில் கந்தர்வக்கோட்டை காவல் நிலையம்; வடக்கில் 20 கிலோ மீட்டர் தொலைவில் தஞ்சாவூர் காவல் நிலையம்; தெற்கில் 14 கிலோ மீட்டர் தொலைவில் கறம்பக்குடி காவல் நிலையம்; தென் கிழக்கே 14 கிலோ மீட்டர் தொலைவில் திருவோணம் காவல் நிலையம் அமைந்து இருக்கின்றன. இவ்வளவு காவல் இருக்கும்போது, ரெகுநாதபுரத்திற்குத் தனிக் காவல் தேவையில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.



1998 மே 20]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் நகரத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதாலும், மருவத்தூரிலிருந்து மாமண்டூர் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துக்கள் நிகழ்வதாலும் மதுராந்தகம் நகரத்தில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைத்துத்தர கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அக்கறை இருந்தால் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 562, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**562—**

### பொன்னூரில் காவல் நிலையம்

***11409—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், பொன்னூரில் காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், பொன்னூரில் புதிதாக காவல் நிலையம் அமைப்பது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்து வருவதற்கு நன்றி. நான் குறிப்பிட்டிருக்கின்ற இந்த பொன்னூர் கிராமம், அடிக்கடி சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக்கூடிய இடம். கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு, பொன்னான ஊராக இருந்த பொன்னூர், கடந்த 5 ஆண்டுகளில் அடிக்கடி ஜாதி மோதல்கள் நடைபெற்று, விசாரணைக் கமிஷன்கூட அங்கே அமைத்திருக்கிறார்கள். எனவே, இந்த நிலையிலே, அடிக்கடி ஜாதி மோதல்கள் நடைபெறக்கூடிய அந்த இடத்தில், இந்த

நிதியாண்டுக்குள்ளாகவே, அனைத்து வசதிகளுடன்கூடிய காவல் நிலையத்தைத் திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காரணங்களால்தான் இது பரிசீலிக்கப்படுகிறது. உறுப்பினர் வேண்டாம் என்று சொன்னால் விட்டுவிடுகிறோம்.(சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய காவல் நிலையங்களை எல்லாம் எந்த அடிப்படையில் அரசு நிர்மாணிக்கிறது, ஜனத்தொகை அடிப்படையிலா அல்லது சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு அமைக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை அடிப்படையிலும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை அடிப்படையிலும்தான் அமைக்கப்படுகிறது.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 563, திரு. செங்கை சிவம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**563—**

## சென்னையில் உலக வாலிபால் மையம்

***6622—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உலக வாலிபால் மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடை அளிப்பதற்குத் தங்களுடைய அனுமதியைக் கேட்டுக் கொள்கிறேன்.





(அ) மற்றும் (ஆ) சென்னையில் சர்வதேச கைப்பந்து விளையாட்டு மேம்பாட்டு மையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19-9-1997 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உலக வாலிபால் முன்னேற்ற மையத்தின் அலுவலகத்தை 19-9-1997 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அதற்காக, அந்த மையம் வருவதற்குக் காரணமாக இருந்த முதலமைச்சர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, இந்த மையம் ஆசியா கண்டத்தில் உள்ள 18 நாடுகளினுடைய மையமாக தமிழகத்திலே, சென்னையிலே அமைய இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மிக்க சிறப்புக்குரிய இந்த மையத்திற்கு போதுமான கட்டட வசதி இல்லை; அதனுடைய பணி எப்போது துவக்கப்பட இருக்கிறது; குறிப்பாக உலக அளவில் அங்கீகாரம் பெற்ற விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்துகிறபோதெல்லாம், தமிழக அரசு அதற்கான போதுமான ஒத்துழைப்பைத் தர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காக தனிக் கட்டடம் தேவை என்று கருதி அரசுக்கு இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், நேரு விளையாட்டு அரங்கில் மாத வாடகை 500 ரூபாய் அளவில் அறை எண் 72, இந்த விளையாட்டு மையத்திற்காக, அந்த அலுவலகத்திற்காக வழங்கப்பட்டு இருக்கிறது; அது அவர்களால் பயன்படுத்தப்படுகிறது. இதுவரையில் 2 பயிற்சி முகாம்கள் நடைபெற்று இருக்கின்றன. மேலும், உரிய தேவைகளைக் கருதி, உரிய காலத்தில் அரசு ஆலோசனை நடத்தும்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19-9-1997 அன்று நடைபெற்ற அலுவலகத் திறப்பு விழாவில், இந்த மையம் ராஜா அண்ணாமலை மன்றத்திலே இதற்கான மிகப் பெரிய அரங்கம் ஒரு ஏக்கர் நிலத்திலே கட்டப்பட இருக்கிறது; ஆகவே, இதில் 3-ல ஒரு பங்கு அரசு வழங்குவதாகவும், மத்திய அரசு நிதியோடு வழங்குவதாகவும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளித்து இருக்கிறார்கள். 4-9-1998 அன்றிலிருந்து 6-9-1998 வரை உலக வாலிபால் பெண்கள் போட்டி நடைபெற இருக்கிறது. உலக அளவில் மிகச் சிறந்த 4 போட்டியாளர்கள் அணிகள் அந்தப் போட்டியிலே கலந்து கொள்கின்றன.

[1998 மே 20

ஆகவே, சிறப்புக்குரிய இந்தப் போட்டிக்கு அரசு ஒத்துழைப்பு அளிக்குமா என்பது மட்டுமல்லாமல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அங்கே உறுப்பினர்-செயலர், இதுவரையில் 6 மாத காலம் வரையில்தான் வந்து இருக்கிறார்: இப்போது இருப்பவர்கூட, பொறுப்பிலேதான் இருக்கிறார்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். கேள்வி மேல் கேள்வி, சங்கிலி மாதிரி கேட்டுக்கொண்டுப் போகாதீர்கள்.

**திரு. செங்கை சிவம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்-செயலரை நிரந்தரமாக, அந்தப் பதவியிலே விருப்பம உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-ஆவது ஆண்டில் நடைபெறக் கூடிய விளையாட்டுப் போட்டிகள் எதுவாக இருந்தாலும், இந்த விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஒரு வகையில், ஒரு தனி நிறுவனத்தைப் போல் செயல்படுகிற அமைப்பு என்ற காரணத்தால், அவர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஒருவேளை, அரசினுடைய உதவி தேவைப்படுமானால், அந்த ஆணையத்தின் மூலமாக அரசுக்குத் தெரிவிக்கப்படுமானால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம். மற்றொன்று, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நிரந்தரமாக இந்தத் துறைக்காகவோ அல்லது இந்த அமைப்பிற்காகவோ நியமிப்பது என்பது இயலக்கூடிய ஒன்று அல்ல. ஐ.ஏ.எஸ், அதிகாரிகள் பல்வேறு துறைகளில் பணியாற்றக்கூடியவர்களாகத்தான் இருக்க முடியும். ஒரு வேளை, விளையாட்டுத் துறையிலே பணியாற்றக்கூடிய வேறு அலுவலர் இந்தப் பொறுப்புக்கு நியமிக்கப்படக்கூடிய காலம் வருமானால் அவரே தொடர்ந்து பணியாற்ற முடியும்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உலக வாலிபால் மையத்தை, நமது மாநில தலைநகரிலே ஏற்படுத்தியிருப்பது பாராட்டுக்குரிய விஷயம். ஆனால், இந்த மையத்திலே பயிற்சிக்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தேர்வு



1998 மே 20]

செய்யப்படுபவர்களுக்கு எந்த வகையில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன? குறிப்பாக, முன்பு தமிழ்நாட்டிலே உயர்ந்த ஒரு விளையாட்டு வீரராகச் சுலைமான் என்ற ஒருவர் இருந்தார். கனமான அடி, அடிக்கின்ற அளவுக்குச் சிறந்த விளையாட்டு வீரராக இருந்தார். அந்த அளவுக்குச் சிறந்த விளையாட்டு வீரர்களைப் பெற்றெடுத்த மண்தான் இந்த மண். ஆனால், சமீபகாலத்தில் அது சற்றுக் குறைந்திருக்கிறது. ஆகவே, சிறப்பான பயிற்சிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலேயிருந்தும் அவர்களைத் தேர்வு செய்கின்றபோது, முறையான தேர்வுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சர்வதேசக் கைப்பந்து விளையாட்டு மையம், நடுவர்களுக்கான பயிற்சி வழங்கப்படுவதற்கு உரியது. ஆனால், தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் இந்தக் கைப்பந்து விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று, அதிலே சிறந்த அணிகள் மாநில அளவிலே உள்ள போட்டிக்கு அனுமதிக்கப்பட்டு, அப்படி ஒரு விளையாட்டுப் போட்டி மூலமாக ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் தகுந்த பயிற்சிகள் வழங்குவதற்கான ஏற்பாடு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 564, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**564—**

**பல்தொழில்நுட்பப் பயிலகம் தொடங்குதல்**

***9221—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதியில் பல்தொழில்நுட்பப் பயிலகம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு பேராசியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[1998 மே 20

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாபநாசம், திருவையாறு, கும்பகோணம், திருவிடைமருதூர், குத்தாலம், மயிலாடுதுறை ஆகிய ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒரு தொழில் நுட்பப் பயிலகம் கூட இல்லை. இந்தப் பகுதியில் இருக்கின்ற மாணவர்கள் சீர்காழி, தஞ்சாவூர், அல்லது நாகப்பட்டினம் போன்ற பகுதிகளுக்கு இதற்காகச் செல்ல வேண்டியிருக்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மக்கள் தலைவர் திரு. மூப்பனார் அவர்களும் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டம் அது. கல்வியிலும் அந்தப் பகுதி மக்கள் பின்தங்கிய நிலையில் இருப்பதை அவர்கள் அறிவார்கள். ஆகவே, அதை அவர்கள் கருத்தில் கொண்டு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் இதை மனதில் கொண்டு, இதை மீண்டும் பரிசீலனை செய்து அந்தப் பகுதியில் ஒரு பல்தொழில் நுட்பப் பயிலகம் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுதிவாரியாக பல்தொழில் நுட்பப் பயிலகம் ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு கொள்கை அரசாங்கத்திடம் இல்லை. அதைப் பிற்படுத்தப்பட்ட வட்டாரத்திலே உருவாக்குவதை அரசாங்கம் வரவேற்கிறது. ஆனால், உருவாக்கப்படும்போது, அரசு நிதியை வழங்குகிற நிலை இப்போது இல்லாத காரணத்தால், சுயநிதிப் பயிலகமாக அங்கே ஏற்படுத்த எவரும் முன்வருவார்களேயானால், அரசு அதை ஏற்றுக்கொள்ள முடியும். இல்லையானால், அரசு தொடங்குவதாக இருந்தால், ஏற்கெனவே தொடங்கப்பட்ட பல கல்வி நிலையங்கள் முழு வளர்ச்சி பெறுவதற்கு நீண்டகாலமாகிறது. அதனால் வரக்கூடிய குறைபாடுகளும் அதிகமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பாலிடெக்னிக்குகளில் இன்ஸ்ட்ரக்டர்கள், லெக்சரர்கள், பிரின்சிபால்கள் மற்றும் எச்.ஓ.டி. என்ற துறைத் தலைவர்கள் போன்ற பிரிவுகள் இருக்கின்றன. ஆனால், ஏ.ஐ.சி.டி.இ. நார்ம்ஸ் பிரகாரம் அந்த இன்ஸ்ட்ரக்டர் என்ற பொறுப்பை அவர்கள் எடுத்துவிட்டு, லெக்சரர், எச்.ஓ.டி., பிரின்சிபால் என்ற அளவில் வைத்திருக்கிறார்கள். இதுபோன்ற முறைதான் இருக்கவேண்டுமென்ற முயற்சியாக 1989-லே இவர்களின் பணி உயர்வு எப்படிச் செய்யவேண்டும் என்பதற்காக ஒரு அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால், வெளியிடப்பட்ட அந்த அரசாணையில் பல குழப்பங்கள் இருந்ததால் பாலிடெக்னிக்குகளில் பணிபுரியக்கூடிய இன்ஸ்ட்ரக்டர்களின் நிலை திரிசங்கு சொர்க்க நிலையாக இருக்கிறது. அவர்களையும் லெக்சரர் பணி நிலைக்கு உயர்வு செய்யும் அவர்களது நீண்டநாளைய கோரிக்கையை நிறைவேற்ற இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1998 மே 20]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏ.ஐ.சி.டி.இ. ஏற்கெனவே அறிவுறுத்தியிருக்கிற முறைப்படி பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள் அல்லது விரிவுரையாளர்கள் என்று யாராக இருந்தாலும் அந்தப் பெயர் நிலைமைக்கேற்ப சம நிலையில் வைத்துக் கருதப்படுவதற்கு அரசு ஏற்கெனவே கருத்தளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நடைமுறைப்படுத்துவதற்குரிய கடமைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார்.

முற்பகல் 9-45

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது பாபநாசம் தொகுதியிலே பல்தொழில் பயிலகம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், தனியார் ஆரம்பிக்கிறார்கள் என்றால் அதற்கு நிலம் மற்றும் பணம் எவ்வளவு கட்ட வேண்டும் என்பதையும், அதற்கு அனுமதி வழங்கப்படுவதற்கும், அதேநேரத்திலே சட்ட மன்ற உறுப்பினர் தொகுதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையை அதற்கு வழங்க அனுமதி இருக்கிறதா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கியிருக்கிற அல்லது வழங்கியிருக்கிற அந்தத் தொகையை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இதற்கு நீங்கள் அனுமதிப்பதாக இருந்தாலும்கூட, அந்தத் தொகை போதாது. எனவே, இதற்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் கிடைக்குமானால்தான் தகுந்த ஏற்பாட்டோடு இந்தப் பல்தொழில் பயிலம் உருவாக்க முடியும். இல்லையென்றால் infrastructure போதுமான அளவு இல்லாத காரணத்தால் மறுபடியும் பல ஆண்டுகள் குறைபாட்டோடுதான் அந்தக் கல்வி நிலையம் இயங்க நேரிடும்.

[1998 மே 20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 565, திரு. குத்தாலம் பி. கல்யாணம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**565—**

**மின் உற்பத்தி நிலையம் அமைத்தல்**

***8798—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலத்தில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி மின் உற்பத்தி நிலையம் அமைக்க மாநில அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அந்த மின் உற்பத்தி நிலையம் திருவாரூர் மாவட்டம், பெரும்பண்ணையூரில் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குத்தாலத்தில் கிடைக்கும் எரிவாயு முழுவதையும் நாள் ஒன்றுக்கு 80,000 கன மீட்டர் அளவுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு வேண்டி, மத்திய அரசின் பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகச் செயலருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, மத்திய அரசின் பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை இயக்குநர், தமது கடிதத்தில் குத்தாலத்தில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவின் அளவு மிகவும் குறைவாக இருப்பதால் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நோக்கமான உயரளவு மின் நிலையத்தை நிறுவ இயலாது. ஆகையினால், தனியார் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்து, அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் தக்க விலை கொடுத்து பெற்றுக்கொள்ளலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விரைவில் ஒதுக்கீடு செய்யும்படி மத்திய அரசு பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகச் செயலருக்கு மின்சார வாரியம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பெற்றால் தமிழ்நாடு மின்சார வாரியம் குத்தாலத்தில் 'வழிமச் சுழலி' காஸ் பிளான்ட் மின்திட்டம் ஒன்றை நிறுவிட ஆவன செய்யும்.



1998 மே 20]

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்த அந்த விளக்கத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டி 2 கிணறுகள் அதிலே வெற்றியான முடிவுகளைக் கொடுத்து இருக்கின்றன. அதிலே 80,000 கியூபிக் மீட்டர் மட்டும்தான் காட்டப்பட்டிருக்கிறது, ஒரு இலட்சம் கியூபிக் மீட்டர் காட்டப்படவில்லை. எனவே, அதையும் சேர்த்து முடிவு எடுக்க வேண்டுமென்று நான் கோரியிருந்தேன். இதுகுறித்து மத்திய அரசிற்கு நம்முடைய மாநில அரசு ஏதேனும் கடிதம் எழுதியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து நானே சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கை எரிவாயு மூலமாக மின்சாரம் தயாரிப்பதற்கான திட்டத்திலே சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்மீது மன்னார்குடி தொகுதி, கோவில்களப்பாலிலே இந்தத் திட்டம் அமல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டம் என்ன நிலையில் இருக்கிறது, இந்த ஆண்டு அது தொடங்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவில்களப்பாலிலே 30 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்கான திட்டம் ஏற்கெனவே இருந்தது. இப்போது அங்கே அதிமாக எரிவாயு கிடைக்கும் என்ற தகவல் வந்திருக்கிற காரணத்தினாலே, அந்த 30 மெகாவாட் என்பதை 90 மெகாவாட்டாக உயர்த்தலாமா என்று மின்சார வாரியம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி தமிழகத்திலே மின்சாரம் தயாரிக்க எத்தனை தொழில் முகவர்கள் முன் வந்துள்ளார்கள்? அப்படி இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரித்தால் அதற்கு மின்சார வாரியம் ஒரு யூனிட்டை எந்த அளவுக்கு விலை கொடுத்து வாங்கும்? விலை நிர்ணயம் செய்துள்ளீர்களா? அப்படி யாரேனும்

[1998 மே 20

முகவர்கள் வந்திருக்கிறார்களா? அல்லது வந்தவர்கள் Power purchase agreement போட்டுள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 'டிட்கோ' மூலமாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுள்ள அந்த 20 இடங்களில் மின்சாரம் தயாரிப்பதற்கான திட்டங்களில் நாப்தாவை அடிப்படையாகக் கொண்டுதான் நாம் மின்சாரத்தைத் தயாரிக்க வேண்டுமென்று மத்திய அரசிற்கு எழுதி, மத்திய அரசும் 800 மெகாவாட் அளவிற்குத்தான் ஒதுக்கீடு செய்தது. ஆனால், மத்திய அரசு இதிலே காலம் கடத்தியதால் அந்த 20 இடங்களிலே மின்சாரம் தயாரிப்பதற்கு ஏற்கெனவே ஒப்பந்தம் செய்து இருக்கின்ற அந்தத் தனியார் நிறுவனங்கள், இப்போது 'காஸ்' மூலமாக மின்சாரம் தயாரிக்கலாமா என்பது பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் மின் வாரியத்தை அணுகி நாங்கள் 'காஸ்' கிடைக்கின்ற காரணத்தினாலே அதை மாற்றிக் கொள்வதற்கு அனுமதி தருவீர்களா என்று கேட்ட போது, தாராளமாக நீங்கள் காஸ்-ஐப் பயன்படுத்திக்கூட மின்சாரம் தயாரிக்கலாம். ஆனால், 'காஸ்' நாப்தாவைவிட விலை குறைவாக இருக்கிற காரணத்தினால் அப்படித் தயாரிக்கப்படுகின்ற நேரத்தில் ஏற்கெனவே உங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையைக் குறைக்க வேண்டியிருக்கும் என்று மின்சார வாரியம் அவர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறது. அதுகுறித்துத் தனியார் நிறுவனங்கள் பரிசீலித்து மின்சார வாரியத்திற்குக் கடிதம் எழுதுவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். (குறுக்கீடு) விநியோக விலைதான்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு முறையும் 1,000 மெகாவாட், 5,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று இந்தச் சட்டப்பேரவையில் அந்த அரசாங்கமும் அறிவித்து இருந்தார்கள், நம்முடைய அரசாங்கம் வந்தும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், உற்பத்தி செய்யப்பட்டது எதுவும் இல்லை. காரணம், எந்த மூலப்பொருளை வைத்து நாம் உற்பத்தி செய்கிறோமோ அந்த மூலப்பொருள் நம்முடைய நாட்டில் கிடைப்பது இல்லை. எனவே, நாப்தாவை விட்டுவிட்டு, நிலக்கரியை விட்டுவிட்டு, நெய்வேலியில் கிடைக்கின்ற பழுப்பு நிலக்கரியைக் கொண்டு மின்சார வாரியமே 200 மெகாவாட் திறனுள்ள,



1998 மே 20]

இரண்டு திட்டங்களை ஆரம்பித்தால் உடனடியாக மின்சாரம் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதனை செய்ய நீங்கள் முன் வருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி குறிப்பிடுவதைப்போல, அரசாங்கம் திட்டமிட்டாலும்கூட, நினைத்தவுடனேயே மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு எந்தத் திட்டமும் இப்போது இல்லை. ஏனென்றால், நாப்தாவை அடிப்படையாகக் கொண்டு மின்சாரம் தயாரிப்பதாக இருந்தாலும்கூட குறைந்தது 18 மாத காலம் ஆகும்; நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டு மின்சாரம் தயாரிப்பதாக இருந்தால் 1,000 மெகாவாட்டாக இருந்தால் 4 ஆண்டுகள் ஆகும்; எரிவாயுவைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதாக இருந்தால் குறைந்தது 15 மாதங்கள் ஆகும். ஆகவே, மின்சாரம் தயாரிப்பதற்குக் காலதாமதம் ஆகும் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் இங்கே நெய்வேலியில் கிடைக்கக்கூடிய பழுப்பு நிலக்கரியைக் கொண்டு மின்சார வாரியமே 200 மெகாவாட் தயாரிக்கலாம் என்ற யோசனையைச் சொன்னார். இதையும் இந்த அரசு பரிசீலனை செய்து, ஏற்கெனவே நெய்வேலி Zero Unit, அதாவது அமெரிக்க நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு நிறுவனம் 200 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்குத் தமிழக அரசை அணுகி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதி தந்து, இப்போது ஒப்பந்தமும் ஆகி, விரைவிலே அந்தத் திட்டத்தைத் தொடங்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வளர்ந்து, விரிவடைந்து வருகிற மின்சாரத் தேவைகளைப் பற்றி மதிப்பீடு செய்து, இந்தத் தேவைக்கு ஈடு கொடுக்கிற முறையில், மின் உற்பத்திற்கு உரிய திட்டமிடுகிற முறையை மாநில அரசு கடைபிடிக்க முயலுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் ஒவ்வொரு ஆண்டிற்கும் 500 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகத் தேவைப்படுகிறது. அதற்கு ஏற்றாற்போல், இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டவுடனேயே திட்டமிட்டு, உடனடியாக 2,000 மெகாவாட்

[1998 மே 20

மின்சாரம் தயாரிப்பதற்குத் திட்டங்களை அறிவித்தோம். நாப்தா கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்ட காரணத்தால் முதலிலே 5 மின் திட்டங்கள் — இப்போது 'பி.பி.ஏ.' பவர் கம்பெனியைப் பொறுத்தவரையிலும் கையெழுத்தாகிவிட்டது. — தொடங்கக்கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. இதல்லாமல், இன்னுமொரு 5 ஆண்டு காலத்திற்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படும் என்பதையெல்லாம் திட்டமிட்டு, ஏற்கெனவே நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டும், நாப்தாவை அடிப்படையாகக் கொண்டும் கிட்டத்தட்ட 5,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக தனியார் துறை மூலம் அந்த அனுமதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மத்திய அரசாங்கமும் ஒப்புதல் தந்திருக்கிறது. அதிலே —பிள்ளைப்பெருமாள்நல்லூர் போன்ற இடங்களில் இப்போது வேலைகளைக்கூடத் தொடங்கி இருக்கிறார்கள்; வீடியோகான், வடசென்னையில் வேலைகளைத் தொடங்கியிருக்கிறார்கள். அதேபோல, இன்னும் 3 நிறுவனங்கள் வேலைகளைத் தொடங்க இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 566, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**566—**

### கடல் அலையினால் மின் உற்பத்தி

***10739—திரு. உ. திசைவீரன்:**

மான்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மற்றும் இராமேஸ்வரம் பகுதிகளில் கடல் அலையினால் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



1998 மே 20]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தாலி, ஜெர்மனி போன்ற நாடுகளில் கடல் அலை மூலம் மின்சாரம் தயாரிப்பதிலே செலவு குறைவு என்று கருத்துத் தெரிவித்துள்ளார்கள். எனவே, தமிழகத்தைச் சுற்றிக் கடல் அலைகள் இருப்பது தெரியும். இந்த அடிப்படையில் நம்முடைய மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற அளவில், நாம் முதலீடு செய்வதுதான் முதலில் அதிகமாக இருக்கும்; பின்பு Raw Material போன்ற பிரச்சினை இருக்காது. எனவே, கடல் அலை மூலமாக மின்சாரம் தயார் செய்ய தமிழக அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மத்திய அரசாங்கம் கூட்டிய முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டபோதே நாங்கள் இந்த அரசாங்கத்தினுடைய நிலைமையை எடுத்துச்சொல்லி இருக்கின்றோம். தமிழ்நாட்டில் நீண்ட கடற்கரை இருக்கிற காரணத்தால், கடல் அலை மூலமாக மின்சாரம் தயாரிப்பதற்கு ஏதாவது டெக்னாலஜி இருந்தால் அதைப் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். ஆனால், மத்திய அரசாங்கம் இதுவரையிலே உலகத்தில் கடல் அலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் எங்கேயும் வெற்றி அடையாத காரணத்தாலே, இப்போது இந்தியாவிற்கு அந்தத் திட்டத்தைக் கொண்டுவர இயலவில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எங்கேயாவது அந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுகிறது என்று கேள்விப்பட்டு, அதற்குரிய டெக்னாலஜியைக் கொடுத்தால், இந்த அரசு அதுபற்றிப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பர்னஸ் ஆயில் மூலம் மின்சாரத்தை 6 மாதத்திலே தயார் பண்ணிவிட முடியும் என்று சொல்கிறார்கள். நம்முடைய நாட்டில் ஏராளமாக பர்னஸ் ஆயில் கிடைக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, பர்னஸ் ஆயில் மூலம் அரசே இந்த மின்சார உற்பத்தியைச் செய்ய முடியுமா? மேலும், இராமேஸ்வரத்தில் காற்றாலை என்று சொல்லக்கூடிய 'வின்ட் மில்' திட்டத்திலிருந்து மின்சாரம்

எடுப்பதற்கு—உலகத்திலேயே அதிகமான காற்று அடிக்கிற இடம் இராமேஸ்வரம் பகுதியில் இராமர் பாதம் இருக்கின்ற இடம்தான் என்று நான் அறிந்திருக்கிறேன். ஆகவே, அங்கே—காற்றாலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கு அரசு ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஃபர்னஸ் ஆயில் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்தால், 6 மாதத்தில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்றும், எனவே அதைப் பயன்படுத்த முடியுமா என்றும் கேட்கிறார்கள். இதுவரையிலே, இந்தியாவிலே மின்சார உற்பத்தி நிலையங்களை நாம் அமைக்கும்போது, 'நாப்தா' 'கோல்' போன்ற அடிப்படைப் பொருட்களை வைத்துக் கொண்டுதான் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஃபர்னஸ் ஆயிலை அடிப்படையாக வைத்து மின்சார உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதிலே இப்போது ஆரம்பக் கட்டத்திலே இருந்தாலும் இது இன்னும் வெற்றி பெற்றதா எனத் தெரியவில்லை. இருந்தாலும், மின்சார வாரியம் இதுகுறித்து 3 மாதகாலமாகப் பொறியாளர்கள் கூட்டத்தைக் கூட்டி ஆராய்ந்து வருகிறார்கள். அப்படி இது வெற்றி பெற்றால் இதுகுறித்தும் இந்த அரசாங்கம் பரிசீலிக்கும். மேலும் இராமேஸ்வரத்தில் காற்றாலைகள் மூலமாக மின்சாரம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள். 18 சதவீதத்திலிருந்து 24 சதவீதம் வரை இராமேஸ்வரம் பகுதியிலே காற்று வீசுமானால், அதுபற்றி அரசு ஆராய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காற்றாலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கு முந்தைய அரசாங்கம் மானியம் எல்லாம் கொடுத்தது. கன்னியாகுமரி, நெல்லை போன்ற மாவட்டங்களில் எல்லாம் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கு நிறைய விவசாயிகள் வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்திருந்தார்கள். இப்போது அந்த மானியத்தை நிறுத்திவிட்ட காரணத்தால், மீண்டும் காற்றாலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கு, ஊக்கப்படுத்துவதற்கு, மானியம் கொடுப்பதற்கு, அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காற்றாலைகள் மூலம் சுமார் 650



மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ஆலைகள் ஏற்கெனவே நிறுவப்பட்டு இருக்கின்றன. ஆனால் கோடைக் காலங்களில் இந்தக் காற்றாலைகள் மூலமாக நமக்கு 15 முதல் 30 மெகாவாட் வரைதான் மின்சாரம் கிடைக்கிறது. எனவே, அந்த ஆலைகள் மூலமாக அதிக மின்சாரம் கிடைக்காத சூழ்நிலையில் தமிழக அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மானியம் கொடுக்க வேண்டுமா என்று நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதேநேரத்தில், மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற எல்லாச் சலுகைகளையும் தொடர்ந்து கொடுத்துக்கொண்டுதான் வருகிறது. அதாவது இன்கம் டாக்ஸ் ரிபேட் போன்ற அத்தனை வசதிகளும் செய்து கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். எனவே, இது பற்றி அரசு உரிய காலத்திலே பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஃபர்னஸ் ஆயில் மூலமாக மின்சாரம் தயார் செய்ய முடியும் என்ற டெக்னாலஜி, பெட்ரோல் உற்பத்தி செய்யக்கூடிய பல நாடுகளிலே இருக்கின்றது. ஒருமுறை பெட்ரோல் உற்பத்தி செய்யக்கூடிய நாடுகளினுடைய பிரதிநிதிகள், முன்பு பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களைச் சந்தித்து, தென்னகத்தில் கடற்கரையோரங்களில் ஃபர்னஸ் ஆயில் மூலமாக நாங்கள் மின்சாரம் தயார் செய்து, தென் மாநிலங்களுக்கு வழங்குகிறோம் என்கிற கோரிக்கையை வைத்தார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. காரணம் அப்போது வெளிநாட்டு மூலதனத்தை இந்தியாவிலே அனுமதிக்கக்கூடிய கொள்கை இல்லாத காரணத்தினால் அவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. எனவே, அப்படிப்பட்ட ஒரு டெக்னாலஜி இப்போது பல இடங்களில் கிடைக்கின்றது. அதிலும் குறிப்பாக OPEC என்று சொல்லக் கூடிய பெட்ரோல் உற்பத்தி செய்யக்கூடிய நாடுகளிலே அது கிடைக்கின்றது. அது சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அப்படிப்பட்ட நாடுகளோடு தொடர்புகொண்டு அந்த டெக்னாலஜியைப் பெற்று இங்கே மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு முயற்சி எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Furnace oil-ஐப் பயன்படுத்தி இப்போது தனியார் தங்களுடைய நிறுவனங்களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு Madras Cements

மற்றும் அதைப்போன்ற சில நிறுவனங்கள் ஜெனரேட்டர்களை வைத்து அந்த ஜெனரெட்டர்களுக்கு ஃபர்னஸ் ஆயிலைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் தொடர்ந்து மின்சார வாரியத்திற்கு 500 மெகாவாட், 1,000 மெகாவாட் மின்சார உற்பத்தியை இந்த ஃபர்னஸ் ஆயில் மூலமாகச் செய்வதற்கான திட்டங்கள் சரியாக இருக்குமா என்பது பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். அது வெற்றி பெற்றால் அதுகுறித்து இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 567, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**567—**

## சூலூர் ஒன்றியத்திற்குக் குடிநீர் வசதி

***7795—திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஒன்றியம், மோப்பிரிபாளையம் பேரூராட்சி மற்றும் காடுவெட்டிப்பாளையம், பதுவம்பள்ளி, கிட்டாம்பாளையம் ஆகிய ஊராட்சிகளை, அத்திக்கடவுக் குடிநீர்த் திட்டத்தில் இணைத்து, அப்பகுதி மக்களுக்கும் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஒன்றியம், மோப்பிரிபாளையம் பேரூராட்சி மற்றும் காடுவெட்டிப்பாளையம், பதுவம்பள்ளி, கிட்டாம் பாளையம் ஆகிய ஊராட்சிகளுக்குத் தற்போது அமைக்கப்பட்டுள்ள அத்திக்கடவுக் குடிநீர்த் திட்டத்தில் இருந்து குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வியில் கூட சூலூர் ஒன்றியத்தில் செம்மாணிடம்பாளையம் விடுபட்டுள்ளது. மொத்தம் 5 கிராமங்கள். இந்த 5 கிராமங்களுக்கும் எந்தக் குடிநீர் ஆதாரமும் இல்லை. அவிநாசி—அத்திக்கடவுக் குடிநீர் திட்டத்திலே இந்தப் பகுதிகள்



இணைக்கப்பட்டுள்ளனவா? அப்படி இணைக்கப்படாமல் இருந்தால் இந்தப் பகுதிகள் அந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டு, செயல்படுத்திக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், அன்னூர், அவிநாசி ஒன்றியங்களில் 29 ஊராட்சிகள் அடங்கிய 247 கிராமக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், பவானி ஆற்று நீராதாரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சூலூர் ஒன்றியத்தைச் சார்ந்த 25 குடியிருப்புகளுக்கும் மற்றும் மோப்பிரிபாளையம் கிராமப் பேரூராட்சியைச் சார்ந்த 9 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க வகைசெய்யப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது. 4-3-1998-இல் ரூ.37.55 கோடிக்கு அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. உலக வங்கியில் நிதியுதவி பெற்று, இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவிநாசி-அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தில் மோப்பிரிபாளையம் இணைக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆகவே மொத்தம் உள்ள 4 கிராமங்களையும் அத்தோடு இணைத்து இந்தக் குடிநீர் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் விரைவாக நிறைவேற்றப்படுமா? இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் நிதியுதவி கொண்டுதான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இயலும். அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்; கிடைத்துவிடும்; இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். அந்த 8 குடியிருப்புகளைப் பொறுத்தவரை பரிசீலனையில் இருக்கிறது; விரைவில் பரிசீலித்து முடிவு எடுக்கலாம். இதைவிட தனித்த திட்டங்கள் செயல்படுமானால், அதையும் நிறைவேற்றிப் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக 500-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு, கோவை மாநகரத்தினுடைய கிழக்குப் பகுதிக்கும் குடிநீர் வழங்கப்படுகின்றது. ஆனால் இந்தக் குடிநீர் விநியோகத்திற்காகப் பதிக்கப்பட்டிருக்கக் கூடிய குழாய்களில் அடிக்கடி பழுதுபட்டு, ஒரு வாரம், 10 நாட்களுக்கு என்று அங்கே தண்ணீர்

விநியோகம் தடைப்படுகிறது. பல குழாய்கள் பலகீனமாகி வெடிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இவை அப்போதைக்கப்போது சீர் செய்யப்பட்டாலும் கூட, முழுமையாக அந்தத் திட்டத்திற்காகப் பதிக்கப்பட்ட அத்துணைக் குழாய்களும் பலகீனமாகி உள்ளதால் வெடிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளனவா என்று அறிந்து—அப்படி அறிவதற்கு இப்போது புதிய டெக்னாலஜி வந்திருக்கிறது. அதன்மூலம் அறிந்து—பலகீனமாக இருக்கக் கூடிய குழாய்களை மாற்றி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அதிநவீன கருவிகளைப் பயன்படுத்தித்தான் தற்போது பலகீனமாக இருக்கிற குழாய்களைப் பரிசீலித்து அவை உடனுக்குடன் மாற்றப்படுகின்றன. அஃதன்னியில் பல இடங்களில் வெடிப்பு ஏற்படுகின்ற நேரத்தில் உடனடியாகக் கவனிக்க உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு ஆய்வாளரே நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *568*, திரு. டி. மணி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**568—**

**களியக்காவிளை—மெதுகும்மல் கூட்டுக் குடிநீர்த்திட்டம்**

***11314—திரு. டி. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை—மெதுகும்மல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது முதல் குடிநீர் விநியோகிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*(அ)* ஆம்.

*(ஆ)* விரைவில் மக்களின் பயனுக்குக் கொண்டுவரப்படும்.



**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் கடந்த ஆட்சிக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. அதை ஆரம்பிக்கின்ற நேரத்திலே அதிலே பயன்படுத்தி வந்த குழாய்கள் தரம் குறைந்த குழாய்கள் என்று கிராமத்து மக்கள் அன்றைக்கே புகார் சொன்னார்கள். அதில் தண்ணீரைவிட்டு டெஸ்ட் பண்ணுகிறபோது, அந்தக் குழாய்கள் முழுமையாக வெடித்துப் பயன்படுத்த முடியாமல் போய்விடும்; அதற்கு ஒரு விசாரணைகூட வேண்டும் என்று நான் அப்போதே கேட்டிருந்தேன். இப்போது இருக்கிற முறைப்படி பார்த்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே முடியும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், அங்கு இருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கின்றபோது இன்னும் சில ஆண்டுகள் தாண்டிவிடுமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. எனவே, அந்தக் கோளாறு பிடித்த குழாய்களை மாற்றி, தரமான குழாய்களை அமைத்து, ஏற்கெனவே குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கின்ற அந்தப் பகுதிக்கு விரைவில் குடிதண்ணீர் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குழாய்களில் வெடிப்பு என்பது ஒரு இடத்தில் மட்டுமல்ல, பல இடங்களிலே ஏற்படுகின்றது. ஒரே நேரத்தில் எல்லாக் குழாய்களையும் புதுப்பிப்பது என்பது இயலாத காரியம். ஆகையால்தான், மிக முக்கியமான இடங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு அதை நாம் நிறைவேற்றி வருகிறோம். ஆனால், இந்த நிலையில் இங்கே *25* குதிரைத் திறன் கொண்ட இறைப்பான்களில் ஏற்பட்ட பழுதுகளால்தான் இப்போது அந்த வேலைத் திட்டங்கள் சற்று தாமதிக்கப்பட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆலோசனைப்படி மின் இறைப்பான்களின் திறனை அதிகரிக்கத் தேவையான உதிரிப் பாகம் பெறப்பட்டு, இப்போது அது மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது மாங்காடு, ஆதிச்சன்விளை ஆகிய பகுதிகளில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. களியக்காவிளை பகுதிக்குக் குடிநீர் வழங்கும்பொருட்டு பூஸ்டர் நீரேற்றி அமைக்கப்பட்டுச் சோதனை ஓட்டத்தில் உள்ளது. சோதனை ஓட்டத்தில் காணும் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, களியக்காவிளை-மெதுகும்மல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இந்த ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்திற்குள் முடித்து, மக்கள் பயன்படுத்திட வேண்டுமென்று கண்டிப்பாகத் தெரிவித்து உத்தரவிட்டிருக்கிறோம். ஆகஸ்டுக்குள் நிறைவேற்றவில்லை என்றால், மீண்டும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றித் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டத்திலே இன்னொரு கோளாறைக்கூட நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்காகப் பயன்படுத்துகின்ற கிணறு பூராவுமே தாமிரபரணி ஆற்றிலே தோண்டப்பட்டுள்ளது. அந்தத் தாமிரபரணி ஆற்றிலே முறைகேடாக மணல் எடுப்பதனால், திருட்டுத்தனமாக மணல் எடுக்கப்பட்டு கேரளாவிற்கு கடத்தப்படுவதால் இந்தக் கிணறுகள் எல்லாம் சரிகின்ற, பயனற்றுப் போகின்ற ஒரு நிலை உருவாக்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையிடம் கேட்டால் இந்தப் பொறுப்பு எங்களுக்கு இல்லை என்று கூறுகிறார்கள். ஹைவேஸ் துறையைக் கேட்டால் இந்தப் பொறுப்பு எங்களுக்கு இல்லை என்று கூறுகிறார்கள். தாலுகா அதிகாரிகளைக் கேட்டால் எங்களால் முடியாது என்று கூறுகிறார்கள். எப்படியும், காவல் துறையினுடைய உதவி இல்லாமல், காவல் துறை இதிலே தலையிடாமல், திருட்டுத்தனமாக மணல் எடுப்பதைத் தடை செய்ய முடியாது. ஆகவே, இந்தக் கிணறுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், இதன் அடிப்படையிலே காவல் துறை முடுக்கிவிடப்பட்டு, திருட்டுத்தனமாக மணல் எடுப்பதைத் தடை செய்யவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நான் கன்னியாகுமரி வந்திருந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினையை அங்கு கூடியிருந்த கூட்டத்திலே தெரிவித்தார்கள். அப்போது, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் நான் அந்த விவரத்தைத் தெரிவித்தேன். அவர்கள், நாங்கள் பாதுகாப்பதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால், எங்களுக்குத் தெரியாமல், இரவு நேரங்களில், 12 மணி, 2 மணிக்கு மணல் எடுத்துவிடுகிறார்கள், அதை நாங்கள் கவனிக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகும், அந்த மணல் திருட்டு நடந்துகொண்டு இருப்பதாகத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது தெரிவிக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கையை, மாண்புமிகு முதலமைச்சரிடம் கலந்து, எடுப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நீரேற்றுகிற பணியினை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு மிகவும் குறைந்த ஊதியம், தொகுப்பு ஊதியம் ரூ.300 வழங்கப்படுகிறது. கிட்டத்தட்ட 15, 20 கிராமங்களுக்குத்



தண்ணீர் தருகிற அந்தப் பணியியை மேற்கொள்கிற பணியாளர்கள் அந்த 300 ரூபாய் ஊதியம் போதவில்லை என்று கூறுகிறார்கள். இன்னும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலே அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்தித்தர நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 569, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**569—**

**விளை நிலங்களைச் சமப்படுத்துதல்**

***9234—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தில் வெள்ளத்தினால் மணல் மூடப்பட்ட விளை நிலங்களை மணல் வாரி இயந்திரத்தின் மூலம் சமப்படுத்திக் கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளத்தினால் மணல் மூடப்பட்ட விளை நிலங்களில் சமப்படுத்தும் வேலைகள் செய்து மண் தள்ளும் இயந்திரம் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு, வெள்ள நிவாரணப் பணிகள் 10-6-1997 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

முற்பகல் 10-10

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல பல கிராமங்களிலே பெண்ணையாற்றின் கரைகளிலே நிவாரணப் பணிகள் நடைபெற்றாலும்கூட, இன்னும் சில கிராமங்களிலே அந்தப் பணி தொடரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெண்ணையாற்றின் கரைகளிலே உள்ள அந்தக் கிராமங்களில் நிவாரணப் பணிகளை விரைந்து செய்ய ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1998 மே 20

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணைக் கேள்விக்கு கொஞ்சம் விளக்கமாகப் பதில் தர நான் விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1989-லே பொறுப்பு ஏற்ற பிறகும் சரி, இப்போது நான்காவது முறையாக பொறுப்பு ஏற்ற பிறகும் சரி, இந்தக் காலங்களிலேதான், வெள்ளத்தினால் விளை நிலங்களில் மணல் மூடிவிட்டால், அதை சீர் செய்து தருகின்ற நடவடிக்கையே எடுக்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் 660.71 ஹெக்டேர் விளை நிலங்கள் மணல் மேடிட்டு இருந்தன. 1997-98 ஆம் ஆண்டு ரூ.24.38 இலட்சம் செலவில் வேளாண்மைப் பொறியியல் துறையினால் 9 புல்டோசர்களைக் கொண்டு மணல் அகற்றப்பட்டு விளை நிலங்கள் சீர் செய்யப்பட்டன. கடலூர் மாவட்டத்தில் 589.50 ஹெக்டேர் விளை நிலங்கள் மணல் மேடிட்டு இருந்தன. 1997-98 ஆம் ஆண்டு ரூ.65.67 இலட்சம் செலவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 18 புல்டோசர்களைக் கொண்டு மணல் அகற்றப்பட்டு விளை நிலங்கள் சீர் செய்யப்பட்டன. அதைப்போலத் தஞ்சை மாவட்டத்திலே ஒரு அடி 6 அங்குலத்திற்கு மேல் மணல் மேவிய பகுதிகள் இல்லாமையால் அந்தப் பகுதிகளிலே இந்தப் பணி மேற்கொள்ளப்படவில்லை. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 8.87 ஹெக்டேர் விளை நிலங்கள் மணல் மேடிட்டு இருந்தன. 1997-98 ஆம் ஆண்டு ரூ.2.41 இலட்சம் செலவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 2 புல்டோசர்களைக் கொண்டு மணல் அகற்றப்பட்டு விளை நிலங்கள் சீர் செய்யப்பட்டன. எஞ்சியுள்ள 10 ஹெக்டேர் மணல் மேடிட்ட விளை நிலங்களைச் சீர் செய்ய கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் இசைவு பெறப்பட்டதும் இப்பணி ஒரு வார காலத்திற்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மணல் மேடிட்ட பகுதிகளைச் சமப்படுத்துவதற்காகக் கண்டமங்கலம் ஒன்றியத்திலே எந்தெந்தக் கிராமங்களில் இந்தப் பணி மேற்கொள்ளபட்டது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 1996 டிசம்பரிலே ஏற்பட்ட வெள்ளத்தினால் மணல் மேடிட்ட விளை நிலங்களின் பரப்பளவு 81.47 ஹெக்டேர் ஆகும். இதைச் சீர் செய்வதற்காக - சமப்படுத்துவதற்காக ரூ.6.51 இலட்சம் செலவில் 65.75 ஹெக்டேர்



1998 மே 20]

நிலப்பரப்பில் மட்டும் வெள்ளத்தினால் மணல் மேடிட்ட விளை நிலங்களில் விவசாயிகளிடமிருந்து எவ்வித பணமும் வசூல் செய்யாமல் அரசின் செலவிலேயே வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மணல் அகற்றப்பட்டுச் சீர் செய்யப்பட்டது. மீதமுள்ள 17.90 ஹெக்டேர் நிலப் பரப்பில் 6 அங்குலத்திற்கும் குறைவாகவே மணல் மேடிட்டு இருந்ததால் விவசாயிகளே ஆழ உழவு செய்ததன் மூலம் சரிசெய்து கொண்டார்கள். கண்டமங்கலத்திலே உள்ள மொத்த ஹெக்டேர் பரப்பளவு குறித்த தகவல்தான் என்னிடத்திலே இருக்கிறது. கிராமத்தினுடைய பெயர்கள் இல்லை.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 570, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**570—**

**திண்டுக்கல் தொகுதியில் அணைக் கட்டுதல்**

***6520—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் தொகுதி, சிறுமலை அருகிலுள்ள ஏ. வெள்ளோடு, யானை விழுந்தான் ஓடை, இராமக்காள் ஓடை அணைக் கட்டும் திட்டம் நிறைவேற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே.

திருத்திய விடையைப் படிக்க தாங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன். திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் தொகுதி, ஏ.வெள்ளோடு, யானை விழுந்தான் ஓடை, இராமக்காள் ஓடையில் ஒரு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் புதுத் திட்டத்தின்கீழ் பாகம் 2-இல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை 355 இலட்சம்.

[1998 மே 20

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திண்டுக்கல் தொகுதி மக்களால் கடந்த 25 ஆண்டு காலமாகக் கேட்டு வந்த யானை விழுந்தான் ஓடை, இராமக்காள் ஓடை அணைக்கட்டுத் திட்டத்தை, இந்த மானியக் கோரிக்கையின்மீது அறிவித்து எங்கள் தொகுதி மக்களை மகிழ்ச்சிக் கடலிலே ஆழ்த்திய மாண்புமிகு முதல்வரவர்களுக்கும், நமது பொதுப்பணித் துறை அமைச்சரவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சரவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எனது ஒட்டன்சத்திரம் தொகுதியில் கொத்தயம் என்ற இடத்தில் நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணைக் கட்ட வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கை. இன்றைக்கு பகுதி-2 திட்டத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரியார் மாவட்டத்தில் ஈஸ்வரன் கோயில் என்ற இடத்திலே கட்டுவதாக அறிவித்திருக்கிறார்கள். தொப்பம்பட்டி ஒன்றியம் வறட்சியான பகுதி. அங்கு எந்தவிதமான அணைக்கட்டும் இல்லை. அங்குள்ள மக்கள் மானாவாரியான விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மறு ஆய்வு செய்து கொத்தயம் என்ற இடத்தில் அணைக் கட்ட ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்லதங்காள் ஓடையில் கூட, ஒரு நீர்த்தேக்கம் அமைக்க இந்த நிதிநிலை அறிக்கையிலே முதல்வரவர்கள் 31 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அது ஈரோடு மாவட்டத்திலே வந்து விடுகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டதைப் போல கொத்தயம் பகுதியிலேயும் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. சமீபத்திலேகூட மாண்புமிகு அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களும் என்னை வந்து சந்தித்து, நிலைமைகளை நேரில் விளக்கி இருக்கிறார்கள். எனவே, அங்கு ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா என்று ஆராயும்படி பொதுப்பணித் துறையினுடைய அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அறிக்கை வந்த பிறகு அதுகுறித்துப் பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1998 மே 20]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 571, திரு. இரா. தாமரைக்கனி, திரு. செங்கை சிவம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**571—**

### தானியங்கி அறிவிப்புக் குறிகள் அமைத்தல்

***3400—திரு. இரா. தாமரைக்கனி:**

**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் போக்குவரத்தைச் சீராக்க மேலும் அதிக அளவில் "தானியங்கி அறிவிப்புக் குறிகள்" அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம். சென்னை நகரில் மேலும் பல இடங்களில் தானியங்கி சமிக்ஞை விளக்குகள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்தனை இடங்களில் தானியங்கி அறிவிப்புக் குறிகள் சென்னையில் அமைக்கப்படும்? தானியங்கி அறிவிப்புக் குறிகளை மீறி வி.ஐ.பி.க்கள் வரும்போது, உதாரணமாகக் கோட்டைக்கு வரும்போது, அமைச்சர்களுடைய பிளஷர், முதலமைச்சருடைய பிளஷர் எல்லாம் வரும்போது இந்தப் போக்குவரத்துக் காவல் துறை அதிகாரிகள் வி.ஐ.பி.க்களைப் போகச் சொல்லி விடுகிறார்கள். மற்றவர்களை நிறுத்தி விடுகிறார்கள். இதனால் விபத்துக்கள் எல்லாம் நடக்கின்றன. ஆகவே, விதிமுறையை போக்குவரத்துக் காவல் துறை கடைப்பிடித்து நடப்பதற்கு அரசு உத்தரவிடுமா? நம்முடைய தமிழ்நாட்டில் போக்குவரத்து விதிமுறையைச் சீரமைப்பதற்காக நமது அதிகாரிகளை, சிங்கப்பூர், மலேஷியா, மேற்கு ஜெர்மனி போன்ற இடங்களுக்கு அனுப்பி பயிற்சி பெறுவதற்கும் (மணியடிக்கப்பெற்றது)-(முடித்துவிட்டேன் சார்—புதிய யுக்திகளை அறிந்து வருவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1998 மே 20

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில்தான் இதுபோன்று அமைச்சர்கள் செல்கிறபொழுது மணிக்கணக்கிலே வாகனங்களெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) நிறுத்தப்பட்டன தனக்கே தெரியாது என்று அதற்கு சம்பந்தப்பட்ட முதலமைச்சரெல்லாம் பதில் சொல்லிய நிலைமைகள் எல்லாம் கடந்த காலத்திலே உண்டு. இப்பொழுது எந்த அமைச்சர் செல்கிறபொழுதும்—குறிப்பாக முதலமைச்சரைத் தவிர மற்ற எந்த அமைச்சருக்கும் அதுபோன்று நிறுத்தப்படுவது இல்லை, அனுமதிக்கப்படுவதும் இல்லை. முதலமைச்சருக்குக்கூட 5 நிமிடம், அவர் செல்கிற நேரத்திலேதான் அது அனுமதிக்கப்படுகிறது. இது இந்த மக்களுக்கே, சென்னை நகர மக்களுக்கே நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே எத்தனை தானியங்கி போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் இருக்கின்றன என்று கேட்டிருந்தார்கள். 81 தானியங்கி சமிக்ஞை விளக்குகள் இருக்கின்றன. மேலும் 6 இடங்களை உருவாக்குவதற்கு அரசு அனுமதி அளித்து இருக்கிறது. 1. டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை—நடேசன் ரோடு சந்திப்பு, 2. பீட்டர்ஸ சாலை-கான்ரான் ஸ்மித் சாலைச் சந்திப்பு, 3. திருவள்ளுவர் சாலை-திருவான்மியூர் சந்திப்பு, 4. அண்ணாநகர் ப்ளூ ஸ்டார் எதிரில் 5. கொன்னூர் நெடுஞ்சாலை அயன்புரம் பேருந்து நிலையம் அருகில், 6. நடராஜ் திரையரங்கம் அருகில் யானைக் கவுனி பாலம் ஆகிய ஆறு இடங்களில் இந்தப் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் அமைத்து போக்குவரத்தைச் சீர் செய்யும் பணிகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையில் மிக அதிகமாகப் போக்குவரத்து நெரிசல் உள்ள அண்ணா சாலை, ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை ஆகிய சாலைகளில் பல இடங்களில் இந்தத் தானியங்கி அறிவிப்புக் குறிகள், ஆட்டோமெட்டிக் சிக்னல்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இதனால் அடிக்கடி வாகனங்கள் நின்று நின்று செல்கின்றன. போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, அண்ணா சாலையில் பல்லவன் சாலையிலிருந்து பீட்டர்ஸ் சாலை சந்திப்பு வரையிலும், அதேபோல, பெரியார் நெடுஞ்சாலையில் முத்துசாமி



1998 மே 20]

பாலத்திலிருந்து பச்சையப்பன் கல்லூரி வரையிலுமுள்ள அந்த ஆட்டோமெட்டிக் சிக்னல்களை ஒருங்கிணைப்பதன் மூலமும் போக்குவரத்து தடையின்றி வாகனங்கள் செல்வதற்கு வசதியாக அனைத்து இடங்களிலும் பச்சை விளக்குகள் எரியக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. போக்குவரத்துக் காவல் துறையில் இப்படிப்பட்ட ஒரு கருத்துரு இருக்கிறது. ஆகவே, இதை நிறைவேற்றுவதற்கு நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போலவே, அதுபோன்ற கருத்துரு இருக்கின்ற காரணத்தினால் அதுபற்றிப் பரிசீலித்து அரசு விரைவில் முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார்கள், தானியங்கி அறிவிப்புக் குறிகள் பொது நோக்கத்தோடு வைப்பதற்கு முன்வந்தால் அரசு அனுமதி தருமா? சட்டமன்ற உறுப்பினர்கள் கோட்டைக்கு வருகிறபோதுகூட, எம்.எல்.ஏ.க்கள் வாகனங்கள், பிளஷர் எல்லாவற்றையும் நிறுத்துகிறார்கள், அமைச்சர் வருகிறார்கள் என்று. எனவே, அமைச்சர் அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். அதையெல்லாம் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? (குறுக்கீடுகள்) நாங்கள் டெய்லி வருகிறோம் அல்லவா? பிளஷரிலும் வருகிறோம், எம்.எல்.ஏ.க்கள் பஸ்ஸிலும் வருகிறோம். வரும்போது நிறுத்துகிறார்களே? நிறுத்துவதால்தான் கேட்கிறேன். காவல் துறை அதிகாரிகளுக்கு நிறுத்த வேண்டாம் என்று... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வளவு பேர் இல்லையென்று சொல்லும்போது, நீங்கள் ஒருவர் மட்டும் பிடிவாதமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**திரு. இரா. தாமரைக்கனி:** அமைச்சரைப் பதில் சொல்லச் சொல்லுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கும் சேர்த்து அமைச்சர் பதில் சொல்லட்டும். கோட்டையில் கடந்த ஆட்சியில் 'இன்', 'அவுட்' என இரண்டு வாயில்கள் இருந்தும் 'அவுட்' வாயில் வழியாகத்தான் உள்ளே வரவேண்டும்; வெளியே

போகவேண்டும். 'இன்' வாயில் வழியாக நாங்கள் சட்டமன்றத்திற்குள் வருவதே இந்த ஆட்சியில்தான் என்பதை இந்தப் பேரவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ கற்பனையாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் பேசிக்கொண்டிருப்பதை இங்கே இருக்கின்ற உறுப்பினர்களே எதிர்த்து இருக்கிறார்கள். இல்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைக் கொடுக்கக் கூடாது. முதலமைச்சர் வருகிறபோதுதான்-அதுவும் 4, 5 நிமிடங்கள்கூட இருக்காது—இதுபோன்று கார்கள் நிறுத்தப்படுகிறதே தவிர, மற்ற எந்த அமைச்சரும் வருகின்றபோது அவ்வாறு செய்யப்படுவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார். இருந்தாலும், ஏதோ ஒரு காரணத்திற்காகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவருக்கே தெரியும், சென்னை மாநகரத்து மக்களெல்லாம்கூட ஒவ்வொரு பத்திரிகையிலும் எழுதிக் காண்பித்திருக்கிறார்கள். கடந்த காலங்களில் 1 மணி நேரம், 1½ மணி நேரம் தேக்கி வைக்கப்பட்டிருந்த நிலைமையெல்லாம் இன்று மாற்றப்பட்டு, சென்னை மாநகரத்தினுடைய மக்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *572*, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**572—**

### அரிச்சந்திரா நதியின் குறுக்கே பாலம் கட்டுதல்

***935—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பள்ளிவர்த்தி ஊராட்சி அரிச்சந்திரா நதியின் குறுக்கே பாலம் கட்ட செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மன்னார்குடி அங்காடி மையத்திற்கு அணுகுசாலை அமைக்கும் பணியில் (சிப்பம் எண் 29) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள அரிச்சந்திரா நதி குறுக்கே பாலம் கட்டும் பணியும் அடங்கியுள்ளது. ஒப்பந்தக்காரரிடம் மேற்படி பணிக்கான ஒப்பந்த உடன்படிக்கை 11-6-1997 அன்று செய்யப்பட்டு, பணி தற்போது செயலாக்கத்தில் உள்ளது. ஒப்பந்த உடன்படிக்கையின்படி பணி முழுவதும் 30-6-1999-க்குள் முடிக்கப்படும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஏற்கெனவே போடப்பட்ட கேள்வி. ஆகையினால், பணி வேகமாக நடைபெறுவதற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *573*, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**573—**

### பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

***15838—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்குத் தற்போது எத்தனை கப்பல்கள் உள்ளன?

(ஆ) புதிய கப்பல்கள் வாங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்குத் தற்போது மூன்று சொந்தக் கப்பல்கள் உள்ளன.

(ஆ) மற்றும் (இ) இல்லை.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்குத் தற்போது மூன்று கப்பல்கள் உள்ளன

என்று கூறியிருக்கின்றார்கள். ஆனால், புதிய கப்பல்கள் வாங்கும் உத்தேசம் இல்லையென்று சொல்லியிருக்கின்றார்கள். அதே பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலக்கரி ஏற்றுவதற்காக 16 வாடகைக் கப்பல்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றன. அப்படி 16 வாடகைக் கப்பல்களை அமர்த்துகின்றபோது, நாள் ஒன்றுக்கு, ஒரு கப்பலுக்கு குறைந்தது மூன்றே முக்கால் இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சத்து 50,000 ரூபாய் வரையில் வாடகை ஆகின்றது. ஒரு நாளைக்கு 16 கப்பல்களுக்கு 72 இலட்சம் ரூபாய் வாடகை ஆகின்றது. அது ஒரு ஆண்டுக்கு கிட்டத்தட்ட 210 கோடி ரூபாய் ஆகின்றது. ஆகவே, அரசின் செலவைச் சிக்கனப்படுத்தும் நோக்கத்தோடு, ஏன் சொந்தமாக இன்னும் 3 கப்பல்கள் வாங்கக்கூடாது? அவற்றை விரைவில் வாங்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின்நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி ஹால்டியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்களிலிருந்து பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தனது 3 சொந்தக் கப்பல்களின் மூலமாகவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல 16 கப்பல்கள் அல்ல, 17 வாடகைக் கப்பல்கள் மூலமாகவும் ஏற்றிக் கொண்டு வரப்படுகிறது. இந்த வாடகை முழுவதையும் மின்சார வாரியம்தான் வழங்குகிறது. இதிலே, அரசுக்கோ அல்லது பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கோ எந்தவிதமான நட்டமும் இல்லை. ஆனாலும், பிற்காலத்தில் தமிழக மின்வாரியத்திற்குத் தேவைப்படும் நிலக்கரியின் அளவு அதிகரிக்குமானால் அப்போது மேலும் இரண்டு கப்பல்கள் வாங்குவது பற்றி ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கோ அல்லது அரசுக்கோ நஷ்டம் இல்லை என்று கூறினார்கள். ஆனால், மின்சார வாரியமும் நம்முடைய தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதுதான். ஹால்டியா போன்ற துறைமுகங்களிலிருந்து நிலக்கரியை எடுத்து வரும்போது, எவ்வளவு நிலக்கரி எடுக்க வேண்டும் என்ற அந்த indent-ஐக் கொடுத்ததால் மட்டுமே ஒரு தனியார் நிறுவனம் சுமார் 10 கோடி ரூபாய் இலாபம்





சம்பாதித்துக் கொண்டிருக்கிறது. அதையும் தமிழ்நாடு மின்சார வாரியமே ஏற்று, எவ்வளவு நிலக்கரி தேவைப்படும் என்பதைக் கொடுத்தால் ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் அளவிற்கு இலாபம் வரும். ஆகவே, வருங்காலங்களில் அவ்வாறு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கும் அவ்வளவு தொடர்பு இல்லையென்று கருதுகிறேன். நிலக்கரியை ஏற்றிக் கொண்டு மின்சார நிலையங்களுக்குக் கொண்டு வருகின்ற பணியை, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் செய்து கொண்டிருக்கிறது. அது சொந்தமாக 3 கப்பல்கள் வைத்திருக்கிறது. தேவை அதிகமாக இருக்கிற காரணத்தினால்தான் 17 கப்பல்களை வாடகைக்கு அமர்த்திக் கொள்கிறோம். எதிர்காலத்தில் அதிகக் கப்பல்கள் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதுகுறித்து பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் யோசித்து முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை மின்சார வாரியம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை டெண்டர் மூலமாக, யார் அந்த மின்சார இலாகாவிற்குத் தேவையான நிலக்கரியை இறக்கி, அதைக் குறிப்பிட்ட மின்நிலையங்களுக்கு அனுப்புவது என்பது குறித்த டெண்டர் விடப்படுகிறது. அதிலே யார் எல்-1-ஆக வருகிறார்களோ—குறைந்தபட்ச ரேட்டுக்கு யார் வருகிறார்களோ—அவர்களிடம் அந்த வேலை ஒப்படைக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 574, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**574—**

### கல்மண்டபத்தைத் திருமணக்கூடமாக்குதல்

***6753—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 20

(அ) திருநெல்வேலி, அருள்மிகு சுவாமி நெல்லையப்பர்—காந்திமதி அம்மன் திருக்கோயிலில் அமைந்துள்ள கல்மண்டபத்தைத் திருமணக்கூடமாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன் இருக்கையில் இல்லை. திரு. கோ. நயினா முகமது.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, அருள்மிகு நெல்லையப்பர்—காந்திமதி அம்மன் திருக்கோயிலில் அமைந்துள்ள கல்மண்டபத்தைத் திருமணக்கூடமாக மாற்றியமைத்தால், ஏழை எளியவர்கள் திருமணம் நடத்துவதற்குக் குறைந்த வாடகையில் கொடுக்கலாம். மேலும், அந்தக் கல்மண்டபம் பராமரிப்பு இல்லாமல இருப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாம். எனவே, அந்தக் கல்மண்டபத்தைத் திருமணக்கூடமாக மாற்ற அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அது பரிசீலனையில் இருந்தது. ஆனாலும், துறையிலுள்ள அனைவருடைய கருத்தும் என்னவென்றால், கோயிலின் உள்ளே இருக்கின்ற அந்தக் கல்மண்டபம் திருமணக்கூடமாகப் பயன்படுத்தப்பட்டால், அதனுடைய தூய்மை கெடக்கூடும். பல்வேறு வேளைகளில் அந்தக் கோயில் வளாகத்தின் தூய்மை கெட்டுவிடும் என்று உறுதிபடத் தெரிந்ததால்தான் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. எனவே, இப்பொழுது கோயில் உள்ளே திருமண மண்டபம் கட்டுகின்ற வாய்ப்பு இல்லை.



1998 மே 20]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 575, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**575—**

### கறவை மாடுகள் வாங்குவதற்குக் கடன் வழங்குதல்

***6041—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் இல்லாத கிராமங்களிலுள்ள பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய விவசாயிகளுக்குத் தனியாக மானியத்துடன் கூடிய கறவை மாடுகள் வாங்க அரசு கடன் வழங்குமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இன்றைய நாளில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் இல்லாத கிராமங்களிலுள்ள பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய விவசாயிகட்கு தனியாக மானியத்துடன் கூடிய கறவை மாடுகள் வாங்க அரசு கடன் வழங்கும் திட்டம் ஏதுமில்லை. எனினும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கிராமங்களிலுள்ள பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய வறுமைக் கோட்டிற்குக் கீழ் வரும் விவசாயிகளுக்கு கறவை மாடுகள் வாங்க ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஒவ்வொரு ஊராட்சியிலும் 50 நபர்களுக்கு மானியத்தோடு கூடிய கறவை மாடுகள் வாங்க கடன் வழங்கப்பட்டது. அதுபோல 1996-இல் 'டோக்ரா' திட்டத்தின் கீழும் மானியத்தோடு கூடிய கடன் வழங்கப்பட்டது. ஆனால், இப்பொழுது அவையெல்லாம் வழங்கப்படுவதில்லை. பசுமைப் புரட்சியைக் கண்ட நம்முடைய அரசு வெண்மைப் புரட்சியை உருவாக்குகின்ற வகையில் மீண்டும் பரிசீலித்து, கறவை மாடுகள் வாங்குவதற்கு மானியத்தோடு கூடிய கடன் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறையிலுள்ள கூட்டுறவுச் சங்கத்தைப்

[1998 மே 20

பற்றித்தான் நான் சொல்கிறேன். ஊரக வளர்ச்சித் துறைத் திட்டத்தின் மூலமாக அவை வழங்கப்படுகின்றன என்பதையும் நான் இதற்கு முன் சொன்ன பதிலில் சொல்லியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அப்படிப் பட்ட இடங்களில் மகளிருக்கென்று தனியாகப் பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு தடையாக இருப்பதாக நான் அறிகிறேன். எனவே, மகளிருக்கு முக்கியத்துவம் தருகின்ற வகையில், மகளிருக்கு என்று தனியாகப் பால் உற்பத்திக் கூட்டுறவு நிலையங்கள் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தி அதிகம் இல்லாதபோது இன்னொரு சங்கம் ஆரம்பித்தால், இருக்கின்ற சங்கம் பாதிக்கப்படும். அதற்காகத்தான் இன்னொரு சங்கம் அமைப்பதற்குத் தடை இருக்கிறது. ஆகவே, பால் உற்பத்தி அதிகமாக இருந்தால், இன்னொரு சங்கம் தனியாக மகளிருக்கென்று அமைக்க அனுமதி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 576, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**576—**

## முத்தரப்புக் குழு அமைத்தல்

***3375—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூடிய நலிவடைந்த ஆலைகளைத் திறப்பது பற்றி ஆராய தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கிய முத்தரப்புக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.



1998 மே 20]

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓடுகின்ற ஆலைகளை மூடுவது என்பது தொழிலாளி வர்க்கத்தின் மீது முதலாளிகள் நடத்துகின்ற சமூகக் குற்ற நடவடிக்கையாகக் கருதப்படவேண்டும். ஏனென்றால், அந்த நல்ல ஆலைகளை நலிவடையச் செய்து, பல்வேறு பொருளாதார உள்நோக்கங்களோடு மாநில அரசிடமிருந்தும், பிற நிறுவனங்களிடமிருந்தும் அனுகூலங்களைப் பெறுவதற்காகத்தான் இதுபோன்ற நடவடிக்கைகளில் முதலாளிகள் ஈடுபடுகிறார்கள். அத்தகைய நடவடிக்கைகளால் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இது ஒரு சமூகக் குற்ற நடவடிக்கை என்பதால், மாநில அரசு 'இல்லை' என்ற தன்னுடைய கருத்தை மறுபரிசீலனை செய்து, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழுவைப் போட்டு, நல்ல மில் ஏன் நலிவடைகின்றது என்ற காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைத் தடுப்பதற்குரிய சட்ட ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதே பிரச்சினை குறித்து ஒரு விளக்கம் அளிக்கப்பட்டது. திரும்பவும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் 44 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காரணமாகாது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலிருந்து இது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அந்த நலிந்த ஆலைகள் மூடப்பட்டதற்கு கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிதான் பொறுப்பு ஏற்க வேண்டுமே தவிர, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அதற்குக் காரணமாகாது. இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஏற்கெனவே இருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் State Labour Advisory Board இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் அதிலே உறுப்பினர்கள். மத்திய தொழிற்சங்கத் தலைவர் பிரதிநிதிகள் உறுப்பினர்கள், மேனேஜ்மெண்டு நிருவாக அமைப்புப் பிரதிநிதிகளெல்லாம் இருக்கின்றார்கள். நான்தான் அதற்குத் தலைவர். நாங்கள் கூடி அதிலே விவாதித்திருக்கிறோம். நாங்கள் விவாதித்தபோது ஒரு முடிவை எடுத்தோம். எந்தெந்த ஆலைகளைத் திறக்க முடியும், எவற்றைத் திறக்க முடியாது என்று feasibility பார்த்து, திறக்க முடியும் என்றால் அதற்கான முயற்சிகளைச் செய்கிறோம். திறக்க முடியவில்லையென்றால், சட்டரீதியாகச் 'செட்டில்மெண்ட்' செய்து சேரவேண்டிய அனைத்து அனுகூலங்களையும் பெற்றுத் தருவது என்று, தொழிற்சங்கத் தலைவர்களும், நிர்வாகிகளும் கலந்துகொண்ட அந்த 'அட்வைசரி போர்ட்' கூட்டத்திலே

முடிவு எடுக்கப் பெற்றிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், 'ப்ரமோட்டர்கள்' வந்தால் அவர்களைப் பயன்படுத்த அரசு தயாராக இருக்கிறது. மண்டல வாரியாக நானே நிர்வாகிகளுடனும் அதிகாரிகளுடனும் தொழிற்சங்கத் தலைவர்களுடனும் கோவையிலே, மதுரையிலே, திருச்சியிலே, வைத்துப் பேசியிருக்கிறேன். ஆகையினாலே, முதலாளிகள் மட்டும்தான் இதற்குக் காரணமாக இருப்பார்களேயானால் நேரடியாக ஆலைகளை மூடுவதற்குக் காரணமானால், நடவடிக்கை எடுக்க முடியாது. சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதானால், இப்போதுள்ள நடைமுறைச் சட்டத்தில் என்ன இருக்கிறதோ அதன் அடிப்படையில் எடுக்கலாம். ஆனால், எல்லா ஆலைகளும் மூடப்பட்டதற்கு ஏராளமான காரணங்கள் இருக்கின்றன. "There is no labour dispute" தொழிலில் பிரச்சினை கிடையாது.

*முற்பகல் 10-35*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள சட்டங்கள், பல்லற்ற சட்டங்கள். இந்தப் பல்லற்ற சட்டங்களால் இத்தகைய சமூக விரோதக் குற்றங்களைத் தீர்க்க முடியாது. எனவே, நான் மாநில அரசை வலியுறுத்த விரும்புவது என்னவென்றால், இத்தகைய சமூக விரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்குப் பொருத்தமான கிரிமினல் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அரசு சட்டத் திருத்தம் செய்ய முன்வருமா என்பதோடு— மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், இதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காரணம் அல்ல; அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மூடப்பட்டது என்று. நானும், இவை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டதாகச் சொல்லவில்லை. ஆனால், ஒரு விஷயம் என்ன தெரியுமா? முட்டை கல் மீது விழுந்தாலும், கல் முட்டை மீது விழுந்தாலும், நட்டம் முட்டைக்குத் தான். ஆகவே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மூடப்பட்டாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மூடப்பட்டாலும் சரி, நட்டம் அடைவது தொழிலாளர்கள்தான் எனவே, நட்டமடைந்துள்ள, பாதுகாக்கப்படவேண்டிய தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாநில அரசு முன்வருமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலைகள் மூடப்பட்டதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காரணம் என்று, வெளியிலே, மூடுவதற்குக் காரணமானவர்களே உண்மைக்குப் புறம்பான பிரச்சாரம் செய்கின்ற





காரணத்தினாலே அதுகுறித்துச் சொல்ல நேரிட்டது. மொத்தத்தில் ஆலைகள் திறக்கப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகள் இந்த அரசின் சார்பாக முறைப்படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கு வங்கத்திலும் சரி, கேரளாவிலும் சரி, இந்தப் பல்லற்ற சட்டங்களை வைத்துக் கொண்டுதான் தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகின்றது. அதே வழியில்தான் இங்கேயும் காணப்படுகின்றது. எனவே சட்டத் திருத்தங்கள் அவசியம் என்பதிலே கருத்து வேறுபாடு கிடையாது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டில் காலூன்றிய நேரத்தில் காலனி ஆதிக்கக் காலத்திலே கொண்டுவரப்பட்டவை தொழிலாளர் சட்டங்கள் என்ற பெயராலே இருக்கின்றன. அவை திருத்தப்பட வேண்டும்; மாற்றப்பட வேண்டும் என்பது குறித்து டெல்லியிலே நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டிலே கலந்து கொண்டு, கழக அரசின் சார்பாகக் கருத்து எடுத்துரைக்கப்பெற்றது. இப்போது இருக்கக்கூடிய சட்டத்திலே கிரிமினல் நடவடிக்கை என்பது, 12(3) அக்ரிமெண்டை மீறினால், ஆலையை மூடினால், அவற்றிற்கு இருக்கின்ற சட்டம் என்பது, 'கிரிமினல் ப்ராசிகியூஷன்' போடலாம். அதில் ஐநூறு ரூபாய் அபராதம் என்றுதான் இருக்கிறது. எனவே, மாற்றுவதற்கான முயற்சியை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 577, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், திரு. ச.க. வெங்கடேசன் மற்றும் திரு. அ. வ. அப்துல் நாசர், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**577—**

**டன்லப் தொழிற்சாலையை மீண்டும் திறத்தல்**

***14710—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

**திரு. ச.க. வெங்கடேசன்:**

**திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூரில் உள்ள டன்லப் தொழிற்சாலை மூடப்பட்டு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தொழிற்சாலையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1998 மே 20

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தொழிற்சாலையை மீண்டும் திறக்க இரு தரப்பாருடனும் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி கேட்ட மூவரும் இருக்கையில் இல்லை. அடுத்து வினா எண் 578, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**578—**

**மாணவியர் விடுதி கட்டுதல்**

***8590—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதனை தாராபுரம் நகரில் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாராபுரம் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக் கட்டடம் கட்டுவது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய தொகுதியான எங்கள் தாராபுரம் தொகுதியில் மாணவியர் விடுதி வேண்டி பலமுறை விண்ணப்பித்தும், இதுவரை மாணவியர் விடுதியினைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பெண்கள் முன்னேற்றத்தில் அதிக அக்கறையுள்ள இந்த அரசு, முக்கியமாக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் அதிகக் கவனம் செலுத்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், அங்கு மாணவியர் விடுதி ஆரம்பிக்க ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.



1998 மே 20]

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை விதிமுறைக்குட்பட்டுப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 579, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**579—**

**வனவிலங்குச் சரணாலயம் அமைத்தல்**

***10632—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், கடமலைக்குண்டு—மயிலாடும்பாறை ஒன்றியத்தில் யானைக்கஜம் என்ற இடத்தில் வனவிலங்குச் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தேனி மாவட்டம், கடமலைக்குண்டு-மயிலாடும்பாறை ஒன்றியத்தில் யானைக்கஜம் என்ற இடத்தில் வனவிலங்குச் சரணாலயம் தனியாக அமைக்கும் திட்டம் தற்சமயம் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ. ஆசையன் இருக்கையில் இல்லை. திரு. இரா. தாமரைக்கனி.

**திரு இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடமலைக்குண்டு, மதுரை மாவட்டத்திற்குப் பக்கத்தில் மேகமலை, விருதுநகர் மாவட்டம் அழகர்கோயில் பகுதிகளிலும், ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு அருகிலும் சரணாலயங்கள் அமைப்பதற்கு 6 வருடங்களுக்கு முன்பே அரசினுடைய செயற்குறிப்பு இருந்தது. இப்போது அந்தச் செயற்குறிப்பு எந்த அளவில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் தற்போது வனவிலங்கு

[1998 மே 20

மற்றும் பறவைகள் சரணாலயம் ஏதும் இல்லை. தேனி மாவட்டத்திற்கு அருகில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் சாம்பல் நிற அணில்கள் சரணாலயம் அமைந்துள்ளது. தற்போது தேனி மாவட்டத்தில், மேகமலையில் வனவிலங்குச் சரணாலயம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீவில்லிப்புத்தூர், சாம்பல் நிற அணில்கள் சரணாலயத்தில் சுமார் 2,080 ஏக்கர் பரப்பளவுள்ள நிலமும் அடங்கியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனவிலங்குச் சரணாலயத்திற்கு உள்ளே அதிக அளவில் திரைப்படங்கள் எடுக்கிற காரணத்தினால், அங்கே வன உயிரினங்கள் எல்லாம் அமைதியாக வாழமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், பொள்ளாச்சிக்கு அருகிலேயுள்ள 'டாப் ஸ்லிப்'-ல், இந்திராகாந்தி வனவிலங்கு உய்விடத்திலே இந்த நிலை இருக்கிறது. எனவே, வனவிலங்குச் சரணாலயத்தின் எல்லைக்குள்ளே திரைப்படங்கள் எடுப்பதை முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுகூட அது முறைப்படுத்தப்பட்டு, குறிப்பிட்ட இடங்களில் மட்டும்தான் திரைப்படத் துறையினர் படம் பிடிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். முக்கியமான இடங்களிலே அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 580, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**580—**

**நாற்காலி பின்னும் ஊனமுற்றோர் பணியை நிரந்தரமாக்குதல்**

***7772—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் நாற்காலி பின்னும் பணியில் தொகுப்பூதிய அடிப்படையில் ஊனமுற்றோர் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், இவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு அரசு முன்வருமா?



1998 மே 20]

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை வாசிக்கிறேன்.

(அ) சென்னையில் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலையமும், மதுரையில் ஹெலன்கெல்லர் நிறுவனமும் நாற்காலி பின்னும் பணியை மேற்கொண்டிருக்கின்றன. மேலும், திருவாரூர், தேனி, திருவள்ளூர் மாவட்டங்கள் நீங்கலாக, மற்ற மாவட்டங்களில் தற்போது நாற்காலி பின்னும் பணிக்கு தொகுப்பூதியம் அடிப்படையில் பார்வையற்றோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அந்த மூன்று மாவட்டங்களுக்கும் நேர்காணல் நடைபெறவுள்ளது.

(ஆ) இவர்களை அப்பணியிலே நிரந்தரப்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, நாற்காலி பின்னும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள், பார்வையற்றோர் மற்றும் உடல் ஊனமுற்றோர்கள் என்பதைக் கருத்திலே கொண்டு, தொடர்ந்து இந்தப் பணி அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் கருத்திலே கொண்டு, அவர்களுக்கெல்லாம் வழங்கப்படும் தொகுப்பூதியத்தை உயர்த்திக் கொடுப்பதோடு, அவர்களை நிரந்தரப்படுத்தவும் அரசு முன்வரவேண்டும். நிரந்தரமாக்கி அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது என்பது, சமூகத்திலே அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக அமையும். ஆகவே, அவர்களை நிரந்தரப்படுத்தும் வகையில் அரசு மறுபரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் தொகுப்பூதியமாக 800 ரூபாய் கடந்த காலத்தில் பெற்று வந்தார்கள். நம்முடைய கழக அரசு ஏற்பட்ட பிறகுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியின்படி, 28-10-1996 முதல் அவர்களுக்கு 1,200 ரூபாய் என்று வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கூடுதலாக அவர்கள் ஊதிய உயர்வு வேண்டியுள்ளார்கள். நாற்காலி பின்னும் பணி தொடர்ந்து தேவைப்படுவதை முன்னிட்டு, அவர்கள் பணியினை நிரந்தரம் செய்யுமாறும், சம்பள விகித அடிப்படையில் ஊதியம் நிர்ணயம்

செய்யுமாறும் கோரியதைத் தொடர்ந்து, உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்குநரிடமிருந்து ஏற்கெனவே கருத்துரு பெறப்பட்டு, இதுபோன்ற கோரிக்கையினை, ஊதியக் குழுவிற்குப் பரிந்துரை செய்யுமாறு, ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாற்காலி பின்னும் பணிபோல, மாநிலம் முழுவதும் பள்ளி மாணவ, மாணவியர்க்கு வழங்கப்படும் சீருடைகள் தைக்கும் பணியைத் தற்போது யார் செய்கிறார்கள், தனியார் நிறுவனங்கள் செய்கின்றனவா, தனியார் நிறுவனங்கள் செய்ய அனுமதி வழங்கப்படுமா, அதற்கு விதிமுறைகள் ஏதாவது இருக்கின்றனவா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது இந்தக் கேள்வியை ஒட்டியதாக இல்லை என்றாலும்கூட, பள்ளி மாணவர்க்குச் சீருடை தைக்கின்ற பணி சமூக நலத் துறையின் மூலமாக, பதிவு செய்யப்பட்ட, தையல் தொழிலில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற பெண்களைக் கொண்டு, தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தனியாருக்கு வழங்கப்படுமா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியில் தனியாருக்கு வழங்கியதன் காரணமாக சீருடை, பள்ளி மாணவர்களுக்குச் சரியான முறையில் கிடைக்காமல் வேறு விதத்தில் அவை கொள்ளையடிக்கப்பட்டிருந்தன என்பது நாடறிந்த உண்மை. எனவே, தனியாருக்கு இந்தச் சீருடை தைப்பதற்கு உண்டான பணியை வழங்குவதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

**(அ) சென்னை, எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் விளையாட்டு முகாமில் கலந்துகொண்ட மாணவர்கள் இரவு உட்கொண்ட உணவு காரணமாக வயிற்றுப்போக்கு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து சிறப்புக் கவன ஈர்ப்பு, சென்னை, எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டு அரங்கிலே விளையாட்டு முகாமில் கலந்து கொண்டு இரவு உணவு சாப்பிட்ட 38 மாணவர்களுக்குத் திடீரென்று வயிற்றுப்போக்கு ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாகவும், திரு. டி. மணி அவர்கள் கவன ஈர்ப்பாகவும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு முதலில் திரு. சி. ஞானசேகரன் அவர்களை, இதைப்பற்றிச் சுருக்கமாக மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை, இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் விளையாடுவதற்காக வருகை தந்த குழந்தைகளுக்கு இந்த உணவு உண்டதனுடைய விளைவாக இப்படி வயிற்றுப்போக்கு ஏற்பட்டதா? அதற்கான காரணம் என்ன? ஏன், விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்தக் குழந்தைகள் இப்படிப் பாதிக்கப்பட்டார்கள் என்பதை அறிவதற்காக இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பினை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை, எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் கோடைக்கால விளையாட்டுப் பயிற்சி பெறுவதற்காக 160 மாணவர்கள் வந்திருக்கிறார்கள். அதில் இரவு உணவு உண்டபின் 38 மாணவர்களுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் மாணவர்களிடையே மிகவும் ஒரு அச்சமான, பதற்றமான நிலை உண்டாகி, பயிற்சிக்கு இனிமேல் போகவே கூடாது என்ற ஒரு நிலை இருக்கிறது. பயிற்சிக்குப் போகும்போதே நம் உயிருக்கு இப்படி ஆபத்து இருக்கிறது என்ற

அளவுக்கு நினைக்கிறார்கள். ஆகவே, இதில் அஜாக்கிரதை காரணமாக உணவில் ஏதாவது விஷம் கலந்து இருக்கிறதா? உணவு சப்ளை செய்தவர்கள் யார்? என்ன கலந்து இருந்தால் அது விஷமாக மாறியிருக்கும்? இதுகுறித்து மருத்துவர்கள் என்ன கூறுகிறார்கள்? அதுமட்டுமல்லாமல், இனிமேல் உணவுகளை நம்முடைய துறையிலிருந்து கொடுக்காமல் மாணவர்களுக்குப் பயிற்சிக்கால ஊதியமாகக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விளையாட்டு அரங்கில் மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்து பயிற்சிக்காக அழைக்கப்பட்ட மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட உணவிலே ஏதோ பாய்சன் என்று சொல்லுகின்ற அளவுக்கு இல்லை என்றாலும் உணவிலே ஏதோ சீர்கேடு வந்திருக்கிறது. 163 மாணவர்களிலே 38 மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முதலில் 3 மாணவர்கள்தான் மருத்துவமனைக்குப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். Food Poison என்று சொல்லக்கூடிய விவரம்தான் தரப்பட்டிருக்கிறது. இதனால் ஒரு அச்சம் ஏற்கெனவே நிலவுகிறது. அங்கே செய்யப்படும் சமையல் எல்லாம் இண்டர்நேஷனல் ஸ்டாண்டர்டு என்ற அந்த லெவலில் இருக்கக்கூடிய அடிப்படையில்தான் செய்யப்படுகிறதா? அந்த உணவு சமைப்பவர்கள் ஒப்பந்தக்காரர்களா, அல்லது நிர்வாகத்தின் மூலமாகச் சமையல் செய்கிறார்களா என்பதை அரசினிடத்திலிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 10-50

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்பின் அடிப்படையிலே நான் பெற்று இருக்கிற சில விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இளம் மாணவர்களுடைய விளையாட்டுப் பயிற்சி சென்னையில் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. குறிப்பாக, இந்த ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில், பேஸ்கட் பால், புட்பால், ஹாக்கி, நீச்சல், வாலிபால், ஆகிய இந்த விளையாட்டுகளுக்கான பயிற்சி தருவதற்காக 104 மாணவர்களும், 59 மாணவிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு 11-5-1998 முதல்



தொடர்ந்து இந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது. அந்த விளையாட்டுகளுக்கான ஸ்டேடியங்கள் இருக்கின்ற அந்த இடங்களில் அங்கேயே தங்குவதற்கான இடவசதி 'Dormitories' அமைத்து அவர்கள் தங்க வைக்கப்படுகிறார்கள். அங்கேயே அவர்களுக்கு சத்துத் தரமான உணவு (Nutritious food) தரப்பட வேண்டும் என்ற முறையில் அந்த உணவு வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்பட்ட இந்த 163 மாணவ, மாணவியர்களில், 17-5-1998 அன்று இரவு உணவு உண்டதற்குப் பின்னர், ஆறு மாணவர்கள் மட்டும் முதலில் தங்களுக்கு வயிற்று வலி ஏற்பட்டிருப்பதாக, வாந்தி ஏற்படுவதாகத் தெரிவித்தார்கள். அந்த மாணவர்கள் அப்படித் தெரிவித்த உடனேயே அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி தகுந்த சிகிச்சை வழங்க வேண்டுமென்று முயற்சி செய்யும்போது ஆயிஷா மருத்துவ மனையில் உள்ள ஆம்புலன்ஸ் உடனடியாகக் கிடைத்தது என்ற முறையில் அதன்மூலமாக ஆயிஷா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு, அங்கு அவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. அவர்களோடு மேலும் 50 மாணவ, மாணவியர்களும்கூட, சிறிதளவு சந்தேகமிருந்தாலும் அவர்களும், அனுப்பப்பட்டு அன்றே அவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்பட்டு மேலும் பாதிப்பு இல்லை என்ற முறையில் திருப்பி அனுப்பப்பட்டார்கள். இரண்டு மாணவர்களும், ஒரு மாணவியும் மட்டும் மேலும் ஒரு நாள் அங்கே தங்க வைக்கப்பட்டு அந்த மூன்று பேரும் மறுநாள் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

இது உணவு அடிப்படையில் ஏற்பட்ட நச்சுத்தன்மை காரணமாக விளைந்ததா, அல்லது சமையலில் ஏற்பட்ட ஏதேனும் குறைபாடு காரணமாக ஏற்பட்டதா, எதன் விளைவால் என்பது மருத்துவமனையில் அவர்கள் இதுபற்றி ஆய்வு செய்துதான் தெரிவிக்க வேண்டும். தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த மாணவ, மாணவியர்கள் மட்டுமல்லாமல் அந்த விளையாட்டிற்குப் பயிற்சி அளிக்கின்ற அலுவலர்கள், மார்க்கர்கள், பயிற்சியாளர்கள் ஆகியோர் 17 பேர் அந்த உணவைச் சாப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சிற்றுண்டி விடுதியிலிருந்து ஏதாவது பண்டம் வந்து, அதை அவர்கள் சாப்பிட்டுவிடுவார்களேயானால் அதிலே இருக்கின்ற எண்ணெய் காரணமாக அலர்ஜி ஏற்பட்டு, உடனடியாக அவர்கள் பாதிக்கப்படுவார்கள்—அதுமாதிரி மற்றவர்களைப் பாதிக்காத எண்ணெய் இவர்களைப் பாதித்திருக்கக்கூடுமோ என்பதும் அல்லது வேறு என்ன காரணம் என்பதும் மருத்துவமனை அறிக்கை மூலமாகத்தான் தெரிய வேண்டும். கூடுமான வரையில் நல்ல முறையில் உணவு வழங்கி

நல்ல பயிற்சி வழங்குவதற்காக இந்த ஏற்பாடு நடைபெறுகிறது. எதேனும் குற்றம், குறை இருக்குமானால் அதைக் களைவதற்கு அரசு தகுந்த ஆலோசனைகளை வழங்கும்.

## (ஆ) சிதம்பரம் கோட்ட மின்வாரிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடுவது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவனஈர்ப்பு. 22-4-1998 முதல் சிதம்பரம் கோட்டம் மின்வாரியத்திலுள்ள அனைத்து ஒப்பந்தத் தொழிலாளர்களும் சில கோரிக்கைகளை முன்வைத்துப் போராடி வருவது குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி அவர்கள் கொண்டு வருவார்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் கோட்டம் மின்சார வாரியத்தில் இருக்கின்ற ஒப்பந்தத் தொழிலாளர்கள் கடந்த 25 தினங்களாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் இரண்டுதான். ஒன்று, விடுபட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது குறித்து நீதிபதி காலித் கமிட்டியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது. இரண்டாவதாக, அவர்களுக்குக் கருணைத் தொகை என்று சொல்லப் படுகிற போனஸ் தொகை வழங்கப்பட வேண்டுமென்பது. இந்த இரண்டையும் மின்சார வாரியம் நிறைவேற்றித் தருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். மேலும், விடுபட்டுப்போன ஒப்பந்தத் தொழிலாளர்கள் கடந்த 1996 ஆம் ஆண்டு ஆந்திரத்திலே வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது கிழக்கு கோதாவரியிலே மின்சாரப் பணிகளை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட்டவர்கள். அங்கே அவர்கள் மூன்று மாதங்கள் தங்கி மின்சாரப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியதற்காக ஆந்திரப் பிரதேச மின்சார வாரியம் அவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறது. எனவே, அப்படிப் பணியாற்றியவர்களை உடனடியாக நிரந்தரமாக்குவது குறித்து காலித் கமிட்டியில் சேர்த்துக் கொண்டு, அவர்களுக்கு கருணைத் தொகையினை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலித் கமிஷன் அறிக்கையின்படி, ஒப்பந்தத் தொழிலாளர்களை எல்லாம் நிரந்தரமாக்குவது குறித்து மின்சார வாரியம் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து 18,000 பேரில் 12,000 பேர்தான்



இப்போது சர்வீசில் இருக்கிறார்கள் என்று வாரியத்திற்குத் தெரிவித்து அவர்கள் எல்லாம் இந்த மாத இறுதிக்குள் எடுத்துக்கொள்ளப்பட விருக்கிறார்கள். யாராவது உண்மையிலேயே மின்சார வாரியத்திலே தொடர்ந்து ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணியாற்றி அதற்கான ஆதாரங்கள் இருக்குமானால் உரிய அதிகாரிகளிடத்தில் கொடுத்தால் நிச்சயமாக அவர்களும் நிரந்தரமாக்கப்படுவார்கள். இதிலே எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது. ஒவ்வொரு கட்சியும் யூனியன் வைத்திருக்கின்றது. அந்த யூனியன்கள் மூலமாகவும் அதிகாரிகளிடம் சென்று அணுகுவார்களேயானால் நிச்சயமாக மின்சார வாரியம் இது குறித்துப் பரிசீலிக்கும்.

முற்பகல் 10-55

அடுத்து, ஆந்திரா சென்று நல்லமுறையில் பணியாற்றிய ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குக் கருணைத் தொகை வழங்கவில்லை என்று சொன்னார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எனக்குத் தெரிந்து இப்படிப்பட்ட குறை இருப்பதாக என்னுடைய கவனத்திற்கு எதுவும் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி இங்கே சுட்டிக்காட்டிய காரணத்தால், அப்படி ஏதாவது குறை இருக்குமானால், அவர்களுக்கு உடனடியாகக் கருணைத் தொகை வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (இ) போலி டாக்டர் எனக் கூறி ஏழை மருத்துவர்கள் கைது செய்யப்பெறுவதால் ஏற்பட்டுள்ள நிலைமை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவனஈர்ப்பு, போலி டாக்டர்கள் எனக் கூறி, தமிழகம் முழுவதும் உள்ள ஏழை மருத்துவர்கள் கைது செய்யப்படுவதால் ஏற்பட்டுள்ள பதற்றநிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ச. அழகிரி ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களைச் சுருக்கமாக இதுகுறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். தமிழகத்தில் இன்றைக்கு ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையில் போலி டாக்டர்கள் கைது என்ற விதத்திலே பல்வேறு செய்திகள் பத்திரிகைகள் வாயிலாக

வந்துகொண்டிருக்கின்றன. போலி டாக்டர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து யாருக்கும் இருக்க முடியாது. ஆனால், சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஓமியோபதி ஆகியவை இந்திய முறை மருத்துவத்திற்கு உள்ளடங்கிய மருத்துவப் பிரிவுகள் ஆகும். இம்முறைகளில் மருத்துவம் செய்கின்றவர்களைக் காவல் துறையினர் அத்துமீறிக் கைது செய்கிறார்கள். நீங்கள் போலி டாக்டர்கள் என்று சொல்லி அவர்களைக் கைது செய்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள கிராமப்புறங்களில், இந்திய முறை மருத்துவம் செய்பவர்கள், நான் சொன்ன சித்தா, ஆயுர்வேதம், யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவம் செய்பவர்கள் 20 ஆயிரத்திற்கும் அதிகமாக இருப்பார்கள். அவர்கள் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், பாரம்பரிய மருத்துவர்களும் பாதிப்புக்கு உள்ளாகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதில் நீங்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சித்தாவிலும் ஊசி மருந்துகள் இருக்கின்றன, ஆயுர்வேதத்திலும் ஊசி மருந்துகள் இருக்கின்றன, ஓமியோபதியிலும் ஊசி மருந்துகள் இருக்கின்றன. காவல் துறையினருக்கு எது எந்த மருத்துவத்தைச் சேர்ந்தது என்று தெரியாமல் அங்கே ஊசி மருந்துகள் இருக்கின்றன என்று சொன்னால் உடனடியாகக் கைது செய்து விடுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். சர்க்கரை வியாதி உள்ள ஒருவர் இன்சுலினை தன்னுடைய கையாலேயே போட்டுக் கொள்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொன்னால் அவரைப் போலி மருத்துவர் என்று கைது செய்யப்போகிறீர்களா? அல்லது தற்கொலை முயற்சி செய்தார் என்று கைது செய்யப்போகிறீர்களா? ஆகவே ஊசி மருந்து என்று சொன்னால், ஆங்கில முறை மருத்துவம் படித்துப் பட்டம் பெற்று தேர்ச்சி பெற்ற மருத்துவர்களின் முறையை இவர்கள் பயன்படுத்துவார்கள் என்று சொன்னால் நிச்சயமாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஆவார்கள். அதுமட்டுமல்ல, சென்னை மாநகரில் மிகப் பெரிய மருத்துவமனைகள் இருக்கின்றன. அப்போலோ மருத்துவமனையில் தவறான மருத்துவ சிகிச்சை நடைபெற்றது என்று சொல்லவில்லையா? அரசு மருத்துவ மனைகளில் ஆபரேஷன் செய்யும்போது, மேஜர் ஆபரேஷன் செய்யும் போது, ஆபத்து ஏற்பட்டால் அதற்கு நாங்கள் பொறுப்பேற்கிறோம் என்று உறவினரிடம் கையெழுத்து வாங்கவில்லையா? ஆகவே ஆபத்து என்பது எங்கேயும் வரக்கூடும். எனவே, குறிப்பாக இந்திய முறை மருத்துவர்களை, காவல் துறையினர் கைது செய்வது என்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.



அடுத்து, காவல் துறை அதிகாரிகளுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுப்பதற்குப் பதில், ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய Joint Director of Health அவர்களை ஆங்கில முறை மருத்துவத்திற்கென்றும், District Sidha Medical Officer அவர்களை சித்த மருத்துவத்திற்கென்றும் நியமித்து ஒரு குழுவைப் போட்டு, ஏதாவது மனுக்கள் இருக்கும் என்று சொன்னால் தக்க நடவடிக்கை எடுக்கலாம். அவ்வாறு செய்து, போலி மருத்துவம் செய்யக்கூடியவர்கள்மீது நடவடிக்கை எடுத்து என்ன தண்டனை கொடுத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இந்திய முறை மருத்துவம் செய்கின்றவர்கள் பல்வேறு பகுதிகளில் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியிலே மருத்துவம் செய்து மக்கள் மத்தியிலே மரியாதை பெற்றிருக்கிறார்கள். அவர்கள்மீது திடீரென்று காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து, அவர்களைக் கைது செய்தால் அந்தப் பகுதியில் அவர்கள் மரியாதை இழப்பது மட்டுமல்லாமல், அந்தப் பகுதி மக்களுடைய நம்பிக்கையையும் இழந்து, அவமானப்படுகின்ற நிலைக்கு ஆளாகிறார்கள். எனவே, காவல் துறையினரிடமிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடலூர் மாவட்டத்தில் புவனகிரி பகுதியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களுடைய தந்தையாருக்கு மிகவும் நெருக்கமானவரும், அவருடைய மருத்துவருமான டாக்டர் சண்முகசுந்தரம், ஆர்.ஐ.எம்.பி. அவர்கள் மருத்துவமனையில் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு அலைக்கழிக்கப்பட்டிருக்கிறார். அவர் ஒரு சிறந்த மருத்துவர். உறுப்பினர் அழகிரி அவர்களும் அவரிடம்தான் வைத்தியம் செய்து கொள்கிறார். இதுபோன்ற நல்லவர்களுக்கு அவமதிப்பு ஏற்படுகிறது. எனவே, இதுபோன்ற நிலைமையைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். காவல் துறை இதிலே அத்துமீறல் செய்து விடாமல் அரசு கவனிக்க வேண்டுமென்றும், கண்காணிக்க வேண்டுமென்றும் கேட்டு, இந்திய முறை மருத்துவர்களை நீங்கள் பாதுகாக்க வேண்டுமென்றும் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

(முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 மே 20

டாக்டர் குமாரதாஸ் அவர்களும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களும், சித்தா, யுனானி, ஆயுர்வேதம் மற்றும் ஓமியோபதி மருத்துவத்திலே இருக்கக்கூடிய டாக்டர்கள் தங்களுடைய தொழிலைச் செய்யும்போது, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் கைது செய்கிறார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது என்ற ஒரு கருத்தை இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். இதுகுறித்து இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையைத் தெளிவாக நான் அறிவிக்க விரும்புகிறேன்.

கலைஞர் அவர்களும், இங்கே இருக்கக்கூடிய கல்வி அமைச்சர் அவர்களும் இந்திய மருத்துவத்திலே அக்கறையுள்ளவர்கள். சித்தா, ஆயுர்வேதம், யுனானி மற்றும் ஓமியோபதி போன்ற மருத்துவ முறைகள் தமிழகத்திலே மிகவும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே ஒதுக்கிய தொகையைவிட ஏறத்தாழ 7, 8 கோடி ரூபாயை அதிகமாகக் கொடுத்து இந்தத் துறைகள் மிகச் சிறப்பாக வளர்ச்சியடைய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். எனவே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஓமியோபதி ஆகிய இந்த மருத்துவ முறைகள் வளர்க்கப்பட வேண்டுமென்றும், அந்த மருந்துகள் நோயாளிகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதிலேயும் அக்கறை கொண்டுள்ளது.

ஆனால், இந்திய மருத்துவத்திலே, சித்தா, ஆயுர்வேதம், யுனானி மற்றும் ஓமியோபதி போன்றவைகளில் பட்டம் பெற்ற டாக்டர்கள் மற்றும் அந்தந்த மருத்துவத் துறையில் முறைப்படி பதிவு செய்தவர்கள் நோயாளிகளுக்கு வைத்தியம் செய்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று ஏற்கெனவே காவல் துறையினருக்கு இந்த அரசு அறிவுரை வழங்கியிருக்கிறது. அதுபோல, மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கிராமப் பகுதிகளில் பதிவு செய்யப்படாத மருத்துவர்கள் சிலர் இந்திய மருத்துவத்தில், சித்தா, ஆயுர்வேதம், யுனானி மற்றும் ஓமியோபதி போன்ற துறைகளில் அனுபவம் பெற்றவர்கள் என்றும், பரம்பரை மருத்துவர்கள் என்றும் சொல்லிக்கொண்டு வைத்தியம் செய்கிறார்கள். அப்படி வைத்தியம் செய்யும்போது பலர் அலோபதி மருந்துகளைப் பயன்படுத்துகின்றார்கள். ஊசி போடுகிறார்கள். இதனால், ஏழைகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், இந்த அவையிலே சொல்வதிலே தவறில்லை. ஏனென்றால், இதன் மூலம் நாட்டு மக்களுக்கும் தெரியும், அதாவது கிராமப் பகுதிகளிலே பலர் பால்வினை நோயால் பாதிக்கப்படுகிறார்கள். வி.டி. என்று



1998 மே 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சொல்லப்படுகின்ற Venereal disease நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓமியோபதியில் சிகிச்சை அளிக்கும்போது அலோபதி மருத்துவத்திலே இருக்கக்கூடிய பென்சிலின் என்கின்ற அந்த ஊசியை ஓமியோபதியைப் படித்தவர்கள் போடுகிறார்கள். அதனால் நோயாளி சில நேரம் இறந்து விடுகிறான். பென்சிலின் ஊசி போடுவதற்கு ஒரு முறை இருக்கிறது. முதலில் டெஸ்ட் செய்ய வேண்டும்; பென்சிலின் போட்டால் அது சிலருக்கு ஒத்து வராது. இதையெல்லாம் அவர்கள் சோதனை செய்துதான் போட வேண்டும். அப்படிப்பட்ட முறைகளையெல்லாம் பின்பற்றாமல், யார் வேண்டுமானாலும் பென்சிலின் போடலாம், யார் வேண்டுமானாலும் அலோபதி மருந்து கொடுக்கலாம் என்ற ஒரு நிலை இருக்குமானால் நிச்சயமாக நோயாளிகளை யாரும் காப்பாற்ற முடியாது.

இன்றையதினம் தினமணி பத்திரிகையில்கூட தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். கிராமப் பகுதிகளில் இந்த வி.டி. நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எப்படியெல்லாம் போலி டாக்டர்களால் பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். கிராமப் பகுதியில் வி.டி. நோயால் பாதிக்கப்பட்டவர்கள், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட போலி டாக்டர்களால் ஏமாற்றப்பட்டு அவர்களின் உயிர்கள் ஊசலாடுகின்றன. எனவே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், யாராவது வி.டி. நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிப்பதற்கு தாலுகா மருத்துவமனைகளிலும், மாவட்ட மருத்துவமனைகளிலும் மருந்துகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே போய், டாக்டர்கள் இடத்திலே கூச்சமில்லாமல் தங்களுடைய நோயைப் பற்றிச் சொன்னால் உடனே அவர்களுக்கு மருந்து கொடுத்து சிகிச்சை அளிக்கப்படும். அதை விட்டுவிட்டு, போலி டாக்டர்களிடத்திலே போய் கண்ட மருந்துகளைப் பயன்படுத்தி அதன்மூலம் உயிர் இழக்கக்கூடிய அபாயமிருக்கிறது.

அதுபோலவே, எய்ட்ஸ் என்று சொன்னால் எங்கேயும் மருந்து கிடையாது. ஓரே ஒரு மருத்துவமனையில், தாம்பரத்தில் இருக்கக்கூடிய டி.பி. சானடோரியம் மருத்துவமனையில் மட்டும் சித்த மருத்துவம் மூலம் இந்த நோய்க்கு மருந்து கொடுக்கிறார்கள். சிலர் குணமாகிக் கொண்டிருக்கின்றார்கள். விஞ்ஞானபூர்வமாக இது நிரூபிக்கப்படவில்லை என்றாலும்கூட, சித்தாவில் அதற்கு மருந்து இருக்கிறது. இன்றையதினம் அது எடுத்துச் சொல்லப்பட்டு சில நோயாளிகள் நல்ல முறையில் குணமாகி வீடு திரும்பியிருக்கிறார்கள். எனவே, இதையெல்லாம் பயன்படுத்துவதை விட்டு, போலி மருத்துவர்கள் மூலமாக இப்படிப்பட்ட

நோய்களுக்கெல்லாம் மருந்துகள் கொடுக்கப்பட்டு பல நோயாளிகள் கிராமப்புறத்தில் ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவேதான், மீண்டும் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் போன்றவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள், இந்திய முறை மருத்துவத்திலே பதிவு செய்யப்பட்ட எந்த மருத்துவர்களாக இருந்தாலும், அவர்கள் யாரையும் கைது செய்யக்கூடாது, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று காவல் துறைக்கும் சொல்லப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-05

அதைப்போல, Joint Director, Deputy Director ஆகியோருக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அதையும் மீறி எங்கேயாவது நடவடிக்கை எடுக்கப்படுமானால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக அந்த நடவடிக்கைகள் தவிர்க்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்திய முறை மருத்துவத்திலே பயிற்சி பெற்றவர்கள் எக்காரணத்தைக் கொண்டும், அலோபதி மருந்துகளைப் பயன்படுத்தக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் மிகச் சிறந்த சித்த வைத்தியர். அவரும் இதை ஒத்துக்கொள்வார் என்று நினைக்கிறேன். எனவே, இந்திய முறை மருத்துவர்கள், அலோபதி மருந்தைப் பயன்படுத்தாமல், அவர்கள் எந்தத் துறையைச் சேர்ந்தவர்களோ, அதற்குண்டான மருந்தைப் பயன்படுத்துவதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. ஆனால், எக்காரணத்தைக் கொண்டும் அலோபதி மருந்தைப் பயன்படுத்தினால் அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு, இந்த அளவிலே என்னுடைய விடையைக் கொடுக்க விரும்புகிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அளித்த விளக்கத்திலே பாயின்ட் ஆஃப் ஆர்டரா?



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஆம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்தான் முதலிலே எழுந்து நின்றேன். எனக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும்தான் எழுந்து நின்றார்கள். உங்களுக்கும் பேச வாய்ப்புத் தருகிறேன். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் முதலில் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலி மருத்துவர்களை ஒழிப்பதற்காக, மருத்துவமனைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய சட்டம் உடனடியாக அமலாகும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், அது அலோபதி மருத்துவர்கள் மத்தியிலே கடுமையான எதிர்ப்புக்கு ஆளாகியிருக்கிறது. போலி மருத்துவர்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக அலோபதி மருத்துவர்களைத் தொல்லைக்கு ஆளாக்கக்கூடிய சட்டம் என்று அலோபதி மருத்துவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அணுகி, மனுகொடுத்திருக்கிறார்கள். எனவே, சித்த மருத்துவர்கள் பீதிக்கு ஆளாகியிருக்கிறார்கள்; ஓமியோபதி, யுனானி, அலோபதி மருத்துவர்கள் இப்படி அத்தனை மருத்துவர்களும் பீதிக்கு ஆளாகி இருக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. எனவே, இதை இன்னும் நல்ல முறையிலே யோசித்து, யாரும் பீதி அடையாத வகையிலே தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்ததைப்போல, மருத்துவர்கள் யாரும் அதைப்பற்றி அச்சப்படவில்லை. இன்று காலையில்கூட என்னை நேரிலே சந்தித்து, நாங்கள் ஒரு நேரத்திலே இந்தச் சட்டத்தை எதிர்த்தோம். இருந்தாலும்கூட, நாடு இன்றுள்ள சூழ்நிலையில் இந்தச் சட்டம் வரவேற்கக்கூடிய ஒன்றுதான். ஆனால், அதிலே என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டும்; எப்படிப்பட்ட முறையிலே அதை அமல்படுத்த வேண்டும்; என்பது குறித்து நாங்கள் உங்களோடு விவாதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். வருகின்ற 23 ஆம் தேதி, சனிக்கிழமையன்று என்னுடைய அறையிலே வந்து விவாதித்து, அது குறித்து அவர்கள் ஆலோசனை சொல்ல இருக்கிறார்கள். அவர்களிடமும்

நான் தெரிவித்திருக்கிறேன். அப்படி குழு அமைக்கும்போது, யார் யார் அலோபதி மருத்துவர்களோ அவர்களை—தனியார் மருத்துவமனைகளில் இருக்கக்கூடிய மருத்துவர்களைக்கூட—அந்தக் குழுவிலே இடம்பெறச் செய்து, அதன் மூலம் அவர்களுடைய அச்சத்தைப் போக்கக்கூடிய வகையிலே இந்தச் சட்டம் அமல்படுத்தப்படும் என்று அவர்களிடம் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அந்தச் சட்டத்தை அமல்படுத்துகின்ற நேரத்திலே இந்திய மருத்துவத்திலே பயிற்சி பெற்ற மருத்துவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். யாரும் அச்சப்படாத அளவுக்கு, அந்தச் சட்டம் அமல்படுத்தப்படும். அதன் மூலம் தமிழகத்திலே போலி மருத்துவர்கள் ஒழிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலி மருத்துவர்களைக் கட்டுப்படுத்துவது குறித்து அரசு எடுக்கின்ற எல்லா நடவடிக்கைகளுக்கும் மக்களுடைய ஆதரவு உண்டு. யுனானி, சித்தா, ஆயுர்வேதம் போன்ற துறைகளிலே போலியாகச் செயலாற்றிக் கொண்டிருக்கக்கூடிய மருத்துவர்கள்மீது நடவடிக்கை எடுக்க, அரசு ஏற்கெனவே போலீஸ் துறைக்கும், மற்ற துறைகளுக்கும் தாக்கீது அனுப்பியிருப்பதாகவும், உண்மையான மருத்துவர்கள் எந்தவிதமான இன்னலுக்கும் ஆளாக்கப்படக் கூடாது என்றும் சொல்லியிருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆனால், நேற்று இரவு எனக்கு வாணியம்பாடியிலிருந்து தொலைபேசி மூலம் தகவல் ஒன்று வந்தது. வாணியம்பாடியில் இருக்கக்கூடிய, பிரபலமான யுனானி மருத்துவர், டாக்டர் அக்பர் கவுசர் அவர்களை, அங்கே இருக்கக்கூடிய காவல் துறையைச் சேர்ந்தவர்கள், அரசினுடைய அறிவிப்பை வைத்துக்கொண்டு, தொந்தரவு செய்கிறார்கள் என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அது குறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மூத்த உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன், டாக்டர் அக்பர் கவுசர் போன்றவர்கள்மீது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது. இதுகுறித்து நேற்றையதினம் காலையிலேயே எனக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. ராஜேந்தர் அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு





இப்படி ஒரு அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் உடனடியாக வேலூர் டி.ஐ.ஜி. அவர்களோடு தொடர்பு கொண்டு இந்தச் செய்தியை அவரிடம் தெரிவிக்கும்போதே, அவர் சிரித்துக்கொண்டே சொன்னார், அக்பர் கவுசர் அனைவருக்கும் தெரிந்தவர், அவர்மீது இந்தச் சட்டம் நிச்சயமாகப் பாயாது. யாராவது அப்படி ஒரு புரளி கிளப்பியிருப்பார்களேயானால், அதை இந்த இலாகா பார்த்துக்கொள்ளும் என்றும் சொல்லியிருக்கிறார். எனவே, இதைப்பற்றியெல்லாம் அக்பர் கவுசர் அச்சப்படாமல் தொடர்ந்து வைத்தியம் செய்யலாம் என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஓமியோபதி பெடரேஷன் சார்பில் ஒரு விவரம் கொடுத்திருக்கிறார்கள். அதில், பதிவுபெற்ற ஓமியோபதி டாக்டர்கள் 15,500 பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். பதிவு பெற்ற பரம்பரை சித்த வைத்தியர்கள் 8,000 பேர் இருக்கிறார்கள். ஓமியோபதி பெடரேஷனிடம் தொடர்பு கொண்டு இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற கணக்கை வாங்கி, மருத்துவத் துறை மூலம் ஒரு குழு மாதிரி அமைத்து, அவர்களுக்கு வைத்தியம் பார்க்க அனுமதி அளித்துவிட்டு, மீதி பேர் போலி டாக்டர்கள் - போலி ஓமியோபதி டாக்டர்கள், போலி சித்த வைத்தியர்கள் - என்று அறிவிக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், உண்மையிலேயே இருக்கின்ற ஓமியோபதி டாக்டர்களுக்கும், சித்த வைத்தியர்களுக்கும் அரசு பாதுகாப்பு கொடுக்க முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே உள்ள டாக்டர் குமாரதாஸ் அவர்களிடம் எனக்குச் சர்க்கரை வியாதி என்று சொன்னேன். அவர் என்னிடம் வாருங்கள், நான் வைத்தியம் பார்க்கிறேன் என்று சொல்லி, சில மருந்துகளைத் தருகிறேன் என்று சொல்கிறார். இவரை நம்பி வைத்தியம் பார்க்கப் போகலாமா (சிரிப்பு) இதனால் என் உயிருக்கு ஆபத்து வந்துவிடாது என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம்—இவரிடம் சென்று வைத்தியம் பார்ப்பதற்கு—அளிப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலில் நீங்கள், உங்களுக்கு என்னென்ன வியாதிகள் இருக்கின்றன என்ற பட்டியலைக் கொடுங்கள். அதை எங்கெங்கு அனுப்பலாம் என்று அமைச்சர் அவர்கள் முடிவு பண்ணுவார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் குமாரதாஸ் அவர்களைப் பொறுத்தவரை, அவர் ஒரு நல்ல* சித்த மருத்துவர். இன்னும் சொல்லப்போனால், அரசாங்கத்திற்குத் தேவையான சித்த மருந்துகளைத் தயார் செய்து கொடுக்கக்கூடிய இடத்தில் இருக்கக்கூடியவர் அவர். எனவே, அவர் நல்ல டாக்டரா என்று கேட்டால், என்னைப் பொறுத்தவரையில், சித்த மருத்துவத் துறையில் நல்ல டாக்டர், மற்ற துறை பற்றி எனக்குத் தெரியாது. (சிரிப்பு). சில பேர்களுடைய உடம்புக்கு எல்லா மருந்துகளும் ஒத்துக்கொள்ளுமா என்று எனக்குத் தெரியாது. அது அந்த அந்த உடம்பைப் பொறுத்தது. எனவே, எதற்கும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் அலோபதி டாக்டரிடத்திலே சென்று எல்லாவிதமான டெஸ்ட்டுகளையும் முடித்துக்கொண்டு, எந்த முறையிலே வைத்தியம் செய்துகொள்ளலாம் என்று அவரே முடிவு செய்துகொள்ளலாம். எல்லாவற்றையும்விட, காலையிலே தினமும் அரை மணி நேரம் அல்லது முக்கால் மணி நேரம் நடந்தால் பாதி நோயாளிகளுக்கு சர்க்கரை வியாதி போய்விடும். நடப்பதாலே எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே சொன்னார்கள். ஓமியோபதியில் 15,500 பேர் இருக்கிறார்கள். அவர்கள் பதிவு செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) பதிவு செய்யாமலும் இருப்பவர்கள் இருக்கிறார்கள். பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது. சித்த மருத்துவத்தில் இன்னும் பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னவர்களுக்கு இப்போது நாங்கள் அவகாசம் கொடுத்திருக்கிறோம், சித்தா கவுன்சில் மூலமாக பதிவு செய்து கொள்ளலாம் என்று அனுமதி தந்திருக்கிறோம்.

ஆனால் ஓமியோபதியில் இருக்கக்கூடிய குறைபாடு என்னவென்றால், இது மத்திய அரசாங்கத்தினுடைய சட்டம். அவர்கள் என்னிடத்தில் முறையீடு செய்தார்கள். நான் மத்திய அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.



தமிழ்நாட்டில் 10 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் மத்தியிலே இவர்கள் பிராக்டிஸ் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பதிவு செய்து கொள்ள நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, அப்படி பதிவு செய்யும்போது இந்த அரசாங்கம் என்னென்ன நடைமுறைகளைப் பின்பற்றும் என்றும் சொல்லியிருக்கிறேன். 10 ஆவது படித்து, 10 ஆண்டுகளுக்குமேல் ஓமியோபதியில் பயிற்சி பெற்றவர்கள், தமிழக அரசால் நடத்தப்படும் ஒரு ரிட்டர்ன் டெஸ்டில் பாஸ் செய்த பிறகு, நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு, அதில் அவர்கள் தேர்ச்சி பெற்றால், அப்படிப்பட்டவர்களை நாம் பதிவு செய்துகொள்ளலாம் என்று குறிப்பிட்டு, இதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று, இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியது. ஆனால், மத்திய அரசாங்கம் ஏற்கெனவே ஒரு சட்டம் நிறைவேற்றியிருக்கின்ற காரணத்தால் பிராக்டிஸ் செய்து கொண்டிருக்கக்கூடிய ஓமியோபதி டாக்டர்கள் பதிவு செய்ய அனுமதிக்க முடியாது என்று தெரிவித்து விட்டார்கள். எனவே, இந்த அரசாங்கம் அவர்களைப் பொறுத்தவரையில் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. பேரவை விதி 110-ன்கீழ் நெல் கொள்முதல் நடப்பு சம்பா, 1998 பருவத்தில் செய்யப்பட்டது குறித்து மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் சம்பந்தமாக நடப்பு சம்பா 1998 பருவத்தில் அதிகபட்சமாக தஞ்சை மாவட்டத்தில் 287 நேரடிக் கொள்முதல் நிலையங்கள், திருவாரூர் மாவட்டத்தில் 262 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் நாகபட்டினம் மாவட்டத்தில் 177 நேரடிக் கொள்முதல் நிலையங்கள்—ஆக மொத்தம் 726 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 30-4-1998 வரையில் நெல் கொள்முதல்

செய்யப்பட்டது. மேற்கண்ட 3 மாவட்டங்களிலும் 30-4-1998 வரையில் நெல் கொள்முதல் செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| (1) | தஞ்சாவூர் மாவட்டத்தில் | 3,25,421 மெட்ரிக் டன்னும் |
| (2) | திருவாரூர் மாவட்டத்தில் | 2,95,055 மெட்ரிக் டன்னும் |
| (3) | நாகை மாவட்டத்தில் | 2,07,019 மெட்ரிக் டன்னும் |
| | ஆக மொத்தம் | 8,27,495 மெட்ரிக் டன் |

கொள்முதல் செய்யப்பட்டு இருக்கிறது. காவிரி டெல்டாப் பகுதியில் மட்டும் மொத்தம் 926 நேரடிக் கொள்முதல் மையங்கள் மூலம் 30-4-1998 வரையில் 10,16,112 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் நடப்பு சம்பா பருவத்தில் 1,012 நேரடி நெல் கொள்முதல் மையங்கள் மூலம் 30-4-1998 வரை 11,32,411 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

பொது விநியோகத்திற்குத் தேவையான அளவிற்கு நெல் ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்டதாலும், 1-5-1998 முதல் விவசாயிகளின் நெல் என்று கருதினால், மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவு பெற்று அதனைக் கொள்முதல் செய்யலாம் என்ற அரசு உத்தரவு 30-4-1998-ல் ஏற்கெனவே வழங்கி உள்ளது. ஆனால், விவசாயிகள் என்ற பெயரில் சில வியாபாரிகள் மிகவும் தரமற்ற நெல்லை குறைந்த விலைக்கு வாங்கி நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை இறக்கி வாங்குமாறு வற்புறுத்துகின்றனர். சென்ற ஆண்டு 30-4-1997 முடிய ஏகபோக கொள்முதல் அமலில் இருந்தது. 1-5-1997 முதல் ஏகபோக நெல் கொள்முதல் திட்டம் கைவிடப்பட்டு, ஊக்கத் தொகை இல்லாமல், மைய அரசு நிர்ணயித்த விலையில் மட்டும் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அதேபோல இந்த ஆண்டும், நடப்பு சம்பா பருவத்தில் இனிமேல் ஊக்கத் தொகை இல்லாமல் மைய அரசு நிர்ணயித்த விலையில் மட்டும் தரமான நெல்லை விவசாயிகள் வட்டக் கிடங்குகளில் கொண்டுவந்து விற்க வந்தால், தரம் நன்கு சோதித்த பின்பு நெல்லை வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## 4. அறிவிப்பு

### (அ) நிகழ்ச்சி நிரலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, இன்று எடுத்துக்கொள்வதாக இருந்த கவன ஈர்ப்புகள் நாளை எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவை அலுவல் ஒத்திவைப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 21-5-1998, வியாழக்கிழமையன்று கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் அனுசரிப்பதையடுத்து, தலைமைச் செயலகப் பிரதானக் கட்டடத்திற்கு மேற்கே உள்ள இராணுவ அணி வகுப்பு மைதானத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலை 11-00 மணிக்குக் கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பங்கேற்கும் வகையில் 21-5-1998 அன்று பேரவை காலையில் 9-30 மணிக்குக் கூடி 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெறும்; பேரவை மீண்டும் 11-15 மணிக்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 22 — கால்நடை வளர்ப்பு. மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 147,87,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2688, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வாணியம்பாடி தாலுகா வெள்ளக்குட்டையில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 230, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1557, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1272, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம் சித்தூரில் ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3555, திரு. ஜி. நிஜாமுதீன்.



**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1958, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 636, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. RAMAN:** Hon'ble Deputy Speaker Sir, 'To discuss the need to establish a new Veterinary Hospital at Keechalam, Palliput Union' I move —

"That the allocation of Rs.147,87,21,000/- under Demand No.22 —Animal Husbandry be reduced by Rs.100/-"

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 884, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1351, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் ஓமலூர் ஒன்றியம் வெள்ளாளப்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3249, திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3386, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ராயண்டபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2141, திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 257, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடம் தொகுதி, அனைத்து கால்நடை மருத்துவ நிலையங்களுக்கும் போதுமான மருந்துகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 993, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கால்நடைகளுக்குக் கர்ப்பம் தரிக்கப் போடுகின்ற ஊசிகளுக்குத் தற்போது வசூலிக்கும் கட்டணத்தை இரத்து செய்து, இலவசமாக ஊசி போட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2226, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு களியல் கிராமம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கால்நடை மருந்தகத்தில் போதிய மருத்துவர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1765, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை கால்நடை மருத்துவமனையை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2612, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி ஒன்றியம் சவளக்காரன் கிராமத்தில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1307, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2477, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "இராசிபுரம் சட்டமன்றத் தொகுதி, இராசிபுரம் ஒன்றியம், வடுகம் கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2992, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி கால்நடை மருத்துவமனைக் கட்டடம் பழுதடைந்த நிலையில் இருப்பதால், புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1814, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3550, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம், 2565, திரு. வி. அய்யலுசாமி.

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி கலையூர் ரோட்டில் இலுப்பையூரணி கிராமத்தில் இயங்கி வந்த கோழிப் பண்ணையை மீண்டும் திறக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.147,87,21,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை



அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பெற்று, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த விவாதத்தில் பங்கேற்பதற்கு 12 உறுப்பினர்கள் பெயர் கொடுத்து இருக்கிறார்கள். எனவே, பேச இருக்கின்ற உறுப்பினர்கள் நேரத்தின் அருமையைக் கருதி, 10 நிமிடங்களில் மணியடிக்கப்பட்டவுடன் பேச்சை முடித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாம் வல்ல என்னுடைய இறைவன் முருகப் பெருமானையும், என்னுடைய தலைவர் ஐயா மூப்பனார் அவர்களையும் நினைத்து, விவசாயிகளுடைய உயிர் மூச்சாக இருக்கிற இந்தக் கால்நடைப் பராமரிப்பு பற்றிய மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி முழுக்க முழுக்க விவாசாயத்தை நம்பி இருக்கின்ற தொகுதி. உலகத்திலேயே அதிகமான கால்நடைகள் உள்ள நாடு நம்முடைய நாடு என்று கூறுகிறார்கள். நம்முடைய முன்னோர்கள் கால்நடைகளைச் செல்வமாகத்தான் நினைத்தார்கள். கால்நடைச் செல்வம் என்றுதான் கூறினார்கள். எதிரியை மடக்கிப் போடுவதற்குக் கூட கால்நடைகளை ஓட்டிச் சென்று அதற்குப் பின்னால் அவற்றை மடக்கி, எடுத்துச் செல்வதுதான் வெற்றி என்று எண்ணிய காலம் எல்லாம் உண்டு. நம்முடைய சொத்துக்கள் எல்லாம் கால்நடைகளை வைத்துத்தான் மதிப்பிடப்பட்டன. ஆகவே விவசாயிகளுடைய முழுச்

---

@ 143 முதல் 192 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளன.

சொத்தும் கால்நடைகள்தான். ஆனால் இன்றைக்கு விவசாயிகளுடைய நிலை என்ன என்று நினைத்துப் பார்த்தால், கடனிலேயே பிறந்து, கடனிலேயே வாழ்ந்து, கடனாளியாகவே இறந்து விடுகின்ற குடும்பம் விவசாயக் குடும்பமாக இருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. 1926 ஆம் ஆண்டிலேயே இராயல் கமிஷன் இது குறித்துத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. நான் சொல்வது அந்தக் காலத்தைப் பற்றி. அந்தக் காலத்தில் விவசாயிகளுடைய முழுச் சொத்தாகக் கருதப்பட்ட கால்நடைகள் இன்றைக்குச் சீரழிந்து கால்நடைகள் வளர்ப்பதற்கே விவசாயிகள் தயங்கக்கூடிய சூழ்நிலை வந்துவிட்டது. இது மாற்றப்படவேண்டும். கால்நடைகளைப் பராமரிக்கக்கூடிய அளவுக்கு ஊட்டச்சத்து மிகுந்த தீவனத்தை நாம் கால்நடைகளுக்குக் கொடுக்க வேண்டும். அதுவும் மானிய விலையில் வழங்கவேண்டும்.

***(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. மனோகரன் தலைமை)***

கால்நடை மருந்தகங்கள் ஏராளமாக வேண்டும். இன்றைக்குக் கணக்குப் பார்த்தால், தமிழகத்தில் கால்நடை ஆய்வாளர்கள் சுமார் 750 பேர் இல்லாமல் கால்நடை நிலையங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். கிராமங்களில் கால்நடைகளை விரும்பி வளர்க்கக்கூடிய சூழ்நிலை எல்லாம் மாறிவிட்டது. அந்த நிலையை மாற்ற முன்வரவேண்டும்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மோகன் கந்தசாமி அவர்கள் கால்நடைக் கிளை மையங்களில் 750 பேருக்கு மேற்பட்ட ஆய்வாளர்கள் இல்லை என்று தெரிவிக்கிறார்கள். அந்த அளவுக்கு இல்லை. ஏறக்குறைய நானூற்றிச் சொச்சம் பேர்தான் குறைவாக இருக்கிறார்கள். அதுவும் இந்த ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுபோன்ற கால்நடைக் கிளை மையங்களுக்கு ஆய்வாளர்களை எடுத்துத் தேர்வு செய்து அனுப்புவதற்கு ஆணை பிறப்பித்து, அந்தக் குறைகளைப் போக்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நன்றி. 400 பேர் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே விரைந்து அவர்களையெல்லாம் போட வேண்டும்.



கிராமங்களிலே இன்றைக்குக் கால்நடைகளை விரும்பி வளர்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. காரணம், கால்நடைகளை வளர்ப்பதற்கு ஆட்கள்கூட முன்வருவதில்லை. எனவே, அதை ஊக்கப்படுத்தும் விதமாக கால்நடைகளை நேசிக்கின்ற நாம் எல்லா விதங்களிலேயும் ஊக்கப்படுத்தி கால்நடைச் செல்வங்களாகிய அவற்றை வளர்ப்பதற்கு விவசாயிகளுக்கு உதவ வேண்டும்.

பகுதி நேரக் கால்நடைக் கிளை நிலையங்கள் 2,169 இருப்பதாக சென்ற பட்ஜெட்டிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் இதுவரை எத்தனை பகுதி நேரக் கால்நடைக் கிளை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று எனக்குத் தெரியவில்லை. எனவே முழுமையாக அந்தப் பகுதி நேரக் கால்நடைக் கிளை நிலையங்களையெல்லாம் ஆரம்பிக்க வேண்டும்.

இன்றைக்கு வைத்தியம் செய்வதைப் பொறுத்த அளவிலே, இயற்கை வைத்தியத்திலே மாட்டு வாகடம் என்று சொல்வார்கள். நம்முடைய மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்த இயற்கை வைத்தியத்திலே நிறைய நம்பிக்கை கொண்டவர்கள். அதேபோல என்னைப்போன்ற கிராமங்களிலே இருப்பவர்களுக்குத் தெரியும். மாட்டு வாகடம் என்பது அங்கே இருக்கக்கூடிய முதியவர்கள், முதிர்ந்த விவசாயிகள் கிராமங்களிலே வேலிகளிலே இருக்கின்ற தழை மற்றும் இலைகளை வைத்து ஏராளமான வைத்தியத்தைச் செய்து வருகின்றார்கள். அதையெல்லாம் ஆராய்ந்து, அதேபோன்று இருக்கின்ற அந்த வைத்தியத்திற்கு ஊக்கம் தர வேண்டும். சென்ற வாரம்கூட ஒரு பத்திரிகையிலே படித்தேன். ஒரு முதியவர் எந்த வியாதியாக இருந்தாலும் தழையைக் கொடுத்து அந்த வியாதியைத் தீர்ப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன்.

அடுத்து, விவசாயிகள் எல்லாம் அதிகமாக விவசாயம் செய்ய முடியாத நிலையிலே கோழிப் பண்ணைகளை வைத்திருக்கிறார்கள். கோழிகளை வளர்க்கிறார்கள். அந்தக் கோழிகளுக்கு நோய் தோன்றி இன்றைக்கு திடீரென ஒரு நிமிடத்திலே 1,000 கோழிகள் செத்துவிடக்கூடிய சூழ்நிலைகளையெல்லாம் பார்க்கிறோம். ஆகவே, அதுபோன்ற நோய் வராமல் முன்கூட்டியே தடுப்பதற்குள்ள ஆராய்ச்சிகளையெல்லாம் செய்து கொடுத்து விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

அடுத்து, செயற்கை கருவூட்டலுக்கு விவசாயிகளிடமிருந்து வசூலிக்கக் கூடிய ரூபாயைக் குறைக்க வேண்டும். மேலும் மாடுகளுக்குக் கொடுக்கின்ற பசுந்தீவனங்களுக்கு வீரிய விதைகளைக் கொடுத்து, அதுவும் இலவசமாகக் கொடுக்க வேண்டும். கொடுத்து, விவசாயிகள் அதைப் பயிரிட்டு அவற்றை மாடுகளுக்குக் கொடுப்பதற்கான நிலையை ஊக்கப்படுத்த வேண்டும். நேற்றைக்குக்கூடப் பார்த்தோம், ஏராளமான மாடுகள் இருக்கின்றன, ஆனால் பால் உறுபத்தி குறைவாக இருக்கிறது என்பதைப் பார்க்கின்றோம். ஆகவே, மாடுகளுக்கு இதேபோன்று ஊக்கப்படுத்தக்கூடிய அந்தத் தீவனத்தைக் கொடுக்க வேண்டும்.

இந்த ஆண்டுத் தொடக்கத்திலே, நீல நாக்கு நோய் வந்து ஏராளமான ஆடுகள் இறந்துவிட்டன. அந்த நீல நாக்கு நோயை முதலிலே தடுப்பதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்ய வேண்டும். ஏற்கெனவே, நீல நாக்கு நோயினால் அந்தக் கால்நடைகள் இறந்ததற்கு உடனடியாக நஷ்டஈடு கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே ......

- **மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீல நாக்கு என்னும் நோயினால், திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் பெருமளவில் ஆடுகள் இறந்துவிட்டன என்ற செய்தி வந்தவுடன், — அந்நோய் இயற்கைச் சீற்றம் காரணமாக அதிகரித்ததால், பாதிப்புக்குள்ளானவர்களிடமிருந்து எவ்விதக் கோரிக்கையும் வைக்கப்படாத நிலையிலும், — ஆடுகளை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி 24-12-1997 அன்று உரிய அரசாணை வெளியிடப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து மாவட்டங்களில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் ஏராளமான ஆடுகள் இறந்ததாக எண்ணிக்கை கொடுக்கப்பட்டது. அந்த எண்ணிக்கை நம்ப முடியாத அளவிற்கு இருந்ததால், சரியாகவும், முறையாகவும் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு 9-1-1998 அன்று உத்தரவு வழங்கப்பட்டது. அன்றையதினமே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கிட ரூபாய் 1 கோடியே 5 இலட்சம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இத்திடையில் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையரிடமிருந்து, நாடாளுமன்றத் தேர்தல் முடியும்வரை எந்தவித உதவித் தொகையும் வழங்கப்படக் கூடாது என்று அறிவிப்பு வந்ததால் 28-1-1998 முதல் நிவாரண நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டன.



மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள், ஆடு வளர்க்காதவர்களும் நிதியுதவி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு தவறான கணக்குத் தருவதால், ஆடுகள் இழப்பு பற்றிய கணக்கெடுப்பின்போது ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களையும் அந்தந்த மாவட்டங்களில் இணைத்துக்கொண்டு கணக்கெடுப்பதற்கான குழுக்களை அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தார்கள். அவர்களுடைய அந்த கோரிக்கையை ஏற்று, நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததற்குப் பிறகு 1-4-1998-இல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கணக்கெடுப்பு பற்றிய விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. இறந்த ஆடுகளைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கின்றபோது, ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர், மாவட்ட கூட்டுறவு வங்கித் தலைவர் அல்லது தாட்கோ நிறுவனத்தின் தலைவர், வருவாய்த் துறையினுடைய அலுவலர்கள், கால்நடைப் பராமரிப்புத் துறை அலுவலர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து ஆங்காங்கே குழுக்கள் அமைத்து கணக்கெடுப்பினை முறையாகச் செய்து தரவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. முதல் கட்டமாக, திருநெல்வேலி மாவட்டத்திற்கு 50 இலட்சம் ரூபாயும், தூத்துக்குடி மாவட்டத்திற்கு 20 இலட்சம் ரூபாயும், விருதுநகர் மாவட்டத்திற்கு 10 இலட்சம் ரூபாயும், சிவகங்கை மாவட்டத்திற்கு 25 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 105 இலட்சம் ரூபாய் இம்மாவட்டங்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர்களால் கணக்கெடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு இன்றுவரை திருநெல்வேலி மாவட்டத்தில் 2.41 இலட்சம் ரூபாயும், தூத்துக்குடியிலே 2 இலட்சம் ரூபாயும், விருதுநகர் மாவட்டத்தில் 4.35 இலட்சம் ரூபாயும், சிவகங்கை மாவட்டத்தில் 8 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 16.7 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய நீண்ட விளக்கத்திற்கு நன்றி. இதுபோல விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் நம்முடைய ஏற்பாடுகள் இருந்தால்தான் கால்நடைச் செல்வங்களைக் காப்பாற்ற முடியும். ஏராளமான கால்நடைகள் இன்றைக்கு இங்கிருந்து கேரளா போன்ற பகுதிகளுக்குக் கொண்டு சென்று கொல்லப்படுவதைப் பார்க்கிறோம்; அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அதுபோல, பசுவதை என்பது சிசு வதைக்கு ஒப்பானது. நான் அதைச் சொல்லும்போது, காவிக் கொடி உங்கள் கண்ணுக்கு வந்துவிடக் கூடாது, சேவற்கொடியோன் சொல்வதைச் சொல்கிறேன். பசுவை நாம் கடவுளாக, தெய்வமாகப் போற்றினோம். எனவேதான் திருமூலர் தன்னுடைய திருமந்திரத்தில் சொல்கிறார் :

"யாவர்க்குமாம் இறைவனுக்கு ஓர் பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கு ஓர் வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஓர் கைப்பிடி
யாவர்க்குமாம் பிறருக்கு ஓர் இன்னுரைதானே"

என்று. ஆகவே மக்கள் இன்றைக்கு மறந்துவிட்ட சூழ்நிலையிலே பசுவதையைத் தடை செய்ய வேண்டுமென்று நான் சொல்லும்போது நான் வேறு ஒரு கோணத்திலே அதைப் பார்க்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) வயது முதிர்ந்த அந்தப் பசுக்களை எல்லாம் வதை செய்வதை விடுத்து வனத்திற்கு அனுப்ப வேண்டும். ஒரு காலத்திலே பசுவையெல்லாம் தெய்வமாகப் போற்றினோம். எங்களுடைய காங்கேயத்திலேகூட பட்டயக்காரர்கள், ஏராளமான பசுக்களையும், மாடுகளையும் வளர்த்தார்கள்; இன்றைக்கு அது முடிவதில்லை. ஆகவே அரசாங்கம் இதை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்து—இன்றைக்கு ஆந்திராவிலே பார்த்தால், ஏராளமான கால்நடை மருந்தகங்கள், ஆஸ்பத்திரிகள் ஆரம்பித்து, கல்லூரிகள் ஆரம்பித்து, அதற்கென தனியாக கல்லூரிகளை எல்லாம் வைத்து பராமரிப்பதாக சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய அரசும், முப்பது புதிய மருந்தகங்கள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறது—அதை நூறாக மாற்றுங்கள், கால்நடை மருந்தகங்கள் குறைந்தது நூறாவது ஏற்படுத்திக் கொடுங்கள். அதேபோல கால்நடை ஆராய்ச்சிக்கு என்று கால்நடைக் கல்லூரிகள் மூன்று இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதைக் கொஞ்சம் அதிகப்படுத்தி, ஆறு கல்லூரிகளாகத் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கிராமப்புற மக்களின் பொருளாதார வாழ்க்கைத்தர முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமாக இருந்து வரும் கால்நடைத் துறை மானியத்திலே



பேசுவதற்கு வாய்ப்புத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் எனது வணக்கத்தையும் நன்றியையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடைகளிடமிருந்து பெறக்கூடிய சத்துமிக்க பால், இறைச்சி மற்றும் முட்டை போன்றவை மனித உணவில் பெரும் பங்கு வகிக்கின்றன. தோல் போன்ற பொருட்கள் ஏற்றுமதியில் முக்கிய அங்கம் வகித்து, நமது நாட்டில் குறிப்பிடத்தகுந்த அளவு அன்னியச் செலாவணி ஈட்டித் தருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு ஆண்டுதோறும் புதிதாக 60 கால்நடை மருந்தகங்களை அரசு அமைத்திட ஆவன செய்ய வேண்டுகிறேன். சென்ற வருடம் 60 மருந்தகங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் இந்த வருடம் 30 மருந்தகங்கள்தான் அமைக்கப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலேயே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது போதாது. ஆகவே, குறைந்தது 50 மருந்தகங்களையாவது அமைத்திட வேண்டுகிறேன். கடந்த ஆண்டு எனது மாவட்டத்தில் புதிதாக ஒரு கால்நடை மருந்தகம்கூட ஆரம்பிக்கப் படவில்லை. எனவே, இந்த ஆண்டு எனது தொகுதியில் 3 கால்நடை மருந்தகங்களையாவது அவசியம் அமைத்துத்தர வேண்டுகிறேன். குறிப்பாக

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி வாசுகி முருகேசன் அவர்களுடைய கரூர் தொகுதியில் — சென்ற ஆண்டு பெரு மருத்துவமனைகள் தமிழகத்திலேயே மூன்று இடங்களில்தான் தொடங்கப்பட்டன;—அதில் ஒன்று கரூரிலேயும் தொடங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் குறிப்பிட்டது பெரு மருத்துவமனை அல்ல. மாவட்டத்தில் மருந்தகங்கள் ஒன்றுகூட அமைக்கப்படவில்லை; எந்தத் தொகுதியிலும் ஒரு மருந்தகம்கூட ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, இந்த ஆண்டு எனது தொகுதியில் மூன்று கால்நடை மருந்தகங்களையாவது அவசியம் அமைத்துத்தர வேண்டுகிறேன். குறிப்பாக பெரியகாளிப் பாளையம், புலியூர், பெரியகுளத்துப்பாளையம் ஆகிய மூன்று இடங்களில் அதிகமான எண்ணிக்கையில் கால்நடைகள் இருக்கின்றன. ஆகவே கட்டாயமாக 3 மருந்தகங்களை எனது தொகுதியில் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி வாசுகி முருகேசன்] [1998 மே 20

முற்பகல் 11-35

பழைய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் நோய்ப் புலனாய்வுப் பிரிவு, புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள எங்கள் கரூர் மாவட்டத்திலும் தொடங்கப்படவேண்டும். மேலும் விந்தின் தரத்தைக் காக்கும் பொருட்டு திரவ நைட்ரஜன் தயாரிப்பு நிலையம் அமைத்திடவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கரூர் கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்தி கால்நடை பலநோக்கு மருத்துவமனையாக — வெட்டர்னரி பாலி கிளினிக் — அறிவித்திட வேண்டுகிறேன்.

தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில், முக்கியத் தொழிலான கன்றுகள் வளர்ப்பு, கறவை மாடுகள் பராமரிப்பு, ஆடுகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகிய பணிகளில் மகளிர் அதிகம் பேர் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இத்திட்டத்தைக் கண்காணிக்கவும், ஆலோசனைகள் வழங்கிடவும் இதரத் துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில் கால்நடை வளர்ப்பில் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கிட ஓர் உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புப் பணி நிலையினை உருவாக்கிட வேண்டுகிறேன். குறிப்பாக மகளிரை நியமித்திட வேண்டுகிறேன்.

கிராம மக்களுக்கு மிகவும் உதவிகரமாகச் செயல்பட்டுவரும் டானிடா திட்டம் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் தென் மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. ஆடு வளர்ப்பில் அதிகம் பேர் ஈடுபட்டுவரும் எங்கள் கரூர் மாவட்டத்திலும் டானிடா திட்டத்தை விரிவுபடுத்தி செயல்படுத்த வேண்டுகிறேன்.

ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்திட உதவும் ஆடு வளர்ப்பில் தனிக் கவனம் செலுத்தி, அவர்களுக்குத் தொழில்நுட்ப உதவிகள் வழங்கிட ஆடு வளர்ப்புக்கு என தனி இயக்குநரகம் அமைத்திட ஆவன செய்ய வேண்டுகிறேன். தற்போது காலியாக உள்ள கால்நடைக் கிளை நிலையங்களில் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை நியமிப்பதன் மூலம் ஏழை விவசாயிகளுக்குக் கால்நடை வளர்ப்பில் ஆலோசனை கூறவும், எளிய முறையில் முறையான மருத்துவச் சிகிச்சை அளிக்கவும் சிறப்பானதாக இருக்கும். ஆகவே, கிளை நிலையங்களில் மருத்துவப் பட்டதாரிகளை நியமிக்க வேண்டுகிறேன்.



1998 மே 20] [திருமதி வாசுகி முருகேசன்]

கிராமப் பகுதிகளில் சினை பிடிக்காத மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. 10 ஆயிரம், 15 ஆயிரம் என்று விலை கொடுத்து வாங்குகின்ற பசு மாடோ, எருமை மாடோ இரண்டாவது அல்லது மூன்றாவது பருவத்தில் சினை பிடிக்காமல் நின்றுவிடுகிறது. இவ்வளவு விலை கொடுத்து வாங்கும் மாடுகள் சினை பிடிக்கவில்லை என்றால், ஆயிரத்திற்கோ, இரண்டாயிரத்திற்கோ அடி மாடுகளாகக் கேரளா போன்ற மாநிலங்களுக்கு இறைச்சிக்காக விற்றுவிடுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. ஆகவே, விவசாயப் பெருங்குடி மக்களின் இந்தக் குறையை நிவர்த்தி செய்வதை அரசு கவனத்தில் கொண்டு, சினையுறா மாடுகளின் சிகிச்சைக்காக ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் தனிப் பிரிவினை ஏற்படுத்தி, கால்நடைத் துறையில் பட்ட மேற்படிப்பு படித்த மருத்துவர்களை நியமித்து, சிறப்புச் சிகிச்சை அளித்திட வேண்டுகிறேன்.

தற்போது வெற்றிகரமாகச் செயல்பட்டுவரும் ஏழை ஆதிதிராவிட மகளிருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வரும் இலவச கலப்பினக் கிடேறிக் கன்றுகளைப் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மகளிருக்கும் வழங்கி, இத்திட்டத்தினை விரிவுபடுத்த வேண்டுகிறேன். இந்த அருமையான திட்டத்தினால், ஏழை மகளிர் அனைவரும் பொருளாதார மேம்பாட்டினைப் பெற்றிட இயலும். கடந்த ஆட்சிக் காலத்தில் எத்தனையோ துறைகள் மூலம் கொள்ளையடிக்கப்பட்டது. அதைப்போலவே கால்நடைத் துறையிலே இலவசக் கன்று வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 1,500 மதிப்புள்ள கன்றுகளை ஆதிதிராவிட மகளிருக்குக் கொடுத்தது போன்று கணக்கு காட்டி, கன்றுகளை வழங்காமல் மோசடி செய்துள்ளனர். நம் தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன், 1996-97 ஆம் ஆண்டில், குறிப்பாக எனது கரூர் தொகுதியில், 100 கன்றுகள் என் மூலமாக ஆதிதிராவிட மகளிருக்குக் கொடுக்கப்பட்டன. இந்தக் கன்றுகள் இப்போது சினை பிடித்து நல்ல நிலையில் வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆகவே, இந்த நல்ல திட்டத்தை விரிவுபடுத்தி, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மகளிருக்கும், ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொகுதியிலும், சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகக் கால்நடைத் துறையே 200 கன்றுகள் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை உதவி மருத்துவராகப் பணிபுரியும் மருத்துவர்கள் 25 வருடங்களுக்கு மேல் பணிபுரிந்த பின்னரே கால்நடை மருத்துவராகப் பதவி உயர்வு பெறுகின்றனர். இதனை மாற்றி, 10 ஆண்டுகளுக்கு மேல் உதவி மருத்துவராகப் பணிபுரிந்தவர்களை மருத்துவர்களாக நிலை

உயர்த்திக் கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு உதவி செய்ய உதவி மருத்துவர் பதவி இல்லாத நிலையில் 50, 52 வயதில் ஒவ்வொரு மருத்துவரும், தானே முன் நின்று பணி செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. இந்த வயதில் சிகிச்சை செய்யும் மருத்துவர்கள், அறிவுரையும் தகுந்த ஆலோசனையும் வழங்க முடியுமே தவிர, உடல் உழைப்பினைத் தந்து சிகிச்சை அளிப்பது சிரமமானதாகும். ஆகவே, ஒவ்வொரு கால்நடை மருத்துவமனைக்கும் கூடுதலாக குறைந்தபட்சம் ஒரு கால்நடை உதவி மருத்துவரையாவது உடனடியாக நியமிக்க வேண்டும். இல்லாவிட்டால் கால்நடை மருத்துவமனைகளில் சிகிச்சையின் தரம் கால்நடை மருந்தகத்தைவிடக் குறையும் வாய்ப்புகள் அதிகம் ஏற்பட வாய்ப்புண்டாகும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனவே, உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

மனித மருத்துவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியம், கால்நடை மருத்துவர்களுக்கும் வழங்கப்பட வேண்டுகிறேன். மனித மருத்துவத்தில் ஈடுபடும் பல பிரிவு மருத்துவர்களான அலோபதி, சித்தா, யுனானி, ஆயுர்வேதம், ஓமியோபதி ஆகிய அனைத்துப் பிரிவினருக்கும் ஒரே வகையான ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது. 1989 ஆம் ஆண்டு ஆசியாக் கண்டத்திலேயே முதன் முறையாக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் அமைத்து, சாதனை படைத்த நமது முதல்வர் அவர்கள், பல்கலைக்கழகத் தொடக்க விழாப் பேருரையில், மனிதவியல் மருத்துவர்களுக்கு இணையான ஊதியக் கோரிக்கைக்கு, அடுத்த நிதிநிலை அறிக்கையில் மனம் குளிர வைக்கும் அறிவிப்பு இருக்கும் என்று குறிப்பிட்டதை எண்ணி கால்நடை உதவி மருத்துவர்கள் இன்றுவரை காத்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். *(மணியடிக்கப் பெற்றது)*



*முற்பகல் 11-40*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கால்நடைப் பராமரிப்பு மானியக் கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தலைசிறந்த கால்நடை ஆராய்ச்சி மையங்களும், மருத்துவக் கல்லூரிகளும் தமிழகத்திலே உள்ளன. இருந்தபோதிலும், பல்வேறு நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வந்து ஆராய்ச்சி மையங்களையும், மருத்துவக் கல்லூரிகளையும் பார்வையிட்டு, அவர்கள் தங்களுடைய நாட்டில் சென்று, உற்பத்தி செய்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், பல்வேறு நாடுகளிலிருந்து இங்கு வந்து அவர்களுடைய நாட்டில் கால்நடை உற்பத்தி செய்ய வேண்டுமென்று இங்கே படித்துச் சென்றாலும், தமிழகம் கால்நடை மற்றும் பராமரிப்பில் பின்தங்கி வருகிறது. அதுமட்டுமல்லாமல், கால்நடைகளும் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும், ஆராய்ச்சி மையங்களில் வைரஸ் நோய்க் கிருமிகளைக் கண்டுபிடிக்கின்ற திறமை வாய்ந்த ஆராய்ச்சியாளர்கள் இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், தமிழகம் என்று சொன்னாலே, குறிப்பாக இந்தியாவைப் பொறுத்தமட்டிலும், இந்தியாவினுடைய முதுகெலும்பு விவசாயி என்பதாலும், விவசாயினுடைய முதுகெலும்பாக விளங்கக்கூடியது கால்நடைகள் என்பதாலும், இந்தக் கால்நடைகள் முறையாகப் பராமரிக்கப்படவேண்டும். ஒவ்வொரு விவசாயினுடைய வீட்டின் கால்நடைகளின் மூலம் கிடைக்கின்ற சாணத்தின் மூலம்தான் விவசாயிகள் நிலத்தை மேம்படுத்த முடியும். நம்முடைய பல்வேறு முன்னோர்கள் அதிக மகசூலைப் பெறவும், விவசாயத்தை முன்னேற்றுவதற்கும், சாணம்தான் உறுதுணையாக இருந்தது. ஆகவே, அந்த அடிப்படையில் நாட்டினுடைய நலனைக் கருதி, கால்நடைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

தமிழகத்திலே கால்நடை துயர் துடைப்புக் கழகம் என்று 100 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதிலே பணிபுரிகின்ற ஆய்வாளர்கள், பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டத்தை

அமல்படுத்துவதன் காரணத்தால், காவல் துறைக்கு இணையாகக் கருதப்படுகிற அளவுக்கு அதிகாரத்தை இவர்கள் பயன்படுத்துகின்றார்கள். இந்தத் துறையில் 65 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். இந்தக் கழகத்திற்குக் கோடிக்கணக்கான அளவில் சொத்துக்கள் இருக்கின்றன. இந்தச் சொத்துக்கள் எங்கே இருக்கின்றன, யாரிடம் இருக்கின்றன என்பது தெரியவில்லை. இந்தக் கழகத்திற்கு இருக்கின்ற கோடிக்கணக்கான சொத்துக்களை அரசாங்கமே எடுத்துக்கொண்டு, இந்தக் கழகத்தில் பணிபுரிகின்றவர்களை அரசு ஊழியர்களாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுசம்பந்தமாக, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு சட்டமன்றத் தலைவர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்திற்கு பல்வேறு நாடுகளிலிருந்து கலப்பு இனக் காளைகள், கலப்பு இனப் பசுக்கள், டென்மார்க்கிலிருந்து வரவழைக்கப்பட்டு — கருவுற்ற, ஜெர்சி பசுக்கள், காளைகள், முர்ரா எருமைகள் வரவழைக்கப்படுகின்றன. ஆனால், இந்த மாடுகளை, பசுக்களை அரசாங்கம்தான் வளர்க்க முடிகிறது; விவசாயிகள் வளர்க்க முடியவில்லை. காரணம், அந்த மாடுகளைப் பராமரிப்பதற்கு போதிய வசதி வாய்ப்புகள் இங்கே கிடையாது. அதைக் கட்டுவதற்கு தொழுவம் கிடையாது. அதனுடைய வளர்ச்சிக்கு வேண்டிய வைத்தியம் செய்ய முடியவில்லை. ஆகவே, அப்படி மாடுகளை வரவழைத்தால் மட்டும் போதாது. விவசாயிகளுக்குக் கொடுக்கும்போது, அதைப் பராமரிப்பதற்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி மாடுகள் அழிந்து வருகின்றன. அவற்றையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் நீல நாக்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஆடு வளர்க்கின்ற விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். நான் அதை மறுக்கவில்லை. ஆனால், திருநெல்வேலி மாவட்டத்தில் நீல நாக்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஆடுகளை வைத்திருக்கின்ற அந்த விவசாயிகள் முறையாக அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்களா என்றால் இல்லை. ஏனென்றால், ஓர் ஆடு இறந்தாலும், 2 ஆடுகள் இறந்ததாகக் கூறி மனுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இதையெல்லாம் கூறுகிறேன் என்றால், நானும் ஒரு விவசாயி, என்னிடமும் ஆடு இருக்கிறது. இந்த நீல நாக்கு நோயால் ஆடு எப்படி பாதிக்கப்படுகிறது என்ற விவரம்



எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், காலை 6 மணிக்கு எழுந்திருந்து அவன் ஆட்டுக் கடைக்குச் சென்று அந்த ஆட்டுக்குட்டிகளை தாய் ஆட்டிடம் பால் குடிக்க விட்டுவிட்டு, அதற்குப் பிறகு வீட்டிற்குச் சென்று, அவன் ஆடு மேய்க்க சென்று விடுவான். அதற்குப் பிறகு 6 மணிக்குத்தான் அவன் வீட்டிற்கு வருவான். அவனால், அதிகாரிகளைக் காண்பதற்கு தாலூகா அலுவலகத்திற்கோ அல்லது கலெக்டர் அலுவலகத்திற்கோ சென்று மனுக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. அந்த விவரமும் ஆடு வைத்திருக்கின்ற அந்த விவசாயிகளுக்குத் தெரியாது. ஆகவே, சில பேர் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரசாங்கத்திடம் ஆடு இறந்துவிட்டதாக நிவாரணம் பெற வேண்டும் என்று கூறி பொய்யாக மனு கொடுத்திருக்கிறார்கள். அதை மறுக்கவில்லை. ஆனால், உண்மையாக, நீல நாக்கு நோயால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நிவாரணம் வழங்க வேண்டும்; உண்மையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்கப்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்களை வலியுறுத்துகின்றேன்.

*முற்பகல் 11-45*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அளித்த விளக்கத்தின்படி உண்மையிலேயே நீல நாக்கு நோயால் பாதிக்கப்பட்டவைகளை வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு மட்டும் அல்லாமல், அந்தக் கால்நடைகளை வைத்து பிழைப்பு நடத்துகின்ற, வாழ்க்கை நடத்துகின்ற அந்த ஏழைகளுக்கு மட்டுமே வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில், உண்மையிலேயே ஏழையாக இருந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு அதை நிச்சயமாக வழங்குவதற்கு அந்தக் குழு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நீல நாக்கு நோயால் இறந்துபோன ஆடு என்பது பல பேர் பட்டி மூலமாக வைத்திருக்கிறார்கள். சில பேர் 1, 2, 3 ஆடுகளைக்கூட வளர்க்கிறார்கள். பொதுவாக பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஓரிரண்டு ஆடுகளுக்கு மட்டும்தான் வழங்க வேண்டும் என்பதும், மற்றவர்களுக்கு வழங்க முடியாது என்று சொல்வதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும். பாதிக்கப்பட்டிருக்கிற அனைத்து ஆடுகளுடைய உற்பத்தியாளர்களுக்கும் இந்த நிவாரணம் கிடைக்கவேண்டும் என்பதுதான் அவருடைய கோரிக்கை.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும் பண்ணையாளர்கள் 500, 400, 300 என்ற அளவில் இலாப நோக்கத்தோடு, வியாபார நோக்கத்தோடு செம்மறி ஆட்டுப் பண்ணை நடத்துகிறார்கள். சில பேர் 10 ஆடுகள், 20 ஆடுகள் என்று நிலம் அற்றவர்கள், ஏழைகளாக இருந்து, அந்த ஆடுகளை வைத்தே குடும்பம் நடத்துகின்றவர்களுடைய ஆடுகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உச்சகட்டமாக ரூ. 10,000 வரை ஒருவருக்கு வழங்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நோய் என்பது பண்ணை வைத்திருப்பவர்கள் அல்லது தனியாக 10 ஆடுகள், 20 ஆடுகள் வைத்திருப்பவர்கள் என்று பார்த்து வருவதில்லை. நோய் என்பது பொதுவாக வருவது. அதிலே, பாதிப்பு என்பது பொதுவானது. அதிலே பாரபட்சம் இல்லாமல் அரசு உரிய நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளைத்தான் எடுக்க வேண்டுமே தவிர, பண்ணை என்பதற்காக பாதிக்கப்பட்டவர்களுக்கு இல்லை என்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பண்ணையாளர்கள், ஏழைகள் என்ற அடிப்படையிலே சொல்லவில்லை. அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு அந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே, குளங்களிலே, ஏரி என்று சொல்லக் கூடிய இடங்களிலே பருவ நேரங்களிலே தண்ணீர் வருகிறது. தண்ணீர் வரும்போது கால்நடைகள் அங்கே குளிப்பாட்டப்படுகின்றன. சுமார் 2 மாதத்திற்குப் பிறகு அந்தக் குளங்களிலே உள்ள மீன்கள் வைரஸ் கிருமியால் தாக்கப்பட்டு, அந்த மீன்கள் அந்தக் குளங்களிலே இறந்துவிடுகின்றன. அதற்குப் பிறகு, அந்தக் குளங்களிலே, அந்த ஏரிகளிலே சென்று அந்தக் கால்நடைகளை குளிப்பாட்டுகின்றபோது அதன்மூலம் அவைகளுக்கு நோய் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டும் அல்லாமல், அந்தத் தண்ணீரை மறுபடி குடிப்பதற்குப் பயன்படுத்த முடியவில்லை. இதுசம்பந்தமாக, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில்,



நாங்குநேரியில் கூந்தங்குளம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. வெளிநாட்டுப் பறவைகள், ஆயிரக்கணக்கில் அங்கே வந்து அடைக்கலம் புகுகின்றன. அரசு பராமரிப்பில் அந்தப் பறவைகள் இருக்கின்றன. அந்தக் குளங்களிலே அதிக அளவு பறவைகள் இருக்கின்ற காரணத்தினால், சில பறவைகள் அங்கே இறக்க நேரிடுகின்றன. அதற்கு மருத்துவம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, திருவாரூர் மாவட்டத்தில், மன்னார்குடி நகரில் செயல்படும் கால்நடை மருத்துவமனையை பெரு மருத்துவமனையாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம், மாநில அரசு கால்நடை மருத்துவமனையில் பணிபுரிகின்றவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தில் சுமார் 300 பேர் 10 ஆண்டுகாலமாக தினக்கூலி என்ற முறையில் பணியாற்றி வருகிறார்கள். அப்படி தினக்கூலி என்ற முறையில் பணி ஆற்றுகிறவர்கள் மாதம் முழுவதும் பணியாற்றவில்லை, சுமார் 19 நாட்கள் அவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய குடும்பத்தினுடைய நலனைக் கருதியும், அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறக்கூடிய கால்நடை மானியக் கோரிக்கை எண் 22-இல் கலந்துக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடைத் துறை தமிழகத்திலே மிகவும் அத்தியாவசியான துறை. இத்துறை தமிழகத்திலே, கிராமங்களிலே விவசாயிகள், இந்து ஆதிதிராவிடர் சமூகத்தினர், மலைவாழ் மக்கள், பழங்குடியினர் ஆகியோர் பயன்படும் வகையில் நல்ல திட்டங்களை அறிமுகப்படுத்தி செயலாற்றி வருகிறது. செம்மறி ஆடு, வெள்ளாடு, கறவை மாடுகள், எருமைகள், முயல் வளர்த்தல், கோழி வளர்த்தல், வாத்து வளர்த்தல், குதிரை வளர்ப்பு, நாய் வளர்ப்பு முதலியன இத்துறையிலே அடங்கி இருக்கிறது. செம்மறி

ஆட்சை பொறுத்தவரையில் ஆட்டுப் பண்ணை தமிழகத்திலே 3 மாவட்டங்களிலே — விருதுநகர் மாவட்டம், சாத்தூர், விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம், வேலூர் மாவட்டம், முகுந்தராயபுரம் ஆகிய பகுதிகளிலே சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதையொட்டி கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தொகுதியான என்னுடைய பகுதியிலேயும் செம்மறி ஆடுகள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே ஓர் ஆட்டுப் பண்ணை அமைத்துத் தரவேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் மூலமாக மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சென்ற ஆண்டு ஒரு கோரிக்கை வைத்திருந்தேன். வெள்ளாடு 6 மாதத்திலே 2 குட்டிகளையும், செம்மறி ஆடு ஓராண்டிற்கு ஒரு குட்டியையும் ஈன்றாலும், இந்தப் பகுதியிலே நல்ல முறையிலே செம்மறி ஆடுகள் அதிகமாக உற்பத்தி ஆகின்றன. வியாபாரிகள் வாரந்தோறும் சந்தை கூடுகின்ற இடங்களுக்கு வருகிறார்கள். கரூர் மாவட்டத்தில் என்னுடைய தொகுதியிலே பரமத்தி, தென்னிலை, சின்னதாராபுரம், ஈசநத்தம், ஜமீனாத்தூர், மண்மாரி, லிங்கமநாயக்கன்பட்டி போன்ற ஏறத்தாழ 300-க்கும் மேற்பட்ட கிராமங்களிலே நல்ல இனமான வெள்ளை கோல்ட் பிஸ்கட் என்ற கலர்களில் இருக்கக்கூடிய, நல்ல நிறமான தோல்கள் உள்ள செம்மறி ஆடுகள் ஏராளமாக இங்கே வளர்க்கப்படுகின்றன. ஆகவே, இதுபோன்ற ஆடுகள் அங்கே நிறைய விவசாயிகள் வளர்த்து வருகின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே ஓர் ஆட்டுப் பண்ணை அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும். என்னுடைய பகுதியிலே, எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், வானம் பார்த்த பூமியாக, மழையை நம்பியிருக்கின்ற எங்கள் பகுதியில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆட்டுப பண்ணை ஒரு வரப்பிரசாதமாக அமையும். ஆகவே, இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு இந்தப் பகுதிக்கு ஓர் ஆட்டுப் பண்ணையை ஏற்படுத்தித்தர வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய இடம் வெங்கமலையினுடைய அடிவாரத்திலே, ஆண்டிப்பட்டி கோட்டையில், அரசு தரிசு நிலங்களும், மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களும் உள்ளன. செம்மறி ஆடு வளர்ப்பதற்குரிய தட்ப வெப்ப நிலை-கிளைமேட் அங்கே நல்லபடியாக இருக்கின்ற காரணத்தினால், ஏராளமான செம்மறி ஆடுகள் அந்தப் பகுதியிலே வளர்க்கப்பட்டு வருகின்றன. விவசாயிகள் இதைத் தங்களுடையத் தொழிலாக வைத்து அங்கே ஜீவனம் செய்து வருகின்ற நல்லதொரு சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய அதிகாரிகளுக்கு ஆணையிட்டு, அந்த இடங்களை ஆய்வு செய்து, தொகுப்பு கணக்கீடு ஒன்றைப் பெற்று, அந்தப் பகுதிக்கு வருகை தந்து



இவற்றைப் பார்த்து செய்து கொடுத்தால், ஏழை விவசாய மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டிலே ஓர் ஆட்டுப் பண்ணையை, கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தொகுதி, ஆண்டிப்பட்டி கோட்டையிலே தொடங்கிட வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு என்னுடைய தொகுதி பின் தங்கிய பகுதி என அறிவிக்கப்பட்டு, அங்கே அந்த மக்களுக்கு நல்ல சலுகைகளை அரசு வழங்கியிருக்கிறது. இந்தப் பகுதி வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற காரணத்தினால், விவசாயிகள் கிணற்று நீர்ப்பாசன வசதியை வைத்துத்தான் அங்கே பிழைப்பு நடத்தி வருகின்றார்கள். விவசாயிகள் அங்கே ஆடுகளை நல்ல முறையிலே வளர்த்து வருகிறார்கள். அவற்றை வெளி மாநிலங்களில் இருப்பவர்கள்கூட இங்கிருந்து கொள்முதல் செய்து, செல்கின்ற காரணத்தினால், அங்கே ஓர் ஆட்டுப் பண்ணை ஒன்றும், ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும், மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழே ஒரு கோழிப் பண்ணையும், மினி டெய்ரி ஒன்றும் அங்கே ஆரம்பித்துத் தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய கால்நடை மேம்பாட்டுத் திட்டத்திலே, கலப்பின பொலி காளைகள், பசுக்கள், டென்மார்க்கிலிருந்து தருவிக்கப்பட்ட ஜெர்ஸி கடாக்கள், முர்ரா கடாக்கள், முர்ரா பொலி காளைகள், முர்ரா இன பெண் எருமைகள் பெங்களூர், ஓசூர், போன்ற இடங்களிலிருந்து வாங்கி வந்து மலைவாழ் மக்கள், ஆதிதிராவிட சமூகத்தினர் மற்றும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கி வருகின்றீர்கள். மலைவாழ் மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் நீங்கள் 50 சதவீதம் மானியத்திலே வழங்குகின்ற நிலையிலே, பின்தங்கிய மக்களாகிய இவர்களுக்கும் நீங்கள் உதவி செய்து இந்தத் துறையின் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களை ஆதரிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

கோழி வளர்ப்பில் ஒருங்கிணைப்பு உள்ள ஊட்டச் சத்து திட்டத்தின் கீழ் சத்துணவு மையங்களுக்கு 15 தினங்களுக்கு ஒரு முட்டை வழங்குகின்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். இந்தத் திட்டம் தமிழகத்திலே நாமக்கல் மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. டாப்கோ மூலம் கோழி வளர்ப்புத் திட்டங்கள்,

கோழிகளுடைய இறைச்சியும் வழங்குகிற திட்டங்கள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. இருந்தபோதிலும், மகளிர் மேம்பாட்டுத் திட்டம் அடிப்படையிலே பெண்களுக்கு என்று கோழி வளர்ப்பு நிலையங்களை, கோழிப் பண்ணைகளை நீங்கள் அமைத்துக் கொடுக்க முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், முயல் வளர்ப்பு ஒரு நல்ல வருவாயைக் கொடுக்கிறது. இதை உண்பதற்கு அத்தனை பேரும் விரும்பி வருகிறார்கள். எனவே, கிராமங்கள்தோறும், மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையிலே முயல் வளர்ப்புக்கான முயற்சியை நீங்கள் ஊக்கப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நாய் வளர்ப்பு. நாய்கள் செல்லப் பிராணியாகவும், காவலுக்கு உகந்ததாகவும் இருப்பதால், அவற்றை ஏராளமான பேர் வளர்த்து வருகிறார்கள். இராஜபாளையம், கோம்பை மற்றும் அயல் நாட்டு இனங்களான டாபர்மேன், லாப்ரடார், ரீட்ரீவர் போன்ற இனங்களை போற்றிப் பாதுகாக்க, சைதாப்பேட்டையில் தொடங்கப்பட்டு இருக்கிற பன்முக மருத்துவமனை வளாகத்தில் தனிப்பிரிவு தொடங்கப்பட்டிருக்கிறது. மலைப் பிரதேசங்களான ஊட்டி குன்னூர், கொடைக்கானல், ஏற்காடு போன்ற பகுதிகளில், அல்சேசன், பாமரேனியன் போன்ற உயர்ந்த இரக நாய்க் குட்டிகளை, சாதாரண மக்களும் இன்றையதினம் வளர்த்து வருகிறார்கள். அவை இங்கேயுள்ள சாதாரண மக்களுக்கும் நியாயவிலையில் கிடைக்கக்கூடிய வகையில் ஆவன செய்து, அதற்கென ஒரு துறையை உருவாக்கித் தருமாறு உங்களிடம் பணிவோடு கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். அதற்கேற்ப கால்நடை துறையின் மூலம் மருந்தகங்கள் ஏராளமாக இங்கே திறக்கப்பட்டு வந்தாலும், கடந்த முறை ஒவ்வொரு தொகுதியிலும் 5 மருந்தகங்கள் வெட்டர்னரி ஆஸ்பத்திரிகள் திறக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இருக்கிறோம். அந்த அடிப்படையில் 5 இடங்களில் வெட்டர்னரி ஆஸ்பத்திரிகள் திறக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் உங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறோம். அதை முறையாகச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். இந்த முறை அதை அமல்படுத்த முடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



இந்தத் துறையைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்ததைப்போல, ஆங்காங்கு இருக்கக்கூடிய ஆதிதிராவிட மக்களுக்கு மற்றும் மலைவாழ் மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய வகையில், 19 பெட்டை ஆடுகள் மற்றும் ஓர் ஆண் ஆடு வழங்கக்கூடிய, மத்திய, மாநில அரசுகளுடைய உதவியோடு வழங்கக்கூடிய திட்டத்தை செயல்படுத்தி, மாண்புமிகு உறுப்பினர்கள் மூலமாக அந்த அந்தப் பகுதிகளில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு, விவசாய மக்களுக்கு அவற்றை வழங்கக்கூடிய ஒரு வாய்ப்பை நீங்கள் தர ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்கு ஏற்று உரையாற்ற எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு தங்களுக்கும், தமிழகத்தின் தலைவர் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். கால்நடை பாரமரிப்புத் துறையின் கணக்கீட்டின் படி 5 ஆயிரம் கால்நடை அலகுகளுக்கு ஒரு மருந்தகம் என்ற அடிப்படையில் தமிழ்நாட்டில் புதிதாக 400 கால்நடை மருந்தகங்கள் திறக்கப்படும் என்று 1996-97 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் சென்ற 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 60 புதிய மருந்தகங்கள் தமிழகத்தில் தொடங்கப்பட்டன. 400 என்ற அந்த இலக்கினை அடையும் முறையில் ஒவ்வொரு ஆண்டும் 100 மருந்தகங்கள் திறக்கப்பட வேண்டும். ஆனால், இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில், தமிழ்நாட்டில் 30 மருந்தகங்கள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவான எண்ணிக்கை என்ற அடிப்படையில் இதை குறைந்தபட்சம் சென்ற ஆண்டுபோலவே 60 என்ற எண்ணிக்கையிலே மருந்தகங்கள் புதிதாகத் திறக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

கால்நடை மருத்துவர்கள் ஒவ்வொரு மருந்தகத்திலும் ஒவ்வொரு மருத்துவர்தான் பணிபுரிந்து வருகிறார். கால்நடை மருத்துவமனையிலும் அதைப்போன்ற ஒரே மருத்துவர்தான் பணிபுரிந்து வருகிறார். ஆனால், மனிதர்களுக்கான மருத்துவமனையிலே ஒவ்வொரு துறையிலும் சூப்பர்

ஸ்பெஷாலிட்டி பட்டமேல் படிப்பு படித்த மருத்துவர்கள் இருப்பது போன்று, கால்நடை மருத்துவமனையிலும் தனித்தனியே ஒவ்வொரு துறைக்கு என்றும், பிரசவத்திற்கு என்றும், மற்றும் கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற நோய்களின் தரம் அறிந்து ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியே பட்ட மேற்படிப்பு படித்த மருத்துவர்களை நியமித்து, கால்நடைச் செல்வங்களை அழியாமல் காக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற ஊதிய விகிதத்திலே, மனித மருத்துவர்களைவிடக் குறைவான ஊதிய விகிதம் மத்திய அரசிலே ஊதிய விகிதத்திலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால், மத்திய அரசிலே நியமிக்கப்பட்ட இந்த 5-ஆவது நிதி கமிஷனின் ஊதியத்திலே மனித மருத்துவர்களுக்கு இணையான ஊதிய விகிதம் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே நம்முடைய தமிழக அரசின்பால் வெளியிடப்பட்டிருக்கின்ற அந்த ஊதிய வித்தியாசத்தை நிவர்த்தி செய்யும்வகையிலே அந்த வேறுபாட்டைக் களைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மருத்துவமனைகளிலே கூடுதலான வசதிகள் செய்து தர வேண்டும். கால்நடைகள் மருத்துவமனைகளிலே எக்ஸ்ரே வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்; ஒவ்வொரு மருத்துவமனையிலும் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்கெனவே ஒரு விளக்கம் சொல்லும்போது நீல நாக்கு நோயினால் தென் மாவட்டங்களிலே பாதிக்கப்பட்ட ஆடுகளுக்கு, இறந்த ஆடுகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், நிவாரணத் தொகை வழங்குவதிலே அந்தப் பகுதி அதிகாரிகள் சரியான முறையிலே செயல்படாமல் அவர்கள் பாரபட்சத்தோடு நிவாரண உதவித் தொகை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதை உடனடியாக விசாரித்து, சரியான முறையிலே உண்மையிலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஆடு வளர்ப்போருக்கு அது போய்ச் சேரும்படி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியான சாத்தூரிலே இருக்கின்ற ஆட்டுப் பண்ணை ஏறக்குறைய 400 ஏக்கர் நிலப்பரப்பிலே அமைந்திருக்கிறது. அந்த ஆட்டுப் பண்ணை நிலமானது இருக்கங்குடி நீர்த் தேக்கம் அமையப் பெறுகின்ற



இடத்திற்குள்ளே வருகின்ற காரணத்தினால், அந்த ஆட்டுப் பண்ணையினுடைய நிலம் கையகப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனைக் கருத்தில்கொண்டு, இந்த ஆட்டுப் பண்ணையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த ஆட்டுப் பண்ணைக்கு அருகிலேயே இருக்கின்ற நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு உரிய பணிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், கால்நடைக் கிளை நிலையங்களிலே பணிபுரிகின்ற கால்நடை ஆய்வாளர்கள் சரியான முறையிலே பயிற்சி பெற்று இருந்தாலும்கூட, அந்தக் கிளை நிலையங்களிலே கால்நடைகளுக்கு, அவர்கள் மருத்துவம் பார்க்கிறபோது பசுவுக்கும், எருமைகளுக்கும் சினை ஊசி போடுகின்ற காலங்களிலே, சரியான காலக் கட்டங்களை அறிந்து அவர்கள் செய்யாத காரணத்தினால், பல தவறுகள் ஏற்படுகின்றன என்ற ஒரு நிலை இருந்து வருகிறது. அதையும் சீரமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கோழியின அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, நம்முடைய அரசின் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோழிக்கு ஏற்படுகின்ற வெக்கை நோயைத் தடுப்பதற்கு சரியான மருத்துவ உதவிகள் வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

பிற்பகல் 12-05

என்னுடைய தொகுதி பற்றிய சில வேண்டுகோள்களையும் இங்கே வைக்க முற்படுகிறேன். சாத்தூர் தொகுதியிலே இருக்கின்ற கிராமப்புற மக்கள் மானாவாரி விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டிருக் கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அவர்களுக்கு எந்த ஒரு தொழிலும் அங்கில்லை. தொழில் இல்லாத காரணத்தினால், அவர்கள் சட்ட விரோதமாகச் சாராயம் காய்ச்சுவது போன்ற அப்படிப்பட்ட தொழில் களிலே ஈடுபட வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. அங்கே சாராயத்தினால் ஏற்படுகின்ற விஷத்தன்மை காரணமாக, உயிர் இழப்புகளும் அடிக்கடி நிகழ்கின்ற ஒரு சூழ்நிலையிருக்கிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சாத்தூரிலே ஒரு தொழிற்பேட்டை, பெரிய தொழிற்சாலை, முடிந்தால் கூட்டுறவு நூற்பாலை ஒன்று தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காக அங்கே அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக, மக்கள் வேலைவாய்ப்பு

பெறக்கூடிய சூழ்நிலை அங்கே ஏற்படும். அதனால், அந்தக் கிராம மக்கள் வேலையின்மை காரணமாக ஈடுபடுகின்ற இந்தச் சாராய தொழிலிருந்து விடுபடுவார்கள் என்பதையும் கூறிக்கொண்டு, இந்த அறிய சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கிய தங்களுக்கு நன்றி கூறி அமைகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான கால்நடைப் பராமரிப்புத் துறையின் மீதான மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டிலே, குறிப்பாக, தமிழகத்திலே கிராமப்புற பகுதிகளிலே, விவசாய விளை நிலங்கள் அதிகம் உள்ள பகுதிகளிலே கால்நடை வளர்ச்சி என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. டிராக்டர் போன்ற நவீன இயந்திரங்கள் வந்தாலும்கூட, விவசாயத்திற்கும், பொருள் போக்குவரத்திற்கும் இன்றையதினம் கால்நடைகள் இல்லாமல் எந்த வேலையும் நடப்பதில்லையென்ற நிலையிருக்கிறது. அதைப்போலவே, கால்நடைகளிடமிருந்து இறைச்சி, பால் ஆகியவை கிடைக்கின்றன. அவற்றின் எலும்புகள் D.C.P. - Di-Calcium Phosphate என்ற இரசாயன பொருள்கள் தயாரிக்க பயன்படுகின்றன. தோல்கள் ஏற்றுமதியில் மிகுந்த அன்னியச் செலாவணி பெறுவதற்கான வாய்ப்பும் இந்தத் துறையின் மூலமாக நமக்கு இருக்கிறது. இருந்தபோதிலும், நாம் இதனுடைய வளர்ச்சியிலே போதிய அக்கறை செலுத்தியிருக்கிறோமா என்றால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். இதனுடைய வளர்ச்சிக்கு அரசு இன்னும் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற மக்களை, குறிப்பாக, இளைஞர்களை இந்தக் கால்நடை வளர்ச்சியிலே ஈடுபட செய்ய வேண்டும். இதன் மூலமாக சுயவேலைவாய்ப்பு வருவதுடன் அந்தப் பகுதி மக்களுடைய பொருளாதாரம் மேம்பாடு அடையும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலே பால் பண்ணைகள் அமைப்பதற்கு அரசு கடன் உதவி அளிக்க வேண்டும். புதிய தொழில்களுக்கு வங்கிகள் கடன் உதவி செய்ய தயக்கம் காட்டுகின்றன. எனவே, அரசு இதற்கென ஒரு நிதியை ஒதுக்கி, மாவட்டத்திலுள்ள கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர் மூலமாக இந்த உதவியைச் செய்வதற்கு முன்வர வேண்டும்.





இராஜஸ்தான் மாநிலத்திலே உள்ளதுபோல, செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு மேம்பாட்டிற்காக தனியாக இயக்குநர் ஒருவரை நியமித்து நமது தமிழகத்திலேயும் அதனுடைய வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆந்திர மாநிலத்தில் ஆடுகள் அதிகம் உள்ள பகுதிகளிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதுபோல, நம்முடைய தமிழ்நாட்டிலும், குறிப்பாக, எனது ஓமலூர் தொகுதியிலே ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்திலே தற்போது நாமக்கல் மாவட்டத்தில் கோழிப் பண்ணைத் தொழில் மிகவும் பெரிய அளவில் நடைபெற்று வருகிறது. இங்கே கோழிகளுக்குத் தேவையான 'Vaccine' தடுப்பு மருந்து சரிவர கிடைப்பதில்லை. இராணிப்பேட்டையிலிருந்து தருவிக்க வேண்டியிருக்கிறது. அதுவும் மிகுந்த சிரமத்துடன் பெற வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. கோழிகள் மிகுந்த அளவில் நோய்களுக்கு ஆளாகின்றன என்பதால், இந்த மருந்து, தட்டுப்பாடில்லாமல் கிடைப்பதற்கு நாமக்கல் பகுதியிலேயே ஒரு உற்பத்தி நிலையம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, உற்பத்தியாகும் முட்டைகளை இருப்பு வைப்பதற்கு Cold Storage ஒன்று தேவைப்படுகிறது. இந்த ஆண்டு 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நிதி நிச்சயமாகப் போதுமானதாக இருக்காது. ஆகவே, அதிக அளவிலே நிதி ஒதுக்கி, இந்தப் பகுதியிலே முட்டைகளை இருப்பு வைப்பதற்கு ஒரு Cold Storage ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே உள்ள வெட்டர்னரி சென்டரில் கோழி தீவனத்தினுடைய மூலப் பொருள்களை ஆராய்ச்சி செய்கின்ற ஒரு Laboratory இருக்கிறது. இங்கே ஒரு Sample-ஐ-Test செய்வதற்குக் கொடுத்தால், வார கணக்கிலே அதனுடைய ரிசல்ட் பெறுவதற்கு காலதாமதம் ஆகின்றது. ஆகவே, இந்த Laboratory-யினுடைய தரத்தை உயர்த்தி இன்னும் நவீனப்படுத்தி, இந்த

[திரு. ஆர்.ஆர். சேகரன்] [1998 மே 20

Sample-களை விரைவாகப் பரிசோதனை செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கோழிப் பண்ணைத் தொழிலை கிராமப் பகுதியிலே சிறு விவசாயிகள் குடிசைத் தொழிலாக செய்து வருகிறார்கள் இவர்கள் உபயோகப்படுத்துகின்ற மின்சாரத்திற்கு அரசு Industrial Tariff என்ற அடிப்படையில் கட்டணம் நிர்ணயித்து வசூலித்து வருகிறது. இது மிக அதிகமான சுமையாக இருக்கிறது. கோழிப் பண்ணைக்கு மட்டும் தனியாக ஒரு tariff ஏற்படுத்தி, அவர்களுக்கு மின்சாரக் கட்டணத்திலே சலுகை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10

அதைப்போலவே, தமிழ்நாடு கோழி இன வளர்ச்சிக் கழகம் என்று ஒன்று இருக்கிறது. அங்கே பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. கடந்த ஆட்சியின்போது, டான்சி ஊழலில் குற்றம் சாட்டப்பட்ட நபர், அதன் நிர்வாக இயக்குநராக இருந்துகொண்டு வருகிறார். பல்வேறு முறைகேடுகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே 43 ஆம் பக்கத்திலே நீங்கள் பார்க்கலாம், தமிழ்நாட்டிலே குஞ்சு பொரிப்பகங்கள், அரசூர், கப்பலூர், கொட்டப்பட்டு, அனுப்பன்குளம் என்று 4 இடங்களிலே இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது; அதைப்போலவே, பக்கம் 44-லே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1995-96 ஆம் ஆண்டு கோழிக் குஞ்சு உற்பத்தி 38.38 இலட்சம் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது 1997-98-லே 8 இலட்சமாகக் குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை அறிய வேண்டும். தற்போது இங்கே குறிப்பிடப்பட்டுள்ள அந்த 4 நிலையங்களிலே இரண்டு மட்டும்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதாவது, அரசூர், கப்பலூர் மட்டும்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன; கொட்டப்பட்டு, அனுப்பன்குளம் ஆகியவை கடந்த ஒரு வருட காலமாகச் செயல்படவில்லை. அதற்கான காரணத்தை கண்டறிய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாமல், இந்த அவைக்கு தவறான தகவல்களைத் தந்த அந்த அதிகாரியின் மீதும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Suguna Hatcheries and Himalaya Poultries என்ற தனியார் நிறுவனங்கள் குஞ்சு பொரிக்கும் பணிகளைச் செய்துகொண்டு வருகின்றன. அவற்றுக்கும்,



1998 மே 20] [திரு. ஆர்.ஆர். சேகரன்]

அந்த நிர்வாக இயக்குநருக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை அரசு விசாரித்து இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களை, கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, முட்டை கொள்முதல் செய்வதிலே டெண்டர் விடப்படாமல் முறைகேடுகள் நடந்திருக்கின்றன. இந்த ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெண்டர் விடுவது எல்லாம் திறந்த மனத்தோடு விடப்படும் என்று கூறினார்கள். 1997-98 ஆம் ஆண்டிலே சமூக நலத் துறையின் மூலமாக முட்டை சப்ளை செய்வதற்கு, டாப்கோ 18 கோடி ரூபாய்க்கு ஆர்டர் எடுத்திருக்கிறது. அவ்வாறு ஆர்டர் எடுத்ததினால் சுமார் .1 கோடி ரூபாய் இந்த நிறுவனத்திற்கு இலாபம் கிடைத்திருக்க வேண்டும். ஆனால், மதுரை, தேனி, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களிலே அரசு நிர்ணயித்த விலையைவிட 10 காசுகள் முதல் 20 காசுகள் வரை அதிகம் கொடுத்து கொள்முதல் செய்ததினால் இந்த அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, டெண்டர் முறை கடைபிடிக்கப்படாமல் வேலூர் மாவட்டத்திலே ஹரிபிரசாத் என்ற ஒரு நபருக்கு அங்கே முட்டை வழங்குவதற்கான ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர் சமூக நலத் துறையினால் பிளாக் லிஸ்ட் செய்யப்பட்டவர். இவருக்கு டெண்டர் பாரம்கூடக் கொடுக்கப்படவில்லை. ஆனால், இவருக்கு முட்டை வழங்குவதற்கான ஆர்டர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அரசு இதையும் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, கோழி தீவன உற்பத்தியைப் பார்த்தால் 1995-96 ஆம் ஆண்டிலே 551 டன் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. 1997-98 ஆம் ஆண்டிலே 235 டன்களாக அது குறைந்திருக்கின்றது. அதையும் நீங்கள் விசாரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவிலே தனியார்களிடமிருந்து இந்தத் தீவனங்கள் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே ஆதாயங்கள் அடைந்தவர்கள் யார் யார் என்பதை அரசு இந்த அவைக்கு...

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாடு கோழி இன வளர்ச்சிக் கழகத்தைப்பற்றிச் சில விளக்கங்களைத் தந்தார்கள். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அந்தக் கோழி இன வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக இருந்த திரு. ஏ.தா. பொன்னுவேலு என்ற சட்டமன்ற உறுப்பினர் ஏராளமான முறைகேடுகள் செய்து, அந்த

நேரத்திலே இருந்த அதிகாரிகள் எல்லாம் தனியார்களுக்கு, அவர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் வாங்காமலேயே பினாமியாக, பொய்யாகப் பெயர்களைக் கொடுத்து, முட்டைகளை எல்லாம் கொடுத்து, ஏறக்குறைய 2 கோடி ரூபாய் அளவிற்கு, அதாவது நூற்றுத் தொன்னூற்றி ஆறு இலட்சம் ரூபாய்க்கு இழப்பை ஏற்படுத்தியிருக்கிறார், அவர் பேரிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரிவான விளக்கத்தை என்னுடைய பதிலுரையிலே தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. கடந்த ஆட்சியிலே நடந்த ஊழல், இந்த ஆட்சியிலேயேயும் தொடரக்கூடாது என்பதுதான் எங்களது விருப்பம். ஆகவே, அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியில் எந்தவிதமான ஊழலும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லிலேயுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான இடங்களை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலுள்ள பிரதம கால்நடை மருத்துவமனையையும், பன்முக கால்நடை மருத்துவ மையமாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இந்த ஊதியத்தை எடுத்துக்கொண்டால், கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு மத்திய அரசு அறிவித்ததைப்போல ரூபாய் 8,000 என குறைந்தபட்ச ஊதியத்தை அறிவிக்க வேண்டும்.

எனது ஓமலூர் தொகுதியிலே, டேனிஷ்பேட்டையிலே, வெள்ளாடு மேம்பாட்டுத் திட்டம் அறிவித்து, அதற்கான பண்ணை ஒன்றையும் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதிக்குட்பட்ட சாக்குப்பிள்ளையூர், பொம்மியம்பட்டி, குண்டுக்கல், நடுப்பட்டி, வெள்ளாளப்பட்டி ஆகிய இடங்களிலே கால்நடை மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



ஓமலூர் தொகுதியிலே, திண்ணம்பட்டியிலே, ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஒரு பகுதிநேர கால்நடை மருத்துவரைக் கண்டிப்பாக பணியமர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே கால்நடை தீவன உற்பத்தி ஆலை ஒன்றை அரசு நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அடுத்தபடியாக, வெறிநாய்க் கடி தடுப்புத் திட்டம். இத்திட்டம் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் மட்டுமே செயல்படுத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சேலம் மாநகராட்சியாக இருந்தும் அது புறக்கணிக்கப்பட்டுள்ளது ஏன் என்பது தெரியவில்லை. சேலம் மட்டுமல்லாது என்னுடைய தொகுதியில் உள்ள சிறிய நகரங்களில்கூட இத்திட்டம் சேர்க்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். அதைப்போல, மற்ற நோய்த் தடுப்புப் பணிகளிலும் அரசு தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

நமது மாநிலத்திலிருந்து வயதான மாடுகளை கேரளாவுக்கு கடத்திச் சென்று, துபாய் போன்ற நாடுகளுக்கு இறைச்சி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதைத் தடுத்து நிறுத்தி, மாநிலத்திலுள்ள மாடுகள் அண்டை மாநிலங்களுக்குச் செல்லாதவாறு தடுக்க அரசு ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ஏ.எம். ராமசாமி.

**திரு. ஏ.எம். ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 22-ன் மீதான விவாதத்தில் பங்கேற்றுக்கொள்ள எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவராம் தமிழக முதல்வர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்பு என்பது நமது நாட்டில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிகப் பெரிய உபதொழிலாகக் கருதப்பட்டு வருகின்றது. கற்காலங்களில் ஒரு மனிதன் செல்வச் செழிப்பை அவர்களின் கால்நடை எண்ணிக்கையைப் பொறுத்தே முடிவு செய்ததாகக் கூறுவது வரலாறு. நம் தலைவர் முதல்வர் 1989-91 ஆம் ஆண்டுகளில் முதல்வராக

இருந்தபோதுதான், ஆசியாவிலேயே முதன்முதலாக ஒரு கால்நடைப் பல்கலைக்கழகம் சென்னையில் நிறுவப்பட்டது.

கால்நடைகள், மக்களின் அன்றாடத் தேவைகளான பால் மற்றும் இறைச்சி போன்ற தேவைகளை பெரும்பாலும் பூர்த்தி செய்கின்றன. கால்நடை வளர்ப்பு என்பது கிராம மக்கள் விவசாயத்திற்கு ஈடாக செய்து வருகின்றனர். அதில் இன்னும் பராமரிப்பு பற்றிய அடிப்படை விஷயங்களை விவசாயிகளுக்கு தெளிவுபடுத்த அவர்களுக்கு கிராமங்கள்தோறும் விளக்க வகுப்புப் பாடம் எடுக்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பால் உற்பத்தியில், அதிகக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. கூடுதல் பால் உற்பத்திக்காக, அதிகப் பால் கொடுக்கும் வெளிநாட்டு உயர்சாதி பொலி காளைகளின் உறை விந்தினை கொண்டு ஊசி மூலம் கருவடையச் செய்து கலப்பினப் பசுக்களை உற்பத்தி செய்யும் அதேநேரத்தில், நம்முடைய நாட்டின் பாரம்பரிய இனங்களான காங்கேயம் மற்றும் நாட்டு இனப் பசு மற்றும் எருது வகைகள் அழிந்து விடாமல் காக்க வேண்டிய கடமையும் இந்த அரசுக்கு உள்ளது என்பதை இங்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1996-97 மானியக் கோரிக்கையில், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையை கருத்தில்கொண்டு, 5,000 கால்நடைகளுக்கு ஒரு மருந்தகம் என்ற வீதத்தில் 400 புதிய மருந்தகங்கள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதேபோன்று, கடந்த 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 60 புதிய மருந்தகங்கள் ஏற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், 1998-99 ஆம் ஆண்டு 30 மருந்தகங்கள்தான் அறிவிக்கப்பட்டுள்ளன. இதனை உயர்த்தி, சென்ற ஆண்டைப்போலவே 60 மருந்தகங்கள் என ஏற்படுத்திட உத்தரவிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில், 'கருமந்துரை என்ற இடம் இருக்கிறது. அங்கு மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அங்கு ஆட்டுப் பண்ணை மற்றும் மாட்டுப் பண்ணை வைப்பதற்குத் தேவையான சீதோஷ்ண நிலை உள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, அங்கு பெரிய ஆட்டுப் பண்ணையும், மாட்டுப் பண்ணையும் ஏற்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில், அந்தப் பகுதியில் வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பையும் அளிக்கக்கூடிய



வகையிலே, அதையும் மனதிலே கொண்டு, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், அவர்களுக்காக, ஏழை மக்களுக்காகப் பாடுபடுகின்ற முதல்வர் அவர்கள், அந்த ஏழைகளின் துயரைத் துடைப்பதற்கு அந்தப் பகுதியிலே ஓர் ஆட்டுப் பண்ணையையும், ஒரு மாட்டுப் பண்ணையையும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அமைக்கப்பட்டால், அங்குள்ள மலைவாழ் மக்களுக்கு அன்றாடம் ஏதாவது ஒரு வேலை கிடைக்கும் என்பதைக் கருத்தில்கொண்டு, அதனை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடைப் பராமரிப்புத் துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி. இரண்டு ஆண்டு காலமாக தமிழ்நாட்டில் கால்நடைகள் மிகவும் குறைந்து விட்டன. இந்தக் கொள்கைக் குறிப்பில், 1994 ஆம் ஆண்டு செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை 56,12,242 ஆகும் என்றும், இது மாநிலத்தின் கால்நடைகளில் 21.86 சதவீதம் ஆகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது அது மிகவும் குறைந்துவிட்டது. அதேபோல, விவசாயிகளுக்கு 392.24 மெட்ரிக் டன் விதைகள், 309.68 இலட்சம் புல்கரணைகள் மற்றும் 25.15 இலட்சம் மரக்கன்றுகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன என்று கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் விவசாயிகளுக்கு முறையாகக் கொடுக்கப்படவில்லை. மேலும் ஆடுகளுக்கு.....

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும், கால்நடைப் பராமரிப்புத் துறையின்கீழ் உள்ள 8 பண்ணைகளின் மூலம் குறிப்பிட்ட அளவு புல்கரணைகள், புல் நாற்றுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இங்கே தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட புல்கரணைகள் எந்த இடத்தில் இருக்கிறது என்பதே தெரியவில்லை. அந்த அளவிற்கு இப்போது அதிகாரிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள்.

அதேபோல, 1997-98 ஆம் ஆண்டு குடற்புழு நீக்கத்திற்கான மருந்தினை வாங்குவதற்கு சுமார் 40 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தெந்த மருத்துவமனைகளில், எத்தனை ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஏதோ, அதிகாரிகள் சொல்வதை ஏற்றுக்கொண்டு, அதைச் சரிபார்க்காமல், மெத்தனப்போக்கில் இந்த அரசு செயல்படுகிறது. மேலும், சமீபத்தில் பெய்த.....

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடற்புழு நீக்கத்திற்கான மருந்து, 1995-96-ஐவிட, 1996-97-லும், 1997-98-லும் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த இடங்களிலே குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது என்று கேட்கிறார். குடற்புழு நீக்கம் செய்யப்பட்ட கால்நடைகளை அவர் போய்ப் பார்த்து வருவாரா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆடுகளுக்குக் குடற்புழு நீக்க மருந்தினைப் பெறுவதற்கு, எனது தொகுதியிலுள்ள புளியம்பட்டி ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் அங்குள்ள மருத்துவமனைக்குச் சென்றபோது, அங்குள்ள அதிகாரிகள், "எங்களிடத்தில் 300 ஆடுகளுக்குத்தான் மருந்து இருக்கிறது; அதிகம் வேண்டுமானால், நீங்கள் கடையில்தான் வாங்கிவர வேண்டும்; அப்படி வாங்கி வந்தால்தான் எங்களால் போடமுடியும். எங்களிடத்தில் உள்ள இருப்பு அவ்வளவுதான்" என்று சொல்லிவிட்டார்கள். பகுதி ஆடுகளுக்குத்தான் போடமுடியும் என்று சொல்லிவிட்டார்கள். எனவே, அனைத்து ஆடுகளுக்கும் மருந்து போட முடியாமல், அதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும், சமீபத்தில் பெய்த மழையால், நீல நாக்கு நோய் ஏற்பட்டு, அதனால் இறந்த ஆடுகளுக்கு ரூ. 300 வீதம் நிவாரணம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 1.05 கோடி இதுவரையிலே கொடுக்கப்படவில்லை.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீல நாக்கு நோய்க்கான இழப்பீட்டுத் தொகை, நான்கு மாவட்டங்களில் எந்தெந்த இடங்களுக்கு



வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். வருகிற 31 ஆம் தேதிக்குள் அந்த ஒரு கோடியே 5 இலட்சம் ரூபாயும் முறையாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தந்த வட்டங்களிலுள்ள வருவாய்த் துறை அலுவலர்கள், கால்நடைத் துறை அலுவலர்கள், அந்தந்தப் பகுதிகளிலே செயல்படக்கூடிய ஆடுவளர்ப்புச் சங்கங்களினுடைய பிரதிநிதிகள், அந்த ஆடுகள் வாங்க, கடன் கொடுக்கக் கூடிய வங்கிகளினுடைய பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கண்காணிப்பிலே முறையாக அந்தப் பணி நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** அமைச்சர் அவர்கள் வருகிற 31 ஆம் தேதிக்குள் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மே 31-ஆ ஜூன் 31-ஆ, ஜூலை 31-ஆ என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கொடுத்துக் கொண்டு வருகிறோம். வருகிற மே 31-க்குள் கொடுக்கின்ற வகையில் அப்பணி நடைபெற்று வருகிறது.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் இப்போதுதான் கணக்கெடுத்துக் கொண்டு வருகிறார்கள். கொள்கைக் குறிப்பேட்டில், இறந்துபோன ஆடுகளுக்குச் சொந்தக்காரர்களான ஏழை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று உள்ளது. ஆனால், இப்போது ஒருவார காலமாக கிராம நிர்வாக அதிகாரிகள், நிலமற்ற ஏழைகளாக, அதிலும் ஒரு சென்ட் நிலம்கூட இல்லாதவர்களுக்குத்தான் நிவாரணம் கொடுக்க முடியும் என்று எனது தொகுதியில் கணக்கெடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஏற்கெனவே, பலமுறை கால்நடை மருத்துவ அதிகாரிகள் மூலமாக பல கிராமங்களுக்கு அவர்கள் நேரடியாகச் சென்று, கணக்கெடுத்து, அதன் மூலமாக நிவாரணம் வழங்கப்படும் என்று முடித்துவிட்டுச் சென்றவர்கள் மீண்டும் கணக்கெடுத்து, இப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்கி, இன்னும் எப்படிக் கிடைக்கும் என்கிற நிலையில் ஏழை விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். எப்படியாவது நிவாரணம் கிடைத்துவிடும் என்று ஏழை விவசாயப் பெருங்குடிமக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிற வேளையில், 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' என்ற கதையாகிவிட்டது. 'சொன்னதைச் செய்வோம்' என்று மார்தட்டிப் பேசும் நீங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைச் செய்வீர்களா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சில வினாடிகளுக்கு முன்புதான் குறிப்பிட்டார், எனது தொகுதியிலே யாரும் கணக்கெடுப்புச் செய்யவில்லை; தேர்வு செய்யப்படவில்லை என்று. பின்பு சொல்கிறார் ஏழையெளியோர்க்கு மட்டும்தான் தேர்வு செய்து வழங்கலாம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். தவறான தகவலைத் தருகிறார்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஒரு வாரகாலமாகத்தான் வி.ஏ.ஓ.-க்கள் மூலமாகக் கணக்கெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது அறிவிப்பு வந்தவுடனே கால்நடைத் துறை இணை இயக்குநர் அவர்களிடத்திலே முறையாக விண்ணப்பம் கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, மருத்துவ அதிகாரிகள் விசாரித்துவிட்டு சென்று விட்டார்கள். அந்தப் பணம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மீண்டும் இப்போது, வி.ஏ.ஓ.-க்கள் —கிராம நிர்வாக அதிகாரிகள் — மூலமாகத்தான் விசாரணை செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இறந்த ஆடுகள்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக விசாரித்துக் கொண்டு வருகிறார்கள் என்பது உண்மை. ஏனென்றால், நீல நாக்கு நோயால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நானும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும்தான் சென்றோம். எங்களை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுப்பி வைத்தார்கள். நடைமுறையிலே என்னவென்றால், ஒவ்வொரு மாவட்டத்திலும் 15 ஆயிரம் அல்லது 10 ஆயிரம், சில இடங்களில் 20 ஆயிரம் ஆடுகள்தான் இறந்திருக்கின்றன. ஆனால், அரசுக்கு வந்த விண்ணப்பங்களில், குறிப்பாக நெல்லை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஆடுகள் இறந்ததாக வந்திருக்கிறது. எனவே, இதை மீண்டும் மீண்டும் பரிசீலிக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு இருக்கிறது. அதில் உண்மையானவர்கள் யார், போலியானவர்கள் யார், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அரசுப் பணத்தைச் சுரண்ட ஆசைப்படுபவர்கள் யார் என்பதை அரசு பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இறந்த ஆடுகளுக்கும், இறந்ததாகச் சொல்லப்படுகிற ஆடுகளுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. அதனால்தான் மீண்டும் மீண்டும் பரிசீலனை நடக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,



இந்த ஒரு கோடியே ஐந்து இலட்சம் ரூபாயை மிக விரைவிலே கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த உண்மையை நிலைநாட்ட உறுப்பினரும் ஒத்துழைக்கலாம்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக (மணியடிக்கப்பெற்றது) நெல்லை மாவட்டத்தில், எனது தொகுதி சங்கரன்கோயில் தொகுதியில்தான் அதிகமாகக் கால்நடைகள் வளர்க்கப்பட்டு வந்தன. எனது சங்கரன்கோயில் தொகுதியில் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் பெறுகின்ற வகையில் எந்தவிதமான தொழிற்சாலையும் கிடையாது. விவசாயப் பெருங்குடி மக்களாக, குறிப்பாக இன்னும் சொல்ல வேண்டுமானால், 'வானம் பார்த்த பூமி'யாக இருந்து கொண்டுவருகிற எனது தொகுதியில், அவர்கள் கால்நடைகளை வைத்துத்தான் பிழைத்து வருகிறார்கள். அதுவும் இப்போது இவ்வளவு பாதிப்பு இருப்பதன் காரணமாக, அவர்கள் கேரளாவுக்குப் பிழைப்புக்காகச் சென்று கொண்டிருக்கிறார்கள். இலங்கையிலிருந்து எப்படித் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்தார்களோ அதைப்போல என்னுடைய தொகுதியில் உள்ள கால்நடைகளை இழந்து தவிக்கின்ற அந்த மக்கள் அனைவரும் வேலைவாய்ப்புக்காகக் கேரளாவிற்குச் செல்லவேண்டிய அவல நிலைமையில் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள கிராம மக்கள் அனைவரும் கடுங்கோபம் கொண்டுள்ளார்கள். (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 12-30*

ஒன்று மின்சாரத் தட்டுப்பாடு அளவுக்கு மீறி தாண்டவமாடுகிறது. இரண்டாவது, இறந்த அந்த ஆடுகளுக்கு நிவாரணம் கொடுக்கமுடியாமல் இந்த அரசு தள்ளாடிக் கொண்டிருக்கிறது.

மூன்றாவதாக, ரேஷன் கார்டுகள் எப்போது கொடுப்பார்கள் என்ற ஏக்கத்தில் அந்த கிராம மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அதிவிரைவில் வருகிற தேர்தலில் உங்களால் கிராமங்களுக்குள்ளே நுழைய முடியாத நிலைமைதான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திற்கும் ரேஷன் கார்டுகளுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று எனக்குத்

தெரியவில்லை. எதை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் பேசலாம் என்பது அ.இ.அ.தி.மு.க.-வினுடைய மரபாகப் போய்விட்டது...... (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு அமைச்சர் பேசும்போது நான் பேசக்கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், என்னுடைய அனுமதியைப் பெறாமல் எழுந்து நின்று மற்ற உறுப்பினர்களைப் பார்த்துக் கையை நீட்டிப் பேசுவது ஏற்புடையதல்ல. முதலில் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுந்தரம் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அவர்களும் ஐந்து ஆண்டுக் காலம் ஆட்சி செய்தார்கள். அமைச்சர் பேசும்போது எழுந்து பேசக்கூடாதா என்று அவர் கேட்கிறார். பேசுகிறவர்கள் கதி என்ன ஆயிற்று என்று அந்த ஆட்சியிலே அவர்கள் அனுபவப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியிலே நீங்கள் பேசுவதைப் பற்றி நாங்கள் ஒன்றும் கவலைப்படவில்லை. தாராளமாகப் பேசலாம். ஆனால் என்ன பேசுகிறோம் என்று கேட்டு அதற்குப் பிறகு பேசுங்கள். பேசும்போது எதற்கெடுத்தாலும் எழுந்து கொளவது என்பது ஒரு மரபாக இருந்தால் அது எப்படி என்றுதான் எனக்குத் தெரியவில்லை. நான் கேட்க விரும்புவது இந்த மானியத்திற்கும் ரேஷன் கார்டுகளுக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியவில்லை. இரண்டாவது இன்னொன்று சொன்னார்கள். கிராமப் பகுதிக்குள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் நுழைய முடியாது என்கிறார்கள். அ.இ.அ.தி.மு.க.-விற்கு அந்த நிலைமை கடந்த தேர்தலில் ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதும் சொல்கிறேன். எந்த கிராமத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் தலைநிமிர்ந்து செல்லத் தயார். ஏனென்றால் நாங்கள் கோடி கோடியாகக் கொள்ளையடிக்கவில்லை. எங்கேயும் ஊழல் செய்யவில்லை. யாரிடமும் பேரம் பேசவில்லை. எனவே எங்களுக்குப் போவதில் எந்தவிதமான பயமும் இல்லை. (மணியடிக்கப்பெற்றது)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அ.இ.அ.தி.மு.க.-வினருக்கு ஆதாரமில்லாமல் இப்படி சம்பந்தம் இல்லாமல் பேசுவது வாடிக்கையாகிவிட்டது என்று கூறுகிறார்கள். நான் பேசும்போது ஆதாரத்தை எல்லாம் கொடுத்துவிட்டுத்தான் பேசுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் கூறுவதற்கு நீங்கள் விளக்கம்

D
V211,231 N98
N98 55.1



கூறலாம். ஆனால் அ.இ.அ.தி.மு.க.-வினர் என்று ஒட்டுமொத்தமாக நீங்கள் கூறுவதை நான் ஆட்சேபிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம் என்னுடைய கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். திரு. கருப்பசாமி எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்? அவர் பேசும்போதெல்லாம் அப்படிச் சொல்கிறார், அது வாடிக்கையாகப் போய்விட்டது என்றுதான் அமைச்சர் சொல்கிறார். இதற்கு முன்னால் அவர் பேசும்போதுகூட ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எந்தக் கிராமத்திற்கும் செல்லமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்ன பிறகும்கூட, எல்லா உறுப்பினர்களும் ஊருக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து சட்டசபைக் கூட்டத் தொடரில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் அமைச்சர் சொல்கிறார், திரு. கருப்பசாமிக்கு இது வாடிக்கையாகி விட்டது என்று. திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். திரு சொ. கருப்பசாமி, நீங்கள் தொடரலாம்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சரும் உட்காருங்கள் (குறுக்கீடு) நான் சொன்னவுடனே அமைச்சர் அவர்கள் உட்கார்ந்துவிட்டார்கள். திரு. சுந்தரம் உட்காருங்கள். திரு. சொ. கருப்பசாமி பேசலாம்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.... (மணியடிக்கப்பெற்றது)

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கென்று சரியான நெறிமுறைகள் ஏற்கெனவே இருக்கின்றன. அவர்கள் ஏதேனும் ஒன்று, அமைச்சர் அவர்களுடைய பேச்சிலோ அல்லது வேறு எவருடைய பேச்சிலோ அவைக்கு மாறான தகவல்கள் தரப்பட்டால் அல்லது அவையினுடைய நடவடிக்கைகளில் ஒழுங்கு மீறல்கள் இருந்தால்தான் ஒழுங்குப் பிரச்சினை என்ற பெயரில் கிளப்ப முடியும். நினைத்ததற்கெல்லாம் எழுந்து பேசுகிற அளவுக்கு முன்வரிசையில் இருப்பவர்களுக்கு சில உரிமைகள் இருக்கின்றன. காரணம் அவர்கள் அந்த அமைப்பினுடைய, அந்தக் கட்சியினுடைய தலைவர்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் எழுந்து பேசினால் அந்தக் கட்சியினுடைய தலைவர் என்ற முறையிலே அனுமதிக்கப்படுவார். அது பழைய மரபு. இன்[illegible] உள்ள [illegible]ரபு. இப்படி இவர்கள் எழுந்து, எழுந்து பேச வேண்[illegible]மென்றால் ஏத[illegible]

219402

ஒழுங்கு மீறல் இருக்க வேண்டும். எந்த ஒழுங்கு மீறலும் இல்லாமல் இப்படி எழுந்து, எழுந்து பேசுவதற்குத் தொடர்ந்து அனுமதி கொடுத்தால் இந்த அவையினுடைய நேரம் வீணடிக்கப்படுவது மட்டுமல்லாமல் இது தவறான முன்னுதாரணத்திற்கு வழிவகுத்துவிடும். எனவே இதைத் தடுத்து நிறுத்த வேண்டியது உங்களுடைய கடமை என்பது என்னுடைய கருத்து.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த அவையினுடைய விதிமுறைகளையும், இந்த அவையினுடைய நெறிமுறைகளையும், மரபுகளையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் முழுமையாக உணர்ந்து இருக்க இயலாது. அவர் புதிய உறுப்பினர் என்பதால்தான் இதுவரை பொறுமையாக இருந்திருக்கிறேன். இனிமேல் விதிப்படி, மரபுப்படி நடந்துகொள்ளவில்லை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு நான் ஆளாகிவிடுவேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசியதில் பாயின்ட் ஆப் ஆர்டரா? என்ன சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எந்த நேரத்திலும் கிராமங்களுக்குத் தலை நிமிர்ந்து செல்வதற்குத் தயாராக இருக்கிறோம். நாங்கள் கோடி கோடியாகக் கொள்ளை அடிக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அதனுடைய இலட்சணத்தை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் பார்த்திருப்பீர்களே?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுதானே உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர்? இப்போது அமைச்சர் சொல்லட்டும். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முழுமையாகப் பேசுவதற்கு அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் நினைத்த நேரத்தில் எல்லாம் நினைத்ததையெல்லாம் பேசிக் கொண்டிருக்க முடியாது, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத் தேர்தலிலே அவர்கள் வெற்றி பெற்றுவிட்ட காரணத்தினாலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எல்லாம் கிராமத்துப் பக்கம் போக முடியாது என்று உறுப்பினர் நினைத்துக் கொண்டிருக்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. கடந்த தேர்தலில் 3 இடங்களில் வெற்றி பெற்றுவிட்ட நீங்கள்



கிராமப்புறங்களுக்குப் போக முடிகிறது. இந்தத் தேர்தலில் 10 இடங்களில் எங்களுடைய அணி வெற்றி பெற்றிருக்கிறது. அதனால் கிராமப் புறங்களுக்குப் போக முடியாது என்பதல்ல. நீங்கள் எப்படி வெற்றி பெற்றீர்கள் என்பது வேறு விவகாரம். பாரதீய ஜனதா கட்சி என்ற போர்வையில் நீங்கள் வெற்றி பெற்றீர்கள். அதி.மு.க. தனித்து நின்றிருந்தால் ஒரு இடத்தில்கூட டெபாசிட் வாங்கியிருக்க முடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்குமேல் நான் அனுமதிக்க முடியாது. உறுப்பினர் திரு. கருப்பசாமி பேசலாம். பேசவில்லை என்றால் நான் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள், திரு. கருப்பசாமி பேசட்டும். (குறுக்கீடு) திரு. சுந்தரம், உங்களை உட்காருமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) நான் 3 முறை உட்காருங்கள் என்று சொல்லுவேன். உட்காரவில்லை என்றால் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, அதுவேதான் உங்களுக்கும், உட்காருங்கள். திரு. கருப்பசாமி பேசி முடிக்கட்டும். அவருடைய நேரம் வீணாகிறது. திரு. கருப்பசாமி பேசுங்கள். (குறுக்கீடு) திரு. கருப்பசாமி பேசுவதற்குத்தான் நான் அனுமதி கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் அவர் பேசுகின்றபோது பதில் சொல்லிக் கொள்வார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியதால் வந்த வம்புதான் இது. நீங்கள் ஒன்று சொல்ல அமைச்சர் ஒன்று சொல்லுகிறார். உட்காருங்கள். திரு. கருப்பசாமி இப்போது நீங்கள் பேசவில்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அமைச்சர் பேசுவதை ரெக்கார்ட் செய்கிறீர்கள். நாங்கள் பேசுவதற்கு அனுமதிக்க மறுக்கிறீர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களுக்கு சில கட்டாயமான உரிமைகள் உண்டு, கடமைகள் உண்டு. அவர் சொல்லுகின்ற கருத்தை அவ்வை ஏற்றுக்கொள்ளலாம், ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கலாம். அமைச்சர் சொன்னதற்கெல்லாம் பதில் சொல்வதற்கு உண்டான உரிமை உறுப்பினருக்கு சட்டப்படியே கிடையாது. தனிப்பட்ட முறையில் ஒரு உறுப்பினரைப்பற்றி ஏதேனும் குறை சொன்னால் அதற்கு வேண்டுமானால் கட்டாயமாகப் பதில் சொல்லலாமே தவிர, கருத்துக்களைப் பொறுத்தவரையில் அவரவர் கருத்து அவரவருக்கு. அவர் கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அந்தக் கருத்துக்களுக்கெல்லாம் பதில் சொல்வதற்கு இந்த அவையில் இடம் கிடையாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், அருமை அண்ணன் ஆற்காடு வீராசாமி அவர்கள் அண்ணா தி.மு.க. தனித்துப் போட்டியிட்டால் டெபாசிட் போய்விடும் என்று சொன்னார்கள். அ.தி.மு.க. தனித்துப் போட்டியிடட்டும், தி.மு.க. தனித்துப் போட்டியிடட்டும், யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்ப்போம்; தி.மு.க.-வுக்கு டெபாசிட் போய்விடும்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியிலுள்ள கிராம மக்களுடைய மனநிலையை நான் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னேன். ** என்று நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** இல்லை. நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்கும் தொடர்பு இல்லாமல், பேச வேண்டிய மானியத்திற்கும் தொடர்பு இல்லாமல், தன்னை அடிப்படையாக வைத்து ** எதையும் கேட்பதற்கு இது இடமல்ல. இங்கே அப்படி கேட்கப்படுமானால், அது அவைக் குறிப்பில் இடம் பெறாமல் நீக்கப்பட வேண்டும். ஏனென்றால், சிலர் எதற்கும் தகுதி இல்லாமல் இருப்பார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எதற்காகவும் யாரையும் சவாலுக்கு அழைக்கலாம். அதுபோல் சட்டமன்றத்தில் இடம் பெற முடியாது. பாதிப்பு இல்லையெனில் தோற்பதைப் பற்றியேகூட சில உறுப்பினர்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கலாம். ஆகவே, இந்த விவாதத்தில் அந்தக் கருத்துக்கள் இடம் பெற்றது முறையல்ல என்பதைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது இடம் பெறக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னவர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சொற்றொடர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அடுத்து, திரு. ப. கோவிந்தன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு வழங்கிய நேரத்தை நீங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். விவசாயிகளுடைய மேம்பாட்டுத் திட்டத்தில் விவசாயிகள் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்பார்கள். பால் உற்பத்தியினைப் பொறுத்தவரையில் அதனை வளம்பெறச் செய்ய வைப்போம் என்று இந்த நாட்டிலே ஆண்ட அரசும், ஆளுகின்ற அரசும் சொல்லிக்கொண்டே இருக்கின்றன. ஆனால், இன்று விவசாயிகளினுடைய நிலை எவ்வாறு இருக்கிறது என்று சொன்னால் அவர்கள் இடுப்பிலே வேட்டியும் தோளிலே துண்டும் என்கின்ற அந்த அளவில் வாழக்கூடிய அவல நிலையில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். கிராமப்புறத்திலே வாழுகின்ற விவசாயிகளின் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு கால்நடை மருந்தகத்திற்குக் கொண்டு சென்றால் அந்த மருந்தகங்களிலே நோய்களுக்கான போதுமான மருந்துகள் இல்லை என்று சொல்லி சீட்டிலே எழுதிக் கொடுத்து கடையிலே போய் வாங்கி வரக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அந்த விவசாயிகள் பணத்தைக் கொடுத்து மருந்தை வாங்கி வர இயலாத நிலையில் தடுமாறுகின்ற சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். கால்நடை மருந்தகங்களுக்கு இப்போது வழங்கப்படுகின்ற நிதி போதுமானதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது வழங்கப்படுகின்ற அந்த நிதியை ரூபாய் ஒரு இலட்சமாக மாற்றி வழங்கிட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தற்போது கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக நாள் ஒன்றிற்கு மருந்துகளுக்காக வழங்கப்படுகின்ற நிதி தோராயமாக ரூ.95 வழங்கப் படுகிறது. இந்தத் தொகை மருந்தகங்களுக்கு வருகின்ற 10 கால்நடைகளுக்கு மட்டுமே வைத்தியம் செய்யக்கூடிய தொகையாக இருக்கின்றது. அதனால் இதனை மனதிலே கொண்டு இந்த ஆண்டு கால்நடை மருந்தகங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியை ஒரு இலட்சத்திற்கு மேலாக வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

53-110-9a

[திரு. ப. கோவிந்தன்] [1998 மே 20

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கால்நடை மருத்துவமனைகள் அரசாங்கத்தால் திறக்கப்பட்டிருந்தாலும் அவற்றிற்கு நிரந்தரக் கட்டடம் கட்டப்படாமல் உள்ளது. தற்போது ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டாம் கால்நடை மருந்தகம் திறக்கப்பட்டால் கட்டடத்திற்கு ஆகும் செலவைப் பொறுத்தவரையில் 50 சதவிகிதம் அரசிடமிருந்தும், 50 சதவிகிதம் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தும் ஒதுக்கப்பட வேண்டுமென்று சட்டம் உள்ளது. ஆனால் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து 50 சதவிகிதம் வழங்கப்படாததால் அரசாங்கக் கால்நடை மருந்தகம் திறக்கப்பட்டாலும் அதற்கு நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கட்டப்பட்டு இருக்கும் கால்நடை மருந்தகங்களின் கட்டடங்கள் பழுதடைந்து உள்ளன. அதனைப் பழுது பார்க்கவும் நிதி உதவி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)**

மேலும் நிரந்தரக் கட்டடங்கள் இல்லாத கால்நடைக் கிளை மருத்துவ நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாரமங்கலத்தில் அரங்கனூர் மற்றும் கேயார்தோப்பு போன்ற இடங்களில் உள்ள கால்நடைக் கிளை மருத்துவமனைக்கு நிரந்தரக் கட்டடங்களைக் கட்டித்தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

வளர்ந்து வருகின்ற இன்றைய சமுதாயத்தில், கால்நடைகள் மூலம் மனிதனுக்குத் தேவையான பால் உற்பத்தி கிடைக்கின்றது. அவ்வாறு இருக்கின்ற நேரத்தில் கால்நடைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி சிகிச்சை அளிப்பது போதுமானதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதனுக்கு வரும் நோயைக் கண்டறிய 'எக்ஸ்ரே' எடுப்பதுபோல, கால்நடைகளுக்கும், 'எக்ஸ்ரே' மூலம் அவைகளுக்கு வரும் நோயைக் கண்டறிய, மாவட்ட கால்நடை மருத்துவமனைகளிலாவது நீங்கள் 'எக்ஸ்ரே' கருவியை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு தொகுதிக்கும் பார்வை நேரக் கிளை மருத்துவமனைகள் 5 இடங்களில் ஆரம்பிக்கப்படும் என்று சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருந்தீர்கள். ஆனால், இதுநாள்வரை அந்தப் பார்வை நேரக் கிளை மருத்துவமனைகள் திறக்கப்படவில்லை. எனவே, அவற்றை இந்த ஆண்டிலாவது திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1998 மே 20] [திரு. ப. கோவிந்தன்]

தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில், தெசவிளக்கு ஊராட்சி, மாட்டையம்பட்டியிலே ஒரு கால்நடை மருத்துவமனை உள்ளது. அது சரியான முறையிலே செயல்படவில்லை. அங்கு விவசாயிகள் கால்நடைகளைக் கொண்டு செல்வதில்லை. எனவே, அதைத் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாப்பம்பாடிக்கு மாறுதல் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனைகளில், கால்நடைகளுக்கு சினை ஊசி போடுவதற்கு 12 ரூபாய் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு நீங்கள் உதவும் வகையிலே, மானியத்திலே சினை ஊசியைப் போடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனைகளிலே உதவியாளர்களாகப் பணிபுரிந்து கொண்டிருப்பவர்கள் 48 ரூபாய் சம்பளத்தில் தினக்கூலிகளாகப் பத்து ஆண்டுக் காலமாகப் பணிபுரிந்து வருகின்றார்கள். அவர்களது பணியை நிரந்தரமாக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எம்.பி.பி.எஸ்., டாக்டர்களுக்கு இணையான ஊதியத்தை கால்நடை உதவி மருத்துவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில், இராசிபுரம், நாமக்கல் மாவட்டம், நாமக்கல் ஆகிய இடங்களில் கோழிகள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. இந்த வாரத்தில் கடுமையான வெய்யில் அடித்த காரணத்தால், அங்கே உள்ள கோழிகள் நோய்வாய்ப்பட்டு, 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட கோழிகள் இறந்துபோய் இருக்கின்றன. எனவே, அதுகுறித்துக் கண்டறிந்து, இருக்கின்ற கோழிகளைப் பாதுகாக்கின்ற வகையில், அவற்றிற்குத் தக்க மருத்துவ உதவியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துக் கால்நடை மருத்துவமனைகளுக்கும் நிரந்தரக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள கால்நடைக் கிளை மருந்தகங்களுக்கு அதிகமான கால்நடைகள் வருவதால், தற்போது வழங்கப்பட்டுள்ள 5,000 ரூபாய் நிதியை, 50,000 ரூபாயாக அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேச்சேரி, செம்மறி ஆடுகளுக்குப் பெயர் பெற்ற ஊர். இதுபோன்ற செம்மறி ஆடுகள் அதிகமாக இருக்கின்ற இடங்களில் ஆடுகளுக்குக் குடல்புழு நீக்கத்திற்குக் கொடுக்கப்படும் மருந்து மிகவும் குறைவாக

உள்ளது. ஆடுகளுக்கு, மூன்று வருடங்களுக்கு ஒருமுறை குடல்புழு நீக்கம் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை விவசாயிகளுக்கு, தமிழ்நாட்டில் சுமார் 2,500 கால்நடை கிளை நிலையங்கள் உள்ளன. அங்கே, பகுதி நேர ஊழியர்களாக 2,500 பேர்கள் சுமார் 10 ஆண்டுகாலமாக 60 ரூபாய் சம்பளத்தில் தினக்கூலிகளாக இருக்கின்றார்கள். இன்றைய விலைவாசியில், இந்தச் சம்பளத்தை வைத்துக்கொண்டு எப்படி அவர்கள் குடும்பத்தை நடத்த முடியும்? அதனால், அவர்களுக்கு மாதம் ரூபாய் 1,000 சம்பளம் கொடுத்து, அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு கால்நடை உதவி மருத்துவர்களுக்கு இணையாக பணியிலும் படிப்பின் தகுதியிலும் தமிழக அரசு கால்நடை உதவி மருத்துவர்களும் ஒரே நிலையில் இருப்பதால், மைய அரசின் அடிப்படை ஊதிய விகிதமான ரூ.8,000 அடிப்படை ஊதியத்தை அவர்களுக்கு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** நீங்கள் 9 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் உங்களுடைய உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ப. கோவிந்தன்:** இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** திரு. வெ. சின்னய்யா.

*பிற்பகல் 12-50*

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நடைபெறுகின்ற கால்நடைப் பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கைமீது பேசுகிற வாய்ப்பு அளித்த என்னுடைய தலைவர், ஐயா மூப்பனார் அவர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, ஒரு கருத்தை முன்னாலே சொல்லிவிட்டு, கால்நடைப் பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கைமீது பேசலாம் என்று கருதுகிறேன்.

கடந்த 14, 15 தேதிகளில் முன்னாள் முதலமைச்சர், தமிழகத்தினுடைய பொருளாதார மேதை ஜெயலலிதா அவர்கள், இந்தியாவினுடைய பொருளாதாரத்தில் ப. சிதம்பரம் அவர்கள் நிதி அமைச்சராக இருந்தபோது



அவரது தவறான அணுகுமுறையின் காரணமாக பலகோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது என்று ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். அவர்களுக்குத் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இந்தியாவினுடைய பொருளாதாரம் சீர்கெட்டுக் கிடந்தபோது வெளிநாட்டில் இருந்த நமது தங்கத்தை மீட்டுத் தந்தவர் நம்முடைய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல அன்னியச் செலாவணியயை 4 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக உயர்த்தித் தந்தவர் நம்முடைய மத்திய நிதி அமைச்சர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கப்பால், தானாகவே முன்வந்து வருமான வரிச் செலுத்துவோர் 'வி.டி.ஐ.எஸ்.' திட்டத்தின்கீழ் 10 கோடி ரூபாயை, 1 ரூபாய் கூட லஞ்சம் பெறாமல் இந்திய அரசுக்கு அளித்து புகழ் சேர்த்துள்ளவர் நமது மத்திய நிதி அமைச்சர் ஆவார்கள். அதோடு நிற்கவில்லை. தொழிலமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்களும் இதற்கு உடந்தையாக இருந்தார் என்று குற்றம் சாட்டியிருக்கிறார். "சாத்தான் வேதம் ஓதுகிறது" என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்துகிறேன் *(குறுக்கீடுகள்).*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** உட்காருங்கள். உறுப்பினர் பேசி முடிக்கட்டும் உட்காருங்கள்.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தியப் பொருளாதாரத்தைப் பற்றிப் பேசுகிற தகுதி ஜெயலலிதா அம்மையாருக்கு இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததைப்போல' இன்றைக்கு அந்தக் கட்சிக்காரர்கள் வருத்தப்படுகிறார்கள். ஆகவே, நான் இந்த அளவிலே சொல்லி, ** *(குறுக்கீடுகள்).*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** உறுப்பினர் பேசி முடித்த பிறகு, பேசலாம். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. வெ. சின்னய்யா தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. வெ. சின்னய்யா:** மாற்றுத் தலைவர் அவர்களே, கால்நடைப் பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்).*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** திரு. வெ. சின்னய்யா, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவர்களாக இருப்பவர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களுக்கு, இணையாகச் சம்பளம் வழங்கப்படுகின்ற கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஊழியர்களுக்கு - மருத்துவர்களுக்கு- 9,100 ரூபாய் என்றும் மாநில அரசு கால்நடை மருத்துவர்களுக்கு 8,000 ரூபாய் என்றும் வழங்கப்படுகிறது. இதை நிவர்த்தி செய்கின்ற வகையில் நமது அரசு..... (குறுக்கீடுகள்)

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்யப்படுகிறது. (குறுக்கீடுகள்) நீக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டீர்கள். நீக்கம் செய்தாகிவிட்டது, உட்காருங்கள். திரு. வெ. சின்னய்யா தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1977 ஆம் ஆண்டு கால்நடை அபிவிருத்தித் திட்டத்தில் ஒரு மாவட்டத்திற்கு 50 கிளை நிலையங்கள் என்ற அளவில் தேர்ந்தெடுத்து மருத்துவர் நிலை-1.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** உங்களுடைய கோரிக்கையை ஏற்று, ** என்ற வார்த்தையை நீக்கம் செய்துவிட்டேன். ஆகவே உட்காருங்கள். திரு. வெ. சின்னய்யா தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ** என்று வேண்டுமானால் குறித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

***(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)***

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே நீங்கள் கேட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) முன்னாள் முதலமைச்சர் குறித்து, திரு. சின்னய்யா அவர்கள் குறிப்பிட்ட வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இரண்டுமே நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்). இல்லை, இல்லை, அப்படியெல்லாம் கிடையாது. நீங்கள் நீக்கச் சொல்லி கேட்டீர்கள்; நீக்கியாகிவிட்டது; உட்காருங்கள். திரு. சின்னய்யா பேசலாம். (குறுக்கீடு)

---

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 12-55

**திரு. இரா. தாமரைக்கனி:** முறையில்லாமல் பேசுவதை எப்படி அனுமதிக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நீங்கள் மீண்டும் அதைப்பற்றிப் பேசும்போது, அது அவைக் குறிப்பில் பதிவாகும். நான் ஏற்கெனவே, நீங்கள் கேட்டதையொட்டி, அதை நீக்கிவிட்டேன்; உட்காருங்கள். (குறுக்கீடு) அதை நீக்கியாகி விட்டது. திரு. சின்னய்யா பேசலாம். (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதெல்லாம் வேண்டாம். திரு. தாமரைக்கனி குறிப்பிட்டதும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 1977 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கிளை நிலையங்களில் ஒரு மாவட்டத்திற்கு 50 கிளை நிலையங்கள் இருக்கின்றன. தொடங்கப்பட்ட கிளை நிலையங்களில் கால்நடை ஆய்வாளர் ஒருவரும், 2 பராமரிப்பு உதவியாளர்களும் நியமிக்கப்பட்டார்கள். ஆனால், இன்றைக்கு அந்த நிலை இல்லை. இன்றைக்கு கிராமப்புறங்களிலே இருக்கிற கால்நடை மருந்தகங்களுக்குச் சென்றால்... (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கும்போது நீங்கள் நின்றால் எப்படி? உட்காருங்கள்.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே மருத்துவர்கள், ஆய்வாளர்கள் இருக்கிறார்கள்; ஆனால், உதவியாளர்கள் இல்லை. ஆகவே, இன்றைக்குப் பராமரிப்பு உதவியாளர்களை எல்லாக் கிளை நிலையங்களிலும் அரசு நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், கால்நடைத் துறை அதிகாரிகள் இல்லை என்று சொன்னால், பராமரிப்பாளர் அங்கே இல்லை என்று சொன்னால், அந்தக் கிளை நிலையத்தை

---

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மூடிவிடுகிறார்கள். ஆகவே, மருத்துவர் விடுப்பில் சென்றால்கூட, அந்தக் கிளை நிலையத்திலே பணியாளர்கள் இருக்க வேண்டுமென்று சொல்லி, பணியாளர்களை நியமிக்க வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக மருந்தகங்களிலே இரவு நேரக் காவலர்களை நியமிக்க வேண்டும். பல இடங்களிலே இரவு நேரங்களில் காவல் இல்லாத காரணத்தால் திருடு போகிறது என்ற பயம் இருக்கிறது. ஆகவே, கால்நடை மருந்தகங்களிலே இரவு நேரக் காவலர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மருந்தகங்களில் பணிபுரிகிற உதவியாளர்களுக்குச் சிறப்பு ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், உரையை முடியுங்கள்.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறந்த கால்நடைப் பண்ணை இருக்கிறது. அந்தக் கால்நடைப் பண்ணை இன்றைக்கு மிகக் குறைந்த அளவிலே கால்நடைகளைக் கொண்டு இயங்குகிறது. அதைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குன்னாண்டார்கோயில் ஒன்றியத்தில் திருவராயசமுத்திரத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்று 4-5-1998 அன்று அரசுக்குக் கோரிக்கை அனுப்பப்பட்டு இருக்கிறது. அதையும் நீங்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருவரங்குளம் ஒன்றியம் நாஞ்சில்விடுதி ஊராட்சியில் ஒரு கிளை அலுவலகம் வேண்டும் என்று கோரிக்கை இருக்கிறது; அதையும் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன், வெண்தாடி வேந்தன், தந்தை பெரியாரின் சிந்தனையிலே கலந்து, 'அ' என்ற உயிரெழுத்து; 'ண்' என்ற மெய்யெழுத்து — 'ணா' என்ற உயிர்-மெய்யின் கூட்டுக் கலவையின் சிறப்புச் செறிவுதான் அண்ணா; தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்று சொன்ன தக்கோன், தமிழ் கூறும் உலகின்கண்



நிகரற்ற அறிவாற்றல் மிக்கோன்; அந்தப் பேரறிஞர் அண்ணாவின் அறிவார்ந்த பாசப் பிணைப்பிலே நனைந்து பூந்தாது மொட்டவிழ்ந்து பொன்வண்டு மொய்த்து வர, புதுக்கவிதைப் பிரவாகம் புறம் நானூறு பாடி வர, சிலம்பு ஒலித்து வர, சிந்துதமிழ்ப் பாடி வர, செந்தமிழாம் அன்னைக்கு நந்தா விளக்கேற்றி, சங்கத் தமிழ் கண்டு தலைமுறைகள் நிலைத்து இருக்க,

> 'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
> ஆற்றல் தலைப்பட் டவர்க்கு'

என்ற குறளுக்கு இலக்கணமாய் குறளோவியம் புனைந்து, செவ்வானத் திட்டில் ஒரு மஞ்சள் நிலாவாக, செந்தமிழ் நாட்டில் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்று, இன்றையதினம் நல்லாட்சி நடத்திவரும் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த கால்நடைத் துறையின் மானியக் கோரிக்கையில் என் பதிலுரையை இங்கே நான் அளிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

கால்நடைப் பராமரிப்புத் துறை என்பது வேளாண்குடிப் பெரு மக்களோடு இரண்டறக் கலந்த துறை. வேளாண்மை, கால்நடை வளம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. கிராமியப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு 30 விழுக்காடு நிறைவு செய்யக்கூடியவையாக இருக்கிறது. மனிதனுடைய உணவுத் தேவைகளில் பால், முட்டை, இறைச்சி போன்ற பொருட்கள் மகத்தான பங்கை ஆற்றி வருகின்றன. பால், முட்டை, இறைச்சி போன்ற புரதச் சத்து மிக்க உணவுப் பொருட்களைத் தருகின்ற கால்நடைகள், அறிவியல் முன்னேற்றங்களுக்குத் தக்கவாறு வளர்ச்சியைக் கண்டு, தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் கலப்பின முறையில் கருவூட்டல் செய்து, பசுக்கள், எருமைகள், ஆடுகள், கோழிகள் மற்றும் வெண்பன்றிகள் போன்றவைகளை எல்லாம் இனப்பெருக்கம் செய்வது, நோயற்ற மண்டலங்களை உருவாக்குவது, நோய்க் கிளர்ச்சிகளைக் கண்டறிவது, நோய்த்தடுப்பு முறைகளைச் செயல்படுத்துவது போன்ற வகைகளில் கால்நடைகளைப் பராமரித்து, பொருளாதாரத்தை மேம்படுத்தவும், கால்நடை வளங்களின் பயன்பாட்டைப் பெருக்கவும், கால்நடைப் பராமரிப்புத் துறை இன்றையதினம் முனைப்போடு செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989-90 ஆம் ஆண்டு அன்றையதினம் முதலமைச்சராக இருந்த இன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், வேளாண் துறையிலே பசுமைப் புரட்சியைத் தோற்றுவித்து உணவு உற்பத்தியில் தன்னிறைவைத் தமிழகத்திலே உருவாக்கினார்கள். அதைப்போல, பால், முட்டை உற்பத்தியில் வெண்மைப் புரட்சியை உருவாக்கி வெற்றி கண்டிருக் கிறார்கள். இன்றையதினம் முட்டை உற்பத்தியில் இந்தியாவிலேயே இரண்டாவது இடமாகத் தமிழ்நாடு இருக்கிறது என்று சொன்னால், அனைத்துத் துறைகளிலும் தனது ஆற்றலைப் பதித்திருக்கின்ற சகலகலா வல்லவராக இருக்கிற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தக் கால்நடைத் துறையில் தன்னுடைய கனிவான பார்வையைச் செலுத்திய காரணத்தால் இந்த வெண்மைப் புரட்சியில் வெற்றியைக் கண்டிருக்கிறோம் என்று சொன்னால், அது மிகையாகாது.

அதைப்போல 1995-96 ஆம் ஆண்டில் முட்டை உற்பத்தி 3,048 மில்லியனாக இருந்தது. 1997-98-இல், அதாவது சென்ற ஆண்டு 3,217 மில்லியனாக அதிகரித்து இருக்கிறது. அதாவது கூடுதலாக 169 மில்லியன் முட்டைகள் உற்பத்தியாகியிருக்கின்றன. அதைப்போல, 1995-96 ஆம் ஆண்டில் 37,91,000 மில்லியன் டன்னாக இருந்த பால் உற்பத்தி, 1997-98-இல் 40,60,000 மில்லியன் டன்னாக அதிகரித்திருக்கிறது. அதாவது 269 ஆயிரம் மில்லியன் டன் பால் இந்த இரண்டாண்டுக் காலத்தில் கூடுதலாக உற்பத்தியாகியிருக்கிறது என்று சொன்னால், அது கால்நடைப் பல்கலைக்கழகம் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை இவைகளின் செயல்பாடுகளின் தீவிரத்தின் காரணமாகத்தான் இந்த வெற்றிகளை அடைந்திருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்தக் கால்நடை வளர்ப்புப் பற்றிய மானியக் கோரிக்கையில் ஏறக்குறைய பத்துக்கு மேற்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் - திரு. மோகன் கந்தசாமி, திருமதி வாசுகி முருகேசன், திருவாளர்கள் எஸ்.வி. கிருஷ்ணன், முகமது இஸ்மாயில், கே. விஜயகுமார், ஏ.என். இராமசாமி, கருப்பசாமி, ப. கோவிந்தன், வெ. சின்னய்யா ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய ஆலோசனைகளையும் மேலான கருத்துக்களையும் இந்தக் கால்நடைப் பராமரிப்புத் துறை சிறந்த முறையில் செயல்பட வேண்டுமென்பதற்காகத் தந்திருக்கிறார்கள். 25 மாண்புமிகு உறுப்பினர்கள், நீல நாக்கு நோய் பற்றியும், கால்நடை மருந்தகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது பற்றியும், மருத்துவமனைகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும், கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் பல்வேறு கோரிக்கைகளை வைத்து





வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை எல்லாம் நெஞ்சிலே நிறுத்தி நிறைவேற்றித் தருவோம் என்பதைச் சொல்லி, இந்தக் கால்நடைத் துறை தொடர்பாகச் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1995-96 ஆம் ஆண்டில் 5.98 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்பட்டது. 1997-98-இல் அது 6.16 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. 1995-96 ஆம் ஆண்டில் 54.02 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. 1997-98-இல் அது 88.66 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. செயற்கை முறை கருவூட்டல் பணி 1995-96-இல் 25.73 இலட்சம் ஆக இருந்தது. 1997-98-இல் 26.19 இலட்சம் ஆக உயர்ந்திருக்கிறது.

பிற்பகல் 1 -05

அதைப்போல, கால்நடை மற்றும் கோழியினம் உட்பட, தடுப்பூசிப் பணிகள் 1995-96-இல் 188.17 இலட்சம் ஆக இருந்தது. அது 1997-98-இல் 262.96 இலட்சம் ஆக உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல மக்கள் தொடர்பு முகாம்கள் - கால்நடைகளின் தீவனப் பெருக்கம், மலட்டுத் தன்மை நீக்கம், ஆண்மை நீக்கம், குடற்புழு நீக்கம், செயற்கை முறைக் கருவூட்டல் போன்ற இந்தப் பணிகளை மக்களிடத்திலே தெரிவிப்பதற்காக பல்வேறு மக்கள் தொடர்பு முகாம்கள் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலமாக இந்த ஆண்டு நடத்தப்பட்டிருக்கின்றன. 30,116 இடங்களில் மக்கள் தொடர்பு முகாம்களை நடத்தி, திரைப்படங்களும் காட்டப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலப் பணியாளர்களின் நலன். கால்நடை பராமரிப்புத் துறையில் 1,859 தொழில்நுட்ப அலுவலர்களும், 3,232 தொழில்நுட்ப உதவிப் பணியாளர்களும், 599 தொழில் நுணுக்கப் பணியாளர்களும், 1,293 அமைச்சுப் பணியாளர்களும், 4,146 உதவியாளர்களும், 279 ஓட்டுநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

துறைப் பணியாளர்களின் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் அறிவுரைப்படி கடந்த 2 ஆண்டுகளில் 5 இணை இயக்குநர்கள் கூடுதல் இயக்குநர்களாகவும், 34 துணை இயக்குநர்கள் இணை இயக்குநர்களாகவும் பதவி உயர்வு அடைந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவப் பட்டப்படிப்புப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திடவும், காலியாக உள்ள கால்நடை ஆய்வாளர்கள் பதவிகளை நிரப்பவும், ஆய்வாளர்கள் பதவிக்குக் கீழ்நிலையில் பணிபுரியும் தகுதியுள்ள 240 பணியாளர்களுக்குக் கால்நடை ஆய்வாளர்களுக்கான 11 மாதப் பயிற்சியை அளித்து, அவர்களைக் கால்நடை ஆய்வாளர் நிலை-2 ஆகப் பணியில் அமர்த்த ஆவன செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று வரும் ஆண்டில் 115 நபர்கள் பயனடைய உள்ளார்கள்.

புதிதாகத் திறக்கப்பட்டுக் கூடுதல் பொறுப்பில் செயல்பட்டு வரும் 60 கால்நடை மருந்தகங்களுக்கும் காலியாக உள்ள இடங்களுக்கும் முழுநேர மருத்துவர்களை நியமிக்க 174 கால்நடை உதவி மருத்துவர்கள் பட்டியல் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீண்டகாலமாக தினக்கூலிப் பணியாளர்களாக இருந்து வந்த 1,185 நபர்களில், தகுதி வாய்ந்த 759 நபர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், கருணை அடிப்படையில் 114 நபர்கள் இதுவரை வேலைவாய்ப்புக்களை அடைந்துள்ளார்கள்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பது மருத்துவ முறை. இந்த நோய்த் தடுப்புப் பணிகளுக்காக, இத்துறை அதிகக் கவனம் செலுத்தி, நோய் வருமுன் காத்தல் என்ற இலக்கணத்திற்கிணங்க தீவிர தடுப்பூசிப் பணி மற்றும் உடல்நலம் பாதுகாப்புப் பணி போன்றவைகளினால், 1997-98 ஆம் ஆண்டில் நோய்க் கிளர்ச்சிகள் வெகுவாகக் குறைந்துள்ளன. 1996 ஜனவரி முதல் வெக்கை நோய்க் கிளர்ச்சி ஏதும் ஏற்படவில்லை. தொண்டை அடைப்பான், சப்பை நோய் போன்ற பாக்டீரியா நுண்ணியிர்க் கிருமியினால் ஏற்படும் கிளர்ச்சிகள் வெகுவாகக் குறைந்துள்ளன.

1995-96 ஆம் ஆண்டில் கால்நடைகளுக்கு ஏற்பட்ட 162 நோய்க் கிளர்ச்சி 1997-98-இல் 157 ஆகக் குறைந்துள்ளது. இதேபோல், கோழிகளில் 1995-96-இல் 175 ஆக இருந்த நோய்க் கிளர்ச்சியானது 1997-98-இல் 61 ஆகக் குறைந்துள்ளது. கடந்த ஆண்டில், கோழிகளை அதிகம் தாக்கும் இராணிக்கெட் நோயிலிருந்து காப்பாற்ற பிப்ரவரி மாதத்தில் மாநிலம் தழுவிய சிறப்பு நோய்த் தடுப்பு முகாம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் 17,386 கிராமங்களில் வளர்க்கப்படும் 42.38 இலட்சம் கோழிகளுக்கு



இலவசத் தடுப்பூசி மேற்கொள்ளப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்தில் 14 இடங்களில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு, நோய் கண்டறியவும், தகுந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இயங்கி வருகிறது. இந்த ஆண்டு விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, அம்மாவட்டத்தில் புதிதாக ஒரு கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட உள்ளது. இதைத் தவிர 2 நோய்க் கோழிகளைக் கண்டறியும் ஆய்வுக் கூடங்களும் இயங்கி வருகின்றன. இப்பிரிவுகளின் பணிகளை ஒருங்கிணைப்பு செய்ய ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம், சென்னை, சைதாப்பேட்டையில் இயங்கி வருகிறது.

அதைப்போல, இராணிப்பேட்டையில் அமைந்துள்ள முன்னோடி நிறுவனமான கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், மாநிலத்தில் உள்ள கால்நடை நிலையங்களுக்குத் தேவையான தடுப்பு மருந்துகள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளைத் தயாரித்தும், விநியோகித்தும் வருகிறது. இந்நிலையம் 7 வகையான நுண்ணுயிர்த் தடுப்பு மருந்துகளையும், 11 வகையான வைரஸ் தடுப்பு மருந்துகளையும், நோய் கண்டறியும் சாதனங்களையும், மருந்து வகைகளையும், ஊநீர்களையும் தயாரித்து வருகிறது.

களப்பணிக்கு விநியோகிக்கும் முன் தடுப்பு மருந்துகளின் தரத்தைப் பரிசோதனை செய்ய சோதனை மற்றும் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்றும் இந்நிலையத்தில் இயங்கி வருகிறது.

நீல நாக்கு நோயைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். அதற்கு விளக்கம் தந்திருக்கிறேன். வருகின்ற மே 31-ம் தேதிக்குள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அந்த நிவாரணத் தொகை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

நடமாடும் நோய் ஆய்வுக் கூடங்கள். நான்கு நடமாடும் நோய் ஆய்வுக் கூடங்கள் மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, நிரந்தர வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இவ்வகை நடமாடும் ஆய்வுக் கூடங்களுக்கு எல்லா வகையான ஆய்வுக்கூட சாதனங்களும் உள்ளன. நோய் தாக்கிய இடங்களுக்கு உடனடியாகச்

சென்று அவ்விடங்களிலேயே நோய் குறித்த ஆய்வு மேற்கொண்டு மாதிரிகளைப் பரிசோதித்து ஆய்விற்காகச் சேகரிப்பு செய்கிறார்கள். தொடர்ந்து இந்த ஆய்வுக் கூடங்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக மொத்தம் 36.80 இலட்சம் ரூபாய் வாகனங்களுக்காகச் செலவிடப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருந்தும் மருத்துவ வசதியும்-இத்துறையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் புதிதாகத் துவக்கப்பட்ட 3 முதன்மை மருத்துவமனைகளும், 30 கால்நடை மருத்துவமனைகளும், 80 கால்நடை மருந்தகங்களும் சேர்த்து தற்போது பணியாற்றிவரும் கால்நடை நிலையங்கள் வருமாறு: பன்முக மருத்துவமனைகள் 3, முதன்மை மருத்துவமனைகள் 24, மருத்துவமனைகள் 121, மருந்தகங்கள் 807, கிளை நிலையங்கள் 2,126, நடமாடும் மருந்தகங்கள் 54. ஏழையெளிய மக்களின் செல்வங்களான கால்நடை மற்றும் கோழிகளின் உடல்நலனில் அக்கறை கொண்ட இவ்வரசு 1996-97-ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் ரூ. 5.00 கோடி மதிப்புள்ள மருந்துகள் வாங்கி சிகிச்சைப் பணிக்காகப் பயன்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டிலிருந்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடு அதை 7.03 கோடியாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல தமிழ்நாட்டில் கலப்பினக் கால்நடைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு உற்பத்தி செய்யப்பட்டுவரும் சூழ்நிலையில் அவைகளுக்குத் தேவையான பசுந்தீவன உற்பத்தியும் அதிகரிக்க வேண்டியதைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் பயன்பெறத்தக்க வகையில் இதற்கு இவ்வரசு தேவையான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்க கடந்த ஆண்டில் 75 இலட்சம்—இங்கே சொன்னார்கள், புல் கரணைகள் வழங்கப்படவில்லை-என்று—கடந்த ஆண்டு 75 இலட்சம் புல் கரணைகளும், கூபா புல் கன்றுகள் மொத்தம் 20 இலட்சமும் விவசாயிகளுக்கு மாவட்ட கால்நடைப் பண்ணையிலிருந்து இலவசமாக வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுதவிர, 4,535 விவசாயிகளுக்குத் தீவனப்பயிர் மினிகிட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. போக்குவரத்துத் துறை மானியத்திலேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் பேசும்போது, நார்வே, ஸ்வீடன் போன்ற நாடுகளில், வைக்கோல்களில், மொலாசஸ் போன்றவைகளைக் கலந்து, ஊட்டம் ஏற்றி வழங்குவதாகச் சொன்னார்கள். சென்ற ஆண்டு, அதாவது 1997-98 ஆம் ஆண்டு



கால்நடைத் துறையின் சார்பாக 1,500 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கு ஏழரை இலட்சம் ரூபாய் செலவிட்டு, திருநெல்வேலியில் இருக்கிற அபிசேகப்பட்டி மற்றும் தென் மாவட்டங்களிலே அந்தத் திட்டத்தின்கீழ், சர்க்கரைக் கழிவு மற்றும் யூரியா போன்றவைகளைக் கலந்து, அந்தக் கரைசலை வைக்கோலிலே ஊற்றி, ஊட்டம் ஏற்றப்பட்ட உணவுப் பொருளைத் தயாரிப்பதற்கு உண்டான பயிற்சியைத் தந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல கால்நடைகள் – கடந்த ஆட்சி 5 ஆண்டுகாலம் நடைபெற்று இருக்கிறது. அந்த 5 ஆண்டு காலத்திலே கால்நடைகளைப் பொறுத்தவரையில் 106 மருத்துவமனைகள், மருந்தகங்கள்தான் திறந்து இருக்கிறார்கள். ஆனால் இந்த 2 ஆண்டுகளில் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் கனிவு கொண்டு 150 மருந்தகங்களையும், மருத்துவமனைகளையும் தந்து இருக்கிறார்கள் என்பதைச் சிறப்போடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல கால்நடைப் பண்ணைகள்: கால்நடைப் பண்ணைகளில், தரம் உயர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியல் ரீதியான மற்றும் அயலினக் காளைகளைக் கொண்டு குறிப்பிட்ட வகையைச் சார்ந்த காளைகளை உற்பத்தி செய்து, அவைகள் இலாப நோக்கமின்றி மக்களுக்கு செயல்விளக்கப் பண்ணைகளாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் தற்போது 7 கால்நடைப் பண்ணைகளும், 3 ஆட்டுப் பண்ணைகளும், ஒரு அயலின கால்நடைப் பெருக்குப் பண்ணையும் செயல்படுகின்றன. ஒரத்தநாடு மற்றும் அபிசேகப்பட்டி மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் முர்ரா வகை எருமையினம் மற்றும் உதகமண்டலம் பண்ணையில் ப்ரிசியன் பசுவினம், ஈச்சங்கோட்டை பண்ணையில் ஜெர்சி பசுவினம் வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உம்பளாச்சேரி இனம், கொருக்கை பண்ணையிலும், சிந்தி மற்றும் காங்கேயம் இனங்கள் ஓசூர் பண்ணையிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன. உட்கரு மாற்றத் தொழில்நுட்பம் இத்துறையினரால் கையாளப்படுகிறது. இரு உட்கரு மாற்றப் பிரிவுகள் ஈச்சங்கோட்டை மற்றும் ஓசூர், கால்நடைப் பண்ணைகளில் இயங்கி வருகின்றன. உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் ஈச்சங்கோட்டை, ஓசூர், அபிசேகபபட்டி மற்றும் உதகமண்டலம் பண்ணைகளில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

மூன்று ஆட்டுப்பண்ணைகள் தவிர, ஓசூர், புதுக்கோட்டை, அபிசேகப்பட்டி மற்றும் செட்டிநாடு ஆகிய இடங்களில் மாவட்டக்

கால்நடைப் பண்ணைகளில் தனியே 4 ஆடு வளர்ப்புப் பிரிவுகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு உள்நாட்டு இனங்களான சென்னை சிவப்பு, மேச்சேரி, இராமநாதபுரம் வெள்ளை, கீழக்கரிசல், மாண்டியா மற்றும் வேம்பூர் ஆகிய செம்மறியாடுகள் வளர்க்கப்பட்டு தேர்ந்த இனப்பெருக்கம் செய்யப்படுகின்றன.

பிற்பகல் 1-15

கால்நடைகளின் எண்ணிக்கை – தமிழ்நாட்டில் மொத்தம் 2 கோடியே 56 இலட்சத்து 79 ஆயிரத்து 325 கால்நடைகள் உள்ளன. அதைப்போல, கறிக்கோழிகளும், முட்டையிடும் கோழிகளும் 2 கோடியே 38 இலட்சத்து **53** ஆயிரத்து 680 இன்றையதினம் தமிழ்நாட்டிலே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அயல்நாட்டு உதவியுடன் செயல்படும் திட்டங்கள், டேனிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ப்புத் திட்டம் 1-8-1990 முதல் புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல், குன்னாண்டார்கோவில், விராலிமலை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ. 5.46 கோடி செலவில் முதல் கட்டமாக ஆறு வருடக் கால அளவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பயனாகக் கோழி இனங்களில் இறப்பு கணிசமாகக் குறைந்துள்ளது. கோழிகளின் முட்டையிடும் திறன் கூடியுள்ளது. வெள்ளாடுகளின் எடை கூடியும், இறப்பு சதவீதம் 5 சதவீதத்திற்குக் குறைவாகவும் காணப்பட்டுள்ளது. திட்டப் பகுதிகளில், குட்டிகள் ஈனும் திறன் அதிகரித்து இரண்டிலிருந்து மூன்றாகப் பெருகியுள்ளது. இத்திட்டச் செயலாக்கத்தின் பயனாகத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவரங்குளம், திருமயம் ஒன்றியங்கள், சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை ஒன்றியம், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புல்லானி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்காக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக வங்கி உதவியுடன் கூடிய கால்நடை அபிவிருத்தித் திட்டம்— உலக வங்கி நிதியுதவியுடன் செயல்பட்டுவரும் தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் அங்கமாக 1991-92 ஆம் ஆண்டு முதல் ரூ. 46.62 கோடி செலவில் ஏழு ஆண்டுகளுக்கு என்ற நிலையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் செயற்கை முறை கருவூட்டலில் நவீனத் தொழில்நுட்பமான உறைவிந்து உற்பத்திக்கும் மற்றும் அதனை விநியோகம் செய்வதற்குத் தேவையான திரவ நைட்ரஜன் குடுவைகள், கருவூட்டல் பணிக்கு உபயோகிக்கப்படும் உபகரணங்கள்,



விந்து சேகரிக்க தரம் வாய்ந்த காளைகள், இவற்றினைப் பராமரிக்க கட்டடங்கள் போன்ற உள்ளிருப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

20 மாவட்டங்களில் தீவன அபிவிருத்திப் பணிக்காக மாவட்ட தீவனக் குழுக்கள் அமைத்து, தீவன உற்பத்தியைக் கண்காணிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 4 மண்டல நோய் புலனாய்வுப் பிரிவுகளும், 4 கால்நடை தொற்று நோய்ப் பிரிவுகளும் தோற்றுவிக்கப் பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனித வள மேம்பாட்டுத் திட்டத்தில், உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படும் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்திற்கென கடந்த ஆண்டு ரூ.11.5 இலட்சத்தில் ஓசூர், மாவட்ட கால்நடைப் பண்ணையில், மாநில அளவிலான பயிற்சி மையம் கட்டவும், ரூ. 15 இலட்சம் செலவில் அபிஷேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணையில் பயிற்சியாளர்களுக் கென விடுதியும், கட்டடமும் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு, பொதுப்பணித் துறை மூலம் கட்டடப் பணிகள் நிறைவேற்றிட, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் என்ற அடிப்படையில், கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்டங்களிலுள்ள, 24 தாலுக்காக்களில், சுற்றுப்புறச் சூழல் பாதிக்காத வண்ணம் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தின்கீழ், பசுந்தீவனப் புல் நாற்றுக்கள், பசுந்தீவன புல்கரணைகள் மற்றும் பசுந்தீவன புல் விதைகள் ஆகியவை வழங்கி, அந்தப் பகுதிகளில் தீவன வளர்ச்சியைப் பெருக்கி அந்தப் பகுதியிலுள்ள கால்நடைகளைப் பராமரிப்பதற்கு உகந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டத்திற்கென 1997-98 ஆம் ஆண்டில், ரூ. 10.34 இலட்சம் செலவில் நடைமுறையில் உள்ள திட்டங்களைச் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டுத் திட்டத்தில் கால்நடை வளர்ச்சிப் பணிகளுக்கு என ரூ. 38.04 இலட்சம் ஒதுக்கீடு செய்யக் கோரி, அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருந்தகங்களுக்கான கட்டடம் கட்டும் பணிகளும் செயல்பட்டு வருகின்றன.

மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலத்தில் உள்ள உறைவிந்து தயாரிப்பு நிலையத்திற்கான அடிப்படை வசதிகள் பலப்படுத்தப் பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஊட்டிக்கு ரூ. 10.40 இலட்சமும் ஆடுகளுக்குக் குடற்புழு நீக்க மருந்துகளும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில், ரூ.4.36 இலட்சம் செலவில் 3,815 கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் கால்நடை வளர்ச்சிப் பணிகளுக்கு ரூ. 38.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யக் கோரி அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

பழங்குடிவாழ் பகுதிகளான சேலம், நாமக்கல், தர்மபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், திருச்சி, ஆகிய மாவட்டங்களில் உள்ள ஏற்காடு மலை, அருநூத்துமலை, பச்சமலை, கல்ராயன் மலை, கொல்லிமலை, சித்தேரி மலை, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை போன்ற பகுதிகளில் அங்கே வாழ்கின்ற பழங்குடி மக்களுக்கு 50 விழுக்காடு மானியத்தில் கால்நடைகள் தீவிர வளர்ப்புத் திட்டத்தின்கீழ் அவை வழங்கப்படுகின்றன. விழுப்புரத்திலே உள்ள கல்ராயன் மலைப் பகுதியில் மட்டும் 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. இது தவிர, 9 கால்நடை மருந்தகங்கள், 9 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் மற்றும் 3 கிளை நிலையங்களின் மூலம் இப்பகுதியில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு மருத்துவ வசதியும், பசுக்கள், எருமைகளுக்குச் செயற்கை முறைக் கருவூட்டல் பணியும் இலவசமாகச் செய்யப்பட்டு வருகின்றன. 1997-98 ஆம் ஆண்டில், ரூ. 68.99 இலட்சம் செலவில் பழங்குடியின மக்களுக்கு கறவை மாடுகளும், ஆடு அலகுகளும் வாங்கி வழங்கப்பட்டன. அதைப்போலவே, 150 நபர்களுக்கு கறவை மாடுகளும், 240 நபர்களுக்கு ஆடு அலகுகளும் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

1997-98-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களும் அதன் செயலாக்கமும்—

20 கால்நடை மருந்தகங்கள் தரம் உயர்த்தப்பட்டு, மருத்துவ மனையாக்கப்பட்டிருக்கின்றன.

10-09-1997 முதல் 20 கால்நடை மருந்தகங்களும் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டு பணியாற்றி வருகின்றன.

14-10-1997 முதல் 60 புதிய கால்நடை மருந்தககங்களும் கூடுதல் பொறுப்பில் இயங்கி வருகின்றன. இம்மருந்தகங்களில் முழு நேர



மருத்துவர்களை நியமனம் செய்ய தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிடம் தேர்ச்சிப் பட்டியல் எதிர்பார்க்கப்படுகிறது.

புதிதாக 3 கால்நடை மருத்துவமனைகள் பெரு மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. கரூர், திருவாரூர், உதகமண்டலம் ஆகிய 3 மாவட்டத் தலைநகர்களில் செயல்பட்டு வந்த கால்நடை மருத்துவமனைகளைத் தரம் உயர்த்தி தற்பொழுது பெருமருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

பார்வைக் கிளை நிலையங்கள் பற்றி இங்கே சொன்னார்கள். கடந்த ஆண்டு அறிவித்த 2,126 பார்வைக் கிளை நிலையங்களில் 1,567 பார்வைக் கிளை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பார்வைக் கிளை நிலையங்கள் தொடர்ந்து நடப்பு ஆண்டில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணையில் வான்கோழிப் பிரிவு ஏற்படுத்துவதற்காக ரூ.1½ இலட்சத்தில் 100 வான்கோழிகள் வாங்கி இனப் பெருக்கத்திற்காக வளர்க்கப்படுகின்றன என்பதையும், சைதாப்பேட்டை, கால்நடை மருத்துவ வளாகத்தில் உள்ள நாய் வளர்ப்புப் பிரிவினை வலுப்படுத்துவதற்காக ரூ. 5.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 29 உயர் ரக நாய் இனங்கள் வாங்கப்பட்டு, அவை பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓசூர், மாவட்டக் கால்நடைப் பண்ணையில் குதிரை வளர்ப்புப் பிரிவு ஏற்படுத்தி, 5 பெண் குதிரைகளும் 1 ஆண் குதிரையும் ரூ. 5.00 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு அங்கே வளர்க்கப்படுகின்றன.

தீவிர ஆடு வளர்ப்புத் திட்டம் - கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 269 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 10.00 இலட்சம் செலவில் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதைப்போல டேனிடா உதவியுடன் நடைபெறும் திட்டம் - புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்கும் படிப்படியாக ரூ. 27.50 கோடி செலவில் 7 ஆண்டுகளுக்கு விஸ்தரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசிடமிருந்து ரூ. 13.30 இலட்சம் பெறப்பட்டது. மீதமுள்ள ரூ. 67.23 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதைப்போல மருந்தகங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டார்கள். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இத்துறையின் பல்வேறு இடங்களில் பணியாற்றி வரும் 1,185 பணியாளர்களில் 826 தினக்கூலி பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய முடிவெடுக்கப்பட்டு இதுவரை 759 தினக்கூலிப் பணியாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டனர். (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 67 பணியாளர்களின் நியமனம் குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை முதன் முதலாகத் தமிழ்நாட்டில் கொண்டு வந்ததன் அடிப்படையில் எல்லாத் துறைகளிலிருந்தும் மக்கள் சாசனம் வெளியிடப்படுகிறது. அந்த அடிப்படையில் கால்நடைப் பராமரிப்புத் துறையின சார்பாகவும், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் சார்பாகவும் இரண்டு மக்கள் சாசனங்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. கிராமப்புற விவசாயிகள் மற்றும் கால்நடைப் பல்கலைக்கழக மாணவர்கள் அறிந்துகொள்ளக்கூடிய அரிய செய்திகள் அதிலே அடங்கியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். கோழியின வளர்ச்சிக் கழகம் 1973-இல் மாண்புமிகு இன்றைய முதலமைச்சர், தலைவர் கலைஞர் அவர்களால் ரூ. 100 இலட்சம் மூலதனத்துடன் துவக்கப்பட்டது. 1991-ஆம ஆண்டு அதன் மூலதனம ரூ. 200 இலட்சமாக இருந்தது. கடந்த 5 ஆண்டு காலத்தில் அங்கே தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக இருந்த இ.டி. பொன்னுவேல் என்ற சட்டமன்ற உறுப்பினர் ஊழல், முறைகேடுகள் செய்து ரூ. 197 இலட்சத்திற்கு பெருத்த நட்டத்தை உருவாக்கிவிட்டார் அதில் முறையான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை. கொள்முதல் செய்வதற்கு அவை பற்றிய விவரங்கள் முறையாக செய்தித்தாள்களில் விளம்பரம் செய்ததில்லை. கொள்முதல் விற்பனை, தனியாருக்கும், தகுதியில்லாதவருக்கும் அளித்து மற்றும் தகுதியில்லாதவர்களுக்குக் கடன் வழங்கினார்கள். இதனால் கடந்த கால ஆட்சியில் டாப்கோவிற்கு ஏற்பட்ட நட்டம் ரூ. 196.96 இலட்சமாகும்.

திரு. இ.டி. பொன்னுவேல் காலத்தில் 3 தீவனக் கலவை நிலையங்களில் நந்தனம் மற்றும் திருப்பூர் உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டன.



தேவையான தீவனங்களைத் தனியாரிடம் வாங்கலாம் என முடிவு செய்யப்பட்டு, தன்னிச்சையாக முறைகேடாக ஒரு தனியார் நிறுவனத்திற்கு-மெஸர்ஸ் பழனியப்பா ஃபீட்ஸ் -75 கிலோ தீவன மூட்டை அன்றைய மார்க்கெட் விலை—சந்தை விலை ரூ. 600 ஆக இருந்ததை ரூ. 700-க்கு வாங்கலாம் என்று ஆணைகள் கொடுக்கப்பட்டு, அதிலேயும் பெரிய இழப்பை ஏற்படுத்தினார்கள். இம்முறைகேடான ஆணைகளினால் செப்டம்பர் 1995 முதல் ஜூன் 1996 வரையுள்ள காலத்தில் மட்டும் தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்திற்கு சுமார் ரூ. 15 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது.

கோழிக்குஞ்சுகளை Hatchery செய்து அதாவது கோழிக் குஞ்சுகளைப் பொரித்து வழங்குகின்றபோது முன்பணம் பெற்றுக்கொண்டுதான் அந்த நிறுவனங்களுக்கு வழங்கவேண்டும். ஆனால் மெஸர்ஸ் வாங்கிலி ஃபீட்ஸ் என்ற நாமக்கல் பகுதியில் உள்ள நிறுவனத்திற்கு ரூ. 20 இலட்சம் பெறுமானமுள்ள கோழிக் குஞ்சுகள் எந்தவிதமான முன்பணமும் இல்லாமல் கொடுக்கப்பட்டு இதுவரையிலும் வசூலிக்கப்படவில்லை.

பிற்பகல் 1-25

பல்வேறு காலகட்டங்களிலே நிறைய இழப்புகளை ஏற்படுத்தி இன்றையதினம் கோழி வளர்ச்சி நிறுவனம் ஒரு துயரமான நிலைக்கு வந்திருக்கிறது. அதன் பேரில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.டி. பொன்னுவேல்மீது குற்றவியல் நடவடிக்கைத் தொடர, சென்னை குற்றவியல் புலனாய்வுத் துறையிடம் புகார் செய்ய 20-3-1998 அன்று அரசு, ஆணை வழங்கியுள்ளது. அரசு, சென்னை குற்றவியல் வழக்கறிஞரிடம் புகார் கொடுக்கப்பட்டு நடவடிக்கையில் இருக்கிறது. அதைப்போல, டாப்கோவில் பணியாற்றிய சில அலுவலர்கள் ஊழல் செய்து பல இலட்சங்களை ஊழல் செய்து பெருத்த நட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். 1992-93-ஆம் வருடத்தில் டாக்டர் பிரதாப் ஆர். செல்வநாயகம் என்ற துணை மேலாளர், அடையாறு விற்பனை நிலையத்தில் பணிபுரிந்தபொழுது செய்த முறைகேடுகளில் ரூ. 26 இலட்சத்து 86 ஆயிரத்து 29 ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இவர் பணிநீக்கம் செய்யப்பட்டார். மேலும் இவர்மீது குற்றவியல் நடவடிக்கை தொடர குற்ற எண் 1/97-இல் கையாடல் மற்றும் ஏமாற்றுதல் குற்றங்களுக்காக நடவடிக்கை துவக்கப்பட்டிருக்கிறது. திரு. மாசிலாமணி என்ற உதவி மேலாளர், மதுரை விற்பனை நிலையத்தில் பணிபுரிந்தபொழுது செய்த முறைகேடுகளினால் ரூ. 16 இலட்சத்து 83 ஆயிரத்து 580 ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இவரும் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இவர்மீது

மதுரை குற்றவியல் துறை ஆய்வாளர் அவர்களால் குற்ற எண் 1/97இல் 409, 420, 477(அ)-இல் இந்திய குற்றவியல் தண்டனைச் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போல, ஜெயசிங் என்ற முதுநிலை மேலாளர் தலைமை அலுவலக விற்பனைப் பிரிவில் பணிபுரிந்தபொழுது சத்துணவுத் திட்டத்திற்கு முட்டை வழங்கும் விற்பனையில் தனக்கு வேண்டிய நபரின் பெயரில் பொய்யாக, பினாமியாக வியாபாரம் செய்து கழகத்திற்கு ரூ. 12.00 இலட்சம் இழப்பு ஏற்படுத்தினார். இவர் 5-10-1994 அன்று தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்புத் துறையில் விசாரணை முடிந்து துறை நடவடிக்கை எடுக்கப்படும் நேரத்தில் கடந்தகால அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் பணியிலே சேர்க்கப்பட்டார். அன்று பணியில் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து பணியாற்றி வந்தார்; தற்போது, அவர்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு நேற்றையதினம் 19-5-1998 அன்று அவரைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்திருக்கிறோம் என்பதையும், பணிநீக்கம் செய்துவிட்டு தொடர்ந்து குற்றவியல் நடவடிக்கை எடுக்கவிருக்கிறோம் என்பதையும் இந்நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம் தொடர்ந்து இயங்கும் வகையில் கால்நடைத் துறையிலே அதை இணைக்க வேண்டுமென்று, இராகவன் குழுவினரும், இராமநாதன் தலைமையிலே உள்ள குழுவினரும் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே இதைப்பற்றி பேசியிருக்கிறோம். அது பரிசீலிக்கப்பட்டு பணியாளர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், ஆசியாவிலேயே கால்நடை மருத்துவத்திற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது, வாயில்லா ஜீவன்களுக்காகத் தொடங்கப்பட்டது. ஆசியாவிலேயே முதலாவதாக ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகம் இந்தக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பல்கலைக்கழகத்தின் சார்பில் சென்னையில், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தையும், நாமக்கல்லில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தையும், தூத்துக்குடியில் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களையும், கோழி நோயாய்வுக் கூடம் ஒன்றையும், கால்நடைத் தீவனத் தரக்கட்டுப்பாடு ஆய்வகம் ஒன்றையும், கால்நடை நலம் பேணலகம் ஒன்றையும், பதினைந்து பல்கலைக்கழகப் பயிற்சி



மற்றும் ஆராய்ச்சி மையங்களையும், வாத்து ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் ஒன்றையும், இரண்டு வேளாண் அறிவியல் மையங்களையும், ஐந்து மீன்வள ஆராய்ச்சி மையங்களையும், மூன்று உழவர் பயிற்சி மையங்களையும் தன்னகத்தே கொண்டு இப்பல்கலைக்கழகம் ஒரு வலுவான உள்கட்டமைப்பு வசதிகளைத் தமிழகமெங்கும் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள்—இப்பல்கலைக்கழகம், உயர்கல்வி அளிக்கவும், சிறந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் செயல்பட்டு வருகின்றது. மேலும், கால்நடை உற்பத்தியை உயர்த்துவதற்காக, கால்நடைப் பண்ணையாளர்கள், கோழிப் பண்ணையாளர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்களுக்குத் தொழில் நுட்பங்களை வழங்கி, அத்துடன் மக்களுக்கு ஊட்டச் சத்து மிக்க உணவுகளின் உற்பத்தியைப் பெருக்கி, தமிழகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவி செய்து வருகின்றது. 1994 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி பசுமாடுகள் 9.09 மில்லியன், எருமைகள் 2.93 மில்லியன், செம்மறியாடுகள் 5.61 மில்லியன், வெள்ளாடுகள் 5.80 மில்லியன், பன்றிகள் 0.6 மில்லியன் மற்றும் கோழிகள் 37.02 மில்லியனாகவும் இன்றையதினம் இந்தப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளால் இனப்பெருக்கம் ஏற்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால், முட்டை, இறைச்சிகளில் தமிழ்நாடு எந்த அளவிலே இருக்கிறது என்பதை முன்பே குறிப்பிட்டேன். இப்பல்கலைக்கழகத்தின் மூன்று கல்லூரிகளிலும் தற்சமயம் பல்வேறு நிலைகளில் 1,500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். தற்பொழுது 368 மாணவியர்கள் 34 விழுக்காட்டில் இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வருவது ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாணவியரின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவதால் போதிய விடுதி வசதிகள் இப்பல்கலைக்கழகத்தில் உள்ள 3 கல்லூரிகளிலும் மாணவியர்களுக்கு கட்டி முடிக்கப்படவிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு மாநில அரசின் உதவிகள்—

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்காக அறிவித்த இந்தச் சிறப்பான திட்டங்கள் கால்நடைப் பல்கலைக் கழகத்திலும் செயல்பட்டு வருகின்றன. பட்டதாரிகள் இல்லாத குடும்பங் களைச் சார்ந்த பத்து முதல் நிலை மாணவர்களுக்கு கால்நடை மருத்துவ இளநிலைப் பட்டப்படிப்பில் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இதற்காக இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு ஆண்டிற்கு ரூ.16,362 இலவசமாக வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). 1996-97, 1997-98 ஆகிய ஆண்டுகளில் 20 மாணவ மாணவியர்களுக்கு இந்தத் தொகை வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களின் கல்வி உதவித் தொகை. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 950 மாணவ மாணவியர்களுக்கு ரூபாய் இருபது இலட்சம் அளவில் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகின்றது. கால்நடை மற்றும் மீன்வளப் பட்டதாரிகளுக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு, உயர்கல்வி கற்க உதவும் நிறுவனங்கள் பற்றி அறிந்து கொள்ளல் மற்றும் மத்திய மாநில அரசுகளின் போட்டித் தேர்வு ஆகியவற்றை மனதில் கொண்டு இப்பல்கலைக் கழகம் 1993 ஆம் ஆண்டு மாணவர்கள் ஆலோசனை மற்றும் நலக் கவனிப்புக் குழு ஒன்றினை உருவாக்கியது. இக்குழுவில் இதுவரையில் 522 பட்டதாரிகள் பதிவு செய்துள்ளனர். அவர்களிலே 39 பட்டதாரிகள் வேலை வாய்ப்பினைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புற மாணவர்கள் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு முதல் பதினைந்து விழுக்காடு மாணவர்கள் இப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4, 5 மாதங்களுக்கு முன்பு கால்நடை மருத்துவக் கல்லூரியினுடைய மாணவர்கள் கட்டணக் குறைப்பு செய்ய வேண்டுமென்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். வேளாண் பட்டதாரிகளுக்கு 500 ரூபாய்—அது பருவக் கட்டணமாக இருப்பதைப்போல, 1,500 ரூபாயை கால்நடை மருத்துவத்துறைப் பட்டதாரிகளுக்கு இருப்பதைக் குறைக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதை நிதித் துறை மறுத்தும் நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் கனிவான பார்வையோடு வாயில்லா ஜீவன்களுக்கு மருத்துவம் பார்க்கின்ற அந்தப் பட்டதாரிகளுக்கு 500 ரூபாய் குறையுங்கள் என்று உத்தரவிட்டு சிறந்த முடிவை கனிவோடு செயல்படுத்தினார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



மேலும் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், ஜாதியின் பெயரால் இருந்த மாவட்டங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களை நீக்கம் செய்தபோது கால்நடைப் பல்கலைக்கழகத்திற்கு பட்டுக்கோட்டை அழகிரியினுடைய பெயரால் 25 இலட்சம் ரூபாய் நிதியினை, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தில் பயிலும் சிறந்த மாணவர்களுக்கு, கல்லூரிக் கட்டணம், பாடப் புத்தகங்கள் மற்றும் விடுதிக் கட்டணம் ஆகியவற்றிற்கு வழங்குவதற்காக, வழங்கி இருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல பல்கலைக்கழகம், உயர்மட்ட அளவில் பல்வேறு ஆராய்ச்சி திட்டங்களைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது; கால்நடைப் பண்ணையாளர்கள், மீன் வளர்ப்போர், தொழில் முனைவோர் உட்பட சமூகத்திலுள்ள அனைவரின் பயன்பாட்டிற்கேற்ற ஆராய்ச்சிகளை இப்பல்கலைக்கழகம் திறம்படச் செயல்படுத்தி வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவ வசதிகள். உலகமே போற்றும் பல்கலைக்கழகமாகத் திகழும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திலுள்ள மருத்துவ வசதிகளைக் கண்டு வியக்காதவர்கள் இல்லை என்று கூறினால் அது மிகையாகாது. மேலும், இப்பல்கலைக்கழகத்தில் கால்நடை மருத்துவ வசதிகள் மற்றும் நோய்ப் பதிவேடுகள் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன. மேலும், இதன்மூலம் உடனுக்குடன் விரைவில் நோயாய்வு செய்யவும், இண்டர்நெட் மூலம் மருத்துவச் சிகிச்சை முறைகளைப் பற்றி உலகெங்கும் தெரியப்படுத்திக் கொள்ளவும் இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை நலக்கல்வி மையம். கோழிகளைத் தாக்கும் ஐ.பி.டி. என்ற நோய்க்குத் தடுப்பூசி மருந்து கண்டுபிடித்து வெளியிடப் பட்டது. இறைச்சிக் கோழிகளைத் தாக்கும் இதயக் கல்லீரல் வீக்க நோய்க்கு தடுப்பூசி மருந்து தயாரிக்கப்பட்டு, அம்மருந்து என்னால் வெளியிடப்பட்டது என்பதை நான் இங்கு பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கோழிக் காலரா நோய்க்கு, இம்மையம் தடுப்பூசி மருந்து தயாரித்து வெளியிட்டுள்ளது. இராணிக்கெட் நோய்க்கு, நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிக்க, oil adjuvant கண்டுபிடித்து வெளியிடப்பட்டுள்ளது. கோழி இரத்தச் சோகை நோய் இருப்பதை முதன் முதலில் இம்மையம் கண்டுபிடித்து வெளியிட்டது. ஆடுகளைத் தாக்கும் பி.பி.ஆர். என்ற நோய்க்கு நோய்த் தடுப்பு மருந்து கண்டுபிடிக்க இந்திய அரசு ரூ. 2.71 கோடி நிதியுதவி அளித்துள்ளது. லெப்டோஸ் பைரோசிஸ் மற்றும்

சப்பை நோய்க்குத் தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு அது வெளியிடத் தயார் நிலையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலைச் செயல்பாடு. இப் பல்கலைக்கழகம், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ. 2,945 இலட்சத்திற்கு மேல் ரூ. 4,657 இலட்சம் அளவிற்குப் பயன்படுத்தி 158 விழுக்காடாகத் தனது செயல்பாட்டில் பெரும் சாதனை படைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஒன்பதாவது திட்டக் காலத்திற்காக 1997-2002 வரை உத்தேச மதிப்பீடாக ரூ. 8,194 இலட்சம் தேவைப்படும் என உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்ற தேசியக்கவி பாரதியாரின் கனவை நடைமுறையில் கொண்டுவரும் முயற்சியிலான பணிகள், உலக வங்கி நிதியுதவி பெற்ற வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கலைப்புல மேம்பாடு, ஆய்வுக் கூடங்களை வலுப்படுத்துதல், நூலகங்களை வலுப்படுத்துதல், பல்கலைக்கழகத்தைக் கணிப்பொறிமயமாக்குதல் மற்றும் உள்கூட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்றவையாகும். இதற்காக, ஐந்தாண்டுக் கால அளவில் ரூ. 2,389 இலட்சங்கள் செலவிடப்படவுள்ளன. 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டின்போது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்கும் ஆய்வுப் பயணத்தை மேற்கொள்ளவும் 14 தொழில்நுட்ப வல்லுநர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-35*

எட்டு புதிய திட்டங்கள் ரூ. 67.90 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையுடன் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் 9-ஆவது திட்டக் காலத்தில் முதல் ஆண்டு உத்தேச மதிப்பீடு ரூ. 1,227.60 இலட்சம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். காமன் வெல்த் நாடுகளின் கால்நடை மருத்துவக் கருத்தரங்கில் இந்தப் பல்கலைக்கழகம் சார்பில் கலந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அறிவிப்புகளைச் செய்ய இருக்கிறேன். சென்ற ஆண்டு 60 புதிய மருந்தகங்களைத் தந்தீர்கள். இந்த ஆண்டு 30 மருந்தகங்களைத் தான் பகுதி-2 திட்டத்தில் அனுமதித்திருக்கிறீர்கள் என்று இன்றையதினம் காலையில் நான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில்



இந்தக் கோரிக்கையை வைத்தேன். கூடுதலாக 10 மருந்தகங்களை இப்போது தந்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருசில மருந்தகங்களை மட்டும் அறிவிக்கிறேன். பின்னர், முழுமையாகப் பரிசீலனை செய்து அறிவிக்கலாம் என்று கருதுகிறேன். திருவாரூர் மாவட்டம் பட்டவர்த்தியிலும், மாண்புமிகு திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூரிலும், திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தஞ்சை மாவட்டம் நாட்டுச்சாலையிலும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தமராக்கியிலும், காளையார்கோவில் சிலுக்கப்பட்டியிலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவாஜி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அருங்குளத்திலும், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வெங்கட்டபுரம் சின்னையாம்பாளையத்திலும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஊத்துமலையிலும், தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. பெரியசாமி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மாப்பிள்ளைஊரணியிலும், விருதுநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க கன்னிச்சேரிபுதூரிலும், திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் ஒன்றியப் பெருந்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்கமிட்டூரிலும், மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எழுமாத்தூரிலும், கரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி வாசுகி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பெரியகாளிபாளையத்திலும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க உத்தமசோழபுரத்திலும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க துறிச்சிப்பட்டியிலும், மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கருப்பாயி ஊரணியிலும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுதற்கு இணங்க தாடிக்காரன்கோணத்திலும், மேலமத்தூரிலும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குழுளூரிலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சேதுநாதன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பாதிராப்புலியூரிலும், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காட்டுமன்னார்கோவில்

வில்வகுளத்திலும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குஞ்சலம்பட்டியிலும், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வெள்ளித்திருப்பூரிலும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க விழுப்புரம் மாவட்டம் மாம்பழப்பட்டிலும், அமைக்கப்படும். அடுத்து இன்னும் ஏறக்குறைய 20-க்கும் மேற்பட்ட மாண்புமிகு உறுப்பினர்களின் பெயர்களை வைத்து இருக்கிறேன். நிச்சயமாகப் பரிசீலனை செய்து அறிவிப்பேன் என்று சொல்லி, முழுமையாக அறிவிக்க நேரம் இல்லாத காரணத்தால் இத்துடன் இதை முடித்துக்கொள்கிறேன்.

அதுபோல 40 கால்நடை மருந்தகங்களை இந்த ஆண்டு அறிவித்து இருக்கிறேன். அதைப்போல 20 கால்நடை மருந்தகங்களை 20 மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தி அறிவித்து இருக்கிறேன்.

தமிழகத்தில் செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளை ஆட்டம்மை நோயிலிருந்து பாதுகாக்க செம்மறியாடு அம்மைத் திசு வளர்ச்சித் தடுப்பூசி உற்பத்தியினை இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் அதிகரிப்பதற்காக 20 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் ஆடுகளுக்கு வரக்கூடிய துள்ளுமாரி நோய் தடுப்பூசியின் தரத்தை 'டாக்ஸாயிடு' வகைத் தடுப்பூசி மூலம் உயர்த்துவதற்காக இந்த ஆண்டு 6 இலட்சம் ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் தற்போதுள்ள 29 மாவட்டங்களில் 15 மாவட்டங்களில் இயங்கி வருகின்றன இந்த ஆண்டு ரூ. 9.83 இலட்சம் மதிப்பில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு விழுப்புரத்திலே தொடங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே திரவ நைட்ரஜன் உற்பத்தி நிலையங்களில் பெரிய அளவு திரவ நைட்ரஜன் கொள்கலன்கள் அமைப்பதற்காக 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 20.00 இலட்சம் இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆடு வளர்ப்பில் 50 விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்து அவர்கள் மூலமாகத் தரமான 500 கிடாக்குட்டிகளை வளர்த்து இனப்



பெருக்கத்திற்காக விநியோகம் செய்ததன் மூலம், தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் ஆடு வளர்ப்பினால் பெறக்கூடிய வருவாயை நன்கு அறிந்து இப்போது ஆடு வளர்ப்பில் அதிகமான அக்கறை காட்டி வருகிறார்கள். இவர்களுக்குக், கிடா வளர்ப்பதில் போதிய பயிற்சி இல்லாததால், ஆட்டுக்குட்டிகளின் எடை மற்றும் அவற்றின் இறைச்சி உற்பத்தி திறனைப் பெருக்குவதற்காக இந்த ஆண்டு 500 விவசாயிகளுக்கு அவர்களின் ஆடுகளைத் தரம் உயர்த்தும்பொருட்டு, ஒரு விவசாயிக்கு ஒரு கிடா வீதம் விநியோகம் செய்யப்பட இருக்கிறது. அதற்காக, 3.55 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

கோழி வளர்ச்சி மேம்பாட்டுக் கழகத்தின் சார்பாக, நாமக்கல்லிலே இறைச்சி, முட்டை மற்றும் இறைச்சிக் கோழியினைப் பதப்படுத்த, நாமக்கல்லில் ரூ. 9 இலட்சம் செலவில் குளிர் பதனத் தளவாடம் ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு அறிவியலில் 7 புதிய ஆய்வுத் திட்டங்களும், மீன் வள அறிவியலில் 2 புதிய ஆய்வுத் திட்டங்களுமாக மொத்தம் 9 புதிய ஆய்வுத் திட்டங்கள், 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 70.6 இலட்சம் செலவில், நடப்பாண்டில் நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சினைத் தருணத்தை ஒருங்கிணைத்தல். செயற்கை முறைக் கருத்தரிப்புத் திட்டத்தை மேலும் செம்மையாகச் செயல்படுத்த, ஒரு பகுதியிலுள்ள பசுக்கள், எருமைகளின் சினைத் தருணத்தை ஒருங்கிணைத்து, குறிப்பிட்ட நேரத்தில் கருவூட்டும் தொழில்நுட்பப் பரிமாற்றத் திட்டம் செயல்பட இந்த ஆண்டு ரூ. 2 இலட்சம் அதற்கு அனுமதிக்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோழிகளைத் தாக்கும் ஐ.பி.டி. நோயைக் கண்டறிய கள நிலைக் கருவி உருவாக்க ரூ. 5.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதைப்போல, மடி வீக்க நோயைக் கண்டறிதல். கறவைப் பசுக்கள் மற்றும் எருமைகளில் தெளிவான நோய்க்குறியற்ற மடிவீக்க நோய்ப் பாதிப்பால் பால் உற்பத்தி குறைந்து மிகுந்த பொருளாதாரச் சேதம் ஏற்படுகிறது. பாதிக்கப்பட்ட பால்மடிகளும் பயனற்றவையாகின்றன. மடி வீக்க நோயை உடனுக்குடனும், செம்மையாகவும் கண்டறிய, விரிவாக்கப்பட்ட பல்நிலை டிஎன்.ஏ —RPAD ரேகைப் பதிவு முறை உருவாக்கம் குறித்து ரூபாய் 2½ இலட்சம் செலவில் ஆய்வுகள்

மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதையும், கல்லூரியில் கூடுதல் கட்டடங்களுக்காக நிதி ரூ. 10 இலட்சம் அளவில் ஒதுக்கப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன் தொழிலில் மீனள உயரிய தொழில் நுட்பவியல் மையம் நிறுவுவதற்காக தூத்துக்குடியிலுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மீனள உயரிய தொழில் நுட்பவியல் மையம் ஒன்று மீன்வளத் தொழில் முனைவோரின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண ரூ. 16.5 இலட்சம் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயரிய தொழில்நுட்பவியல் ஆய்வுக்கூடம் அமைப்பதற்காக ரூ. 11 இலட்சமும் மீன் பதப்படுத்தும் தொழில் நுட்பவியல் துறையின் நுண்ணுயிரியல் பிரிவை நவீனமயமாக்குவதற்காக ரூ. 12.65 இலட்சமும் ஒதுக்கப்படுகிறது. நெருப்புக் கோழி ஆய்வுப் பிரிவு என்பதைப் புதிதாக இந்த ஆண்டு துவக்குகிறோம். நெருப்புக் கோழி என்பது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட இருக்கிறது. அந்த முட்டையிலிருந்து குஞ்சு வெளி வந்து ஒரு நாள் குஞ்சினுடைய விலை 26 ஆயிரம் ரூபாய், 3 மீட்டர் 4 மீட்டர் உயரம் வளரக் கூடிய அந்த நெருப்புக் கோழி. அந்த நெருப்புக் கோழியினுடைய கால் தசை நாண்களும், கருவிழிப்படலமும், மனித உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் நிலவும் தட்ப வெப்ப நிலையில் நெருப்புக் கோழி வளர்ப்பதற்கான பராமரிப்பு முறைகளை வரையறை செய்ய முன்னோடித் திட்டம் ஒன்றைக் காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் ரூபாய் 10 இலட்சம் செலவில செயல்படுத்த இருக்கிறோம் என்பதையும் மிகப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, சென்ற ஆண்டு ஏற்பட்ட நீல நாக்கு நோய்களுக்கு மருந்தே இல்லை என்று இதுவரை இருந்த நிலையை மாற்றி இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள், பல்கலைக்கழகத்தின் மூலமாக நீல நாக்கு நோய்க்குத் தடுப்பு ஊசி கண்டு பிடிப்பதற்காக 7-1/2 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் மீண்டும் மீண்டும் நெல் உற்பத்தி செய்யப்படுவதால் நிலத்தில் தாது உப்புக்கள் குறைந்து கொண்டே வருகிறது. கால்நடைகளுக்குத் தாது உப்புக்கள் இல்லாததால் அங்கே கருவூட்டல் செய்கின்றபோது ஊசி போடப்படுகின்ற



கால்நடைகளுக்கு சினைத் தன்மைகள் நிற்க மாட்டேன் என்கிறது. எனவே, இதை ஈடு கட்டுகிற வகையில் ஒரு மாவட்டத்திற்கு 1,000 கிடேரிக் கன்றுகள் என்ற வகையில் 3 மாவட்டங்களுக்கும் 3 ஆயிரம் பசு கிடேரிக் கன்றுகளுக்கு, ஒவ்வொன்றுக்கும் 200 ரூபாய் அடிப்படையில் தாது உப்புகளை இலவசமாக வழங்க, தஞ்சாவூர், நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு 6 இலட்சம் ரூபாய் வழங்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அதைப்போல, தீவிர ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் திருச்சி, கரூர் மாவட்டத்தில் கிடாக்கள் வாங்கவும், குடற் புழு நீக்கவும் மருத்துவப் பணிகளுக்காகவும் 8.70 இலட்சம் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(பிற்பகல் 1-45

கடைசியாக கால்நடை வளர்ச்சி பற்றி ஒரு சின்ன கவிதையைச் சொல்லி முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

"ஆடுகளும் மாடுகளும் அடர்ந்த கரு எருமையினம்
அன்பொழுகும் நன்றிதரும் அழகான நாயினங்கள்
வீடுகளில் நாம் வளர்க்கும் கோழிகளும் பூனைகளும்
வெட்டவெளி சுற்றி வரும் வென்பன்றிக் கூட்டங்கள்
காடுகளில் வாழ்ந்தாலும் கலப்பினங்கள் கொண்டிங்கு
கூடுகளில் வாழ்ந்து வரும் குறுமுயலாம் கூட்டங்கள்
காடை கௌதாரி கறியாகும் வான்கோழி
காராம் பசுக்கூட்டம் குடங்குடமாய் பால்சுரக்கும்
சாடை புரிந்துவரும் சாதுப்பிராணி இவை
சத்தான உணவுதரும் சொத்தாகும் கால்நடைகள்
பாவம் கால்நடைகள்;
கால்நடைகள் வாயில்லா ஐந்தறிவு உயிரினங்கள்
காலமெல்லாம் மனிதனுக்கு உறுபயனைத் தருபவைகள்
புல்தின்று அசைபோட்டுப் புழுதியிலும் சேற்றினிலும்
புரண்டு படுத்திருந்து பொல்லாங்கு விட்டொழித்துப்
பால் முட்டை இறைச்சிகளைப் பாங்காக அளிப்பவைகள்
பாசத்துடன் வளர்க்கும் பண்பிற் குரியவரை
வாலாட்டி நேசிக்கும் நன்றிக்கு இலக்கணங்கள்

[புலவர் பூ.ம. செங்குட்டுவன்] [1998 மே 20

வதைத்தாலும் சிதைத்தாலும் வாயில்லாப் பிராணி அவை
வேளாண்மை செய்துவரும் விவசாயப் பெருமக்கள்
வீடுகளைச் சார்ந்திருக்கும் கேடில் விழுச் செல்வம்
தாளாண்மை கொண்டவர்க்கு பால் முட்டை இறைச்சிகளை
தந்து வளம் சேர்க்கும் தங்கம் பொருள் ஆக்கும்
காழ்ப்புணர்ச்சி கொள்ளாமல் கண்டபடி பேசாமல்
கடைசிவரை நமக்காகத் தம்முயிரைத் தருபவைகள்
(மேசையைத் தட்டும் ஒலி)
வீழ்ந்து மடிந்திடினும் வேறுவகைத் துரோகங்கள்
காட்டிக் கொடுக்காது கழுத்தறுப்புச் செய்யாது
(மேசையைத் தட்டும் ஒலி)
சாதிமதம் பாராது சச்சரவு செய்யாது
சண்டையிட்டுத் தமக்குள்ளே குண்டுகளை வெடிக்காது
(மேசையைத் தட்டும் ஒலி)
பாதியிலே ஆட்சிகளைப் பறித்திடவும் எண்ணாது
(மேசையைத் தட்டும் ஒலி)
பதவி வெறிகொண்டு ஊளையிட்டு நிற்காது
(மேசையைத் தட்டும் ஒலி)
மதமென்னும் மதுநீரை மாந்தக் குடித்துவிட்டு
சமூக ஒற்றுமையில் சதம்போடத் தெரியாமல்
தட்டுத் தடுமாறி தள்ளாடி நிற்காது
உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு வன்முறைகள் கட்டவிழ்த்து
கீழ்மக்கள் துணையோடு கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டு
சட்டம் ஒழுங்குகளைச் சதிராட நினைக்காது பாவம் கால்நடைகள்."

என்று சொல்லி, வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப்பெற்று இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன கேட்டீர்கள்? நீங்கள் எழுந்து நின்று மைக்கைப் பிடிக்கிறீர்களே? (குறுக்கீடு) கேட்டீர்களா



1998 மே 20] [பேரவைத் துணைத் தலைவர்]

என்னை? எல்லோருக்கும் ஓர் அறிவிப்பு. ஒழுங்குப் பிரச்சினை மற்றும் தகவல் கோரல் அவையெல்லாம் முறையாக இருக்குமானால் அனுமதிக்கப்படும். அவ்வப்போது எழுந்து நின்றால் அனுமதிக்க முடியாது. இப்போது என்ன சொல்லுங்கள்?

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விபத்துப்படி என்று நகர்ப்புறத்திலே பணியாற்றும் டாக்டர்களுக்கு 100 ரூபாய் வழங்கப்படுகிறது. அதேபோல, கிராமங்களில் பணியாற்றும் டாக்டர்களுக்கு அந்த 100 ரூபாய் விபத்துப்படி அளிப்பதைப் பற்றி இந்தச் செயற் குறிப்பிலே குறிப்பிடப்படவில்லை. அதேபோல அறிவிக்கப்படவில்லை. அதேபோல, எடப்பாடி நகரிலே கால்நடை மருத்துவமனை இடிந்து எதற்கும் பயன் இல்லாமல் 10 ஆண்டுகளாக வெளியிலே மருத்துவம் பார்க்கப்படுகிறது. அதற்குப் புதிய மருத்துவமனை கட்டித் தரப்படும் என்று 1996-லே இந்த மாமன்றத்திலே அறிவிக்கப்பட்டது. அதற்குப் புதிய மருத்துவமனை கட்டப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆபத்து ஈட்டுப்படி என்ற அளவில் கால்நடை ஆய்வாளர்களுக்கும், உதவி மருத்துவர்களுக்கும் ஒரு கணிசமான அளவு தற்போது வழங்கப்படுகிறது. மீதியிருக்கின்றவர்களுக்கு வழங்குவதற்காக கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அதுபற்றி கோரிக்கை வைத்திருக்கிறோம். நல்ல கனிவான முடிவு எடுப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மருந்தகக் கட்டடங்கள் இன்றையதினம் பரவலாக்கப்பட்ட திட்டத்திலேதான் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த எடப்பாடி கட்டடத்தை, அங்கு இருக்கின்ற மாவட்டத்தினுடைய கால்நடை இணை இயக்குநர் மூலமாக, பரவலாக்கப்பட்ட திட்டத்திலே கட்டி, வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையின்போது டாப்கோ நிர்வாக இயக்குநர் செய்த பல்வேறு முறைகேடுகள் பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். அமைச்சர் பதிலுரையிலே கடந்த ஆட்சியிலே வாரியத்தின் தலைவராக இருந்த பொன்னுவேல் அவர்கள் மீதும் அவரைச் சார்ந்த அதிகாரிகள் மீதும் எடுத்த நடவடிக்கை பற்றி குறிப்பிட்டார்கள். அவர்கள் வெறும்

முட்டையைத்தான் முழுங்கியிருக்கிறார்கள். முழு கோழியையும் முழுங்கியவர்கள் பலர் இன்னும் இருக்கிறார்கள். அவர்கள்மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது முழுமையாக; கவனமாகப் பரிசீலிக்கப்படுகிறது. தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் ஒன்றியம் வடுகம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்கப்படும் என்று சென்ற மானியக் கோரிக்கையிலே முன்னாள் கால்நடை அமைச்சர் அவர்கள் இங்கே உறுதி கூறினார்கள். நான் பலமுறை இன்றைய கால்நடை துறை அமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துக் கூறியிருக்கிறேன். அந்தக் கால்நடை மருந்தகம் வடுகம் கிராமத்திலே ஆரம்பிக்கப்படுமா? தற்போது கொடுத்துள்ள 40 கால்நடை மருந்தகங்கள் பட்டியலில் இந்த இடம் இடம்பெற்று இருக்கிறதா? இடம்பெறவில்லையென்றால் இந்த அரசு இந்த ஆண்டு அதைச் சேர்க்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பல்வேறு கோரிக்கைகளைக் கோருகின்றார்கள். மருத்துவமனை, மருந்தகங்கள் தொடங்கப்பட வேண்டுமென்று கோருகிறார்கள். அதைப்போல மாண்புமிகு சுந்தரம் அவர்களும் கோருகிறார்கள். நிச்சயமாக அவையெல்லாம் கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு, மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

பிற்பகல் *1-50*

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

[1998 மே 20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை. திரு க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. எஸ்.என் பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி.மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்:

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.



1998 மே 20]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. லி. அய்யலுசாமி, இருக்கையில் இல்லை. திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 147,87,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள் விடைகள் நேரம் குறித்து விதி 32-ஐத் தளர்த்துவது குறித்த தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணிநேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 21-5-1998 (வியாழக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (21-5-1998) வியாழக்கிழமை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-51 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

(ஏதுமில்லை)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

211. மானியக் கோரிக்கை எண் 22-கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்)

212. கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1998-99 (தமிழ், ஆங்கிலம்)

213. கால்நடை பராமரிப்புத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்)

214. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல், பல்கலைக்கழகத்தின் மக்கள் சாசனம் மற்றும் கையேடு, (தமிழ், ஆங்கிலம்)

215. கால்நடை செல்வங்களின் வளர்ச்சியில் தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையின் பங்கு என்ற புத்தகம், (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு

(67 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## கால்நடை பராமரிப்புத் துறை குறித்த கொள்கை விளக்கம் 1998-99

### கோரிக்கை எண் 22

### பாகம் - 1

### பொது விவரம்

தமிழ்நாட்டில் வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகிய இரண்டு துறைகளும் பழங்காலந்தொட்டே கிராமப்புற மக்களின் பொருளாதார வாழ்க்கைத்தர முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவைகளாக இருந்து வந்தன. கால்நடை வளர்ப்பு வேளாண்மையின் ஒரு அங்கமாகவே இருந்திருக்கிறது. பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப மக்களுக்கு இன்றியமையாதனவையான கால்நடை பொருட்களையும் வழங்குவதுடன் கிராமப்புற மக்களுக்கு சுயதொழிலாக அமைவதுடன் வருவாயைத் தரக்கூடிய அளவுக்கு இத்துறையின் நவீன, தொழில்நுட்பப் பணிகளின் வளர்ச்சி உதவியுள்ளதால் இத்துறை தனித்தன்மை பெற்றுள்ளது. இத்துறை, மற்ற துறைகளுடன் ஒப்பிடும்போது குறைந்த முதலீட்டில் கிராமப்புறங்களில் வசிக்கும் 67 சதவீத மக்களுக்கு சுயவேலைவாய்ப்பு அளிப்பதுடன், வருவாயைப் பெற வழிவகை செய்கிறது. வேளாண்மைத் துறைக்குத் தேவையான கால்நடைகளிலிருந்து பெற்றுவரும் உதவியை குறைத்து மதிப்பிட இயலாது.

நாட்டின் மொத்த கால்நடைகளில் 89 சதவீதம் கால்நடைகளை கிராமப்புறங்களிலேயே பரவலாக வளர்த்து வருகின்றனர். கால்நடைகளை வளர்த்து வரும் விவசாயிகள் சிறுசிறு பகுதியினராகவும், மிகச் சாதாரண வறுமையில் உள்ளவர்களாகவே அநேகம் பேர் காணப்படுகின்றனர். இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் நவீன, தொழில் நுட்ப அறிவியல் பூர்வமான, வணிக ரீதியான கோழிப்பண்ணைகளை வைத்திருக்கும் பண்ணையாளர்களைத் தவிர மற்றவர்கள் ஏழை எளியவர்களாகவே உள்ளனர்.

வேளாண் குடிமக்கள் கால்நடை பொருட்களை சேமித்து வைத்தலில் பழங்கால முறைகளை கைவிட்டு, தற்போது தற்கால முறைகளுக்கு மாறியுள்ளனர். இம்முறை தற்போது வியாபார ரீதியாக மாற்றம் கண்டுள்ளது.

[1998 மே 20

பழங்காலந்தொட்டே கிராமப்புற மக்கள், தங்களின் குடும்ப உழைப்பினைக் கொண்டும் வேளாண்மை மூலம் கிடைக்கும் தீவனப் பொருட்களைக் கொண்டும் கால்நடைகளை வளர்த்து தங்களின் குடும்பத்திற்குத் தேவையான உணவு, எரிபொருள் மற்றும் பண்ணைக்குத் தேவையான கால்நடை உழைப்பை எளிதில் பெற்று வருகின்றனர்.

இந்நிலையினால் கிராமப்புற பொருளாதார வளர்ச்சி மேலும் மேம்பாடு அடைந்து கால்நடை வளர்ப்பில் மக்கள் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். வணிக அமைப்பில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் காரணமாகவும், வசதியின் காரணமாகவும், கால்நடைகளின் மூலம் உற்பத்தியாகும் பொருட்கள், கூட்டுறவு மற்றும் தனியார் அளிக்கும் உதவியின் மூலமாகவும், கிராமப்புற மக்கள் அதிக அளவிலான கால்நடை செல்வங்கள் வளர்ப்பில் பெரிதும் ஈடுபட்டு வருகின்றனர்.

கால்நடைகளிலிருந்து பெறப்படும் உணவுப் பொருட்களை நம் நாட்டில் உணவாக உட்கொண்டு வருகின்றனர். தோல் போன்ற பொருட்கள் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு அன்னியச் செலாவணி ஈட்டித்தருகிறது. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள துறைமுகம் மூலமாக ரூ.1,083 கோடி மதிப்புள்ள தோல் மற்றும் தோல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது அகில இந்திய ஏற்றுமதி அளவில் 46.80 சதவீதம் ஆகும்.

மனித உணவில் கால்நடைகளிலிருந்து பெறக்கூடிய சத்துமிக்க உணவான பால், இறைச்சி மற்றும் முட்டை ஆகியவற்றின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. கால்நடை பராமரிப்புத் துறையின் பணியின் வாயிலாக மேற்கண்ட கால்நடை பொருட்களின் உற்பத்தியானது பாராட்டத்தக்க வகையில் பெருமளவில் வளர்ச்சி அடைந்துள்ளது.

1980-81 ஆம் ஆண்டு நாட்டின் பால் உற்பத்தி 17.38 இலட்சம் டன்களாக இருந்தது. 1996-97 ஆம் ஆண்டு 39.76 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது. ஒரு நாளுக்கு ஒரு நபருக்குத் தேவைப்படும் பாலின் அளவு 1980-81 ஆம் ஆண்டில் 99 கிராமாக இருந்தது. 1996-97 ஆம் ஆண்டில் 182 கிராமாக உயர்ந்துள்ளது என்பது பரிந்துரைக்கப்பட்ட அளவான 220 கிராமுக்கு மிக அருகில் உள்ளதாகும்.

தமிழ்நாட்டில் முட்டை உற்பத்தியானது நாட்டின் இரண்டாவது இடத்தில் உள்ளது என்பதிலிருந்து முட்டை உற்பத்தித் திறன் மேம்பாடு அடைந்துள்ளது என்பது புலனாகிறது. முட்டை உற்பத்தி மதிப்பீடு



1998 மே 20]

1980-81 ஆம் ஆண்டு 8,340 இலட்சம் எண்ணிக்கையாக இருந்தது. 1996-97 ஆம் ஆண்டு 30,410 இலட்சம் எண்ணிக்கையாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஒரு நபருக்கு ஒரு வருடத்துக்கு கிடைக்கும் முட்டையின் அளவு 1980-81 ஆம் ஆண்டில் 17 எண்ணிக்கையாக இருந்தது. 1996-97 ஆம் ஆண்டில் 54 எண்ணிக்கையாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் 67 சதவீதம் அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிக் கூடங்களிலும் 33 சதவீதம் அங்கீகரிக்கப்படாத இறைச்சிக்கூடங்களிலும் இறைச்சி உற்பத்திக்காக கால்நடைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிக் கூடங்களில் இறைச்சி உற்பத்தி 1980-81 ஆம் ஆண்டில் 240.88 இலட்சம் கிலோவாக இருந்தது. 1996-97 ஆம் ஆண்டில் 406.67 இலட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது.

## பாகம் - 2

## கால்நடை மற்றும் கோழியின அபிவிருத்தி

### 1. கால்நடை அபிவிருத்தி

#### அ. கால்நடை எண்ணிக்கை

இத்துறையின் தலையாய குறிக்கோளானது, குறைந்த எண்ணிக்கையில் உள்ள கால்நடைகளிலிருந்து அதிக அளவிலான பால் உற்பத்தியை பெறுவது, அதாவது தனி மாட்டின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும், பால் உற்பத்தி குறைவான கால்நடைகளை உயர் இரக கலப்பினங்களுடன் இனவிருத்தி செய்வதும், அவைகளை நோய்களிலிருந்து காப்பது குறித்தும் விவசாயிகளுக்கு தகுந்த முறையில் நன்கு பயிற்றுவித்தும், இனவிருத்திக்கு உதவாத காளைகளை ஆண்மை நீக்கம் செய்வதும் ஆகும்.

துறையில் மேற்கொண்டுள்ள இச்சீரிய முறைகளினால் கால்நடை பெருக்கத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குறைந்த அளவு பால் உற்பத்தித் திறனே உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையே துறைக்கு சவாலாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் மொத்த கால்நடைகளின் எண்ணிக்கையில், பசுவினம் 35.42 சதவீதம், எருமையினம் 11.41 சதவீதம், ஆவினத்தில் அயலினம் 1.16 சதவீதம், கலப்பினம் 19.47 சதவீதம், உள்நாட்டினம் 14.40 சதவீதம் மற்றும் நாட்டினம் 64.97 சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில் மொத்த கால்நடைகளில், 21.43 சதவீதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் சமூகத்தினரால் வளர்க்கப்பட்டு வருகின்றன.

88.65 சதவீதம் கால்நடைகள் கிராமப்புறங்களிலும், 11.35 சதவீதம் நகர்ப்புறங்களிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன. எருமையினங்களில், 1.94 சதவீதம் முர்ரா இனமாகவும், 15.59 சதவீதம் முர்ரா தரம் உயர்த்தப்பட்ட எருமையினமாகவும் மற்றும் 82.47 சதவீதம் நாட்டினமாகும். மொத்த எருமையினங்களில் 19 சதவீதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் சமூகத்தினரால் வளர்க்கப்பட்டு வருகின்றன. 82.57 சதவீத எருமையினங்கள் கிராமப் புறங்களிலும், 15.43 சதவீதம் நகர்ப்புறங்களிலும் வளர்க்கப்படுகின்றன.

## ஆ. இனவிருத்தி

முதல் திட்டக் காலத்தில் இத்துறையில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட கால்நடை உற்பத்தியைப் பெருக்கிய சிறந்தத் திட்டமான கேந்திர கிராம திட்டமும், அதனைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட திட்டமான கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்களின் பலனாக சிறந்த கால்நடைகளின் உற்பத்தியும், பால் உற்பத்திப் பெருக்கமும் பசுந்தீவனங்கள் தேவைக்கும் நாட்டில் கிடைக்கக்கூடிய அளவிற்கும் ஏற்றவகையில் பால் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டது.

மேற்கண்டுள்ள இரண்டு திட்டங்களின் செயலாக்கத்தின் பலனை கருத்தில் கொண்டு அவைகளை ஒருங்கிணைப்பு செய்து 20 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

மாநிலத்தின் இனவிருத்திக் கொள்கை பின்வருமாறு:

(1) உள் நாட்டின பசுக்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகிய இனங்கள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில், தேர்ந்தெடுத்த முறையில் இனவிருத்தி செய்தல்.

(2) நாட்டினப் பசுக்களை அதிக அளவில் பால் தரக்கூடிய அயலின ஜெர்சி மற்றும் ப்ரிசியன் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனவிருத்தி செய்து தரம் உயர்த்துதல்.

(3) கிராமப்புறங்களில் உள்ள நாட்டின எருமைகளை முர்ரா வகை பொலிகாளைகளின் விந்தினைக், கொண்டு இனவிருத்தி செய்து தரம் உயர்த்துதல்.

(4) கலப்பின பசுக்களை, கலப்பின பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனவிருத்தி செய்தல்.

தவிர பொதுக் கொள்கையாக இனவிருத்திக்காக கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற எல்லா சமவெளிப் பகுதிகளில் ஜெர்சி இன





பொலிகாளைகளும், எல்லா மலைப் பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் ப்ரிசியன் இனக் காளைகளும் பயன்படுத்தப்படுகின்றன. தரம் வாய்ந்ததும் சத்துமிக்கதுமான தீவனங்கள் கிடைப்பதை கருத்தில் கொண்டு கறவை மாடுகளுக்கு சமவெளிப்பகுதிகளில் விந்தின் உபயோகம் அமைகிறது. தற்போது தேவைக்கேற்ப நகரப் பகுதிகளில் ப்ரிசியன் காளைகளின் விந்து உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 3,572 செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களால் கருவூட்டலுக்கு உகந்த பசுவினங்கள் மற்றும் எருமையினங்கள் 42 சதவீதத்திற்கு இத்துறையால் செயற்கைமுறை கருவூட்டல் செய்யப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில், கூடுதலாக 2,126 செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்கள் ஏற்கெனவே உள்ள கிளை நிலையங்களின் பார்வை நிலையங்களாக செயல்படுகிறது.

கீழ்க்கண்ட நான்கு இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

1. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
2. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)
3. ஓசூர் (தருமபுரி மாவட்டம்)
4. உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)

283 பொலிகாளைகள், ஜெர்சி, ஹோல்ஸ்டைன், ப்ரிசியன், கலப்பினக் காளைகள், ஹலிக்கார், காங்கேயம், சிந்தி மற்றும் முர்ரா இனங்கள் மேற்கண்டுள்ள நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இத்துறையில் 8 திரவ நைட்ரஜன் உற்பத்தி ஆலைகள் மூலம் திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் திரவ நைட்ரஜன் உறைவிந்து உறைய வைக்கவும் சேமித்து வைக்கவும் பயன்படுகிறது.

உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் முறையே எல்லா கருவூட்டல் நிலையங்களுக்கும் விநியோகம் செய்திட 12 உறைவிந்து சேமிப்பு வங்கிகள் கீழ்க்கண்ட இடங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

1. வேலூர்
2. கோயம்புத்தூர்
3. மதுரை

4. திருச்சி
5. தருமபுரி
6. திருநெல்வேலி
7. தஞ்சாவூர்
8. கடலூர்
9. சிவகங்கை
10. சென்னை
11. திண்டுக்கல்
12. சேலம்

1997-98 ஆண்டில் டிசம்பர் '1997 முடிய 14.48 இலட்சம் அளவு டோஸ் உறைவிந்தும் 1.71 இலட்சம் லிட்டர்கள் திரவ நைட்ரஜனும், உறைவிந்து தயாரிப்பு மற்றும் திரவ நைட்ரஜன் ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## இ. தீவன அபிவிருத்தி

உலர் தீவனம், பசுந்தீவனம் மற்றும் அடர்தீவனம் ஆகிய மூன்றும் முக்கிய தீவன வகைகளாகும். அதில் அடர்தீவனம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகமான பங்கை வகிக்கிறது. தற்போது கால்நடைகளுக்கு அடர்தீவனம் அளிப்பது 15 முதல் 20 சதவீதமாகவே உள்ளது. தானிய வகைகள் மற்றும் வாணிக பயிர்கள் போன்ற உலர் தீவன வகைகள் அளிப்பது பிரதானமாக உள்ளது. உலர் தீவனம் போதுமானதாக இல்லாததால், ஓரளவிற்கு அருகில் உள்ள மாநிலங்களிலிருந்து பெறப்படுகிறது.

மாநிலத்தில் பசுந்தீவனம் மிகக் குறைவானதும், பருவ காலங்களில் மட்டுமே கிடைக்கக் கூடியதும் ஆகும்.

ஒரு சதுர கிலோமீட்டரில் 204 கால்நடை எண்ணிக்கைக் கொண்ட நமது மாநிலத்தில், மேய்ச்சல் நிலத்தின் பரப்பளவு 1,21,769 ஹெக்டேர் ஆகும். இது மொத்த பரப்பளவில் 1 சதவீதம் ஆகும். வேகமாக வளர்ச்சியடைந்து வரும் நகர்ப்புறத்தினாலும், தொழில் மயமாக்கலினாலும் கால்நடைகளை வளர்ப்போர் தங்களுடைய கால்நடைகளை மேய்ச்சலுக்குப் பயன்படுத்துவதில் சிரமம் உள்ளது என்பது தெளிவாகிறது.



## வைக்கோலின் தரத்தை மேம்படுத்துதல்

வைக்கோலின் தரத்தை மேம்படுத்த, யூரியாவினைக் கொண்டு ஊட்டமேற்றுதல் குறித்து ரூ.7.5 இலட்சம் செலவில் செயல்முறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தினால் தேனி, விருதுநகர், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களைச் சேர்ந்த 1,500 விவசாயிகள் 1997-98 ஆம் ஆண்டு பயன்பெற்றனர்.

கலப்பின கால்நடைகள் உற்பத்தி இத்துறையில் ஏற்படுத்தப்பட்ட பின் அதற்கு ஏற்ற வரையில் தீவனப் பெருக்கம் வளர்ச்சியடைந்தால் தான் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் முன்னேற்றம் காண முடியும்.

இந்தக் குறிக்கோளை செயலாக்கும் திட்டமாக தீவனப் பெருக்கத் திட்டங்களை மாநிலமெங்கிலும் மேற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தீவனப பயிர் பெருக்கத்திற்கு, வருடம் முழுவதும் கிடைக்கக்கூடிய வகையிலும், சிறிதளவே கவனம் செலுத்தக்கூடிய அளவிலான தீவனப் பயிர்கள் பல வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

பெருவாரியான வேளாண் குடிமக்கள் தீவனப் பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளமையால், மாநிலத்தில் தீவனப் பயிர் சாகுபடி அளவு உயர்ந்து, தீவனப்பயிர் உற்பத்தி பெருகியுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த வகை தீவனப்புல் மற்றும் பசும்புல் வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, அதனால் கால்நடைகளுக்குச் சிறந்த சத்துமிக்கதுமான தீவனங்களை அளிப்பதன் பலனாக பால் உற்பத்திக்கு ஆகும் அதிகமான செலவுகள் தவிர்க்கப்பட்டு விவசாயிகளுக்குப் பேருதவி புரிந்து வருகிறது.

கீழ்க்கண்ட இடங்களில் தீவனப்பயிர் விதை உற்பத்தி நிலையங்கள் இயங்குகின்றன:

1. படப்பை (காஞ்சிபுரம் மாவட்டம்)
2. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
3. செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)
4. ஓசூர் (தருமபுரி மாவட்டம்)
5 சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்)
6. திருநெல்வேலி
7. புதுக்கோட்டை

[1998 மே 20

உலக வங்கி நிதிவுதவித் திட்டத்தின்கீழ், தீவனப்பயிர் அபிவிருத்தி ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

அ. தீவனப் பயிர் செயல்விளக்கப் பாத்தி, விவசாயிகள் நிலத்தில் ஏற்படுத்துதல்.

ஆ. வறட்சியைத் தாங்கக்கூடிய புல் விதைகள் சாலையோரங்களில் விதைத்தல்.

இ. பசும்புல் தீவனப் பயிர்கள் சாகுபடி செய்யமுடியாத நிலையங்களிலும், மேய்ச்சல் நிலையங்களிலும் ஏற்படுத்துதல்.

ஈ. பசும்புல் தீவனப் பயிர்களை தோட்டப் பயிர்களுக்கிடையே சாகுபடி செய்தல்.

உ. தீவனப்பயிர் அபிவிருத்திக்குத் தேவையான உள்ளீடுகளான விதைகள். புல்கரணைகள் மற்றும் மரக்கன்றுகளை இலவசமாக அளித்தல்.

இத்துறையினால், இலவசமாக, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மினிகிட்ஸ் வழங்கப்படுகிறது.

வறட்சியைத் தாங்கக்கூடிய புல்வகைகள் பெருக்குவதற்கு 587 கிலோ புல் தீவன விதைகளை ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. மேலும் 596 மெட்ரிக் டன் தீவன விதைகள் உள்நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது.

1997-98 ஆம் ஆண்டில் டிசம்பர் 1997 முடிய 309.68 இலட்சம் புல்கரணைகள், 25.15 இலட்சம் மரக்கன்றுகள். 392.24 மெட்ரிக் டன் விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### ஈ. திட்டங்கள்

### 1. உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய கால்நடை மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் மிகப்பெரிய அளவில் உலக வங்கி நிதி உதவியுடன் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டு முதல் ரூ. 46.62 கோடி செலவில் ஏழு ஆண்டுகளுக்கு இத்திட்டம் மாநிலம் முழுமையும் செயல்பட்டு வருகிறது.



1998 மே 20]

இத்திட்டத்தின் அடிப்படையான குறிக்கோள், இந்த மாநிலத்திற்கு ஏற்ற கால்நடை உற்பத்தி முறைகளை மேம்படுத்துதல் ஆகும். இத்திட்டம் கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குதல் மற்றும் பால் உற்பத்தித் தொழிலை அரசு தகுந்த முறையில் மேற்பார்வையிடவும், உதவி அளிக்கவும் கீழ்க்கண்டவாறு தகுந்த வழிவகை செய்கிறது.

1. பால் உற்பத்திக்குத் தேவையான கறவை மாடுகளின் உற்பத்தியைப் பெருக்க தேவையான வாய்ப்பு வளங்களையும் உரிய செயல் திறமைகளையும் அளித்தல்.

2. தீவன உணவு உற்பத்தியைப் பெருக்க கையாளப்படும் முறைகளை மேம்பாடு அடையச் செய்தல், அதிகரித்தல் மற்றும் சேமித்து வைத்தல்.

3. தகுந்த காலங்களில் கொள்ளை நோய்களைக் கண்டறிந்து, அதனை பொருளாதார ரீதியில், நோய் தடுக்கும் முறைகளை மேற்கொள்ளுமாறு கால்நடை நலப்பணிகளை மாற்றியமைத்தல்.

4. இத்துறையின் விரிவாக்கப் பணிப் பிரிவினை பலப்படுத்தி அதன் மூலம் விவசாயிகளுக்குத் திட்டப் பயன்களை விளக்கி கற்பித்தல்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்திலிருந்து இத்துறையில் பல இடங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### (1) உறைவிந்து உற்பத்தி செயற்கைமுறை இனவிருத்திப் பணியில் முன்னேற்றம் மற்றும் கால்நடை பெருக்கத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டக் காலத்தில் 987 நிலையங்களில் திரவ விந்து மூலமாகவும், 1,783 நிலையங்களில் உறைவிந்து மூலமாகவும் கருவூட்டல் நடைபெற்று வந்தது. இத்திட்டத்தின் மூலம் திரவ நைட்ரஜன் குடுவைகள், செயற்கைமுறை கருவூட்டல் பணிக்கு கால்நடைகளை கட்டுப்படுத்தத் தேவையான கிட்டிகளையும் மற்றும் கருவூட்டல் பணிக்குத் தேவையான உபகரணங்களையும் வழங்கியதால், திரவவிந்து மூலம் செயற்கைமுறை கருவூட்டல் பணி நிறுத்தப்பட்டு அனைத்து நிலையங்களிலும் உறைவிந்து மூலம் செயற்கைமுறை கருவூட்டல் பணி 1993 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஈச்சங்கோட்டை

ஓசூர், திருநெல்வேலி மற்றும் உதகமண்டலம் ஆகிய உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் உறைவிந்து உற்பத்தியைப் பெருக்க, வலுப்படுத்தத் தேவையான கூடுதல் சாதனங்கள் வழங்கப்பட்டன.

ஓசூர் மற்றும் ஈச்சங்கோட்டை உறைவிந்து தயாரிப்பு நிலையங்களுக்கு, விந்து தயாரிப்புக்கும் மற்றும் விந்தின் திறன் மதிப்பீட்டை அறியவும், தேவையான 'டிஜிடல் ஃபோட்டோ மீட்டர்' வாங்கப்பட்டது.

உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்து செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்கு முறையே சேமிக்கவும், உபயோகிக்கவும் 12 உறைவிந்து சேமிப்பு வங்கிகள் நிறுவப்பட்டன.

உயரின, நல்ல வம்சாவழி வந்த பொலிகாளைகள், பசு மற்றும் எருமைகள் தரமான பொலிகாளைகளைக் கொண்டு விந்து சேகரிப்புக்கும், உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் கீழ்கண்டுள்ள இனங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| கலப்பின பொலிகாளை | 256 |
| கலப்பின பசுக்கள் | 510 |
| டென்மார்க்கிலிருந்து தருவிக்கப்பட்ட கருவுற்ற ஜெர்ஸி கிடேரிகள் | 120 |
| முர்ரா பொலிகாளைகள் | 56 |
| முர்ரா இன பெண் எருமைகள் | 150 |

உறைவிந்து உற்பத்தி நிலையங்களிலிருந்து, திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்துக் குச்சிகள் செயற்கைமுறை நிலையங்களுக்கு வழங்க தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு போக்குவரத்தினை தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஈச்சங்கோட்டை, ஒரத்தநாடு ஆகிய மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் புதிதாக மாட்டுக் கொட்டகைகள் கட்டப்பட்டன. மேலும், ஈச்சங்கோட்டை, ஒரத்தநாடு, ஓசூர், அபிஷேகப்பட்டி ஆகிய மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் உள்ள மாட்டுக் கொட்டகைகளில் சீரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கால்நடை விரிவாக்க அலுவலர்களின் பணியினை சிறப்பாக பயன்படுத்தி 383 நடமாடும் கால்நடை மருந்தகங்களுக்குத் தேவையான பல வகையான உபகரணங்கள் இத்திட்டம் மூலம் வழங்கப்பட்டன. மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் திரவ நைட்ரஜன், உறைவிந்து





மற்றும் அதன் சீரான விநியோகம் குறித்து கண்காணிக்க ஒரு சிறப்பு நிர்வாகப் பிரிவு இயக்குநர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மூன்று கணிப்பொறி வசதிகள் முறையே ஈச்சங்கோட்டை, ஓசூர், அபிஷேகப்பட்டி ஆகிய கால்நடைப் பண்ணைகளில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. கால்நடை பராமரிப்புத் துறையில் பல்வேறு துறைகளில், 720 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

30 ஜெர்ஸி இனம் மற்றும் 10 ப்ரிசியன் இனக் காளைகள் குஜராத் மாநிலத்தில் உள்ள ஆனந்த், தேசிய பால்வள கழகத்தின் வாயிலாக விரைவில் இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டு திரவ நைட்ரஜன் ஆலைகள் விரைவில் தோற்றுவிக்கப்படவுள்ளன.

## (2) தீவன அபிவிருத்திப் பணிக்குத் தேவையான உள்ளிருப்பு வசதிகள் பெருக்குதல்

ஈச்சங்கோட்டை, ஒரத்தநாடு ஆகிய மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் உள்ள பசுந்தீவன உற்பத்திக்குத் தேவையான உள்ளிருப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டன. 20 மாவட்டங்களில் பசுந்தீவன உற்பத்தியை தீவிரப்படுத்த மாவட்ட பசுந்தீவனக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. பசுந்தீவன உள்ளீடுகளான பசுந்தீவன விதைகள், பசுந்தீவன பயறுவகை விதைகள் மற்றும் பசுந்தீவன புல்கரணைகள் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

பசுந்தீவன உற்பத்திக்கான நீண்டகால திட்டம் வேளாண்மைத் துறை மற்றும் வனத்துறை மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தரமான வகைகளான பசுந்தீவன துணுக்குகள், பசுந்தீவன பயறுவகைகள் மற்றும் பசுந்தீவன மரக்கன்றுகளின் விதைகள் ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்து, இம்மாநிலத்தில் அவைகள் பயிரிடப்படுகிறது. 2.40 இலட்சம் பசுந்தீவனப் பயறுவகை விதைப்பைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 713 களப் பணியாளர்களுக்கு பசுந்தீவன உற்பத்திக்கான விரிவாக்கப் பணிக்காக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## (3) தொற்றுநோய் தொடர்பான நோய் ஆய்வுப் பிரிவினை வலுப்படுத்துதல்

மண்டல அளவிலான நோய் ஆய்வுக்கூடம் மற்றும் கால்நடை தொற்றுநோய் பிரிவுகள் வேலூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும்

[1998 மே 20

திருநெல்வேலி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. கால்நடை நோய் புலானாய்வுப் பிரிவினை வலுப்படுத்த நோய் ஆய்வுக்கூடம், அதற்கான உபகரணங்கள் மற்றும் மின் இயக்கக் கருவிகள் (ஜெனரேட்டர்கள்) வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

### (4) துறையின் விரிவாக்கப்பணிப் பிரிவினை வலுப்படுத்துதல்

. கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகளில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டி, வி.சி.ஆர். மற்றும் ஒளிபரப்புச் சாதனங்கள் மூலம் விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கால்நடைப் பராமரிப்பு பணிகள் சம்பந்தமாக 11 சிறிய திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு, அவைகள் மக்கள் தொடர்பு முகாம்கள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் திரையிடப்பட்டு வருகின்றன. துண்டு பிரசுரங்கள், புத்தகங்கள் மற்றும் துறை சம்பந்தமான விரிவாக்கப் பணிகள் குறித்து அச்சடிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

### (5) பன்னாட்டு அறிஞர்களின் ஆலோசனை

பன்னாட்டு அறிஞர்களின் தொழில்நுட்ப மற்றும் அறிவியல்பூர்வமான ஆலோசனைகளை பெறும்பொருட்டு ஆஸ்திரேலியா நாட்டின் விக்டோரியா பன்னாட்டு திட்ட கழக வாயிலாக கால்நடைப் பெருக்கம், உட்கரு மாற்றம், தொழில் நுட்பம், பசுந்தீவன உற்பத்தி மற்றும் பசுந்தீவன விதை உற்பத்தி, நோய் புலனாய்வு மற்றும் கால்நடைகளுக்கான தொற்று நோய் ஆகியவைக் குறித்து 193 அலுவலர்களுக்கு அறிஞர்கள் மூலமாக பயிற்சி அளிக்கப்பட்டது.

### 2. உலக வங்கி நிதியுதவியுடன் கால்நடை பராமரிப்பில் விவசாய மனிதவள மேம்பாடு

மனிதவள மேம்பாடானது மற்ற ஏனைய மேம்பாடுகளுக்கு தலையானதாகும். எந்த துறை நிலையங்கள் மற்றும் நிறுவனம் ஆனாலும், அந்தத் துறையில் பணிபுரியும் பணியாளர்களின் அறிவுத்திறனை நம்பியே உள்ளது. எவ்வளவு பணியாளர்கள் பணிபுரிகிறார்கள் என்பதைப் பொறுத்து அல்லது இந்நோக்கத்தினை கருத்தில் கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை, விவசாய மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தை, 1995-96-ஆம் ஆண்டு முதல், உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.366.29 இலட்சம் செலவில் ஐந்து ஆண்டு கால அளவில் செயல்படுத்தி வருகிறது.



1998 மே 20]

### இத்திட்டத்தின் நோக்கங்கள்

உள்ளிருப்புக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துவது மற்றும் இப்பணியில் உள்ள பணியாளர்களின் பணியை பயிற்சிகள் அளித்து அதன் மூலம் மேம்பாடு அடையச் செய்வது.

பால் மற்றும் முட்டை இவைகளின் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடன், பணியாளர்களை கால்நடை பெருக்கம், நோய் கண்டறிதல் மற்றும் கட்டுப்பாடு மற்றும் பசுந்தீவனம் உற்பத்தி ஆகியவைகளை தற்கால அறிவியல்பூர்வமான முறையில் பயிற்சி அளித்தல்.

### இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன

அ. ஈச்சங்கோட்டை, ஓசூர் மற்றும் அபிஷேகப்பட்டி ஆகிய இடங்களில் ஏற்கனவே உள்ள பயிற்சி நிலையங்களை வலுப்படுத்துதல்.

ஆ. மாநில அளவிலான பயிற்சி நிலையத்தை ஓசூரில் தோற்றுவித்தல்.

இ. பயிற்சிக்குத் தேவையான மதிப்பீட்டுப் பிரிவினை இயக்குநரகத்தில் தோற்றுவித்தல்.

### இத்திட்ட செயலாக்கத்தினால் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்

1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.89.16 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது. இவற்றில் 11.00 இலட்சம் பல்வேறு இனங்களுக்காக செலவு செய்யப்பட்டது. மீதமுள்ள தொகையில் பயிற்சி நிலையத் தேவைக்கான கட்டுமானப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, கட்டடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

### 3. டேனிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்

டேனிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ப்புத் திட்டம், 01-08-1990 முதல் புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல், குன்னாண்டார்கோயில், விராலிமலை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.5.46 கோடி செலவில், முதல் கட்டமாக ஆறு வருடக் கால அளவில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் செயலாக்கமானது தம்பதிகள் தொடர் பணியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கால்நடை பராமரிப்பு நடைமுறைகள், தீவன அபிவிருத்தி, விரிவாக்க தொழில்நுட்பம்

ஆகியவைகளில் பயிற்றுவிக்கப்பட்டனர். இத்தொடர் தம்பதியர், இத்திட்டத்தின் முன்னோடிகள் ஆவர். மற்றவர்கள் இத்திட்டத்தின் செயல்பாட்டின் குறியீட்டினைப் பின்பற்றக்கூடிய விவசாயிகள், விவசாயிகள் சங்கம் மூலமாகவும், அரசு சாரா நிறுவனங்கள் மூலமாகவும், கால்நடை மருந்தகங்களின் மூலமாகவும் இத்திட்டச் செயல்பாட்டின் திறனையும், பயனையும் அடைகிறார்கள். இத்திட்டத்தின் தொடர் தம்பதியினர்கள் கிராம மக்களைப் பயிற்றுவிக்கிறார்கள். பயிற்றுவிக்கும் முறையானது தினசரி வாழ்க்கையின் ஒரு பகுதியாகவும், பெரிய அளவிலான உள்ளீடுகளைக் கொண்டதாகவும் இருக்காது.

இப்பயிற்சியின் விளைவாக கோழி இனங்களின் உற்பத்தி வருடத்திற்கு ரூ.3,000 வீதம் உயர்ந்துள்ளது. கோழிகளின் இறப்பு கணிசமாகக் குறைந்துள்ளது. முட்டை இடும் திறன் கூடியுள்ளது. வெள்ளாடுகளின் எடை கூடியும், இறப்பு சதவீதம் 5 சதவீதத்திற்குக் குறைவாகவும் காணப்பட்டுள்ளது. திட்டப் பகுதிகளில் குட்டிகள் ஈனும் திறன் அதிகரித்து இரண்டிலிருந்து மூன்றாகப் பெருகியுள்ளது.

மேற்கண்டுள்ள பலன்கள் முதற்கட்ட திட்டப்பணியின் செயலாக்கத்தினால் ஏற்பட்டுள்ளது. இத்திட்டச் செயலாக்கத்தின் பலனை வெகுவாகப் பாராட்டிய டேனிடா இரண்டாவது கட்டமாக மேலும் 4 மாவட்டங்களுக்கு நீடிப்பு செய்துள்ளது.

இரண்டாவது கட்ட திட்டமானது 46 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி 01-02-1997 முதல் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ஏழு ஆண்டு கால அளவில் ரூ.27.50 கோடிகள் செலவில் மொத்தம் 2,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 20 இலட்சம் வேளாண்குடி மக்கள் பயன்பெறும் பொருட்டு நிறைவேற்றப்பட உள்ளது.

## உ. கால்நடைப் பண்ணைகள்

கால்நடைப் பண்ணைகளில், தரம் உயர்ந்த, தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியல் ரீதியான மற்றும் அயலினக் காளைகளைக் கொண்டு குறிப்பிட்ட வகையைச் சார்ந்த காளைகள் உற்பத்தி செய்யப்பட்டு, அவைகள் மக்களுக்குச் செயல்விளக்கப் பண்ணைகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கால்நடைப் பண்ணைகள் விவசாயிகளுக்கு உறைவிந்து மூலம் கருவூட்டல் பயிற்சியை அளித்து இத்துறைக்குப் பயன் அளிக்கும் வகையில்,



அவர்களைப் பயிற்றுவிக்கிறது. மாநிலத்தில் தற்போது 7 கால்நடைப் பண்ணைகளும், ஒரு அயலின கால்நடைப் பெருக்குப் பண்ணையும் உள்ளது. அவைகள் பின்வருமாறு:—

1. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர் (தர்மபுரி மாவட்டம்)
2. மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை.
3. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்)
4. கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்)
5. மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)
6. மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)
7. மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)
8. அயலின கால்நடைப் பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)

ஒரத்தநாடு மற்றும் அபிஷேகப்பட்டி மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் முர்ரா வகை எருமையினம் மற்றும் உதகமண்டலம் பண்ணையில் ப்ரிசியன் பசுவினமும், ஈச்சங்கோட்டைப் பண்ணையில் ஜெர்சி பசுவின வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறந்த தரம் வாய்ந்த உயரினக் கால்நடைகளை வளர்ப்பதிலும், சிறந்த உள்நாட்டினங்களைக் காப்பதில் ஆர்வம் கொள்ள உம்பளாச்சேரி இனம் கொருக்கை பண்ணையிலும், சிந்தி மற்றும் காங்கேயம் இனங்கள் ஓசூர் பண்ணையிலும் வளர்க்கப்பட்டு வருகிறது.

சிந்தி இன வம்சாவழி ஆய்வு, ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும், முர்ரா எருமை இன வம்சாவழி ஆய்வு ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

களப் பணியில் வம்சாவழி ஆய்வு தொடர்பான பணி ஒன்று ஓசூர், வம்சாவழி ஆய்வுத் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கலப்பினக் காளைகளின் உற்பத்திப் பிரிவு ஒன்று, ஓசூர், செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை பண்ணைகளில் செயல்பட்டு வருகின்றது. உள்நாட்டு இனங்களில் கலப்பினக் காளைகளின் தரம் உயர்த்தப்படுவதால்,

நோய் எதிர்ப்பு சக்தியும் உற்பத்தித் திறனும் அதிகரிக்கப்படுகிறது. உட்கரு மாற்றம் தொழில் நுட்பம் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உட்கரு மாற்ற தொழில் நுட்பப் பிரிவு அபலின கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டையிலும், மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூரிலும் இயங்கி வருகிறது. இதன் வாயிலாக கன்றுகள் வெற்றிகரமாக பெறப்பட்டு உள்ளன.

## 2. செம்மறி ஆடு அபிவிருத்தி

செம்மறியாடு வளர்ப்பு இம்மாநிலத்தில், ஒரு முக்கிய உபதொழிலாகவும், உபரி வருமானம் கிடைக்கக்கூடிய தொழிலாகவும், பால் பண்ணைத் தொழிலுக்கு அடுத்ததாகக் கருதப்படுகிறது. இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் போன்ற பகுதிகள் ஆடு வளர்ப்புத் தொழிலுக்கு உகந்த தட்ப வெட்ப நிலை கொண்டதாக உள்ளது. ஆரம்ப காலங்களில் ஆடு வளர்ப்பில் நிலமற்ற ஏழை வேளாண் தொழிலாளர்கள் பெரிதும் ஈடுபட்டனர். அதன்மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு குறைந்தளவு வருமானத்தை ஈட்ட அவர்களுக்குப் பேருதவியாக இருந்தது.

இறைச்சி மற்றும் தோல் மூலம் கிடைக்கும் வருமானம் தவிர ஆட்டினங்களை வயல்வெளியில் பந்தை பராமரித்தலால் சிறிது வருமானம் கிடைக்கிறது. பெருமளவு ஆடுகள் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளிலிருந்து மற்ற பகுதிகளுக்கு ஓட்டிச் செல்லப்படுகின்றன. மேலும் அவைகள் நல்ல சீதோஷ்ண நிலை ஏற்படும் காலங்களில் திரும்ப தனது சொந்த இருப்பிடத்திற்கு ஓட்டிச் செல்லப்படும். இக்காலங்களில் ஆடுகள் விற்பனைகள் ஏற்படுவதுண்டு. *1994* ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி செம்மறியாடுகளின் எண்ணிக்கை *56,12,242* ஆகும். இது மாநிலத்தின் கால்நடைகளில் *21.86* சதவீதம் ஆகும்.

பொதுவாக செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினங்களுக்கும் அதிக அளவில் பாதிக்கக்கூடிய நோய்களான வெக்கை நோய், ஆட்டம்மை, துள்ளுமாரி, அடைப்பான் போன்ற நோய்களுக்கு உரிய காலத்தில் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டு தடுப்பூசி போட்டு, நோய்களிலிருந்து காப்பாற்றப்படுகிறது. சமீப காலத்தில் விருதுநகர், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நீல நாக்கு நோயினால் ஆடுகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாயின.



நீல நாக்கு நோயானது பெரிதும் ஆடுகளையே தாக்குகின்றது. இவ்வகை நோய் 'கூலிகோயிட்ஸ்' என்ற ஒரு வகை கொசுவின் மூலமாகப் பரவுகிறது. இந்நோய் கண்ட ஆடுகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டு நாக்குகளிலும், தாடைகளிலும் பல்ஈறுகளிலும் கொப்பளங்கள் மற்றும் கண்களில் நீர்வடிதல் போன்றவை ஏற்படுகின்றன. இந்நோய் கண்ட ஆடுகளின் நாக்கு நீலமாக மாறிவிடுகிறது. இரத்த நாளங்களில் உள்ள இரத்தம் தடைபடுவதினால் இவ்வாறு ஏற்படுகிறது. எனவே இந்நோய் 'நீல நாக்கு' என்று அழைக்கப்படுகிறது.

பரவலாகத் தொடர்ந்து பெய்துள்ள அடைமழையின் காரணமாகவும், வறட்சிக்கு இலக்காகும் மாவட்டங்களில் இம்மழை பெரும் விளைவினை ஏற்படுத்தியமையால், நோயைப் பரப்பக்கூடிய கொசுக்களின் உற்பத்தி பெருகியதாலும், விவசாயிகளின் அறியாமையும், இந்நோயின் அறிகுறி மற்றும் அதன் தாக்குதல் பற்றி விவசாயிகள் அறியாததும், இந்நோய் கொடிய விளைவினை ஏற்படுத்தி, விவசாயிகளின் ஆடுகளுக்கு பெரும் சேதமும், அழிவையும் ஏற்படுத்தக் காரணங்களாகும்.

இந்நோயினைக் கட்டுப்படுத்த இத்துறையினால் பலவகையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நோயினால் பாதிக்கப்பட்ட ஆட்டினங்களுக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள குழுக்களின் மூலமும், மற்ற மாவட்டங்களிலிருந்து மருந்துப் பொருட்கள், வாகனங்கள் முதலியவைகள் தருவிக்கப்பட்டு இச்சிகிச்சைக்கு ஈடுபடுத்தப்பட்டது. அவசரத் தேவையைக் கருதி மருந்துப் பொருட்கள் வாங்கப்பட்டன. வேளாண் குடிமக்களுக்கு இது தொடர்பான நோயின் தன்மை அறிதல், நோய்வாய்ப்பட்ட ஆடுகளைக் கையாளும் முறை மற்றும் நோய்வாய்ப்பட்ட ஆடுகளிலிருந்து நல்ல ஆரோக்கியமாக உள்ள ஆடுகளுக்கு இந்நோய் கொசுக்களின் மூலம் பரவாமல் அவைகளைப் பாதுகாக்கும் முறையும் கற்றுத் தரப்பட்டது. இத்துறையானது அரசு சார்பில்லா நிறுவன ஊழியர்கள், வருவாய்த் துறை ஊழியர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் பொதுச் சுகாதார பணியாளர்களின் ஒத்துழைப்பையும் நல்கியுள்ளது.

இந்த நீல நாக்கு நோய் தாக்கி இறந்துபோன ஆடுகளின் சொந்தக்காரரான ஏழை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ரூ.1.05 கோடி முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1998 மே 20

## அ. ஆட்டினப் பண்ணைகள்:

ஆட்டினப் பண்ணைகள் கீழ்க்கண்டுள்ள இடங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன:

1. சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்)
2. சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்)
3. முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்)

ஓசூர், புதுக்கோட்டை, அபிஷேகப்பட்டி மற்றும் செட்டிநாடு ஆகிய பண்ணைகளில் தனியே ஆட்டுப்பிரிவுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கு உள்நாட்டு இனங்களான சென்னை சிவப்பு, மேச்சேரி, இராமநாதபுரம் வெள்ளை, கீழக்கரிசல், மாண்டியா மற்றும் வேம்பூர் போன்ற இனங்கள் வளர்க்கப்பட்டு, தேர்ந்த இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்டுக்கிடாக்களும், பெட்டைகளும் தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் உள்ள விவசாயிகளுக்கு நாட்டின ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு வழங்கப்படுகின்றன.

## ஆ. திட்டங்கள்

இத்துறை 19-05-1989 முதல் 13-06-1997 முடிய கீழ்க்கண்ட மாவட்டங்களில் ஐரோப்பிய குழும நிதியுதவியுடன் கூடிய ஆடு வளர்ப்புத் திட்டம் ரூ. 13.67 கோடி செலவில் (ஆடு வளர்ப்பு) செயல்படுத்தப்பட்டது:

1. காஞ்சிபுரம்
2. திருவள்ளூர்
3. வேலூர்
4. திருவண்ணாமலை
5. கடலூர்
6. விழுப்புரம்
7. சேலம்
8. நாமக்கல்
9. தருமபுரி



1998 மே 20]

இத்திட்டச் செயல்பாட்டுக்குப் பிறகு, ஆட்டின வளர்ச்சியில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி வளர்ச்சியடைந்துள்ளது:

| வ.எண் | அளவுகள் | முன்பு | பின்பு |
|---|---|---|---|
| 1. | பிறப்பு எடை | 2 கிலோ | 2.5 கிலோ |
| 2. | தாயின் எடை | 8.0 கிலோ | 10.0 கிலோ |
| 3. | வயது வந்த குட்டி எடை | 22.0 கிலோ | 26.1 கிலோ |
| 4. | இனவிருத்திக்கு உகந்த காலம் | 12-13 மாதங்கள் | 12-13 மாதங்கள் |
| 5. | முதல் குட்டி ஈனும் காலம் | 24-26 மாதங்கள் | 20 மாதங்கள் |
| 6. | இடைப்பட்ட காலம் | 12 மாதங்கள் | 10 மாதங்கள் |
| 7. | குட்டிகள் இறப்பு சதவீதம் | 12 சதவீதம் | 4 சதவீதம் |
| 8. | வயது வந்தவை இறப்பு சதவீதம் | 5 சதவீதம் | 2 சதவீதம் |
| 9. | குட்டிகள் ஈனும் சதவீதம் | 60 சதவீதம் | 93 சதவீதம் |
| 10. | இனப்பெருக்க விகிதம் | 65 சதவீதம் | 94 சதவீதம் |
| 11. | குட்டிகள் ஈனும் திறன் | 90 சதவீதம் | 100 சதவீதம் |
| 12. | ஆடு சினைக்கு வரும் திறன் | 70 சதவீதம் | 82 சதவீதம் |
| 13. | இறைச்சிகளின் தரம் | | |
| | கிடா ஆடு | 8.0 கிலோ | 10.0 கிலோ |
| | பெண் ஆடு | 9.0 கிலோ | 10.9 கிலோ |

## (இ) செம்மறியாடுகளுக்குத் தீவிர மருத்துவ நலப் பணி:

செம்மறியாடுகளின் உடல் கூறுகளில் ஏற்படும் இடையூறுகளினால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஏனெனில், செம்மறியாடுகள் மேய்ச்சலை நம்பியே இருப்பதால், இவ்வாறு ஏற்படுகிறது. அதன் காரணமாக, உடல் எடை குறைவும், இனவிருத்திக்கு காலம் கடந்தும் அதிக அளவிலான இறப்பு சதவீதமும், குறைவான இனப்பெருக்க சதவீதமும் ஏற்படுகிறது. மேலும், வேறு பல நோய்களும் ஏற்படக் காரணமாகிறது. இவ்வகையினால் இறைச்சி தன்மையும் மற்றும் இறைச்சியின் எடை குறைவும் ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு பொருளாதார இழப்பு ஏற்படாவண்ணம், ஏழை விவசாயிகள் பராமரிக்கும் செம்மறியாடுகளுக்கு இத்துறையின் மூலம் தீவிர நலம் பேணும்

முறையின்கீழ், காலமுறைப்படி 1982-83 முதற்கொண்டு முறையாக குடற்புழு நீக்கம், சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செய்யப்படுகிறது. இத்திட்டச் செயலாக்கத்திற்கு 1997-98இல் ரூ. 40.00 இலட்சம் செலவில் பலவகையான குடற்புழு நீக்க மருந்துகள் உபயோகப்படுத்தப்பட்டன.

### (ஈ) ஈரோடு மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களில் தீவிர ஆடு வளர்ப்புத் திட்டம்

மேற்கண்ட இரண்டு மாவட்டங்களில் உள்ள நாட்டின ஆடுகளின் தரம் உயர்த்தும் பொருட்டு ஊராட்சி ஒன்றியம் ஒன்றுக்கு 1 தரமான கிடா ஆடு வீதம் 39 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளடக்கிய 269 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆடுகளுக்கு தீவிர குடற்புழு நீக்கப் பணி காலமுறைப்படி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிக்காக அரசால் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## 3. வெள்ளாட்டுப் பெருக்கம்

உள்நாட்டு வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்த ஜமுனாபாரி வெள்ளாடுகள் ஆட்டுப்பண்ணை சின்னசேலத்திலும், கால்நடைப் பண்ணை, செட்டிநாடு, கொருக்கை மற்றும் சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்திலும் இனப்பெருக்கத்திற்காக வளர்க்கப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தெல்லிச்சேரி இன வெள்ளாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. பால் மற்றும் இறைச்சித் திறனை அதிகரிக்கும் நோக்குடன் உள்நாட்டினங்களைத் தரம் உயர்த்த இவ்வகையான ஆடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தென்மாவட்ட உள்நாட்டினங்களான கொடி ஆடு, கன்னி ஆடு ஆகியவை ஜமுனாபாரி, தெல்லிச்சேரி இனங்களுக்கு இணையானது. இவ்வினங்களைச் சேகரிப்பு செய்து அழியாமல் பாதுகாக்கவும் கால்நடைப் பண்ணைகளில் நன்கு கவனம் செலுத்தி பராமரித்து வளர்க்கப்படுகிறது.

## 4. பன்றி இனப்பெருக்கம்

பன்றி வளர்ப்பின் மூலமாக சுய வேலை வாய்ப்பும், சத்து மிக்கதுமான இறைச்சி நகர்ப்புறத் தேவைக்கு ஏற்ப கிடைக்கவும், இத்துறை பன்றி வளர்ப்பினை கிராமப்புற ஏழை மக்களிடம் ஊக்குவித்து வருகிறது. லார்ஜ் ஒய்ட், யார்க்ஷயர் பன்றி இனங்களை கால்நடை பராமரிப்புத் துறை மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர், அபிஷேகப்பட்டி, செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டையிலும் மற்றும் சென்னை,



சைதைப்பேட்டையிலும் பராமரிக்கப்படுகின்றன. உயரினப் பன்றிகளை பன்றிப் பிரிவுகளுக்கு வழங்குவதற்கு வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்பட்டு, மேற்கொண்டு பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 5. முயல் அபிவிருத்தி

பொதுமக்களிடம் முயல் வளர்ப்பினைப் பிரபலப்படுத்தவும், முயல் இறைச்சியினை ஊக்கப்படுத்தவும் உரோம உற்பத்தியை ஊக்கப்படுத்தவும் சென்னை, சைதாப்பேட்டையிலும், திருவண்ணாமலை மாவட்டம் எஸ்.வி.நகரம் கோழி விரிவாக்க நிலையத்திலும், முயல் வளர்ப்புப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

## 6. குதிரை வளர்ப்பு

ஓசூர், மாவட்டக் கால்நடைப் பண்ணையில் குதிரை வளர்ப்புப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பிரிவினை வலுப்படுத்தும் நோக்குடனும், அழிந்துவரும் இனமான குதிரைகளை வளர்க்க அரசு ரூ.5.00 இலட்சம் செலவில் குதிரை வளர்ப்புப் பிரிவு ஏற்படுத்தவும், அவற்றைப் பலப்படுத்த 5 பெண் குதிரைகளும், 1 ஆண் குதிரையும் வாங்கப்பட்டன.

## 7. நாய் வளர்ப்பு

தமிழ்நாட்டில் உள்ளூர் இனங்களான கோம்பை, மற்றும் இராஜபாளையம் நாய்களை வளர்ப்பதற்கு சென்னை, சைதாப்பேட்டை 1980-81இல் நாய் வளர்ப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. பொதுமக்களின் அதிக தேவையைக் கருதி மற்ற இனங்களான லாப்ரடார், கூலி மற்றும் டாபர்மேன் நாய்கள் 1994-95 ஆம் ஆண்டு முதல் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1997-98 ஆம் ஆண்டு இப்பிரிவினை வலுப்படுத்தவும் இராஜபாளையம் டாபர்மேன், லாப்ரடார் போன்ற இனங்களும், உள்நாட்டினங்களான சிப்பிப்பாறை போன்ற இனங்களை வாங்கவும் (மொத்தம் 24 எண்ணிக்கை கொண்டது) ரூ.5.75 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 8. கோழி இனப்பெருக்கம்

இத்துறையில் 1950 ஆம் ஆண்டு முதல் கோழி விரிவாக்க நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, மக்களைக் கோழி வளர்ப்பில் ஆர்வம் கொள்ளவும் அவர்களுக்கு கோழி வளர்ப்பில் ஈடுபட பயிற்றுவிக்கவும், அதன் மூலம்

[1998 மே 20

வருமானம் ஈட்டவும், ஆழ்கூள முறையில் வளர்க்கவும், ஒயிட் லெக்கார்ன், ஒயிட் ராக் மற்றும் ரோடு ஐலண்ட் ரெட் போன்ற இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத்துறையில் செயலாற்றப்பட்ட விரிவாக்கப் பணியின் பயனாக இம்மாநிலம், முட்டை உற்பத்தியில் நாட்டில் இரண்டாம் இடத்தை வகித்து வருகிறது.

இலாபகரமான முட்டையிடும் கோழிகள் மற்றும் இறைச்சிக் கோழிகள் உற்பத்தித் துறையில் தற்போது ஏற்பட்டுள்ள தொழில் நுட்ப அறிவியல் மாற்றங்களின் பயனாக, வாணிப முறையில் வளர்க்கப்படும் கோழிப் பண்ணைகள் பெரும் முதலாளிகளின் வசம் உள்ளது.

கிராமப்புறங்களில் புழக்கடை கோழி வளர்ப்பு மூலம் ஒரு வீட்டிற்கு 5 முதல் 10 கோழிகளை முதலீடுகள் இன்றி வளர்த்து வருகின்றனர். வீட்டினர் தங்களுக்குத் தேவையான முட்டை மற்றும் இறைச்சியை அவைகளிலிருந்து பெறுகின்றனர். கோழிகள் உபயோகமற்ற பொருட்களை உட்கொண்டும், வீணாகின்ற தானியங்கள் மற்றும் புழு, பூச்சி போன்றவற்றை உட்கொண்டு முட்டையாகவும், இறைச்சியாகவும் பலன் அளிக்கிறது. இக்கோழிகள் கோழிக்கழிச்சல் என்னும் நோயினால் பாதிக்கப்பட்டு இறக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஆகவே இந்நோயிலிருந்து கோழிகளைப் பாதுகாக்கும்வண்ணம் அனைத்து கால்நடை நிலையங்களில் குறிப்பிட்ட நாட்களிலும், மற்றும் கிளை நிலையங்களில் மாதத்திற்கு இருமுறையும் தடுப்பூசிப் பணி இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராமப்புற ஏழை விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்குடனும், நோயிலிருந்து காக்கும் பொருட்டும், இத்துறையினால் மாநில அளவிலான கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசித் திட்டம் பிப்ரவரி 1998இல் நடத்தப்பட்டது. இத்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள பொதுமக்களின் அக்கறையின் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் மேற்கண்ட திட்டத்தினைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

1997-98-ஆம் ஆண்டு வான்கோழி வளர்ப்புப் பிரிவு ஒன்று காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணையில் ரூ. 1.50 இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவில் 100 எண்ணிக்கையுள்ள வான்கோழிகள் வாங்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன.

26 கோழி விரிவாக்க நிலையத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் 2 குஞ்சு பொரிப்பு நிலையங்கள், ஒன்று காட்டுப்பாக்கத்திலும், மற்றொன்று ஒசூரிலும் செயல்பட்டு வருகின்றன.



1998 மே 20]

கோழியினங்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து அந்நோய்கள் பரவாமல் தடுக்க எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விவரிக்கத்தக்க வகையில் ஈரோட்டிலும், சேலம் மாவட்டம், ஆண்டலூர் கேட்டிலும் கோழி நோய்கள் கண்டறியும் புலனாய்வுக்கூடம் செயல்பட்டு வருகிறது.

## 9. தனித் திட்டங்கள்

உணவு உற்பத்தித் தொழிலுக்கு அடுத்தபடியாக கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு கிராமப்புறங்களில் முக்கிய அங்கம் வகிக்கிறது. அநேகமாக 70 முதல் 75 சதவீத கிராமப்புற வீடுகளில், கால்நடைகளையோ, கோழிகளையோ வளர்த்து வருகின்றனர். வேளாண்மை பெரிய அளவிலான பருவ காலத்திற்கு உகந்த வேலைவாய்ப்புடன் வருவாயைத் தரக்கூடியது. கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய பிரிவினருக்கு ஏற்ற வகையில் வருமானத்தைத் தரக்கூடியதாகும். எனவே இத்துறையானது மலைப்பகுதியிலுள்ள கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் சுற்றுப்புற சூழலைப் பாதிக்காமலேயே உயர்த்தும் நோக்குடன் அவர்களுக்கு கீழ்க்கண்டுள்ள தனித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

### (அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலையின் இயற்கைச்சூழலைப் பாதிக்காவண்ணம் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்குடன், நீலகிரி மாவட்டத்தில் 1975-ஆம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய உதவித் திட்டம் ஒன்று மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் கன்றுகள் மற்றும் ஆட்டின அலகுகள் பழங்குடியினர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு உறைவிந்து உற்பத்தி நிலையம் உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தோற்றுவிக்கப்பட்டு, பண்ணைக்குத் தேவையான பசுந்தீவன வளர்ப்புக்குத் தேவையான உள்ளிருப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டு உள்ளன. மலைப்பகுதியில் நோய் புலனாய்வு வசதியை மேம்படுத்த ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கால்நடை நலப்பணியை மேம்படுத்த உள்ளிருப்பு வசதிகளைப் பெருக்கி, புறநோயாளிகள் கட்டடம் மூன்று கால்நடை மருந்தகங்களுக்கும், ஒரு கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டட வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளின்

[1998 மே 20

இருப்பிடத்திற்கே கால்நடை நலப்பணியை மேற்கொள்ள இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள் கோத்தகிரி மற்றும் கடலூரில் நிறுவப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டு ரூ. 16.18 இலட்சம் செலவில் மேற்கண்ட இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகளின் செயலாக்கத்திற்கும், உதகமண்டல உறைவிந்து உற்பத்தி நிலைய உள்ளிருப்பு வசதிகளைப் பெருக்கவும், கால்நடை, வெள்ளாடு, செம்மறியாடு இவைகளின் குடற்புழு நீக்கத்திற்கான மருந்துகள் வாங்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (ஆ) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற 24 வட்டங்களை உள்ளடக்கி கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 1981 ஆம் ஆண்டு முதல் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக புல் கரணைகள், புல் நாற்றுகள், புல்விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டும், கால்நடை மருத்துவ நிலையங்களை ஒட்டி காலியாக உள்ள நிலங்களில், தீவன வளர்ச்சியைப் பெருக்குதல், மேலே குறிப்பிட்ட 24 வட்டங்களை உள்ளடக்கிய கால்நடை மற்றும் ஆட்டினப் பண்ணைகளின் உள்ளிருப்பு வசதிகளை மேம்படுத்தி தீவனப்பெருக்கம் செய்தல் ஆகிய பணிகள் அடங்கும். பண்ணைகளின் இனப்பெருக்க தேவைக்கென கால்நடைகளை வாங்கிவலுப்படுத்த தேவையான நிதி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டியில், விவசாயிகள் பயிற்சி நிலையம் ஏற்படுத்தவும், வேட்டைக்காரன்புதூர் மற்றும் உத்தமபாளையம் நடமாடும் கால்நடைப் பிரிவு மற்றும் திண்டுக்கல் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு நிறுவனச் செலவுகளுக்கும், ஆக ரூ. 10.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (இ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் கால்நடைப் பராமரிப்புத் துறையினால் 1976 முதல் சேலம், நாமக்கல், தர்மபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியினர் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1998 மே 20]

மலைப்பகுதியில் வாழும் இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள பழங்குடியினருக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது.

1997-98 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் மூலம் 390 பழங்குடியினர் குடும்பங்களுக்கு கறவை மாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வாங்கிட ரூ. 68.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவ உதவி, உடல் நலம் பேணல், கால்நடைகளுக்கு இனவிருத்தி போன்ற பணிகள் மலைப்பகுதிகளில் உள்ள 9 கால்நடை மருந்தகங்கள், 9 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் மற்றும் 3 கிளை நிலையங்களின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மலைப்பகுதியில் உள்ள பழங்குடியினரின் பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணிகள் இலவசமாகச் செய்யப்படுகின்றன.

## (ஈ) சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம்

இத்திட்டம் 1983 ஆம் ஆண்டு முதல் இந்து ஆதி திராவிடர் சமூகத்தினருக்கென, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. கால்நடைகளின் நலப் பணியின் அங்கங்களான, தடுப்பூசிப் பணி மற்றும் குடற்புழு நீக்கப் பணி காலமுறைப்படி செய்யப்படுகின்றன.

## (உ) மாதிரி வரைவுத் திட்டம்

மாதிரி அளவீட்டுத் திட்டம் மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் 1997-98 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியில் அளவீடுகள் பருவ வாரியாக, வருடந்தோறும் தொடர்ந்து, நிரந்தரமாக கணக்கெடுப்பு மூலம் அறியப்படுகிறது.

இவ்வாறு மாநில மாதிரி வரைவுத் திட்டத்தின் மூலம் பரிசீலிக்கப்பட்டு, நவீன முறையில் அறியப்படும் பால் மற்றும் கால்நடை மூலமாகப் பெறப்படும் இதர பொருட்கள் மதிப்பீட்டினால் திட்ட மதிப்பீடு மற்றும் வருங்காலத் திட்டங்களுக்கு அடிப்படை புள்ளிவிவரமாக இது அமைகிறது.

[1998 மே 20

*1997-98* ஆம் ஆண்டில் குளிர்காலம் நீங்கலான முதல் இரண்டு பருவ காலங்களில் பால், முட்டை, மற்றும் இறைச்சி உற்பத்தியின் கணக்கெடுப்பு அளவீடுகள் பின்வருமாறு:

| | கோடை காலம் | மழைக் காலம் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. பால் ('000'மெட்டன்) | 1320.084 | 1355.672 | 2675.756 |
| 2. முட்டை (மில்லியன் எண்கள்) | 1078.580 | 1077.371 | 2155.951 |
| 3. இறைச்சி ('000' மில் கிலோ) | 11.147 | 15.226 | 26.373 |

கால்நடை கணக்கெடுப்புப் பணி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை எடுக்கப்படுகிறது. இக்கால்நடை கணக்கெடுப்பில் இடைப்பட்ட காலங்களில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பீடு செய்வதற்கு இடைக்கால கால்நடை கணக்கெடுப்புத் திட்டம் ஒன்று இயக்குநரகத்தில் செயல்படுத்தப்படுகிறது.

## 10. கூட்டுறவுச் சங்கங்கள்

ஆடு, கோழி, நாய் மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 1964 முதல் கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய சங்கங்களுக்கு செயல்முறை பதிவாளராக இயக்குநரே செயல்படுகிறார். 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கச் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதியின்படி பதிவாளருக்கு உள்ள அதிகாரம் கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநருக்கும், கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற பகுதியினரின் பொருளாதாரத்தை இடைத்தரகர்கள் இல்லாமல் உயர்த்துவதே இந்தச் சங்கங்களின் நோக்கமாகும். இது தவிர, உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ நலன் அளித்து, கால்நடை வளர்ப்பு மற்றும் நிர்வாகப் பயிற்சி அளிக்கிறது. மேலும், கால்நடை வளர்ப்பிற்கான உள்ளீடுகள் வழங்குவதுடன், விற்பனைக்கும் இத்துறை உதவுகிறது.

இத்துறையில் கீழே குறிப்பிட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| 1. ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் | 943 |



[1998 மே 20]

| | |
|---|---|
| 2. கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் | 9 |
| 3. வாத்து வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் | 8 |
| 4. பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் | 2 |
| 5. மாடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் | 1 |

## பாகம் - 3

## 1. கால்நடை மருத்துவ நலப் பணிகள்

### (அ) கால்நடை மருத்துவ நிலையங்கள்

இம்மாநிலத்தில் கால்நடைப் பராமரிப்புப் பணிகள் யாவற்றையும் அரசே மேற்கொண்டு பெருமளவிலான மருத்துவ நிலையங்களின் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது. இத்துறை காலந்தொட்டே கால்நடைப் பணிகளை விரிவு செய்து மருத்துவ நலப் பணிகளுக்குத் தேவையான உள்ளீட்டு வசதிகளான உடல்நலம் பேணுதல், நோய் கண்டறிதல், நோய் கண்காணிப்பு, தடுத்தல், நோய்களை அறவே ஒழித்தல், இனவிருத்திப் பணிக்கு உதவிடல், இனவிருத்திப் பணிக்கான தரமான பொலிகாளைகளை உருவாக்குதல் மற்றும் உறைவிந்து உற்பத்தி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய வேளாண்மைக் குழு கி.பி.2000 ஆண்டில் 5,000 கால்நடை அலகுகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் என்ற வீதத்தில் நலப் பணிகள் கவனிக்க ஏதுவாக இருக்க வேண்டும் என பரிந்துரை செய்துள்ளது. ஒரு கால்நடை அலகு என்பது முழு வளர்ச்சியடைந்த பசு அல்லது எருமை அல்லது குதிரை அல்லது கழுதை அல்லது ஒட்டகம் அல்லது 10 செம்மறியாடுகள் அல்லது 10 வெள்ளாடுகள் அல்லது 5 பன்றிகள் அல்லது 100 கோழிப் பறவைகள் ஆகும். தமிழ்நாட்டில் 136 இலட்சம் கால்நடை அலகுகளுக்கு 2,722 கால்நடை நிலையங்கள் செயல்பட்டால்தான், தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரைப்படி செயல்படுத்த முடியும்.

1996-97 ஆம் ஆண்டு முடிவில் இம்மாநிலத்தில் 893 கால்நடை நிலையங்கள் செயல்பட்டு வந்தன. இந்த இடைவெளியைப் போக்க அரசு பல புதிய கால்நடை மருந்தகங்கள் தொடங்கியும், இருக்கின்ற நிலையங்களைத் தரம் உயர்த்தியும் வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் 60 கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் திறக்கப்பட்டும், 20 கால்நடை

மருந்தகங்களை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தியும் மற்றும் 3 மருத்துவமனைகளை பிரதம மருத்துவமனையாகத் தரம் உயர்த்தியும் உள்ளது. இதன்படி, கீழ்க்கண்டுள்ள கால்நடை நிலையங்கள் மாநிலத்தில் தற்போது செயல்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | பன்முக மருத்துவமனைகள் | 3 |
| 2. | பிரதம மருத்துவமனைகள் | 24 |
| 3. | கால்நடை மருத்துவமனைகள் | 121 |
| 4. | கால்நடை மருந்தகங்கள் | 807 |
| | மொத்தம் | **955** |

சைதாப்பேட்டை (சென்னை), தல்லாகுளம் (மதுரை) மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 பன்முக மருத்துவமனைகளில் கால்நடைகளுக்கு சிகிச்சை வசதி 24 மணி நேரமும் செய்யப்பட்டு வருகிறது. உள்நோயாளிகள் பிரிவு வசதி, மேற்கண்ட பன்முக மருத்துவமனை, பிரதம மருத்துவமனை மற்றும் கால்நடை மருத்துவமனைகளில் உள்ளது. மேற்கண்ட நிலையங்களில் பெரிய அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்நடை நிலையங்களான சேலம், கோயம்புத்தூர், வேலூர், ஈரோடு, பொள்ளாச்சி, தல்லாகுளம் (மதுரை) மற்றும் சைதாப்பேட்டை (சென்னை) ஆகிய நிலையங்களில் 'எக்ஸ்ரே' வசதிகளும் உள்ளன.

கால்நடை நிலையங்களில், கால்நடை மற்றும் கோழிகளுக்கு இலவசமாகச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை வசதி செய்வதுடன், அவைகள் உடல் நலம் பேணுதல் பொருட்டு தடுப்பூசிப் பணி மற்றும் குடற்புழு நீக்கப் பணியும் செய்யப்பட்டு வருகிறது. இவை தவிர இந்நிலையங்களில் கலப்பினக் கால்நடைகளுக்கு பொருளாதார இழப்பினை ஏற்படுத்தக்கூடிய மலட்டுத் தன்மைக்கான சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கால்நடை நிலையங்கள் இல்லாத குக்கிராமங்களில் கால்நடைகளுக்கு உடல்நலம் பேணும் பணி, மற்றும் கால்நடைப் பணிகள் 54 நடமாடும் கால்நடைப் பிரிவுகள் மூலமாகவும், 383 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மூலமாகவும் கால்நடை நலப் பணிகளாற்றி வருகிறது.

நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவானது, 1 கால்நடை உதவி மருத்துவரின் தலைமையில் தேவையான பணியாளர்களுடனும், ஊர்தியுடனும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் நிலையான கால அட்டவணைப்படி செயல்பட்டுவருகிறது.





நடமாடும் கால்நடை மருந்தகங்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒன்று வீதம் (நாகப்பட்டினம் பஞ்சாயத்து யூனியன் நீங்கலாக) இந்நிலையங்கள் கால்நடை விரிவாக்க அலுவலரின் தலைமையின்கீழ் செயல்படுகிறது.

மேற்கண்ட பிரிவுகளும், நிலையங்களும் கிராமந்தோறும் சென்று நோய் நீக்கப்பணி, கால்நடைப் பணிகள் மற்றும் விவசாயிகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள அறிவியல்பூர்வமான தொழில் நுட்ப உத்திகளைக் கையாள அவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

மாநிலத்தில் மொத்தம் 2,126 கிளை நிலையங்கள் பல்வேறு இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இக்கிளை நிலையங்கள் மூலமாக கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு தடுப்பூசிப் பணி, குடற்புழு நீக்கப்பணி, செயற்கை முறை கருவூட்டல் பணி ஆகியவைகளுடன் முதலுதவிப் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செயற்கை முறை கருவூட்டல் பணியை அதிக அளவில் மேற்கொள்ள கிளை நிலையம் ஒன்றுக்கு ஒரு பார்வை கிளை நிலையம் வீதம் இருக்கின்ற பணியாளர்களின் பணியைப் பயன்படுத்தியே செயல்படுத்தி வருகிறது.

## அ. நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு

கால்நடைகளின் உற்பத்தியில் கோமாரி நோய், வெக்கை நோய் போன்ற கொள்ளை நோய்கள் பெரிதும் பாதிப்பு ஏற்படுத்துகின்றன. 'நீல நாக்கு' போன்ற கொடிய நோய் செம்மறியாடுகளுக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. கால்நடைகளைப் பொறுத்தவரையில் கோமாரி நோயின் தாக்குதலினால் அவைகளின் உடல்நலம் பாதிப்பதுடன், பொருளாதார இழப்பும் ஏற்படுகிறது.

கால்நடைகளின் உரிமையாளர்கள் நோயுற்ற கால்நடைகளைக் குணப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றனர். ஆனால், நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு நோய் வராமல் பாதுகாக்க அதிக அக்கறை செலுத்துவதில்லை. இத்துறை மட்டுமே தேவையான நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு நோயினை அறவே ஒழிக்கப் பாடுபடுகிறது.

### (1) கால்நடை நோய் கடுங்கண்காணிப்புத் தகவல் முறை

கால்நடை நோய் கடுங்கண்காணிப்புப் பிரிவு ஒன்று இத்துறையில் செயல்பட்டு நோயின் தாக்குதல், விவரங்கள் சேகரிப்பு செய்து வருகிறது.

கால்நடை நோய் பற்றிய தகவல் அறியும் முறை மத்திய அரசின் தேசிய தகவல் மையம் மூலமாக மாவட்டத் தலைநகரங்களுடன், மாநிலத் தலைமை நிலையத்துக்குத் தொடர்பு கொண்டு இணைப்பு மூலம் அறியப்பட்டு வருகிறது. இம்முறையினால் நோயின் தாக்குதல் உடனுக்குடன் அறியப்பட்டு அந்தப் பகுதியில் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு, நோயினைக் கட்டுப்படுத்தி அவற்றினை அறவே ஒழிக்க உதவியாக இருக்கின்றது இம்முறையானது கீழ்க்கண்ட இரண்டு வகைகளாகச் செயல்படுகிறது:

1) சமீபத்தில் தொழில் நுட்ப கண்டறிதல் மூலம் நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு நோயினைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல் போன்ற பணிகளைச் சம்பந்தப்பட்ட பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளுதல்.

2) கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருள்களை வெளிநாட்டுச் சந்தைக்கு உயர்த்துதல்.

கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள், நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள், நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடைப் பண்ணைகள் அந்தந்தப் பகுதிகளில் தலையாய கண்காணிப்பு மற்றும் அறிவிப்புப் பிரிவுகளாகச் செயல்படுகின்றன.

பிரதம அறிவிப்புப் பிரிவுகள் நோய் கண்ட முதல் தகவல் மற்றும் வாராந்திர அறிக்கைகளை மாவட்ட அளவில் மண்டல இணை இயக்குநர்களுக்குத் தெரிவித்து, சம்பந்தப்பட்ட உதவி இயக்குநருக்கும் ஒரு நகல் அனுப்ப வேண்டும்.

இவ்வகை அறிக்கைகள் தலைமையலுவலகத்திலுள்ள நோய்க் கடுங்கண்காணிப்புப் பிரிவுக்கு மாவட்ட தலைநகரிலிருந்து 'நிக்நெட்' மூலமாகத் தகவல் அனுப்பப்படுகிறது.

## (2) கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு

கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய தொற்று நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து அதற்குத் தடுப்பூசி போடுவது கால்நடை மருத்துவத் துறையின் தலையாய நோக்கமாகும். இதன் அடிப்படையில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன:



1. வேலூர்
2. மதுரை
3. திருநெல்வேலி
4. உதகமண்டலம்
5. கடலூர்
6. சேலம்
7. திருச்சிராப்பள்ளி
8. கோயம்புத்தூர்
9. தஞ்சாவூர்
10 சிவகங்கை
11. காஞ்சீபுரம்
12. ஈரோடு
13. திண்டுக்கல்
14. தூத்துக்குடி

இப்பிரிவின் முக்கியப் பணிகளாவன:

(1) நோய்க் கிளர்ச்சி ஏற்படக்கூடிய இடங்களில் நோய்க்கான காரணங்களை ஆராய்ந்து களப் பணி அலுவலர்களுக்குத் தகுந்த முறையில் எச்சரித்து உதவி செய்து வருதல்.

(2) தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய காரணங்களை முன்கூட்டியே கண்டறிந்து அதைத் தவிர்க்கும் நோக்குடன் தடுப்பு வழிமுறைகளைக் குறித்த காலத்தில் மேற்கொள்ளுதல்.

(3) இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய உதவியுடன் கோமாரி நோயின் அறிகுறிகளைக் கண்டறிந்து நோய்க் கிளர்ச்சியின் தன்மையை அறிந்து கொள்ளுதல்.

(4) அப்பகுதியினை ஆய்வு செய்து நோய்க் கிளர்ச்சியின் தன்மையை வரைபடம் மூலம் விளக்குதல்.

(5) உடனடியாக நோயின் தன்மையைக் கண்டறிந்து அதற்கு சரியான மருத்துவ சிகிச்சை அளித்தல்.

(6) காசநோய், ஜோன்ஸ் நோய், கருச்சிதைவு மற்றும் மடிவீக்க நோய். ஆகியவைகளைக் காலமுறைப்படி பரிசோதனை செய்தல்.

### (3) நோய் ஆய்வுக் கூடம்

மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் நோய் கண்டறியும் பரிசோதனை நிலையங்கள் நான்கும், தொற்றுநோய் கண்டறியும் பிரிவுகள் நான்கும் உலகவங்கி நிதி உதவியுடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. நோய் கண்டறியும் பரிசோதனை மூலமாக களத்தில் உள்ள கால்நடை உதவி மருத்துவர்கள் நோய் கண்டறிதலில் உதவி செய்யும் காலங்களில், தொற்று நோய் கண்டறியும் பிரிவு, பல்வேறு விதமான நோய்களின் தன்மைகளை ஆய்ந்து, அவைகளிலிருந்து கால்நடைகளை அதிக அளவில் தாக்கக்கூடிய தொற்று நோய்களை மாநிலத்திலிருந்து அறவே ஒழிக்கப் பாடுபடுகிறது.

கோழிகளின் நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் ஒன்று, சேலம் மாவட்டம் ஆண்டலூர்கேட்டிலும், பெரியார் மாவட்டம் ஈரோட்டிலும், அந்தப்பகுதி கோழி வளர்ப்பு விவசாயிகளுக்குப் பேருதவியாக நோய் கண்டறிதல் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது

நான்கு நடமாடும் நோய் ஆய்வுக்கூடங்கள் மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு நிரந்தர வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இவ்வகை நடமாடும் ஆய்வுக்கூடங்களுக்கு எல்லா வகையான ஆய்வுக்கூட சாதனங்களும் உள்ளன. நோய் தாக்கிய இடங்களுக்கு உடனடியாக சென்று, அவ்விடங்களிலேயே நோய் குறித்து ஆய்வு மேற்கொண்டு மாதிரிகளை மேற்கொண்டு ஆய்விற்காகச் சேகரிப்பு செய்கிறார்கள்.

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் பணிகளை ஆய்வு செய்தல், நோய் கண்டறிதல் மற்றும் அதன் தொடர்பான புலனாய்வுப் பணிகளில் உதவிடவும், ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவ வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

### (இ) வெக்கை நோய்த் தடுப்புத் திட்டம்

இத்திட்டம் இரண்டாவது 5 ஆண்டு திட்ட காலத்தில் இம்மாநிலத்தில் தொடங்கப்பட்டது. இந்நோயைத் தடுக்க வெக்கை நோய் தடுப்பூசிப் பணி, 10 வெக்கை நோய் கண்காணிப்புப் பிரிவுகள், 18 வெக்கை நோய்க் குழுக்கள் மற்றும் எல்லையோரப் பகுதியில் உள்ள 10 கால்நடை சோதனைச் சாவடிகள் மூலமாக, காலமுறைப்படி மாநிலத்திற்கு உள்ளே



வரும் மற்றும் வெளியே செல்லும் கால்நடைகளுக்கும் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய வெக்கை நோய் தடுப்புத் திட்டத்தின்படி 1993-94 முதல் 1995-96 வரை 100 சதவீத தடுப்பூசிபணி தமிழ்நாட்டிலுள்ள 14 எல்லையோர மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள மற்ற மாவட்டங்களில் 100 சதவீத தடுப்பூசிகள் போடப்படும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எல்லையோர மாவட்டங்களில் தீவிர தேடுதல் பணிகளின் மூலம் தடுப்பூசிகள் போடப்பட்டன.

தடுப்பூசிப் பணியானது 31-12-1997-இல் முடிக்கப்பட்டது. தற்போது நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என தீவிர கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சீரோ கடுங்கண்காணிப்பு பணியின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்ட கால்நடைகளின் நோய் தடுப்பு திறன் அளவு கண்டறியப்பட்டு வருகிறது.

இத்துறையின் கடும் முயற்சியின் விளைவாக செப்டம்பர் '95 முதல் இம்மாநிலத்தில் வெக்கை நோய் கிளர்ச்சி ஏதும் ஏற்படவில்லை.

### (ஈ) கோமாரி நோய் கட்டுப்பாட்டுத் திட்டம்

கோமாரி நோய் ஒருவித நுண்ணுயிர் கிருமிகளினால் ஏற்பட்டு, நோயின் பாதிப்பினால் கால்நடைகளுக்குப் பேரிழப்பு ஏற்பட்டு, பொருளாதார இழப்பையும் ஏற்படுத்துகிறது. நல்ல திறன் வாய்ந்த உயரின மரபு வழியைச் சார்ந்த கால்நடைகளின் உற்பத்தியானது இந்நோயின் கிளர்ச்சியினால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றது. நல்ல மதிப்புள்ள கால்நடைகளை இக்கொடிய நோயின் பாதிப்பிலிருந்து காக்க இத்துறையானது ஊசி மருந்தின் விலையில் 50 சதவீதம் மானியமாக அளித்து, ஏழை வேளாண் குடிமக்களின் கால்நடைகளுக்குத் தடுப்பூசித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

### (உ) நோயற்ற மண்டலம்

கால்நடை மற்றும் கால்நடைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இந்நாட்டின் தென்பகுதியில் கேரள மாநிலத்தில் உள்ள கொல்லம் மற்றும் திருவனந்தபுரத்திலும், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் கால்நடைகளைப் பெரிதும் தாக்கக்கூடிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நோய்களான வெக்கை மற்றும் கோமாரி நோய் தாக்காவண்ணம் கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள்

விற்பனையை வெளிநாட்டுச் சந்தையை வலுப்படுத்தவும், அதிகரிக்கவும் நோயற்ற பகுதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, திட்டப் பகுதியில் மற்றும் அதனைச் சார்ந்த திருநெல்வேலி மாவட்டத்தில் 40 கிலோ மீட்டர் உள்ளடக்கிய பகுதியில் முறையான தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தினை ஒட்டிய எல்லையோரப் பகுதியில் நுழையும் கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது. இத்திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் 29-10-1984 முதல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்திட்டம் துவக்கப்பட்டது முதற்கொண்டு இதுநாள் வரை திட்டப் பகுதியில் எந்தவிதமான நோய்க்கிளர்ச்சியும் ஏற்படவில்லை.

### (ஊ) தடுப்பூசி மருந்து உற்பத்திப் பணி

தடுப்பு மருந்துகள் மற்றும் கால்நடை மற்றும் கோழிகளின் உயிர்காக்கும் மருந்துகள் வேலூர் மாவட்டத்தில், இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் 7 வகையான நுண்ணுயிர் தடுப்பு மருந்துகளும், 11 வகையான வைரஸ் தடுப்பு மருந்துகளும் தயாரிக்கப்படுகிறது. இவற்றின் விவரம் பின்வருமாறு:

**நுண்ணுயிர் தடுப்பு மருந்துகள்**

1. தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து (ஆலம் பிரசிபிடேட்)
2. தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து (ஆயில் அட்ஜுவெண்ட்)
3. மாட்டின் நிணநீர் சுரப்பி நோய் தடுப்பு மருந்து
4. சப்பை நோய் தடுப்பு மருந்து
5. துள்ளுமாரி நோய் தடுப்பு மருந்து
6. அடைப்பான் ஸ்போர் தடுப்பு மருந்து
7. கருச்சிதைவு நோய் தடுப்பு மருந்து

**வைரஸ் நோய் தடுப்பு மருந்துகள்**

1. திசுவளர் வெக்கை நோய் தடுப்பு மருந்து
2. ஆட்டம்மை தடுப்பு மருந்து
3. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (கே)
4. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (லசோட்டா)
5. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (எப்)



6. திசு வளர் கோழியின அம்மை நோய் தடுப்பு மருந்து
7. வாத்துக் கழிச்சல் நோய் தடுப்பு மருந்து
8. மேரக்ஸ் நோய் தடுப்பு மருந்து
9. வெறிநாய்க் கடி நோய் தடுப்பு மருந்து
10. நாய் டிஸ்டெம்பர் நோய் தடுப்பு மருந்து
11. கோமாரி நோய் தடுப்பு மருந்து (மோனோ வெலண்ட்)

## பகுதி - 4

### விரிவாக்கப்பணி மற்றும் பொது சுகாதாரம்

### 1. விளம்பரம் மற்றும் பிரச்சாரம்

இத்துறையின் முக்கிய பணியாக விரிவாக்கப் பணி அமைகிறது. இத்துறையில் பணிபுரியும் அங்கத்தினர்கள் தங்களுக்குக் கிடைக்கும் அனைத்து வாய்ப்பையும் பயன்படுத்தி விவசாயிகளுக்கு அறிவியல் பூர்வமான தொழில் நுட்ப விவரங்களை வழங்கி வருகின்றனர். எல்லா வகையான அதி நவீன யுக்திகளையும், தொழில் நுணுக்கங்களையும், செயல்விளக்க முறையில் விவசாயிகளுக்கு விளக்கப்படுவதால், விவசாயிகளிடையே ஓர் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அவ்வப்போது நடைபெற்றுவரும் விழாக்களிலும், கண்காட்சியிலும், 'பார்ப்போம் தெரிந்து கொள்வோம்' என்ற நிகழ்ச்சியின் மூலமாக இத்துறை கலந்துகொண்டு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. உள்ளூர் விழாக்களிலும், பொருட்காட்சியிலும் கலந்து கொண்டு, கால்நடை பராமரிப்பின் தற்கால நவீன தொழில் நுட்பங்களையும், பொது சுகாதாரம் குறித்தும், விவசாயிகளுக்கு விளக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் இத்துறை கலந்துகொள்கிறது.

பலவகையான தகவல் ஒலிபரப்பு முறைகளான தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி மற்றும் நாளிதழ்கள் மூலமாகவும், விவசாயிகளுக்கு அவ்வப்போது துறையில் ஏற்படும் தொழில்நுட்ப மாற்றங்களையும், நிகழ்வுகளையும் தெரிவிக்கின்றன.

இத்துறையினால் 19 வண்ணத் திரைப்படங்கள், கால்நடைப் பராமரிப்பு மற்றும் தீவனப்பெருக்கம் குறித்தும் தயாரிக்கப்பட்டுள்ளது.

[1998 மே 20

1. நவீன சுயம்வரம்
2. வெற்றியின் இரகசியம்
3. தேடி வந்த செல்வம்
4. இதோ ஒரு சொர்க்கம்
5. பிள்ளை வரம்
6. மாடு தந்த பாடம்
7. பாராசைட்டிக் டிசீஸஸ்
8. தொற்றுநோய்களும் தடுப்பூசி அட்டவணைகளும்
9. புதிய பாதை
10. ஒரு பொண்ணு நினைச்சா
11. வெளிச்சத்துக்கு வாங்க
12. குறை தீர்ந்தது
13. துளளி வரும் கன்று
14. ஹீட் டிடெக்ஷன் இன் கேட்டில்
15. மேனேஜ்மெண்ட் ஆப் கிராஸ் பிரட் காஃப்ஸ்
16. ப்ரோசன் செமன் பிரபரேஷன் அண்டு டெக்னிக்
17. கேனைன் ரேபிஸ் கண்ட்ரோல் ப்ரோக்ராம்
18. தேசிய வெக்கை நோய் தடுப்புத் திட்டம்
19. பன்றி வளர்ப்பு

மேற்கண்ட திரைப்படங்கள், மக்கள் தொடர்பு முகாம்கள் நடைபெறும் இடங்களில் திரையிட்டு காண்பிக்கப்படுகின்றன. மேலும், பொருட்காட்சிகள், திருவிழாக்காலங்களிலும், உள்ளூர் கால்நடை சந்தைகளிலும் திரையிட்டு காண்பிக்கப்படுகின்றன. இத்துறையினால் ஒவ்வொரு ஆண்டும் 30,000 மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்துறையில் பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பிரிவு ஒன்று அச்சுக்கூட வசதியுடன், இத்துறைக்குத் தேவையான விளம்பரம் மற்றும் விரிவாக்கப் பணிக்குத் தேவையான அச்சடிப்பு பணிக்காக சைதாப்பேட்டை (சென்னை) செயல்பட்டு வருகிறது. இந்த அச்சுக்கூடம் நவீன சாதனங்களான, லேசர் பிரிண்டிங் மற்றும் டெஸ்க்டாப் பப்ளிசிட்டி (Desk Top Publicity) போன்ற வசதிகளைக் கொண்டுள்ளது. இத்துறை 1997-98 ஆம் ஆண்டு 17 பொருட்காட்சியிலும் பங்கேற்றும் 103 தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளது.



1998 மே 20]

## 2. மக்கள் தொடர்பு முகாம்:

இத்துறையானது மக்கள் தொடர்பு முகாம்களைத் தொடர்ந்து குக்கிராமங்களில் முன்னறிவிப்பு செய்து நடத்தி வருகிறது. வைக்கோலின் தரத்தை யூரியாக் கொண்டு சத்துமிக்கதான வைக்கோலாக மாற்றக்கூடிய செயல்முறை விளக்கங்களையும் (யூரியா ஊட்டமேற்றிய வைக்கோல்), கால்நடைகளை முறையான காலங்களில் இனவிருத்தி செய்தல், சுகாதார முறைப்படி இறந்த கால்நடைகளின் கழிவுப் பொருட்கள் மற்றும் சாணங்களை அப்புறப்படுத்துதல், தொற்று நோய்கள் பரவுவதை காலத்தே தடுத்தல், தற்கால நவீன கால்நடை யுக்திகள் அடங்கிய திரைப்படங்களை திரையிட்டும் மக்கள் தொடர்பு முகாம்களில் பொதுமக்கள் அறியும் வண்ணம் நடத்தப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் 20,212 மக்கள் தொடர்பு முகாம்களை இத்துறை 31-12-1997 முடிய நடத்தியுள்ளது.

## 3. வெறிநாய்க் கடி நோய் தடுப்புத் திட்டம்

பொதுமக்களின் நலனைக் கருதி இத்துறை முக்கியமாக இப்பணியை மேற்கொண்டுள்ளது. வெறிநாய்க் கடி ஒரு அபாயகரமான நோய். நாய்களில் வெறிநோய் ஏற்படாமல் தடுப்பதுடன் அது மனிதர்களுக்குப் பரவாமல் தடுக்க வெறிநாய்க் கடி நோய் தடுப்புத் திட்டம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக எல்லா வளர்ப்பு நாய்களுக்கும் காலமுறைப்படி வெறிநோய் தடுப்பூசிப்பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்ட செயலாக்கத்திற்குப் பின் மனிதர்களை தாக்கக்கூடிய வெறிநாய்க் கடி நோய் இப்பகுதிகளில் வெகுவாக குறைந்துள்ளது.

### வெறிநாய்க் கடி நோய் தடுப்புத் திட்டப் பணிகளின் முக்கிய நோக்கங்கள்

(1) கட்டாய நோய்த் தடுப்பு முறையைக் கையாள வீடு வீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி மருந்தின் விலையை மட்டும் கட்டணமாக வசூலித்து தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படுகிறது.

(2) நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படுகிறது.

(3) பொதுமக்களிடையே இந்நோய் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் மூலம் தகுந்த விளம்பரம் செய்தல், நாய் கண்காட்சி நடத்துதல்.

## 4. பெருமளவில் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம்

இத்துறை கால்நடை மற்றும் கோழிகளுக்கு முறையாக தடுப்பூசி மற்றும் குடற்புழுநீக்கம் செய்து வருகிறது. அனைத்து கால்நடைகளுக்கும் இலவசமாக குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது. அடைப்பான், புரூஸலாஸிஸ், டெட்டனஸ் நாடாப்புழு நோய் போன்ற அபாயகரமான நோய்களைத் தடுத்து, மேலும் பரவாமல் தடுக்கப்படுகிறது. முறையான குடற்புழு நீக்கம் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் செய்வதன் பலனாக மனிதனுக்கு பரவக்கூடியதும், குடற்புழுவினால் மனித உடல்நலம் பாதிப்பு ஏற்படா வண்ணம் நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ குடற்புழுக்களின் வளர்ச்சி தவிர்க்கப்படுகிறது.

## 5. இறைச்சிக் கூடங்களில் ஆய்வு

உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் 183 பதிவு பெற்ற இறைச்சிக் கூடங்களில் முறையான இறைச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் இறைச்சி எலும்பு நோய்கள் மனிதர்களுக்குப் பரவாமல் தடுக்கப்படுகிறது. பொது நலப்பணிகளில், இந்தப் பணியை ஒரு தலையாய பணியாக இத்துறை மேற்கொண்டு வருகிறது.

## பகுதி-5

## 1998-99-ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

1. ரூ. 7.10 இலட்சம் செலவில் 20 கால்நடை மருந்தகங்களைக் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்துதல்.
2. தேவையான இடங்களில் 30 புதிய கால்நடை மருந்தகங்களை ரூ.81 இலட்சம் செலவில் துவக்குதல்.
3. விழுப்புரம் மாவட்டத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு விழுப்புரத்தில் நோய்க் கண்டறிதல் மற்றும் நோய் ஆய்வு செய்யும் பொருட்டு கால்நடை நோய் புலனாய்வு பிரிவு ஒன்று 9.83 இலட்சம் செலவில் துவக்கப்பட உத்தேசித்துள்ளது.
4. உறைவிந்து சேமிப்பிற்கும், செயற்கைமுறை கருவூட்டல் பணிக்கும் தேவையான திரவ நைட்ரஜன் சேமிப்பிற்கு பெரிய அளவிலான கொள்கலன்கள் ரூ. 20.00 இலட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



5. 50 தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்பில் பயிற்சி அளித்து, அவர்கள் வளர்ப்பதற்கு 500 கிடா ஆட்டுக்குட்டிகளை வழங்க உள்ளது. தரம் உயர்த்தப்பட்ட கிடாக்குட்டி வழங்குதலால் ஆடு வளர்ப்போரில் உள்நாட்டின் ஆடுகளின் தரம் உயர்த்தப்படுகிறது. இத்திட்ட செலவிற்கு ரூ. 3.55 இலட்சம் செலவு செய்யப்படவுள்ளது.
6. ரூ. 20.00 இலட்சம் செலவில் இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் செம்மறியாட்டம்மை நோய்க்கான திசுவளர் தடுப்பூசி மருந்து உற்பத்தியை உயர்த்த செலவு செய்யப்படவுள்ளது.
7. ரூ. 6.00 இலட்சம் செலவில் இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாராகும் துள்ளுமாரி நோய்க்கான தடுப்பூசி மருந்தின் தரம் உயர்த்தப்படவுள்ளது.

[1998 மே 20

# தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்

## 1. முன்னுரை

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் 12-7-1973 ஆம் ஆண்டு ஒரு அரசு நிறுவனமாக ரூ. 100/- இலட்ச மூலதனத்துடன் தொடங்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 200 இலட்சங்களாக 1991 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 126.68 இலட்சமாகும்.

## 2. தற்போதைய நடவடிக்கைகள்

முட்டையிடும் கோழிக் குஞ்சுகள், கறிக்கோழிக் குஞ்சுகள், கோழித் தீவனம் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பதிலும், முட்டை, கோழி, கோழிக்கறி, ஆட்டு இறைச்சி விற்பனையிலும் ஈடுபட்டுள்ளது.

டாப்கோவின் கீழ் இயங்கி வரும் பிரிவு அலுவலகங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### (1) குஞ்சு பொரிப்பகங்கள்

1. அரசூர் (கோம்புத்தூர் மாவட்டம்)
2. கப்பலூர் (மதுரை மாவட்டம்)
3. கொட்டப்பட்டு (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)
4. அனுப்பன்குளம் (விருதுநகர் மாவட்டம்)

### (2) தீவன கலவை நிலையம்

1. கப்பலூர், மதுரை மாவட்டம்

### (3) விற்பனை நிலையங்கள்

1. சென்னை
2. திருச்சிராப்பள்ளி
3. மதுரை
4. கோயம்புத்தூர்
5. சேலம்
6. நாமக்கல்



1998 மே 20]

### (4) கோழி வளர்ப்புப் பண்ணைகள்

1. வெம்பாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்)
2. தெக்குப்பாளையம் (கோவை மாவட்டம்)
   (தற்போது வான்கோழி வளர்க்கப்படுகிறது)

## 3. திட்ட சாதனை

### (அ) கோழிக்குஞ்சு பொரிப்பகங்கள் (ஒருநாள் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன)

| வருடம் | கோழிக்குஞ்சுகள் உற்பத்தி எண்ணிக்கை (இலட்சங்களில்) | மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| 1995-96 | 38.28 | 278.87 |
| 1996-97 | 28.38 | 228.76 |
| 1997-98 (12/97 வரை) | 8.39 | 81.76 |

### (ஆ) கோழித் தீவனக் கலவை நிலையங்கள்

| ஆண்டு | கோழித் தீவன உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) | மதிப்பு (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|
| 1995-96 | 551 | 38.20 |
| 1996-97 | 164 | 39.48 |
| 1997-98 (12/97 வரை) | 235 | 21.16 |

### (இ) விற்பனை நிலையங்கள்

விற்பனை நிலையங்கள், முட்டையிடும் கோழிக்குஞ்சுகள், கறிக் கோழிக்குஞ்சுகள், மற்றும் முட்டை, கோழி, ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சி முதலியவற்றைக் கொள்முதல் செய்து விற்பதிலும் ஈடுபட்டுள்ளது.

அனைத்து விற்பனை நிலையங்களின் செயல்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(மதிப்பு ரூபாய் இலட்சங்களில்)

| எண் | விற்பனை செய்த பொருள்கள் | ஆண்டு 1995-96 | | ஆண்டு 1996-97 | | ஆண்டு 1997-98 (12/97 வரை) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | மதிப்பு |
| 1. | முட்டை (இலட்சத்தில்) | 46.939 | 51.68 | 43.62 | 60.10 | 41.01 | 63.61 |
| 2. | கோழி (இலட்சத்தில்) | 0.66 | 32.47 | 0.47 | 25.96 | 0.32 | 21.92 |
| 3. | இறைச்சி (மெட்ரிக் டன்களில்) | 40.44 | 26.14 | 39.00 | 26.89 | 27.00 | 19.21 |
| 4. | கோழிக் குஞ்சுகள் (இலட்சத்தில்) | 16.62 | 203.87 | 13.81 | 177.82 | 3.13 | 43.36 |
| 5. | தீவனம் (மெட்ரிக் டன்களில்) | 90.67 | 7.32 | - | - | - | - |

## ஈ. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சத்துணவுத் திட்ட மையங்களுக்கு முட்டை வழங்குதல்

முதல் முறையாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட மையங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்கள் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்ட மையங்களுக்கு ஒவ்வொரு அரைத் திங்களுக்கும் முட்டைகள் வழங்கும் பணிக்கான ஆணையை திறந்த வெளி ஒப்பந்தப் புள்ளியில் வெற்றிகரமாக கலந்துகொண்டு தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் 1997-98 ஆம் ஆண்டிற்குப் பெற்றுள்ளது. சமூக நலத் துறை கோரிய இந்த திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளிகளில் தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் கலந்து கொண்டதால் அரசுக்கு சுமார் 81 இலட்சம் ரூபாய் சேமிப்பு



கிடைத்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதால் டாப்கோவிற்கு சுமார் 60 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டாப்கோ இத்திட்டத்தை 01-06-1997 முதல் வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மாதமும் சுமார் 1½ கோடி முட்டைகளை, டாப்கோ தனது முத்திரையுடன் விநியோகம் செய்து வருகிறது.

இத்திட்டத்தை முழுமையாகவும், சிறப்பாகவும் நிறைவேற்றி, இத்திட்டத்தின் பயன் குழந்தைகளையும், பள்ளி மாணவ மாணவியர்களையும் முழுமையாகச் சென்றடைய பல்வேறு வழிமுறைகள் புதிதாக வகுத்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இக்குறிப்பிட்ட மையங்களில் குறிப்பிட்ட தேதியில் ஒவ்வொரு அரைத் திங்களிலும் முட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அவ்வாறு விநியோகம் செய்யப்படும் முட்டைகளில் டாப்கோ என்ற முத்திரையும் இடப்பட்டு விநியோகம் செய்யப்படுவதால் தவறான முறையில் முட்டைகள் வெளியில் செல்வது தடுக்கப்பட்டுள்ளது.

டாப்கோ இத்திட்டத்தை நிறைவேற்றுவதால் இத்திட்டத்தில் பயனாளிகள் முழுமையான பயன் அடைகின்றனர். இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் இந்நிறுவனம் 31-01-1998 வரை ரூ. 43.78 இலட்சம் இலாபம் அடைந்துள்ளது.

## 4. புதிய திட்டங்கள்

ரூ. 9.00 இலட்சத்தில் நாமக்கல்லில் குளிர்பதனத் தளவாடம் நிறுவுதல் (சமபங்கு).

## 5. நிதி நிலைமை

இந்நிறுவனம் 31-12-1997 முடிய ரூ.319.30 இலட்சம் (உத்தேசமாக) நட்டமடைந்துள்ளது. அதற்கான முக்கியக் காரணங்கள்:

1) மிகக் கடுமையான நிதி நெருக்கடி.
2) நிதிநிலை நெருக்கடி காரணமாக குஞ்சு பொரிப்பகங்களுக்கு தாய்க் கோழிகள் வழங்கப்படாதது.
3) தலைமை மற்றும் பிரிவு அலுவலகங்களில் அதிகமான ஊதியச் செலவுகள்.

[1998 மே 20

4) தேவையான அளவு விற்பனையை விற்பனை நிலையங்கள் செய்யாதது.

5) துஞ்சு பொரிப்பின் உற்பத்தி விலை அதிகரிப்பு

6) திறன் அளவுக்கு தீவனக் கலவை நிலையங்களை பயன்படுத்தாதது.

7) நட்டத்தில் இயங்கி வந்த தீவனக் கலவை நிலையங்களும் தாது உப்புக் கலவை நிலையங்களும் மூடப்பட்டது.

ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்க டாப்கோ 'தன்னார்வமாக ஓய்வு பெறும் திட்டத்தை' 1995-96ஆம் ஆண்டு அமல்படுத்தியுள்ளது. அதனுடைய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வு பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | ஓய்வு பெற்ற தேதி |
|---|---|---|
| முதல் கட்டத்தில் | 11 ஊழியர்கள் | 31-05-1995 |
| இரண்டாவது கட்டத்தில் | 61 ஊழியர்கள் | 31-08-1995 |
| மொத்தம் | 72 ஊழியர்கள் | |

தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை (31-12-97 அன்று) 294. அதிகமான அலுவலகச் செலவு மற்றும் மிகக் கடுமையான நிதி நெருக்கடி நிலை காரணமாக இந்நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகிறது.

திரு. என்.வி.என். இராகவன் குழு இந்நிறுவனத்திற்குப் புத்துயிர் அளிக்க பரிந்துரைத்துள்ளது. அது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.



1998 மே 20]

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**பொது:**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், உயர்கல்வி அளிக்கவும், சிறந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் செயல்பட்டு வருகின்றது. மேலும், கால்நடை உற்பத்தியை உயர்த்துவதற்காக, கால்நடைப் பண்ணையாளர்கள். கோழிப் பண்ணையாளர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களை உடனுக்குடன் வழங்கி வருகின்றது. அத்துடன், மக்களுக்கும் கிடைக்கக்கூடிய ஊட்டச் சத்துமிக்க உணவுகளின் உற்பத்தியைப் பெருக்கி அதன்வழி, தமிழகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவி வருகின்றது.

இப்பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல், மீன்வளம், அடிப்படை அறிவியல் ஆகிய மூன்று கலைப்புலங்களைக் கொண்டுள்ளது. மூன்று கல்லூரிகளையும், ஆறு ஆராய்ச்சி நிலையங்களையும், கோழி நோயாய்வுக் கூடம் ஒன்றையும், கால்நடை நலம் பேணலகம் ஒன்றையும், பதினைந்து பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களையும், வாத்து ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் ஒன்றையும், இரண்டு வேளாண் அறிவியல் மையங்களையும், ஐந்து மீன்வள ஆராய்ச்சி மையங்களையும், மூன்று உழவர் பயிற்சி நிலையங்களையும் தன்னகத்தே கொண்டு இப்பல்கலைக்கழகம் ஒரு வலுவான உள்கட்டமைப்பு வசதிகளை தமிழகமெங்கும் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது.

**நிதிநிலைச் செயல்பாடு**

இப்பல்கலைக்கழகத்தின் 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைச் செயல்பாடு பின்வருமாறு:

| | நிதிநிலை மதிப்பீடு 1997-98 | திருத்திய மதிப்பீடு 1997-98 | 1998-99 ஆம் ஆண்டிற்கான உத்தேச நிதிநிலை மதிப்பீடு |
|---|---|---|---|
| திட்டம் சாராதவை | 885.21 | 1037.54 | 1102.93 |
| திட்டம் | 1044.52 | 1227.67 | 1266.68 |
| வே.ம.வ.மே. திட்டம் | 700.00 | 464.26 | — |

[1998 மே 20

வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உயர்பயிற்சி, ஆய்வுப் பயணம் மேற்கொள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள் வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அதன் விவரம் பின்வருமாறு:

| அனுப்பப்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்களின் எண்ணிக்கை | திட்ட விவரம் | கால அளவு |
|---|---|---|
| 3 | பயிற்சிக்காக | 12 மாதங்கள் |
| 4 | பயிற்சிக்காக | 3 மாதங்கள் |
| 5 | ஆய்வுப்பயணம் | 1 மாதம் |

**கல்வி**

இப்பல்கலைக்கழகத்தின் மூன்று கல்லூரிகளிலும் தற்சமயம், பல்வேறு நிலைகளில் 1500-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். தற்பொழுது 368 மாணவியர்கள் இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வருவது ஒரு குறிப்பிடத்தகக சிறப்பம்சமாகும்.

**மாணவர் சேர்க்கை**

| பட்ட வகுப்புகள் | சென்னை கால்நடை மருத்துவ கல்லூரி, சென்னை. | கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல். | மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | மொத்தம் |
|---|---|---|---|---|
| பி.வி.எஸ்.ஸி | 146 | 80 | - | 226 |
| பி.எப்.எஸ்.ஸி. | - | - | 25 | 25 |
| எம்.வி.எஸ்.ஸி | 80 | 50 | - | 130 |
| எம்.எப்.எஸ்.ஸி | - | - | 15 | 15 |
| பி.எச்.டி (கால்நடை மருத்துவம்) | 90 | 10 | - | 100 |
| பி.எச்.டி. (மீன்வளம்) | - | - | 10 | 10 |
| முதுநிலைப்பட்டயம் | 10 | - | - | 10 |



1998 மே 20]

**ஆராய்ச்சி**

பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ் கால்நடை மற்றும் மீன உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் உற்பத்தி தொடர்பாக 70 சிறப்பு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கீழ்க்கண்ட பல்வேறு நிறுவனங்கள் மூலமாக ரூ. 107.5 இலட்சம் வரை பெற்று 54 ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:—

1. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்
2. உயிர் தொழில்நுட்பவியல் துறை
3. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை
4. ஊரகப் பகுதி மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்
5. அணுசக்தித் துறை
6. தேசிய தரிசுநில மேம்பாட்டு வாரியம்
7. தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம்
8. கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை
9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்
10. இந்திய விலங்கு நல வாரியம்
11. மாநகராட்சி அமைப்புகள்

கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு அறிவியல் ஆறும், மீன்வள அறிவியல் இரண்டுமாக ரூ. 70.15 இலட்சம் அளவில் 8 புதிய ஆயவுத் திட்டங்கள் 1998-99 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படவுள்ளன.

1. ரூ. 2 இலட்சத்தில் கால்நடை உயிர் தொழில்நுட்பப் பிரிவில் வழக்கொழிந்த சமகால தொழில்நுட்ப முறையை மாற்றி திட்டமிடப்பட்ட கால்நடை வளர்ப்புத் தொழில்நுட்பத்தை மாற்றுதல்

2. ரூ. 5.50 இலட்சத்தில் கோழி வளர்ப்பில் மூச்சுக் குழல் நோய் மற்றும் கோழி வாத நோய்க்கான தீவிர நோய் அறிதொழில்நுட்ப சாதன வசதிகளை மேம்படுத்துதல்.

3. ரூ. 2.50 இலட்சத்தில் RAPD ரேகை மூலம் மடிவீக்க நோய்க் கிருமிகளை விரைவாகக் கண்டறிதல்.

4. ரூ.10 இலட்சத்தில் தற்போதுள்ள கல்வி, சிறப்புச் சிகிச்சை தொழில் நுட்பக் கட்டடப் பகுதிகள்மீது கூடுதலாக ஒரு தளம் அமைத்தல்.

5. ரூ. 11 இலட்சத்தில் உயரிய தொழில்நுட்பவியல் ஆய்வுக்கூடம் அமைத்தல்.

6. ரூ. 10 இலட்சத்தில் தீப்பறவை ஆராய்ச்சிப் பிரிவு ஏற்படுத்துதல்.

7. ரூ. 12.65 இலட்சத்தில் மீன் பதப்படுத்தும் தொழில்நுட்பவியல் துறையின் நுண்ணுயிர் இயல் பிரிவை வலுப்படுத்துதல்.

8. ரூ. 16.5 இலட்சத்தில் மீனள உயிரிய தொழில்நுட்பவியல் மையம் ஏற்படுத்துதல்.

## இதர திட்டங்கள்:

பல்கலைக்கழகம் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டு முயற்சி அடிப்படையில் அஹமதாபாத் கேடிலா ஹெல்த் கேர் நிறுவனம் மூலமாக ரூ. 35.59 இலட்சம் நிதி உதவியுடன் "வெறிநோய்க்கெதிரான மரபுக்கூறு ஒருங்கிணைப்பு மூலம் புதிய தடுப்பூசி" உருவாக்கும் திட்டம் ஒன்று துவக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை மருந்தாக்க இயலில் ஆராய்ச்சிக்கு ஊக்கம் கொடுக்கும் முகமாக, இத்திட்டத்திற்கு ரூ.1.173 கோடி நிதி உதவி அளிக்கின்றது.

ஆட்டினத்தில் பி.பி.ஆர். என்ற வெக்கை நோய்த் தாக்குதலை இப்பல்கலைக்கழகம் 1989 ஆம் ஆண்டு இந்தியாவில் முதன் முதலாகக் கண்டறிந்து தெரிவித்தது. அதன்பின் இந்தியாவின் பல பகுதிகளிலும் இத்தகைய நோய்ப் பாதிப்பு குறித்து அறிவிப்புகள் வெளிவந்தன. வெள்ளாடுகளையும், செம்மறி ஆடுகளையும் இந்நோயிலிருந்து பாதுகாக்க உயிருடனான மற்றும் வீரியம் நீக்கப்பட்ட தடுப்பூசிகளை உருவாக்கும்படி இந்திய அரசு இப்பல்கலைக்கழகத்தைக் கோரியுள்ளது. இத்திட்டத்திற்காக மத்திய அரசு ரூ.270.46 இலட்சம் உதவி அளிக்கின்றது. அதில் ரூபாய் 92.87 இலட்சம் ஐரோப்பிய நாடுகளின் நிதியாகும்.

தமிழ்நாட்டில் நிலவும் தட்பவெப்ப நிலையில் நெருப்புக் கோழி வளர்ப்பிற்கான பராமரிப்பு முறைகளை வரையறை செய்ய முன்னோடித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட உள்ளது. நெருப்புக் கோழிகளை அவற்றின் இறைச்சி, இறகு, தோல் போன்ற வர்த்தக மதிப்புமிக்க பல்வேறு உற்பத்திப் பொருட்களுக்காக வளர்க்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

செயற்கை முறைக் கருத்தரிப்புத் திட்டத்தை மேலும் செம்மையாகச் செயல்படுத்த ஒரு குறிப்பிட்ட பகுதியில் வளர்க்கப்படும் அதிக எண்ணிக்கையிலான மாடு மற்றும் எருமைகளின் சினைப்பருவக் காலத்தை





ஒருங்கிணைப்பது குறித்த தொழில்நுட்பப் பரிமாற்றத் திட்டம் ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது.

கோழிகளைத் தாக்கும் ஐ.பி. எனப்படும் கீழ் மூச்சுக் குழல் நோய் மற்றும் மேரெக்ஸ் வாத நோய்ப் பரிசோதனை விரைந்து எளிதில் கண்டறிய கள ஆய்வுப் பெட்டி மற்றும் புதிய ஆய்வு முறைகளை உருவாக்கவும், மாடுகளில் மடிவீக்க நோய் ஆய்வுக்கான விரைவான, விரிவாக்கப்பட்ட பல்நிலை டி.என்.ஏ. (RAPD) பதிவு முறை உருவாக்கம் குறித்தும் ஆய்வுகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## விரிவாக்கக் கல்வி

தமிழகத்திலுள்ள ஏழை எளிய மக்களின் பயன்பாட்டிற்காக, பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 20 மையங்களில் நடத்தப்படும் களநிலைப் பயிற்சிகள் மூலம் நவீன தொழில்நுட்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பல தமிழக மாவட்டங்களிலுள்ள பிற்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளன.

ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த 16,17 உழவர் பெருமக்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் மக்கள் தொடர்பு முகாம், பண்ணையைப் பார்வையிடல், கண்காட்சிகள், ஆலோசனை வழங்குதல், நோயைக் கண்டறிதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் மூலம் 59,129 உழவர் பெருமக்கள் பயனடைந்துள்ளனர். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் படித்த வேலையில்லாதோர்/ பணியிலுள்ளோர்களுக்குக் கற்பித்திட வணிகக் கோழியின உற்பத்தி என்னும் பயிற்சித் திட்டம் ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி, செய்தித்தாள் போன்ற பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் நவீன தொழில் நுட்பங்கள் ஆய்வகத்திலிருந்து உழவர்களின் நலங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சியில் வேளாண் பள்ளிப் பாடங்கள் உழவர்களுக்காக நடத்தப்படுகின்றன. 2,969 உழவர்கள் பதிவு செய்திருந்த நான்கு வேளாண் பள்ளி வகுப்புகள் நடத்தப்பட்டன.

உழவர் பெருமக்களின் பயன்பாட்டிற்காக, நவீன தொழில்நுட்ப முறைகள் குறித்த கட்டுரைகள் அடங்கிய கால்நடைக் கதிர் மற்றும் செய்திமடல் போன்றவை தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. அத்துடன் 'செய்ரான்' எனும் ஆராய்ச்சி இதழும் வெளியிடப்பட்டு வருகின்றது.

[1998 மே 20

## திட்டம்

பல்கலைக்கழகம், எட்டாவது ஐந்தாண்டு காலத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூபாய் 2945 இலட்சத்திற்கு மாறாக ரூபாய் 4,657 இலட்சம் அளவிற்குப் பயன்படுத்தி 158 விழுக்காடாகத் தனது செயல்பாட்டில் பெரும் சாதனை படைத்துள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூபாய் 8,194 இலட்சமாகும். இதில் முதலாண்டில் ரூ. 1,228 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டு உத்தேச மதிப்பீடு ரூபாய் 1,267 இலட்சமாகும்.

D
V211,31N98
N98551
219102

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.